# இதுவொரு தங்க நூல்



மணிப்புலவர்
மருதூர்-ஏ-மஜீத்

அனைத்துலக

இஸ்லாமிய தமிழ் இலக்கிய

எட்டாம் மாநாடு (2014)

தமிழ்நாடு கும்பகோணத்தில்

நடைபெற்ற போது

இந் நூல் வெளியீடு

நடைபெற்றது

மணிப்புலவர்
மருதூர் - ஏ - மஜீத்

# இதுவொரு தங்க நூல்

மருதூர் வெளியீட்டு பணிமனை
வெளியீடு

# சமர்ப்பணம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின்

அம்பாரை மாவட்டப் பொருளாளரும்,

தேசிய பணிப்பாளரும்,

நீதி அமைச்சர் அல்ஹாஜ். ரவூப் ஹக்கீம்

அவர்களின்

இணைப்புச் செயலாளரும்

இளம் புரவலருமான

அல் - ஹாஜ் ஏ.சி. எஹியாகான் அவர்கள்

எனது குடும்ப உறுப்பினர்.

அதனால் இந்நூலினை

இவரது தந்தை மர்ஹூம் அப்துல் கரீம்

அவர்கட்கும்,

தாய் மர்ஹூம் செய்னம்பு (றகீனா) அவர்கட்கும்

சமர்ப்பணம் செய்கிறேன்

தலைப்பு : இதுவொரு தங்க நூல் (அறிவியல்)

முதற் பதிப்பு : 2014 பெப்ரவரி

ISBN : ISBN 978-955-1068-09-8



© : அல்ஹாஜ் மணிப்புலவர் மருதூர் ஏ- மஜீத் JP



வெளியீடு : மருதூர் – வெளியீ பணிமனை
436. பழைய சந்தை வீதி
சாய்ந்த மருதூர் – 03
கல்முனை
சிறி லங்கா
தொலை பேசி – 0094 775000660
0094 112334218

கணனி வடிவமைப்பு : லயானா மஹ்தியா காளிமுத்து – 077 4159103

அச்சுப்பதிப்பு : யூ.டீ.எச். அச்சகம், மருதானை

விலை : ரூபாய். 650.00


---


Heading : Ithu oru Thanga Nool (This is aGolden Book)

First Edision : 2014 February

ISBN : ISBN 978-955-1068-09-8



© Alhaj.Manippulavar Maruthur A. Majeed JP
B.A. Hones in Tamil
P.G.D.E S.L.E.A.S.



Red: Director of Education
Director of Culture (NEP)

type Setting : Layana Mahdhiya Kalimuthu - 077 4159103

Printed By : UDH Compuprint. Tel : 077 3665234

Price : Rs.650.00

## நன்றிக்குரியவர்கள்

அல்– ஹாஜ். எஸ்.எச்.எம். ஜெமீல்

அல்– ஹாஜ். டாக்டர் ஏ.எல்.கே. தாஸிம் அகமது

கலாபூஷணம். யூ.எல். ஆதம்பாவா

திருமதி. றபீகா மஜீத்

செல்வி லயானா மஹ்தியா காளிமுத்து

அல்–ஹாஜ். எஸ்.எல். அப்துல் ஹை

# நூலும் இழைகளும்

## இழைகள்

## நூல் I
## இறையியல்


| | | |
|---|---|---|
| 1. | இறைவன் பற்றிய எண்ணக்கரு | 24 |
| 2. | இறைவனின் பரிணாம வளர்ச்சி எண்ணக்கரு | 25 |
| 3. | இறை அவதாரம் பற்றிய எண்ணக்கரு | 31 |
| 4. | மொழிகளில் இறைபெயர் | 32 |
| 5. | மதங்களின் பரிணாம வளர்ச்சி | 33 |
| 6. | இறைவழிபாடு பற்றிய எண்ணக்கரு | 34 |
| 7. | இறைவன் விரும்புவதும் வெறுப்பதும் | 35 |
| 8. | உலகின் பிரபலமான மதங்கள் | 36 |
| 9. | இறைவேதங்கள் | 37 |
| 10. | சாவித் துவாரத்தின் ஊடே | 38 |

# இழைகள்

## நூல் 2
## மனையியல்


| | | |
|---|---|---|
| 1. | திருமணச் சம்பிரதாயங்கள் | 41 |
| 2. | தீண்டத் தகாத பெண்கள் | 45 |
| 3. | பெண்கள் வெறுக்கும் ஆண்கள் | 45 |
| | பெண்கள் விரும்பும் ஆண்கள் | |
| | ஆண்கள் வெறுக்கும் பெண்கள். | |
| | ஆண்கள் விரும்பும் பெண்கள் | |
| 4. | கலியாணம் முடிக்கத் தகாத பெண்கள் | 47 |
| 5. | திருமணத்திற்கு முன் அறிய வேண்டியது | 48 |
| | திருமணத்திற்கு பின் அறிய வேண்டியது | |
| 6. | பாலியல் பலயீனம் | 50 |
| 7. | பலயீனத்துக்கான மருந்துகள் | 53 |
| 8. | ஆண் பெண் விருத்தசேதனம் | 59 |
| 9. | வாழ்வு வளம் பெற | 62 |
| 10. | சாவித் துவாரத்தின் ஊடே | 62 |

# இழைகள்

## நூல் 3
## அறிவியல்


| | | |
|---|---|---|
| 1. | நூலில் இருக்க வேண்டியது. நூலாசிரியருக்கு இருக்க வேண்டியது. | 67 |
| 2. | மனத்தில் இருத்த வேண்டியதும், தவிர்க்க வேண்டியதும் | 67 |
| 3. | வாசிக்க வேண்டிய நூல்கள் | 68 |
| 4. | படிக்க வேண்டிய நூல்கள் | 74 |
| 5. | ஓத வேண்டிய நூல்கள் | 81 |
| 6. | அறிய வேண்டியவர்கள் | 85 |
| 7. | அறிவியலில் அசத்தியவர்கள் | 89 |
| 8. | வெற்றி பெற வழிகள் | 96 |
| 9. | பத்துப் பத்தாய் பல பத்துக்கள் | 96 |
| 10. | சாவித் துவாரத்தின் ஊடே | 101 |

# இழைகள்

# நூல் 4
# விஞ்ஞானவியல்


| | |
|---|---|
| விஞ்ஞானக் கருத்துக்கள் | 104 |
| இதுவும் விஞ்ஞானக் கருத்துக்களே | 108 |
| ஆறறிவில்லாத விஞ்ஞானிகள் | 112 |
| எமது முன்னோர் சொன்ன விஞ்ஞானக் கருத்துக்கள் | 115 |
| விஞ்ஞானத்திற்கு சவால் விடும் சம்பவங்கள் | 119 |
| எதிர்வு கூறலும் பிழைத்தவைகளும் | 132 |
| திட்டமான சில உண்மைகளும் நம்பமுடியாத சில உண்மைகளும் | 136 |
| உலகில் ஏற்பட்ட பூகம்பங்கள் | 140 |
| காலக்கணிப்பு | 140 |
| சாவித் துவாரத்தின் ஊடே | 141 |

# இழைகள்

## நூல் 5
## உடல் நலவியல்


| | | |
|---|---|---|
| 1. | விளையாட்டும் அதுபற்றிய செய்திகளும் | 144 |
| 2. | பழங்கால விளையாட்டுக்கள் | 146 |
| 3. | தேசிய விளையாட்டுக்கள் | 147 |
| 4. | விளையாட்டின் உச்சங்கள் | 147 |
| 5. | உடலும் உள்ளமும் | 152 |
| 6. | உடலும் உலோகமும் | 153 |
| 7. | சவால் விடும் நோய்கள் | 154 |
| 8. | வைத்திய முறைகள் | 163 |
| 9. | ஆரோக்கிய விதிகள் | 164 |
| 10. | சாவித்துவராரத்தின் ஊடே | 167 |

# இழைகள்

## நூல் 6
## அரசியல்


1. அரசனிடம் அல்லது தலைவனிடம் இருக்க வேண்டிய பண்புகள் 170
2. பிரபலமான அரசியல் விடயங்கள் 171
3. பிரபலமான யுத்தங்கள் 171
4. பதவி பறிக்கப்பட்டோர் 172
5. அரசியல் கொலைகள் 172
6. சட்டமும் சம்பிரதாயமும் 173
7. அரசியல் சாதனையாளர்கள் 175
8. அரசனுக்குரியது 185
9. யுத்த தர்மம் 185
10. சாவித்துவராரத்தின் ஊடே 186

# இழைகள்

## நூல் 7
## மானிடவியல்


1. மறக்க முடியாத மனிதர்கள் 192
2. பாதாதிகேசம் 198
3. வெற்றிக்கான வழிகள் 207
4. செய்யக் கூடியது 208
5. செய்யக் கூடாதது 209
6. கலை, இலக்கிய, ஜாம்பவான்கள் 210
7. நட்பிற்கு இலக்கணமானவர்கள் 214
8. மின்னலின் போது 219
9. கடுகுச் செய்திகள் 220
10. சாவித்துவராரத்தின் ஊடே 221

# இழைகள்

## நூல் 8
## மொழியியல்


1. உலகளாவிய மொழிகள் 223

2. பழமொழிகள் 225

3. மணிமொழிகள் 227

4. உள்ளத்தை தொடும் மொழிகள் 229

5. பெரிய மனிதர்கள் பேசிய கடைசி மொழிகள் 232

6. கடுகு மொழிகள் 237

7. வழிகாட்டி மொழிகள் 238

8. உயிர் மொழிகள் 240

9. அழிந்து வரும் மொழிகள் 245

10. சாவித்துவராரத்தின் ஊடே 246

# நூல் 9
# அழகியல்

## இழைகள்


| | | |
|---|---|---|
| 1. | படங்கள் | 248 |
| 2. | உலக அதிசயங்கள் | 254 |
| 3. | உயிரினங்களின் விசித்திரம் | 257 |
| 4. | அழகாய் இருக்க | 259 |
| 5. | அழகான செயல்கள் | 260 |
| 6. | குப்பையிலே கிடந்தாலும் | 261 |
| 7. | அழகான செய்திகள் | 265 |
| 8. | பஞ்சத்தில் பலவிதம் | 266 |
| 9. | அழகும் மருத்துவக்குணமும் தரும் இரத்தினக்கற்கள் | 267 |
| 10. | சாவித்துவராரத்தின் ஊடே | 268 |

# திறந்ததும் தெரிந்தது

ஒருவன் தனது மரணத்திற்கு முன் பத்தாயிரம் நூல்களை படித்திருக்க வேண்டும்.

பத்தாயிரம் மைல்கள் நடந்திருக்க வேண்டும் என்பது சீனப்பழமொழி.

இந்தப் பழமொழியை அறிவதற்கு முன்னேயே நான் இப்பழமொழியின் கருத்தில் இயற்கையாகவே ஈடுபாடு கொண்டவனாகவே இருந்தேன்.

இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன் எனதூரில் தினசரி பத்திரிகை படிக்கும் வழக்கமுடையவர்கள் நால்வரே இருந்தனர். இந்த நால்வரில் எனது தகப்பனாரும் ஒருவர்.

எனது தாயாரின் தைலாப் பெட்டியில் "நல்ல தங்காள் சரித்திரம்" "சேவல் பாட்டு" "பெண்புத்திமாலை" போன்ற நூல்கள் இருந்தன.

இவைகள் இன்று என்னிடம் இருக்கின்றன.

எனது தாயார் 5ஆம் வகுப்பு வரை படித்தவர்.

அந்த கால கட்டத்தில் முஸ்லிம் பெண்களின் கற்றல் விகிதம் இரண்டு சத வீதமாக இருந்தது எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இந்த இரண்டு விகிதத்துள் எனது தாயாரும் அடங்குவார்.

இங்கு நான் என்ன கூற வருகிறேன் எனில் எனது தாய், தந்தையர் இருவரும் வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களாக இருந்தனர்.

இந்த பழக்கம் என்னிடம் ஏற்படுது பரம்பரையல்லவா.

அதனால் எட்டு வயதிலேயே வாசிக்கும் வழக்கமுடையவனாக இருந்தேன்.

எனது பன்னிரெண்டாவது வயதில் "மழைநாள்" கடற்கரைகக்காட்சி, நான்கண்ட கனவு போன்ற சிறு சிறு கட்டுரைகளை எழுதி தினகரன் பாலர் கழகத்திற்கு அனுப்பி, அவைகள் பிரசுரமானதைத் தொடர்ந்து எழுதத் தொடங்கிவிட்டேன்.

எஸ்.எஸ்.ஸி (இன்றைய ழுஃடு) வகுப்பிலே படிக்கும் போது சுதந்திரன் பத்திரிகை நடத்திய "கன்னத்தை என்பக்கம் காட்டு" எனும் ஈற்றடி வெண்பாப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்றதும் கவிஞனாக அறியப்பட்டேன்.

எனது எழுத்தின் உத்வேகம் ஆயிரம் நூல்களை எழுத வேண்டும் என்று எண்ணியது.

இதற்கு அப்துல் றஹீம், தமிழ்வாணன், ஊடுருவி அறிஞர் அண்ணா போன்றோரின் நூல்களை வாசித்து காரணம் என்பேன்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை இது சாத்திய படாது எனச் சட்டெனத் தெரிந்து கொண்டேன்.

இதற்கு எனது கற்பித்தல் தொழிலும் பின் அதனோடு சம்பந்தமுடைய நிநர்வாக சேவையும் தடையாக இருந்தது.

எனது தொழிலே எனக்கு சோறு போட்டது. அதனால் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கடமையைக் கண்ணியமாகச் செய்து கொண்டே நேரம் கிடைக்கும்போதெல்லாம் எழுதியதனால் முழு நேர எழுத்தாளனாக முடியவில்லை.

இப்படி நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதிய சிறுகதைகளை தொகுத்து "பன்னீர்வாசம் பரவுகிறது" என்ற தலைப்பிலும், கவிதைகளை பனீர்க்கூதலும் சந்தனப் போர்வையும்" என்ற பெயரிலும் இரண்டு நூல்களை வெளியிட்டேன். இவ்வாறு 2000ஆம் ஆண்டு தொழிலில் இருந்து ஓய்வு பெறும்வரை நூல்களை எழுதி வெளியிட்டேன்.

எனது ஆயிரம் நூல்கள் எழுதி வெளியிடும் எண்ணம் 500 நூல்களாகி பின் 250நூல்களாகி கடைசியாக 50 நூல்களாகி ஆடி அசைந்து மெதுவாகச் சென்று கொண்டிருக்கிறது.

தொழிலில் இருந்து ஓய்வுபெற்ற பின் முழு நேர எழுத்தாளனாகி பத்து நூல்களை எழுதி முடித்துக் கொண்டு பிரசுரத்தைப் பற்றி யோசித்த போது

பிரசுரம் என்பது சிறிலங்காவிலே இமயமலைப்பிரச்சனை என்பது எனக்கு ஏலவே தெரிந்திருந்த படியால் என்ன செய்யலாம் என்று யோசித்தேன். இப்படித் தீவிரமாக யோசிப்பதற்கு எனது வயதும் காரணமாக அமைந்தது எனக்கு இப்பொழுது எழுபத்தினான்கு வயது.

என்னோடு விளையாடியவர்கள் படித்தவர்கள் தொழில் செய்தவர்கள், எழுதியவர்கள் என எத்தனையோ பேர் இறையடி சேர்ந்து விட்டார்கள்.

அதனால், இருந்தும் எழுதி முடித்துக் கையில் வைத்திருக்கும் நூல்களை வெளியிட வேண்டுமே என்ற எண்ணம் மேலோங்க, வெளியீட்டு உத்திகள் பலதையும் யோசித்தேன். இந்த யோசனையின் வெளிப்பாடே சுருக்கி ஒரு நூலாக்கி வெளியிடுவது என்ற எண்ணம்.

அதாவது பத்து நூல்களின் தலைப்புக்களையும் ஒரு நூலில் பத்து அத்தியாயங்களாக்கி ஒரு நூலாக வெளியிடுவது என்ற எண்ணம் ஏற்பட்டது.

இந்த எண்ணத்தைச் செயல் படுத்த முனைந்தபோது வேறு பல பிரச்சனைகள் தோன்றின.

1எழுதுவது இலகுவான காரியம் அதனை சுருக்குவதென்பது கடின காரியம்.

இந்த ஒரு நூலை சுருக்கி எழுதுவதற்குச் செலவிட்ட காலத்திற்குள் மேலும் பல நூல்கள் எழுதியிருக்கலாம்.

பக்கங்கள் கூடிய பெரிய நூலாக வரும் அதனால் விற்பனைக் கஷ்டம் ஏற்படலாம். சிறிய தொகை கொடுத்து நூலை வாங்குபவர்கள் மிக மிகக் குறைவாக உள்ள எமது வாசகர் மத்தியில் எப்படி விலை கூடிய நூல்களை விற்பனை செய்வது.

சுருக்கி எழுதுவதில் ஏற்பட்ட சிரமம்
அதாவது, நான் பத்து நூல்களையும் பத்து அத்தியாயமாக்கிக் கொண்டேன். இந்தப் பத்து அத்தியாயத்திலும் ஒவ்வொரு அத்தியாயமும் பத்து சிறு தலைப்பில் விடயங்களை கூறக் கூடியதாக அமைத்துக் கொண்டேன்.

அதனால் பதினொன்று வருவது முறையல்ல. அஃதே போல ஒன்பது வருவதும் முறையல்ல.

உதாரணமாக கலியாணம் முடிக்கத் தகாத பெண்கள் பதினான்கினை கல்யாணமல்ல கூறுகிறார்.

இதனைப் பத்திற்குள் அடக்க வேண்டும் எப்படி செய்வது என்ற பிரச்சினை.

இஃதே போல உலக அதிசயங்கள் ஏழுதான் எப்படிப் பத்தாக்க முடியும் இது போன்ற பிரச்சினைகள்.

இதனை ஒருவாறு சமாளித்து விடயப்பரப்பில் எதுவித பாதிப்பும் ஏற்டாதவாறு என் பணியை முடித்துக் கொண்டேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு "இது ஒரு தங்க நூல்" வாசகர்களாகிய உங்களுக்கும் இது தங்க நூலாக அமைய ஆசைப் படுகிறேன்.

"வாசிக்காத நாட்கள் சுவாசிக்காத நாட்கள்" என்று ஓர் அறிஞன் கூறியதை ஞாபகப்படுத்தியவனாகவும். புதுக்கவிதையின் தந்தை " வோல்ட் விட்மன் கூறுவது போல.

"தோழனே
இது புத்தகமல்ல
இதைத் தொடுபவன்
மனிதனைத் தொடுகிறான்
நீயும் நானும்
நெருக்கமாகிவிடுகிறோம்
இதோ
இதன் பக்கங்களில் இருந்து
நான் உங்கள் கைக்குத் தாவுகிறேன் என்ற கருத்தோடு.

எனது நூலின் தலைப்புப் பற்றியும் உங்களோடு சில வார்த்தைகள் கலந்து கொள்ள விரும்புகிறேன்.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் "பொன்விதி" என்றொரு விதி இருந்தது. இந்த விதி கிறிஸ்து மதத்திலும், யூத மதத்திலும் இருந்தது.

இந்தப் பொன்விதியை கி.மு. 500ஆம் ஆண்டிலேயே சீன நாட்டின் கொன்பூசியஸ், மக்களிடம் போதித்தார்.

இந்தப் பொன்விதி இந்து மத நூலாகிய மகாபாரதத்திலும் வலியுறுத்தப்படுகின்றது.


இதனை வேறு ஒருவகையாகக் கூறுவதாயின் உலகில் உள்ள மார்க்கம் மதம் சமயம் எல்லாவ்றறிலுமே “இந்தப் பொன்விதி “ இழையோடி நிற்கின்றது.

இந்தப் பொன் விதியினை அடியொற்றியே நானும் இங்கு ஒரு சில கருத்துக்களை கூறியுள்ளேன்.

அதனால் எனது நூலுக்கு “தங்க நூல்” எனப் பெயரிட்டுள்ளேன்.

என் உழைப்பு வெற்றியடைய இறைவனைப் பிரார்த்தித்தவனாக

நனறி
உங்களின்



மணிப்புலவர் மருதூர் - ஏ- மஜீத்

04.02.2014

# நூல் 01

# இறையியல்

## சாவிக்குறிப்பு

"எது நடந்ததோ
அதுநன்றாகவே நடந்தது
எது நடக்க இருக்கிறதோ
அது நன்றாகவே நடக்கும்"

இது கீதையின் உபதேசம்

உலகில் உள்ள மனிதர்களில் ஒரு இலட்சம் பேரில் ஒருவன்மட்டுமே இறை நம்பிக்கை இல்லாதிருக்கிறான். மற்ற எல்லோரும் இறை நம்பிக்கையுள்ளவர்களே!

ஆனால், இந்த இறை நம்பிக்கை வித்தியாசம் வித்தியாசமாக இருக்கிறது.

ஒவ்வொருவரும் தங்களின் கடவுளே உண்மை என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் இந்த இறை நம்பிக்கை பயம் ஏற்படும் போது மட்டும்தான் முனைப்பாகும். மற்ற நேரங்களில் உறங்கு நிலையே.

இதேவேளை இறைவன் இல்லை என்று சொல்பவர்கள் எல்லோரும் தெளிவாக ஒரே குரலில் மறுப்புத் தெரிவித்துக் கொண்டே இருக்கிறார்கள். இவர்களுக்குப் பயமும் இல்லை பக்தியும் இல்லை. இவர்கள் தீமையின் பக்கம் போவதுமில்லை.

என்ற எண்ணத்தோடு பின்வரும் எண்ணக்கருக்களை எடுத்து நோக்குவோம்.

**இழைகள்**

1. இறைவன் பற்றிய எண்ணக்கரு
2. இறைவனின் பரிணாம வளர்ச்சி எண்ணக்கரு
3. இறை அவதாரம் பற்றிய எண்ணக்கரு
4. மொழிகளில் இறைபெயர்
5. மதங்களின் பரிணாம வளர்ச்சி
6. இறைவழிபாடு பற்றிய எண்ணக்கரு
7. இறைவன் விரும்புவதும் வெறுப்பதும்
8. உலகின் பிரபலமான மதங்கள்
9. இறைவேதங்கள்
10. சாவித் துவாரத்தின் ஊடே

**இழை 1**

## இறைவன் பற்றிய எண்ணக்கரு

I இறைவன் ஒருவன் உண்டென்றும் அவன் தனித்தவன் இணை துணையில்லாதவன் அவனே முழுமுதல் என்ற எண்ணக்கரு (இஸ்லாம்).

ii. இறைவன் என்ற எதுவுமில்லை. எல்லாம் இயற்கை என்ற எண்ணக்கரு (Pantheist) ( நாஸ்திகம்).

iii. இறைவன் இருக்கிறான் என்றோ, இறைவன் இல்லை என்றோ எதுவும் பேசாத எண்ணக்கரு (பௌத்தம்).

iv. படைக்க ஒருவன், அழிக்க ஒருவன், காற்றிற்கு ஒருவன், மழைக்கு ஒருவன், காதலுக்கு ஒருவன் என்றவாறு பல இறைக் கொள்கை (ஹிந்துமதம்)

v. இரண்டு சக்திகள் (நன்மை, தீமை) அல்லத் நல்லது கெட்டது பற்றிப் பேசும் எண்ணக்கரு (மானி சமயம்)

vi. நல்ல அரசர்கள், நல்ல மனிதர்கள் கடவுளாகும் எண்ணக்கரு (உதாரணம் : இராமர், கண்ணன், கண்ணகி, மீனாட்சி)

vii. ஆவிகள், பேய்கள், வனதேவதைகள் கடவுளாகும் எண்ணக்கரு (Pigmies) வூடுமதம்

viii. சிற்றின்பக் குறிகள் கடவுளாகும் எண்ணக்கரு (சக்தி, சிவன், லிங்கம், அல்குல், குண்டலிகம்)

ix. இறைவனைப்பற்றிப் பேசியவர்கள் பேசாதவர்கள் இறைவனாகும் எண்ணக்கரு (புத்தர், இயேசு)

x. மனிதனின் பரிணாமம் கடவுளான எண்ணக்கரு

இழை 2

## இறை பரிணாம வளர்ச்சி எண்ணக்கரு

I ஒளிக்கொள்கை – சூரியன், சந்திரன், நெருப்பு

ii நீர்

iii மரம், செடி, கொடி

vi ஊர்வன, பறப்பன

v நடப்பன

vi பேய்கள், ஆவிகள், தேவதைகள்

vii சிவன், சக்தி

viii இயற்கை

ix பல்லிறை

x ஓர் இறை

### i. ஒளிக்கொள்கை

ஆதி மனிதனுக்கு எதுவும் புரியவில்லை. சூரியனே எல்லாவற்றிற்கும் காரணம் என அவன் நினைத்தான். சூரியன் இல்லா விட்டால் இருட்டில் இருக்க வேண்டியிருந்தது. உணவு தேடுவதும் அதனைச் சாப்பிடுவதும் அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால் சூரியனை அவன் பெரிதாக நம்பினான். பயமேற்பட்டது, பக்தி வந்தது. வணங்கினான்.

**சந்திரன்**

சூரிய குடும்பத்தில் ஓர் அங்கமான சந்திரன் மனிதனுக்கு இரவில் நடமாடவும், உணவு தேடவும், ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்ளவும் விலங்குகளின் வரவை கண்டுகொள்ளவும் உதவியதால் சந்திரன் மீது அவனுக்கு பக்தியேற்பட்டது. வணங்கினான்.

செமத்தியர்கள் சந்திரனைக் கணக்கிட்டு வாழ்வியலோடு சேர்த்துக் கொண்டனர்.

இன்றும் செமத்தியர்கள் வழிவந்த அரேபியர்களிடம் சந்திரக்கணக்கே நடைமுறையில் உள்ளது.

செமத்தியர்களே முதன் முதலில் சந்திரனுக்கு கோயில் கட்டி வழிபட்டவர்கள்.

தென் அரேபியாவின் மைனியர்களும் சபாயின்களும் கோள்களையும் நட்சத்திரங்களையும் வணங்கினர்.

நாடோடிகளான பதவிகளும் சந்திரனை வழிபட்டனர். சந்திர வழிபாடு ஆயர் குல மக்களை அடையாளப் படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

சந்திரப் பெருநாளைக் கொண்டாடுவது எல்லாத் தொன்மைச் சமூகத்திலும் இருந்துள்ளது. முஸ்லிம்கள் இன்றும் பெருநாட்களை சந்திரனை கணக்கிட்டே கொண்டாடுகிறார்கள்.

## நெருப்பு

மனிதன் நெருப்பைக் கண்டு பிடித்ததும் அவனது வாழ்வியலில் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. சக்கிமுக்கிக் கல்லில் இருந்தே அவன் நெருப்பைக் கண்டறிந்தான். நெருப்பு அவனுக்கு ஒளியைக் கொடுத்தது மட்டுமல்லாமல், சுவையாகச் சுட்டுச் சாப்பிடவும் உதவியது. மிருகங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் அது உதவி செய்தது. அதனால் மனிதனுக்கு நெருப்பின் உதவி தேவைப்பட்டதால் அதை வணங்கினான்.

பாரசீகத்தில் சௌராஸ்டிர மதம் நெருப்பை வணங்கும் மதமே. சௌராஸ் டிரர்கள் தாங்கள் ஒளியை வணங்குவதாகக் கூறிக்கொள்கிறார்கள். இயேசுநாதர் கூட இறைவனை ஒளியென்றார்.

சூரியனை சந்திரனை வணங்கிய செமித்தியர்கள் இப்பொழுது நெருப்பை வணங்கினர்.

## நீர்

நீர் இன்றி மனிதனால் வாழ முடியாத நிலை ஏற்பட்டது. ஓரிடத்தில் இருந்து விவசாயம் செய்ய நீர் தேவைப்பட்டது. நாகரிகம் நீர் நிலைகளையும் நதிகளையும் அண்டியே ஆரம்பமாகின.

அதனால் நீரையும் நீர் நிலைகளையும், நதிகளையும் புனிதமானதாகக் கருதினான்.

இவற்றிற்கு உதாரணமாக யூப்பிரட்டீஸ், ரைக்கிறீஸ், நைல், சிந்து, கங்கை போன்ற நதிகளைக் குறிப்பிடலாம்.

சம்சம்நீர் உலகமெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் புனித நீராகும்.

**மரம், செடி, கொடி**

ஔடத சக்தியுடைய மரங்கள், செடி, கொடிகளை மனிதன் வணங்கினான்.

உதாரணம் : அரசமரம், ஆலமரம், வேப்பமரம், துளசி போன்றவற்றைக் கூற முடியும். புத்தர் ஞானம் பெற்றது அரச மரத்தின் கீழ் என்பதால் புத்தரோடு சேர்த்து அரச மரமும் கௌரவம் பெறுகிறது.

மலட்டுத் தன்மையை நீக்கும் சக்தி அரச மரத்திற்கு உண்டு என்ற நம்பிக்கையால் பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் அரச மரத்தைச் சுற்றிச் சுற்றி வணங்குவார்கள்.

துளசி மரத்தை இந்துக்கள் வீடுகளில் மாடம் கட்டி மாடத்துள் வைத்து வளர்க்கிறார்கள். துளசிமரம் உள்ள வீடுகளுக்கு விஷ ஜந்துக்கள் வருவதில்லை. காரணம் துளசிமரத்தின் மணம் விஷ ஜந்துக்களுக்குப் பிடிப்பதில்லை என்பதால், அத்தோடு துளசி மருத்துவக் குணமும் உடையது.

இஃதே போல் வேப்ப மரத்தின் மருத்துவத்தன்மை சொல்லில் அடங்காதவை.

காயகல்பத்தில் முக்கிய பங்கினை வேப்பமரமே வகிக்கின்றது எனலாம். தொற்று நீக்கும் சக்தியும் இதற்குண்டு. இஃதே போல அறுகம் புல் அற்புதமான ஓர் ஔடதம்.

நாய், பூனைகளுக்கு அறுகம்புல்லும் குப்பை மேனியும் மதிப்பிட முடியாத சொத்து. குப்பை மேனிக்கு யானை வணங்கி, பூனை வணங்கி என்ற பெயர்களும் உண்டு.

**ஊர்வன, பறப்பன**

பாம்பு : ''பாம்பென்றால் படையும் நடுங்கும்'' என்பது பழமொழி பாம்பு கொத்தினால் மனிதன் இறந்து விடுகின்றான். (அதனால் மனிதன் பாம்பை வணங்கினான். பயமும், பக்தியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல. பயத்தினாலும் பக்தி வரும். பக்தியினாலும் பயம் வரும். பக்தியினால் வரும் பயமே சிறப்புடையது)

மனிதன் பாம்பிற்கு கோயில் கட்டி பால்வார்த்து வணங்கினான்.
(பாம்பு பால் குடிக்காது என்பது இந்தியாவில் உள்ள பாம்புப் பண்ணையாளர் ஒருவரின் கருத்தாகும்.)

இலங்கையின் ஆதிக்குடிகளில் நாகரும் அடங்குவர்.

இவர்கள் இலங்கையின் கிழக்கிலே வசித்தார்கள். பாம்பு வழிபாட்டின் தொடரே நாகதீபம், நாகராசா நாகலிங்கம், நாகமணி, நாகவள்ளி போன்ற பெயர்கள்.

### நடப்பன

கெட்ட மிருகங்களை மனிதன் பலி கொடுத்தான். பயன்பாடுள்ள மிருகங்களை வளர்த்து வணங்கவும் செய்தான்.

இதே போல பிரயோசனமான ஆயுதங்களையும் வணங்கினான்.
உதாரணமாக : பசு, யானை, அம்பு, வில்லு, ஈட்டி, கலப்பை என்பனவற்றை கூறலாம்.

மாட்டுப் பொங்கல் கூட ஒரு கௌரவமான வழிபாட்டு முறையே. ஹிந்துக்கள் பசுமாட்டில் விழித்துச் செல்வது நல்ல சகுனம் என்பார்கள்.

அதன் சாணத்தைச் சுட்டு சாம்பராக்கி திருநீறு என உடம்பில் பூசிக் கொள்வார்கள்.

யானை மனிதனுக்கு உதவியும் செய்தது. உபத்திரவமும் செய்தது. அதனால் அதனைக் கணபதியாக வணங்கினான். திருகோணமலையில் இருந்து பொலநறுவை வரையுள்ள எல்லா ஹிந்து, பௌத்த கோயில்களிலும் கணபதி சிலையைக் காணலாம். காரணம். திருகோணமலைக்கும் பொலநறுவைக்கும் இடையில் காட்டுப் பகுதியில் யானைப்பயம். அதனாலேயே எல்லாக் கோயில்களிலும் கணபதி சிலை.

பசு ஆதியில் எகிப்தியர்களின் வணங்கு தெய்வமாகவும் இருந்துள்ளது.

## ஆவிகள், பேய்கள், வனதேவதைகள்

மனிதனுக்கு நோய்வரக் காரணம் ஆவிகளும் பேய்களுமே என மனிதன் நம்பினான். மனிதன் இரத்தவாந்தி எடுத்து இறந்தால் பேய் அடித்து இறந்துள்ளான் என நினைத்தான். அன்றைய மனிதனுக்கு "ஹார்ட் அட்டக்" பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை. இனம் தெரியாத நோயாக இருந்தால் "பேய்" என்ற சொல்லே பிரபலம் பெற்று இருந்தது.

இறந்தவர்களின் ஆவியும் பல தொந்தரவுகளைச் செய்யும் என்ற நம்பிக்கையும் மனிதனுக்கு இருந்தது.

"பெனின்" என்ற ஆபிரிக்க நாட்டில் "வூடு' என்ற பேய் மதவழிபாடு அமுலில் உண்டு.

இடி மின்னலுக்கு கடவுளான "டன்" போன்ற ஆயிரக்கணக்கான ஆவிகளின் வழிபாடே "வூடு" மதமாகும்.

## சிவன், சக்தி

பெண்களிடம் கவர்ச்சியும் சக்தியும் இருப்பதை ஆண்கள் உணர்ந்தனர். பெண்கள் இல்லாமல் இன்பம் இல்லை என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். அதனால் அவளைச் சக்தி என வணங்கினர். இஃதே போல ஆண்கள் இல்லாமல் எதுவும் நடக்காது எனப் பெண்கள் நம்பினர்.

அதனால் "லிங்கத்தை" கௌரவமாக்கி வணங்கத் தலைப்பட்டதோடு லிங்கத்தைக் கொண்டவன் சிவன் என்றும் அவனது கழுத்தில் பாம்பும், சடாமுடியில் பிறையும், கங்கையும் இருப்பதாகவும் சிவனின் காலின் கீழே கெட்ட மிருகங்கள் அடங்கிக் கிடப்பதாகவும் கொண்டு சிவனை வணங்கினர்.

பின் சிவனையும் சக்தியினையும் அருகருகே இருத்தி வணங்கினர். எல்லாம் ஒன்றான நிலையே இது எனலாம். இஃதே போல ஆண்களில் சக்திவாய்ந்தவர்கள் தலைவர் ஆனார்கள். நல்ல அரசர்கள் கடவுளாகவும் கணிக்கப்பட்டார்கள். நல்ல சில பெண்களும் தெய்வமாகக் கருதப்பட்டார்கள்.

உதாரணத்திற்கு கிரேக்க தெய்வங்களான சைபீஸ், டெடோனா டெல்பி போன்ற தெய்வங்களைக் குறிப்பிடலாம். எமது இலக்கியங்களில் வரும் திருப்பாவை நோன்பு பெண்களின் உயர்ந்த தன்மையை எடுத்துக் காட்டுகின்றது எனலாம். கண்ணகி, சிறிதேவி, மீனாட்சி, காமாட்சி போன்ற பெண்களையும் குறிப்பிடலாம்.

## இயற்கை

இயற்கையில் எல்லாச் சக்திகளும் இருப்பதாகக் கண்டான். இயற்கையினுள்ளே எல்லாம் அடங்குகின்றன. சூரியன், சந்திரன், நெருப்பு, நீர், காற்று, மரம், செடி, கொடி, உயிர்கள் அனைத்தும் இயற்கையினுள்ளே அடக்கம் எனக் கண்டான். இயற்கையே சக்தி எனக் கொண்டான்.

இயற்கை அழகை விரும்பி இரசித்தான் முருகன் – (அழகு) கடவுளானார்.

## பல்இறை

எல்லாவற்றிற்கும் காரணமாக ஒரு சக்தி உண்டு அதுவே இறைவன் எனக் கொண்டான். இது படைக்க ஒன்று, காக்க ஒன்று, காற்றிற்கு ஒன்று காதலுக்கு ஒன்று எனப் பல தெய்வங்களை உருவாக்கிக் கொண்டான்.

## ஓர் இறைக் கொள்கை

எல்லாவற்றிற்கும் காரணம் ஒரு சக்தியின் உந்துதலே. இதனை இறை சக்தி என்றும் கூறலாம். இதனை இன்று விஞ்ஞான ரீதியாக இவ்வாறு கூற முடியும்.

## இப்பிரபஞ்சம் (Milkey way )

12 அடிப்படைத் துகள்களினாலும் 4 அடிப்படை விசைகளினாலும் உருவானது. (Standard Model of Physics) 11 துகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன. ஒரு துகளை காணாது இருந்து இப்பொழுது கண்டு பிடித்து விட்டதாகக் கூறுகிறார்கள். ஒரு சில விஞ்ஞானிகள் இதனை நம்புவதாக இல்லை எனக் கூறுகிறார்கள். இந்த ஒரு துகள் ஏலவே மோஸஸ் எனும் மூசாவுக்கு காட்டப்பட்டு விட்டது என எம்மால் ஊகித்துக் கூறமுடியும். (மூசா மயங்கி விழுந்த சம்பவத்தை எடுத்து நோக்கவும்.)

பிக் பேங் (Big Bank) எனப்படும் பெரு வெடிப்பைத் தொடர்ந்தே அணுக்களும் மூலக்கூறுகளும், கிரகங்களும் இந்தப் பேரண்டமும் உருவாயின" என்பது விஞ்ஞானிகளின் அடிப்படைக் கோட்பாடுகளாகும்.

**இழை 3**

## இறை அவதாரம் பற்றிய எண்ணக்கரு

### i மச்ச அவதாரம்

அமீபா மீன் – நீரில் வாழ்பவை

### ii கூர்மா அசதாரம்

உதாரணம் : ஆமை, தவளை, முதலை, நண்டு போன்றவை நீரிலும் நிலத்திலும் வாழ்பவை

### iii வராக அவதாரம்

பெரும்பகுதி நிலத்திலும் சிறுபகுதி நீரிலும் வாழ்தல்
உதாரணம் : பன்றி

### iv நரசிம்ம அவதாரம்

மனித உடலும், முகம் மிருகத்தை போன்றும் இருத்தல்
உதாரணம் : அனுமான், சுக்ரீவன், வாலி, சிங்கபாகு, சிங்கவல்லி, பிள்ளையார்

### v வாமநா அவதாரம்

இது மாமன்னா அவதாரம் என்றும் கூறப்பட்டுள்ளது. "மாமன்னன்" என்றால் குள்ளன் என்று பொருள். மிருக நிலையில் இருந்து குட்டை வடிவான மனித இனம். இவர்களை பண்படாத மனிதர்கள் என்றும் கூறலாம்.

vi பரசுராமன் அவதாரம்

மகிழ்ச்சி வந்தால் சந்தோசமாகவும் துக்கம் வந்தால் கோபப்படுபவனாகவும் இருப்பான்
உதாரணம் : சாதாரண மனிதனைக் குறிக்கும்

vii இராம அவதாரம்

நன்மை, தீமை இரண்டையும் சமமாகக் கருதி இன்பதுன்பங்களை ஒரே தன்மையாக எடுத்துக் கொள்ளுதல். மன சஞ்சலமற்ற பக்குவநிலை.

viii யோகி அவதாரம்

உடலால் மனிதனாக இருந்தாலும் உள்ளத்தால் மேல் நிலையில் வாழ்பவன்
உதாரணம் : கிருஷ்ண அவதாரம்

ix புத்த அவதாரம்

மனித உடலோடு தெய்வநிலை அடைதல்
உதாரணம் : கௌதம புத்தர்

x கல்கி அவதாரம்

இது ஒடுக்கநிலை. இதற்குப் பிறகு பிறப்பு இல்லை. இதன்பின் மனிதன் இறைவனாகிறான்.

**இழை 4**

## மொழிகளில் இறைவனின் பெயர்கள்

i. கிரேக்க மொழியில் "தேவ்ஸ்"
ii. கோதிக் மொழியில் "குத்" (GUTH)
iii. டேனிஸ்மொழியில் "குட்" (GUD)
iv. ஜேர்மன் மொழியில் "காத்" (GOTT)
v. இங்கிலீஸ் மொழியில் "கோட்" (GOD)
vi. தமிழ் மொழியில் "கடவுள் (KADAVUL)
vii. அரபு மொழியில் "அல்லாஹ்" (ALLAH)

viii. ஹீப்று மொழியில் "ஜெகோவா" (IBKOVA)

ix. ஆரிய மொழியில் "பிரம்மா" (BRAMMA)

x. சிங்கள மொழியில் "தெய்யோ" (Theiyo)

என அழைக்கப்படுகின்றன.

கடவுள் பற்றிய பல தகவல்கள் "என் சைக்லோ பீடியா பிரிட்டானிக்காவில் 10ஆம் தொகுதியில் பக்கம் 46இல் விபரமாக உண்டு.

**இழை 5**

## மதங்களின் பரிணாம வளர்ச்சி

மதங்களை இரண்டு வகையாக பிரிக்கலாம்

i செமிட்டிக் மதங்கள்

ii செமிட்டிக் அல்லாத மதங்கள் (இதனை ஆரிய மதங்கள் என்றும் அழைப்பர்)

இதனை வேறு ஒரு வகையாகக் கூறுவதாயின் ஆரிய மதங்கள், ஆரியம் அல்லாத மதங்கள் எனக் கூறமுடியும்.

செமிட்டியர்கள் நூஃ நபி (நோவா) அவர்களின் மகன் சாம் என்பவரின் வழித்தோன்றல்கள் (இது பைபிளில் கூறப்பட்டுள்ளது) இவர்கள் அரேபியர், ஹீப்றூக்கள் சூரியர்கள், பெனீசியர்கள் போன்ற இனத்தவர்கள்.

மத்திய கிழக்கிலே தோன்றிய மதங்களே செமித்திய மதங்கள். இந்த மதத்தவர்கள் அல்லது இனத்தவர்கள் பேசிய மொழிகளே அரபு, ஹீப்று, அரமிக், அக்காடியா போன்ற மொழிகளாகும். இந்த இனத்தவர்களின் மதங்களே யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம். இம்மதங்கள் மூன்றும் தீர்க்க தரிசிகளால் மக்கள் மத்தியிலே பரப்பப்பட்டன.

## இழை 6

## இறைவழிபாடுபற்றிய எண்ணக்கரு

i மனதை வெளியுலக நிகழ்ச்சிகளில் இருந்து தொடர்பை அறுக்கவும், பின் ஏதாவது ஒன்றில் மனதை வயப்படுத்த (இறைவனில் ஒன்று படுத்த) உதவும் வழியே இறைவழிபாடு.

(இது கிருஷ்ண பிரான் அர்ச்சுனருக்கு கூறியது)

ii. இறைவன் ஒருவன்தான், அவனுக்கு இணைதுணையில்லை. அவனே சகல ஆற்றலும் சக்தியும் படைத்தவன். அவனிடமே யாம் கையேந்த வேண்டும்

(இது இஸ்லாம் கூறியது)

iii. இறைவன் எங்கும் இருப்பான். எதிலும் இருப்பான் கல்லிலும் இருப்பான். புல்லிலும் இருப்பான். படைக்க, அழிக்க, காக்க காற்றிற்கு, மழைக்கு காதலுக்கு எனப்பல கடவுகள்.

(இது ஹிந்து மதம் கூறுவது)

iv. இறைவன் என்று ஒன்றும் கிடையாது. அதனால் எதனையும் வணங்கத் தேவையில்லை. என்னையார் உண்டாக்கினது. கடவுள் என்று சொன்னால் பிறகு கடவுளை யார் உண்டாக்கினார். என்ற கேள்வி தானாகவே உண்டாகிவிடுகின்றது என்று எனது தந்தை எனக்குச் சொல்லிக் கொடுத்தார். இந்தச் சிறு வாக்கியமானது ''முழுமுதற் காரணம்'' என்ற பொய்மையை அப்பொழுதே நான் விளங்கிக் கொண்டேன். என்று பேட்டன் ரஸ்ஸல் கூறியுள்ளார்.

(இதனை நாஸ்திகம் என்று அழைக்கிறார்கள்.

v. உலகின் சகல பிரச்சினைகளுக்கும் காரணம், மதவாதிகளும், அரசியல்வாதிகளும்தான். இவர்கள் இருவரையும் இல்லாமல் செய்து விட்டால் உலகில் எந்தப் பிரச்சினையும் இராது.

(''ரஜனிஷ்'' சுவாமிகள் கூறியது)

vi. இறைவனைப் பற்றிய நம்பிக்கை மூன்று வகையாக அமையும்

அ· நூறுவீத நம்பிக்கை (அனல்ஹக்) எல்லாம் அவனே, அவனில் இருந்து என்னை பிரிக்க முடியாது.

ஆ. பூஜ்ய (0) நம்பிக்கை. இறைவன் என்று எதுவும் இல்லை. எல்லாம் இயற்கை.

இ. ஐம்பதுக்கு ஐம்பது – அரைவாசி தன்னையும் அரைவாசி இறைவனையும் நம்புவது. ஒரு காரியத்தைச் செய்து வெற்றி பெற்றுவிட்டால் எல்லாம் என்னால் முடியும் என்ற எண்ணம். அக்காரியம் தோல்வியில் முடிந்து விட்டால் இறைவன் நாடவில்லை எனச் சொல்வது.

vii. பணத்தில் பற்றுவையாதே. உயிர்கள் இடத்தில் அன்பாய் இரு. துன்பம் இல்லாது வாழலாம். (கிறிஸ்தவம் இவ்வாறுதான் கூறுகிறது)

viii. எதிலும் பற்றுவையாதே. ஆசையை துறந்து விடு. துன்பம் இல்லாது வாழலாம். பௌத்தம் இவ்வாறுதான் கூறுகிறது)

ix. நல்ல சக்தி (நன்மை)
தீய சக்தி (தீமை) (மானிமதம்)

x. .உனது சக்திக்கு அப்பாற் பட்டதை பெரிதாக மதித்து அதற்குச் சாஸ்டாங்கம் செய். உதாரணமாக பேய், பிசாசு, ஆவி என்பவற்றிற்கு மதிப்பளித்து நடந்துகொள்

(வூடு மதம்)

## இழை 7

## இறைவன் விரும்புவது

i உண்மை பேசுவது
ii ஏழைகளுக்கு இரங்குவது
iii நன்மைகளைச் செய்வது
iv முதியோரைக் கண்ணியப் படுத்துவது
v உணவளிப்பது
vi இறைவனை வணங்குவது
vii அதிகாலையில் எழுவது
viii வட்டி எடுக்காமை
ix நேர்மை நியாயம்
x பெற்றோரை கண்ணியப் படுத்தலும் பாதுகாத்தலும்

## இறைவன் விரும்பாதது

i நிர்வாணமாக நித்திரை செய்வது
ii அதிகமாக உறங்குவது
iii சூரியன் உதித்த பிறகும் நித்திரை செய்வது
iv உணவில் கஞ்சத்தனம்
v கொடை கொடுப்பதை தடுப்பதும் கஞ்சத்தனமும்
vi ஏழைகளுக்கு அநியாயம் செய்வது
vii அநாதைகளின் சொத்தை அபகரிப்பது
viii அளவை, நிறுவைகளில் அநியாயம் செய்வது
ix பஞ்சமாபாதகத்தை விரும்புவது
x வலோற்காரம் செய்வது.

**இழை 8**

## உலகில் பிரபலமான மதங்களும் சில தகவல்களும்

i கிறிஸ்துவம்
ii பஹாய்
iii இஸ்லாம்
iv யூதம்
v ஹிந்து
vi புத்தம்
vii சௌராஸ்டிரம்
viii ஷின்டோசியம்
ix சீக்கியம்
x மானி

உலகில் ஒன்பது நாடுகளில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் படி அந்நாடுகளின் பெரும்பான்மையான மக்கள் மத நம்பிக்கையில்லாமலே வாழந்து வருகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் இப்போதிருக்கும் மதங்களில் அனேகமானவை காணாமல் போய்விடும் வாய்ப்புண்டு என்று அந்த ஆய்வு கூறுகின்றது.

அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, கனடா, செசனயாகுடியரசு, பின்லாந்து, அயர்லாந்து, நெதர்லாந்து, நியூசிலாந்து, சுவிட்சலாந்து ஆகிய ஒன்பது நாடுகளே இந்த ஆய்வுக் குட்பட்ட நாடுகள்.

இந்நாடுகளில் 100 ஆண்டுகளுக்கு மேல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

**இழை 9**

## இறை வேதங்கள்

i தௌறாத்
ii சபூர் வேதம்
iii இஞ்சீல்
iv புர்கான்
v றிக் வேதம் அல்லது ருக் வேதம்
vi யசூர் வேதம்
vii சாம வேதம்
viii அதர்வ வேதம்
ix மானி வேதம்
x இயற்கை வேதம்

தௌறாத், சபூர், இஞ்சீல், புர்கான் ஆகிய நான்கு வேதங்களுமே இறைவனால் அருளப்பட்டவை. இவற்றையே தொடர் வேதங்கள் எனலாம்.

மற்ற றிக், யசூர், சாம , அதர்வ, மானி இயற்கை என்பனவெல்லாம் மனிதனால் உண்டாக்கப்பட்டவை என்ற கருத்தும் உண்டு.

**தௌறாத்**

இவ்வேதம் மூசா (அலை) அவர்கட்டு இறைவனால் துர்சினா மலையில் வைத்து பத்துக் கட்டளை என்ற வகையில் அருளப்பட்டது.

**சபூர்**

இவ்வேதம் தாவூத் (நபி அவர்கட்கு அருளப்பட்டது. இவ்வேதக் கட்டளைகள் பாடல்களாக உள்ளன. தாவூத் நபியவர்கள் இனிமையான குரல் வளம்

**இஞ்சில்**

இவ்வேதம் ஈசா (நபி) அவரக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த வேதத்தின் நூல் பைபிள் எனப்படுகிறது இது புதிய, பழைய என இரு பிரிவுகள் உண்டு இன்று உலகில் மிகவும் கூடுதலான மக்களால் வாசிக்கப்படும் நூல் பைபிளாகும்.

பைபிள் 66 புத்தகங்கள் உள்ளடங்கியுள்ளன. இந்த 66 புத்தகங்களிலும் தீர்க்கதரிசிகள் அரசர்கள், தூதர்கள் போன்றோரின் வரலாறுகள் உண்டு.

குறிப்பாக ஐந்து புத்தகங்கள் இறை ஆட்சி பற்றி, மத்தியூ மார்க் , லுக்காஸ் ஜோன் என்பவர்களால் எழுதப்பட்டள்ளதோடு ஐந்தாவது யேசு மீண்டும் வருதல் பற்றி எழுதப்பட்டுள்ளது.

**புர்கான்**

இது முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது. இவ்வேதநூல் 114 அத்தியாயங்களை கொண்டது. இந்நூலில் 24 நபிமார்களின் வரலாறு இடம்பெற்றுள்ளன.

அத்தோடு பொது வாழ்விலும் தனிப்பட்ட முறையிலும் ஒரு இஸ்லாமியன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. இவ்வேத நூல் முகம்மது நபியவர்களுக்கு 23 வருடங்களாக ஜிப்ரில் எனும் துதுவரால் இறைவனிடம் இருந்து கொண்டுவரப் பட்டு அருளப்பட்டது.

**இழை 10**

**சாவித்துவாரத்தின் ஊடே**

i புனித பைபிளில் மொத்தம் 3566480 எழுத்துக்களும் 773746 வார்த்தைகளும் உள்ளன. ஒரு சில இடங்களில் 77 இலட்சத்து 36ஆயிரத்து 932 வார்த்தைகள் உண்டு என்றும் கூறப்படுகிறது.

ii நூஃ நபியவர்கள் தான் முதன் முதல் கப்பல் கட்டியவர்

iii உலகில் மிகப் பெரிய சமாதி இத்தாலியில் உள்ளது. இது 28 அடி உயரமும் 88 அடி விட்டமும் கொண்டது கி.மு. 56ல் கட்டப்பட்டது. "லுகுல்லஸ்" எனும் ரோமாபுரி தளபதியின் கல்லறை இது

iv இஸ்லாத்திற்காக உயிர்த்தியாகம் செய்த முதல் ஆண் மகன் ஹஸறத் ஹாரிஸ் (ரலி) அவர்களாகும்.

v இஸ்ரேல் நாட்டு தலைநகர் "ஜெருசலேம்" இதற்கு "அமைதி நகர்" என்று பொருள்.

vi இந்தோனேசியத் தலைநகர் ஜகர்த்தாவில்தான் உலகிலேயே மிகப்பெரிய பள்ளிவாசல் அமைந்துள்ளது.

vii இத்தாலியின் தலைநகரான உரோமில்தான் உலகின் மிகப்பெரிய தேவாலயம் உண்டு

viii பஞ்சபாண்டவர்கள் இன்றைய தீபேத்தை தாயகமாக கொண்ட தாய் வழி மரபினர்.

ix விண்வெளியில் ஒருநாளைக்கு 18 முறை சூரிய உதயம் வரும்.

x மண்ணில் இருந்தே மனிதன் உருவாக்கப்பட்டான். 70 கிலோகிராம் எடையுள்ள மனித உடலில் 58 வகையான மூலப் பொருட்களையும் ஆக்ஸ்போட் பல்கலைக்கழக பதிப்பகம் பட்டியலிட்டுள்ளது. இம்மூலப் பொருட்களில் ஒட்சிசன், ஐதரசன் போன்ற வாயுக்களைத் தவிர மற்ற கனிமங்கள் அனைத்தும் மண்ணில் இருந்து கிடைப்பவை. மண்ணோடு மீண்டும் கலப்பவை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் இருந்து மனிதன் மண்ணில் இருந்தே உருவாக்கப்பட்டான் என்பது தெளிவாகின்றது.

ஒட்சிசன் 43 கிலோகிராம், காபன் 16 கிலோகிராம், ஐதரசன் 7 கிலோகிராம், நைதரசன் 1.8 கிலோகிராம், கல்சியம் 1.0 கிலோகிராம், பொஸ்பரஸ் 780 கிராம், பொட்டாசியம் 140 கிராம், சோடியம் 100 கிராம், குளோரின் 0.68 கிராம், மக்னீசியம் 19 கிராம்.

நூல் 02

# மனையியல்

**சாவிக்குறிப்பு**

மனையியலில் பாலியல் கல்வி மிக மிக முக்கியமான ஒரு விடயமாகக் கொள்ளலாம். பாலியல் கல்வி சம்பந்தமாக சிந்தித்த முதல்நாடு இந்தியாதான் என வரலாறு கூறுகிறது. முதன் முதல் எழுதப்பட்ட "காமவியல்" சாஸ்திரமான "காமசூத்திரம்" எழுதப்பட்டதும் இந்தியாவில்தான்.

இதற்குப்பிறகு எத்தனையோ ஆண்டுகள் கழித்துத்தான் "சிக்மன்பிராய்டு" இதுபற்றிக் குறிப்பிடுகிறார்.

மாஸ்டர் அன்ட ஜான்சனும் (Master and Jansan) பிற காமவியலாளர்களும் இப்பொழுதுதான் மேற்கில் இதுபற்றி ஆராயத் தொடங்கியுள்ளார்கள். வாத்ஸ்யாயரின் காமசூத்திரத்தின் நுட்பத்தை அவர்கள் இன்னும் எட்டவில்லை.

பிரஞ்சுக்காரர்கள் கூட இந்த அளவு புலமை பெறவில்லை.

காமத்தைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் வாத்ஸ்யாயனர் கண்டு பிடித்துக் கூறியுள்ளார்.

இவரது ஆய்வு நூல் ஏறக்குறைய முழுமையானது எனலாம். இது ஒரு செய்முறை விளக்க நூல். எல்லா உத்திகளையும் அது கற்றுத் தருகிறது.

இவருக்குப் பின் கொக்கோகம் நூல் எழுதிய அதிவீரராம பாண்டியன் வந்தார். இன்றும் ஆயிரக்கணக்கான இந்துக் கோயில்களில் சிவலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் வேறு எந்தக் கடவுளுக்கும் ஒதுக்கப்படவில்லை.

இந்தியா, தாய்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளைத் தவிர வேறு எந்தவொரு நாட்டிலும் இந்த சிவலிங்க (ஆண்குறி) வழிபாடு கிடையாது.

ஆதாரம்: ஸென்னுடன் நடந்து ஸென்னுடன் அமர்ந்து
ஒசோ கவிதா வெளியீடு

ஆண்குறியும் பெண்குறியும் சேர்ந்த ஒரு குறியீட்டை சிவலிங்கம் என்று கூறுவதுண்டு. என்ற பதிவுகளோடு இங்கு சில விடயங்களை எடுத்து நோக்குவோம்.

**இழைகள்**

1. திருமணச் சம்பிரதாயங்கள்
2. தீண்டத் தகாத பெண்கள்
3. பெண்கள் வெறுக்கும் ஆண்கள்.
   பெண்கள் விரும்பும் ஆண்கள்.
   ஆண்கள் வெறுக்கும் பெண்கள்.
   ஆண்கள் விரும்பும் பெண்கள்
4. கலியாணம் முடிக்கத் தகாத பெண்கள்
5. திருமணத்திற்கு முன் அறிய வேண்டியது
   திருமணத்திற்கு பின் அறிய வேண்டியது
6. பாலியல் பலயீனம்
7. பலயீனத்துக்கான மருந்துகள்
8. ஆண் பெண் விருத்தசேதனம்
9. வாழ்வு வளம் பெற
10. சாவித் துவாரத்தின் ஊடே

**இழை 1**

## திருமணச் சம்பிரதாயங்கள்

i தென் இந்தியாவில் திராவிட இனத்துள் ஓர் இனமாக "தோடர்" எனும் இனத்தவர்கள் இருக்கிறார்கள்.

இந்த இனத்துள் ஒரு பெண் ஓர் ஆணுக்கு என நிச்சயதார்த்தம் நடந்து விட்டால், அந்த நிச்சய தினத்தில் இருந்து ஆணும் பெண்ணும் கூடி வாழ்வார்கள்.

கர்ப்பம் தரித்த பின்னரே திருமணம் நடைபெறும். கருத்தரிக்காவிட்டால், விரும்பினால் அந்த ஆண் அந்தப் பெண்ணோடு திருமணம் செய்து வாழலாம். விருப்பம் இல்லாவிட்டால் பிரிந்து விடலாம். இங்கு திருமணத்திற்கு பிள்ளையே முக்கியம்.

ii முதியவருக்குத் திருமணம் செய்து கொடுத்தல்

ஒரு முதியவர் அந்த ஊரில் மிக மிக கண்ணியமானவராக, மதிப்புள்ளவராகக் கௌரவிக்கப்பட்டால் அம்முதியவருக்கு தனது பெண்ணை (மகளை) திருமணம் செய்து கொடுப்பதை அத்தனை கௌரமாகக் கருதினர். இவ்வழக்கு இன்றும் மலேசியாவில் உண்டு.

iii மலர் வளையத் திருமணம்

சீனாவில் ஒரு பெண்ணுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்ட ஆண் (மாப்பிள்ளை) இறந்து விட்டால் அவரது சவ அடக்கத்தில் வைக்கப்படும் மலர் வளையத்தை எடுத்து கொண்டு மாமன் மாமி வீட்டிற்குச் சென்று திருமணம் முடியாமலே வாழ வேண்டும்.

இதை மீறி மறுமணம் செய்தால் முதல் கணவனுக்கு துரோகம் செய்ததாக் கருதப்படும்.

iv ஆபிரிக்கச் சம்பிரதாயம்

ஆபிரிக்க பழங்குடி மக்களிடையே பல விசித்திர திருமணச் சம்பிரதாயங்கள் நிலவி வருகின்றன.

அவற்றுள் ஒன்று: ஆண், ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் நாற்பது நாளைக்கு தனியே உலாவக் கூடாது. "காட்டாரி" என்ற ஒரு தேவதை அவர்கள் மேல் குடி கொண்டு விடும் என்பது அவர்களது நம்பிக்கை. அவர்களின் முதலிரவுக்குரிய இடம் ஒரு கிடங்காகும்.

இந்த கிடங்கு நான்கு அடி ஆழத்தில் ஒரு குடிசையை போல் அமைந்திருக்கும்.

அதில் இருந்து அவர்கள் வெளியே வந்த பின்பு நீராடிப் பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவர்.

இதன் பின்பே அவர்கள் திருமணத் தம்பதிகளாகக் கருதப்படுவர்.

v கென்யாச் சம்பிரதாயம்

கென்யாவில் உள்ள பூர்வீகக் குடிகளிடையே உள்ள வழக்கப்படி ஒரு ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டுமானால் சோளக் கதிர்களும், கரும்பும் இரு எருதுகளும் சீதனமாகக் கொடுக்க வேண்டும்.

ஓர் இளைஞன் ஒரு யுவதியை விரும்பிவிட்டால் அவளுக்கு ஒரு பாசிமாலையைப் பரிசாகக் கொடுப்பான். அந்த இளைஞனை அவள் முழு மனத்துடன் காதலிப்பதானால் அதை அவள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வாள்.

மாலையைத் திருப்பிக் கொடுத்து விட்டால் அந்த ஆண் வேறு ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டியதுதான்.

vi தன்னினத் திருமணம்

ஆணை ஆணும், பெண்ணைப் பெண்ணும் திருமணம் செய்தல்.

அமெரிக்காவில் நியூயோக்கில் இருந்து லோஸ் ஏஞ்சல் வரை உள்ள கிறிஸ்தவ கோயில்களில் மேற்படி திருமணங்கள் பல நடைபெற்றதற்கான பதிவுகள் உண்டு. குறிப்பாக 1971ஆம் ஆண்டில் மட்டும் நியூயோர்க்கில் 20 திருமணங்கள் கிறிஸ்தவ சம்பிரதாயப்படி மோதிரம் மாற்றி கோயில் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு நடைபெற்றுள்ளதாக தகவல்கள் உண்டு

ஆதாரம் – Weekand June 1 –1971

அத்தோடு கலிபோர்னியாவில் உள்ள கென்சாஸ் (Kansas) இதுபற்றி கூறும்போது, அமெரிக்கச் சட்ட நிபுணர் ஒருவர் தன்னினத் திருணம் சட்டப்படி செய்யலாம் என்று சட்டமுமில்லை செய்யக் கூடாது என்ற சட்டமும் இல்லை எனக் கூறியுள்ளார்.

மேலும் தகவல் தேவைப்படின் (Queen Wedding) வீக்கன் பத்திரிக்கையை பார்க்கலாம். இதில் இரண்டு படங்கள் உண்டு. தேவையேற்படின் எடுத்துக் கொள்ளலாம்.

vii ஆபிரிக்காவில் உள்ள சிட்டார் மலைப்பிரதேசத்தில் வாழும் பழங் குடியினரில் ஆடவர்தான் மணமகளைப் பணம் கொடுத்து வாங்க வேண்டும்.

கள்ளத்தனமாக ஒரு பெண் ஒருவனுடன் ஓடிவிட்டால் பிடித்துவந்து பிரித்து

வைப்பர். இப்படி நான்கு முறை ஓடி விட்டால் அவளுக்குரிய பணத்தைக் கொடுத்து அவளையே அவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

viii கிழக்கிந்திய தீவுகளில் உள்ள யூகி என்ற பழங்குடி மக்களிடையே பல விசித்திரமான பழக்கங்கள் நிலவுகின்றன. கலியாணத்தினத்திற்கு மூன்று நாளைக்கு முன்பே மணப்பெண்ணிற்கு மயக்க மருந்து கொடுத்து விடுவார்கள். பிரக்ஞை அற்ற நிலையிலேயே திருமணம் நடைபெறும்.

ix இஸ்லாத்திற்கு முன் வாழ்ந்த அரேபியப் பழங்குடியினரிடம் தற்காலிக திருமண வழக்கொன்று நடைமுறையில் இருந்தது. இது இன்றும் ஈரானில் உண்டு. இதனை "இஸ்திப்ழா?" என அழைப்பர்.

இத்திருமணம் தற்காலிகமாக நடைபெற்றுக் குடும்பம் நடத்துவர். பிள்ளைகள் பிறந்தால் அப்பிள்ளைகளுக்கு தகப்பன் செலவிற்குப் பணம் கொடுத்து விட்டுப் பிரிந்து சென்று விடுவான். விரும்பினால் தொடர்ந்தும் வாழலாம். பிரிந்து போய் வந்ததும் சேர்ந்து வாழலாம்.

x சில திருமணத் தகவல்கள்

சேக்ஸ்பியர் தனது 18ஆவது வயதில் ஹெத்வோ எனும் 26 வயதுப் பெண்ணை மணந்து கொண்டார்.

ஹேடில்லி தனது 19வயதில் ஹரியர் என்ற காதலியுடன் எடின்பரோவுக்கு ஓடி விட்டார். காதலி இறந்ததும் இரண்டாவது திருமணம் செய்துக் கொண்டார்.

ஜோன் மில்ட்டன் தனது 33வது வயதில் மேரி பாவெல் எனும் 17 வயது பெண்ணை மணந்து கொண்டார்.

லியோ டால்ஸ்டாய் 34வது வயதில் சோனியா எனும் 35 வயது யுவதியை மணந்து கொண்டார்.

டாக்டர் ஜோன்சன் தனது 28வது வயதில் 33 வயது விதவையை மணந்து கொண்டார்.

முகம்மது நபியவர்கள் தனது 25வயதில் 40 வயது கதீஜாவை மணந்து கொண்டார்.

புத்த பிரான் தனது 16வயதில் 16 வயதுடைய பெண்ணை மணந்து கொண்டார்.

இழை 2

## தீண்டத்தகாத பெண்கள்

i சடங்கு செய்யும் பிராமணன், லெப்பை, முஅத்தின், பூசாரி ஆகியோரின் மனைவி

ii அரசன், ஜனாதிபதி, நாட்டின் தலைவன் அல்லது ஏதோ ஒரு வகையில் தலைவனின் மனைவி.

iii நண்பனின் உறவினனின் குருவின் மாணவனின் மனைவியர்.

iv பைத்தியக்காரப் பெண்

v குஸ்டரோகியான பெண்

vi உடல் நாற்றமுள்ள பெண்

vii வயது போன கிழவி

viii கர்பிணி

ix யார், எவர் என்று தெரியாத பெண்

x நான்கு பேருக்கு மேல் உடலுறவு கொண்டவள் என்று தெரிந்தால் அவள் படு வேசை எனக் கருதப்பட்டு அவளுடன் சேரக் கூடாது. நோய் வரும். இது மகாரிசி கல்யாண மல்லர் அவர்கள் எழுதிய ''அந்தரங்கம்'' எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

இழை 3

## பெண்கள் வெறுக்கும் ஆண்கள்

i அளவுக்கு மிஞ்சிய கருமித்தனம் உள்ளவன் (நப்பி, வகுலன்)

ii நோயாளி

iii மனைவியை விட்டு நீண்டநாள் பிரிந்து இருப்பவன்

iv மிகச் சீக்கிரமாக உடலுறவை முடித்துக் கொள்பவன்

v கொடுமைக்காரன்

vi அசுத்தமானவன்

vii நேரம், காலம் அறியாமல் உடல் உறவு கொள்பவன் / சந்தேகப்படுபவன்

viii அச்சம் தரத்தக்க காரியங்களைச் செய்பவன் (பஞ்சமா பாதகங்களில் ஈடுபடுபவன்)

ix மனைவிக்கு துன்பம் தந்து அவள் அழும்போது உடல் உறவு கொள்பவன்

x மனைவியை வறுமையில் வைத்திருப்பவன்.

## பெண்கள் விரும்பும் ஆண்கள்

i செலவு சிக்கனம் இரண்டிலும் கவனமாக தேவைக் கேற்ப செலவு செய்யவும் வீண் செலவைத் தவிர்க்கவும் தெரிந்த ஆண்கள்.

ii தேகாரோக்கியமான, வாக்கானவர்கள்

iii விசாலமான திடமான தோள்களைக் கொண்டவர்கள் (இக் கருத்து மனிதர்கள் வேட்டையாடி மிருகங்களோடு போராடி வாழ்ந்த காலத்திற்குப் பொருத்தமானது. இன்று இந்நிலை இல்லாததினால் அவ்வளவுதூரம் பெண்கள் இதனைக் கவனிப்பதில்லை. தொழிலையே அதிலும் பெரிய அரச தொழில் செய்பவர்களையே விரும்புகிறார்கள். அதாவது படித்த அறிவுள்ள நல்ல தொழில் உள்ளர்களையே விரும்புகின்றார்கள்.

iv பாலியல் விடயத்தில் தன் மனைவியை விட வேறு யாரையும் ஏறிட்டும் பார்க்காத அதே வேளை ஆண்மையுள்ளவனாக இருப்பவன்.

v நல்ல இனிமையாகப் பேசக் கூடிய குணமுள்ளவன்.

vi பகடிகளை விரும்பக் கூடியவன்.

vii கலைகளில் ஆர்வம் உள்ளவன்.

viii சுத்தமாகவும் அழகாகவும் ஆடை அணிபவன்.

ix அச்சம் தரக்கூடிய காரியங்களை செய்யாதவன்.

x தன்னை நேசிப்பவன், தன்னோடு இரக்கமானவன்

## ஆண்கள் வெறுக்கும் பெண்கள்

i கணவனிடம் துவேசம் பாராட்டிக் கொண்டு தன்னை அலங்கரித்துக் கொள்ளாத பெண்.

ii சிகரெட், மதுபானம் போன்ற கெட்ட பழக்கமுள்ள பெண்கள்

iii பொய் சொல்லும் பெண்கள்

iv துர்நாற்றமுள்ள பெண்கள்

v கடுகடுப்பான பெண்கள்

vi எந்த நேரமும் சிரிக்கும் பெண்கள்

vii துப்பரவில்லாத பெண்கள்

viii ஊர் சுற்றித் திரியும் பெண்கள்

ix பெரு ஊணில் விருப்பம் கொண்ட பெண்கள்

x மிகவும் தடித்த, மிகவும் மெல்லிய பெண்கள்

## ஆண்கள் விரும்பும் பெண்கள்

i மிகவும் நெடிதாயும், மிகவும் கட்டையாகவும் இல்லாத சாதாரண உயரம் கொண்ட தன்னை விடக் கொஞ்சம் கட்டையான பெண்கள்.

ii நல்ல நிறம் கொண்ட அழகான கவர்ச்சியான நீளமான முடிகொண்ட பெண்கள்.

iii அடக்கமான அதிகம் கதைக்காத பெண்கள்.

iv தன்னைவிட அந்தஸ்த்தில் உத்தியோகத்தில் குறைவான பெண்கள்.

v பின் தூங்கி, முன் எழும் பெண்கள்.

vi சமையலில் கெட்டித் தனமான சுவையாக விதம் விதமாக சமைக்கக் கூடிய பெண்கள்.

vii சிக்கனமான வரவுக்குத் தக்க செலவு செய்யக்கூடிய பெண்கள்.

viii கணவனின், தாய், தந்தை, சகோதரர்கள், நண்பர்கள் என்பவர்களைக் கவனிக்கக் கூடிய பெண்கள்.

ix இயற்கையான நறுமணம் உள்ள பெண்கள் (சில நூல்களில் நல்ல பெண்களில் தாளம் பூ மணக்கும் என்றும், சில பெண்களில் கற்றாளை நாறும் என்றும் எழுதப்பட்டுள்ளன. இது இயற்கையான மணமாகும்.)

x பிரபலமான, ஊரில் மதிப்பும் மரியாதையும் உள்ள குடும்பத்தில் பிறந்த பெண். பொருளாதார வசதி குறைந்தாலும் நல்ல குணசாலிப் பெண்களை ஆண்கள் விரும்புகிறார்கள்.

**இழை 4**

## கலியாணம் முடிக்கத் தகாத பெண்கள்

i இனம் தெரியாத, குலம் தெரியாத பெண்கள்.

ii அதிகம் நெட்டையான, மிகவும் குட்டையான மிகவும் மெல்லிய பெண்கள்.

iii மயிர் முளைத்த சருமம், மேல் உதட்டில் உரோமம் என்பன உள்ள பெண்கள்.

iv வளையாத புருவம், தடித்த கறுத்த உதடு, முறம் போன்ற காது உள்ள பெண்கள்.

v நாக்கை வெளியே நீட்டிக் கொண்டும், நீண்டு வெளியே தெரியக் கூடிய பல் உள்ளவள்.

vi தடித்த கழுத்து உள்ளவள்

vii ஒன்று பெருத்தும் ஒன்று சிறுத்ததுமாக உள்ள மார்பகங்களை உடையவள்.

viii கை, கால்களில் கூடுதலான விரல்களையும், விரல்கள் ஒழுங்கற்றுமிருத்தல்.

ix வேகமாக நடப்பவள்

x சிரிக்கும் போது கன்னத்தில் குழி விழுபவள்.

**இழை 5**

## கலியாணத்துக்கு முன் அறிய வேண்டியவை

தன்னில் ஆண்மைக் குறைவு, துரிதஸ்கலிதம், தூக்கத்தில் விந்து போதல், கைகால் நடுக்கம், கண்பார்வை குறைவு, உடல் நாளடைவில் மெலிதல் எனபன இருந்தால் வைத்தியப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

திருமணம் செய்து கொள்வதன் நோக்கம் செல்வங்களைச் சேர்த்துக் கொள்வதும் தர்மம் செய்வதுமாகும் என அற நூல்கள் கூறுகின்றன.

பிள்ளைகளும் செல்வம்தான் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்தான்; நல்ல தொழில் செய்து பணத்தை சேர்ப்பதுவும் செல்வம்தான்.

தான் திருமணம் செய்யப் போகும் பெண் தன்னைவிட வயதில் குறைந்தவளாக இருக்க வேண்டும். இது 5க்கும் 10க்கும் இடையில் குறைவாக இருப்பது நல்லது. 10க்கு மேற்படக்கூடாது இது பின்விளைவுகளை ஏற்படுத்தும். பெண்ணிற்கு சொந்த பந்தம் இருக்க வேண்டும்.

அல்லது பிரபலமான குடும்பமாக இருக்க வேண்டும். வறுமைப் பட்டு தாழ்ந்து போன குடும்பமாக இருக்கக் கூடாது. தளைத்துவரும் குடும்பமாக இருக்க வேண்டும். அல்லது பிரபலம் உள்ளவர்களோடு தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும்.

பெண் அழகு, தன்னடக்கம், ஆரோக்கியம், கவர்ச்சி, நல்லபற்கள் நகங்கள், கண்கள், மார்பகங்கள் ஆகியவை சுமாராக விளக்கமாக (சராசரியாக) மாசுமறுவற்று இருக்க வேண்டும்.

இதனை சிலர் A,B,C,D,E,F,G என வரிசைப்படுத்திப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பார்கள்.

அதாவது வயது, அழகு, ஒழுக்கம், சீதனம், கல்வி, குடும்பம், பொது அறிவு என்பன கவனிக்கப்பட வேண்டும் என்பார்கள். பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்கள்.

அ. மார்க்கப்பற்று,

ஆ. அழகு,

இ. கோத்திரம்

ஈ. (குடும்பம் குழந்தைப்பேறு), பொருள் என்ற ஒழுங்கில் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்கள்.

மேலும்

i பெண் சோம்பேறித்தனம் உள்ளவளா? முன் ஒருவனைக் காதலித்தவளா ஏறுமாறானவளா? நரம்புத் தளர்ச்சி உள்ளவளா? அவளது குடும்பத்தில் பைத்தியம், மலட்டுத் தன்மை, செவிடு, குருடு, ஊமை, ஆஸ்மா, எக்சிமா போன்ற பரம்பரை நோய்கள் உள்ளவர்களா எனப் பாரத்துக் கொள்ள வேண்டும்.

ii பொய்யான கூந்தல் உள்ளவளா, மயிர் உதிர்ந்தவளா? என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

iii கோடையில் கைகால் வேர்ப்பவளா?

iv ஆண்களைப் போல் தோற்றம் உள்ளவளா? அல்லது பெரிய பிருஷ்டபாகம் உள்ளவளா? பெரிய நெற்றி, புருவம், பெரிய குஸ்டம் (மார்பகம்) பெரிதாக இருக்கும் எல்லாம் சராசரிக்கு அப்பால் பெருத்தது நடைமுறைக்கு உதவாது.

v குழந்தைப் பருவத்தில் தன்னோடு விளையாடியவள் (திருமணம் செய்வதைத் தவிரத்துக் கொள்ள வேண்டும்).

vi தன்னை விட அந்தஸ்த்தில் உயர்ந்தவள் போன்றவற்றில் கவனமாக இருக்க வேண்டும்.

vii ஒன்று பெருத்தும் ஒன்று சிறத்ததுமாக உள்ள மார்பகங்களை உடையவள்.

viii கை, கால்களில் கூடுதலான விரல்களையும், அந்த விரல்கள் ஒழுங்கற்றுமிருத்தல்.

ix வேகமாக நடப்பவள்.

x சிரிக்கும்போது கன்னத்தில் குழி விழுபவள்.

## கலியாணத்துக்கு பின் அறிய வேண்டியவை

i மணமுடித்து மூன்று நாட்கள்வரை தரையிலேயே படுக்க வேண்டும். (வாழ்நாள் முழுக்க இதனைப் பின்பற்றினாலும் நல்லது (குளிர் பிரதேசங்களில் இவற்றில் மாற்றங்கள் செய்யலாம்)

ii மனக்கவலை, களைப்பு, வியாதியுற்ற நிலை, நீண்ட பயணத்தின் பின், வெறும் வயிற்றோடு, சாப்பிட்டவுடன் உடல் உறவு கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

iii ஒரு நாளைக்கு இரண்டு தடவைக்கு மேலும், தொடர்ந்தாற் போல் பல நாட்களும் உடலுறவு கொள்ள கூடாது.

iv பெரிய கடினமான வெளிச்சம், இருட்டு இரண்டையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

v உடலுறவுக்குப் பின் நீர் அருந்தக் கூடாது; பால் பழம் சாப்பிடலாம்.

vi புளி சாப்பிடக் கூடாது. பூண்டு வகைகளைச் சாப்பிடலாம்.

vii முதல்நிலையில் தொடுதல் மட்டும் இடம்பெற வேண்டும். முதல் நிலையில் மார்பகங்களையும் குறியையும் தொடவே கூடாது. முதலில் கணவன் மனைவியைத் தொட வேண்டும் இது சாதாரண தொடுதல்தான். இதன் பின் இரண்டாம் நிலையில் எந்த இடத்தில் தொட்டால் இன்பம் (கூச்சம்) எனக் கேட்டுத் தொடுவது.

viii மூன்றாம் நிலையில் மார்பகங்களையும் குறிகளையும் தொடலாம். (அதிக இன்பம் எனச் சொல்லும் போது)

ix நான்காம் ஐந்தாம் நிலையில் விரும்பிய இடங்களில் முத்தமிட்டு உடல் உறவு கொள்ளலாம்.

x பெண் மேலே என்ற உத்திகளையும் கையாளலாம். மலையாளத்தில் சாதாரண நிலையே இதுதான். இது அவர்களது கலாச்சாரம் என அறியக்கிடக்கிறது.

**இழை 6**

## பாலியல் பலவீனம் - ஆண், பெண்

i ஆண் குறிப்பலவீனம்

ii உடற்பலவீனம்

iii நரம்புத்தளர்ச்சி

iv குடிப்பழக்கம், புகைப்பழக்கம் போன்ற கூடாத பழக்கங்கள்

v கரப்பழக்கம்

vi தன்னினச் சேர்க்கை

vii இரசிப்புத் தன்மை இல்லாமை, அல்லது அடிமைத் தனம், அல்லது ஈகோ, அல்லது மனைவியிடத்து அன்பு இல்லாமை.

viii விழுந்து காயப்பட்டு நரம்புகள் சேதப்பட்டு இருத்தல். குறிப்பாக முதுகந்தண்டு பாதிக்கப்பட்டிருத்தல்.

ix கூடுதலான அவா அல்லது அடக்க முடியாத ஆசை

x பயம் அல்லது தாம்பத்திய அறிவின்மை.

i ஆண்குறி பலவீனம்

இது திடீரென ஆண் உறுப்புச் சோர்வடைதல். வீரியத்தோடு எழுந்து தலையாடாமை, மொட்டு விரியாமை, எழுந்ததும் விந்து வெளியாதல், உள்ளேகியதும் திடீரென விந்து வெளியாதல் பரம்பரை சலனம் என பலவகைப்படும்.

ii உடல் பலவீனம்

இதற்கு இருதயம் பலவீனமாக இருத்தல், மூளை பலவீனமாக இருத்தல், ஈரல் பலவீனமாக இருத்தல், குண்டிக்காய்ப் பலவீனமாக இருத்தல், நரம்புகள் பலவீனமாக இருத்தல், உயிர்சத்துக் குறைந்த உணவு போன்ற காரணங்களைக் கூற முடியும்.

iii நரம்புத் தளர்ச்சி

iv குடிப்பழக்கம் புகைப்பழக்கம்

v கரப்பழக்கம்

vi தன்னின சேர்க்கை

vii அடிமைத் தனம் அல்லது இரசிப்புத்தன்மை இல்லாமை அல்லது ஈகோ அல்லது மனைவியிடம் அன்பு இல்லாமை.

viii விழுந்து காயப்பட்டு நரம்புகள் சேதமடைந்திருத்தல். குறிப்பாக முதுகந்தண்டு பாதிக்கப்பட்டிருத்தல்.

ix கூடுதலான ஆசை

x தாம்பத்தியம் பற்றிய அறிவின்மை என்பனவும்

அத்தோடு

அடக்கி ஒடுக்கப்பட்ட பாலுணர்ச்சி, மனநோயை அல்லது நரம்புக் கோளாறுகளை உண்டாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றது என்கிறார் சிக்மன்ட் பிராய்ட் எனும் உளவியலாளர்.

மேலும் இவர் பாலுணர்வு சிற்றின்ப வேட்கை குமரப் பருவத்தில் மட்டும்தான் ஏற்படுகிறது என்று கூற முடியாது. இது குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பமாகிவிடுகிறது என்று கூறுகிறார்.

பாலியல் வீரியம் தொடர்பாக சமீபத்தில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் நடுத்தர வயது கொண்ட 1300 ஆண்கள் பங்குபற்றினர்.

இவர்களில் 68சத விகிதமானவர்களுக்கு வீரியக் குறைவு ஏற்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இவர்களைக் கொண்டு மேலும் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி கீழ்காணும் காரணத்தைக் கொண்டோரே இக்குறைபாட்டிற்குள்ளானவர்களாவர்.

- புகைபிடிக்கும் பழக்கம்
- சில மருந்துகளை தொடராகப் பாவித்தல்
- மனக்குழப்பத்தோடு வாழுதல்
- இருதய நோய்
- நீரிழிவு

மேலும் பெண்கள் பாலியல் சம்பந்தமான அறிவு பெறுவதை ஆண்கள் விரும்புவதில்லை.

காரணம் தங்களின் பெலயீனத்தை அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்பதனால். ஆனால் ஆண்களின் இந்த எண்ணம் தவறானது என்பதை என்னால் கூறமுடியும்.

அதாவது, பெண்கள் பாலியல் அறிவினை (Sexual Education) பரம்பரை பரம்பரையாக தங்களின் பாட்டிகளின் மூலம் அறிந்தவண்ணமேயுள்ளனர்.

ஆனால் இவர்கள் ஆண்களைப் போன்று அலட்டிக் கொள்வதே இல்லை.

(இதுபற்றி எனது ''தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் பாரம்பரிய பாலியல் கல்வி'' எனும் நூலில் விரிவாக எழுதியுள்ளேன். (அச்சில்)

பெண்களின் பாலியல் பலவீனம்

i வயதுக்கு வருதல் காலதாமதமடைதல்
ii உணர்ச்சியில்லாமை
iii பிள்ளைப்பேற்றுப் பயம்
iv கணவனோடு அல்லது ஆண்களோடு உள்ள வெறுப்பு
v அதி கூடிய இறை பக்தி
vi கரப்பழக்கமும் தன்னினச் சேர்க்கையும்
vii அடிமைத் தன்மை அல்லது மாமியார் பயம்
viii இரசிப்புத் தன்மை இல்லாமை
ix இருளி அல்லது ஆண் பெண் இரண்டுமில்லாத தன்மை – அலி
x பரம்பரை – மலட்டுத் தன்மை

இழை 7

## பாலியல் பலவீனத்துக்கான மருந்துகள்

நோய்கள் எங்கு ஆரம்பித்தாலும் யாரைத் தொட்டு தொற்றினாலும் அதற்கு அடிப்படைக் காரணம் மனிதனுடைய அறியாமை அல்லது அசட்டுத்தனம் எனக் காரணம் கொள்ள முடியும்.

நோய்களில் அதிகமானவை பரம்பரையோடு சம்பந்தமுடையவையே. உதாரணமாக உலகில் மொத்தமாக 34 நோய்கள் உண்டு எனக் கொண்டால் அவைகளை மூன்று குழுக்களாகப் பகுக்க முடியும்.

அவை

a. தொற்றும் நோய்
b. தொற்றா நோய்
c. பரம்பரை நோய்

இவற்றில் பரம்பரை நோய்களே அதிகமானவை எனலாம்.

உதாரணம் :

ஆஸ்த்மா, பைத்தியம், வாதம், பாலியல் பலயீனம், பாலியம் பலம், போதம், வாதம், புத்திசாலித்தனம், மடத்தனம், நீரிழிவு, இருதய நோய், சரும நோய், மூலவியாதி, பல்வியாதி, தலைமொட்டையாதல், தலை நரைத்தல், கண் வியாதி, காது கேளாமை, இரட்டைப் பிள்ளை பிறத்தல், மலட்டுத் தன்மை, கைகால் சொத்தி போன்றவற்றைக் கூற முடியும்.

## ஆண்மை குறைவுக்கு மருந்துகள்

i வேப்பிலை, அறுகு, முருங்கை, ஆலிலை,அரசிலை, அமுக்கறா, நாவல்கொட்டை இவைகளை வெயிலில் உலர வைத்து பொடியாக்கும் போது ஒவ்வொன்றிலும் சம அளவே எடுக்க வேண்டும் ஒவ்வொரு நாளும் இரண்டு தேக்கரண்டி தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவு உண்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் பொடியை உட் கொள்ளவேண்டும்.

இப்படி 30–40 நாட்கள் தொடர்ந்து உட்கொண்டால் பலன் கிடைக்கும்.

ii நீண்ட நேரத்திற்கு போகம் செய்ய கஸ்தூரி, கோரோசனை, தேன், கருஞ்சீரகம், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, இஞ்சி, உலுவா, அறுகம்புல், வேம்பு, கற்றாளை இவைகளை கிடைக்கும் போது சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். மேற்கூறப்பட்டவைகளில் ஆண் தன்மையை ஊக்கப்படுத்தும் சத்துக்கள் உண்டு.

iii மாதுளம்பழம் (ஆண்களுக்கும், பெண்களும்)இயற்கையான "வயாகரா" என்று கூடக் கூறலாம்.

தினசரி ஒரு கிண்ணம் மாதுளம் பழச்சாறு அருந்தினால் பாலியல் ஊக்கம் உச்சம் பெறும் என பிரித்தானிய ஆய்வு ஒன்று கூறுகிறது.

அதாவது எடின்பேக்கில் உள்ள குயீன் மார்கிரட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆய்வாளர்கள் இப்படி கூறியுள்ளனர்.

இந்த ஆய்வு 21 வயதிற்கும் 58 வயதிற்கும் இடைப்பட்டோர் மத்தியில் செய்யப்பட்டதாகும்.

iv அமுக்கிறாக்கிழங்கு (இதன் தாவர இயல்பெயர் "வித்தியானியா" என்பதாகும்.)

இதனை அசுவகந்தம் (குதிரை நாத்தம் அல்லது குதிரைச்சக்தி என்றும் அழைப்பதுண்டு. அசுவம் என்றால் குதிரை கந்தம் என்றால் நாத்தம்) இக்கிழங்கு ஆண்மை விருத்திக்கு, உடல் உறுதிக்கு, உடல் அழகிற்கு நீண்ட ஆயுளுக்கு என பல்வகைப் பிரயோசனம் உடையது.

பட்டோலைக் கடைகளில் கிடைக்கும்.

அமுக்கிறாக் கிழங்கை இடித்து எருமை நெய்யில் குழைத்துச் சாப்பிடலாம்.

சீன மருத்துவத்தில் "கொரியன் ஜின்சங்" எனும் மூலிகை ஆண்மை விருத்திக்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படும். மிகப்பிரபலமான மூலிகை இதற்குச் சமமான மூலிகையே அமுக்கிறா"

இதனை சூரணம், லேகியம், தைலம் ஆகிய வடிவங்களில் மருந்தாகச் செய்து உபயோகிக்கலாம்.

அமுக்கிறாக் கிழங்கை சாதாரணமாகவும் சாப்பிடலாம்.

v கைப்பூ : இதனை பட்டோலைக் கடைகளில் வாங்கலாம்.

இரத்தக் கட்டி நிறத்தில் இது இருக்கும். கராம்பு, சுக்கிரிக் கிழங்கு, ஏலம் போன்றவற்றோடு சேர்த்து இடித்து தூளாக்கி எடுத்து நீர் விட்டு பிசைந்து தட்டி வட்டக் கட்டியாக்கி காய வைத்து எடுத்து வெற்றிலை சாப்பிடும் போது, சேர்த்துச் சாப்பிடலாம். வாய்க்கு மணமாகவும், சாதாரணமாகச் சாப்பிடும் வெற்றிலையை மதப்பிளவாக மாற்றி பாலியல் ஊக்கியாகச் செயல்படும். தென்கிழக்கில் புதுமணத்தம்பதியருக்கு மதப் பிளகு என இதனைச் சாப்பிடக் கொடுப்பார்கள். பாலியல் உணர்வை இது ஊக்கப்படுத்தும்.

vi இஞ்சிச் சாறு ஒன்றரை அவுன்ஸ் எடுத்து நன்றாக வடிகட்டி வடித்து எடுத்து தேனோடு முட்டையின் மஞ்சள் கருவைக் கலந்து சாப்பிட்டு வர தாது புஷ்டியாகும். அல்லது

vii நின்று கொண்டு அல்லது கதிரையில் இருந்து கொண்டு மலவாயிலைச் சுருக்கி ஒரு வினாடிவரை வைத்திருந்து பின் நெகிழவிட்டு பின் சுருக்கி இப்படியாக ஒரு நாளைக்கு 20 தடவை செய்துவர கலவியின் போது இந்திரியத்தை வெளியே பீச்சுகின்ற தசைகளுக்கு வலு ஏற்பட்டு கெட்டியாகும். இதனால் இந்திரியம் வெளியேறுவது தாமதமாகும்.

viii கருவேலம் பிசினை சிறு சிறு துண்டுகளாக்கி நெய்யில் பொரித்துச் சாப்பிடலாம்.

ix வெண்டிக்காயைப் பச்சையாகச் சாப்பிடலாம். இது போகத்தில் விருப்பத்தை ஏற்படுத்தும்.

தினந்தோறும் வெறும் வயிற்றில் வெண்டிக்காயை உண்பது நல்லது. இதுபோல பலாப் பழமும் போகத்தில் விருப்பத்தை ஏற்படுத்தும்.

x இஃதே போல முருங்கைக்காய், முருங்கைப் பூ, முருங்கை பிஞ்சு எல்லாமே நல்லது. விந்தின் நீர்த்தன்மையை கெட்டியாக்கும். அல்லது

தாமரைக் கிழங்கை உலர்த்தி சூரணமாக்கி பாலில் கலந்து பருகிவர வீரியம் கூடும்.

மேலும் வெங்காயச்சாறும் தேனும் சம அளவு எடுத்து கலந்து அரைவாசிக்கு

வற்றும் வரை காய்ச்சி இரவு படுக்கப் போகமுன் சாப்பிட்டு வந்தால் போக சக்தி ஏற்படும். அல்லது

கசகசா, வால் மிளகு கற்கண்டு, பாதாம் பருப்பு என்பவற்றை ஐம்பது கிராம் வீதம் எடுத்து அரைத்து தேவையான அளவு நெய்யும் தேனும் சேர்த்து லேகியமாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு தினமும் இரவில் நெல்லிக் காயளவு சாப்பிட்டு பால் அருந்தி வந்தால் போகச் சக்தி ஏற்படும். அல்லது.

பனங்கிழங்கை இடித்து அரைத்து பசும்பாலில் கலக்கிக் குடித்தால் தாது விருத்தி ஏற்படும். அல்லது

அதி மதுரத்தை இடித்துத் தூளாக்கி தேவாயன அளவு தேனும் பசு நெய்யும் சேர்த்து இரவில் சாப்பிட்டு வந்தால் தாது விருத்தி ஏற்படும். அல்லது

கடுகைத் தட்டி நல்லெண்ணையில் ஊறவைத்து ஆண் குறியில் தடவிக் கொண்டால் தாது கெட்டியாகும். அல்லது

வால்மிளகைத் தூளாக்கி தேனில் குழைத்து குளிசையாக்கி உடலுறவின் போது ஒரு குளிசையை நாவின் அடியில் வைத்துக் கொண்டால் நீண்ட நேரம் போகம் செய்யலாம். அல்லது

மருதோன்றி விதைகளை சுட்டுக் கரித்து தூளாக்கி தேனில் குழைத்து ஆண்குறியில் பூசி காய்ந்தபின் போகத்தில் ஈடுபட்டால் பெண் உச்சம் பெறுவாள்.

இஃதே போல

அனிச்சம்பூ கற்பூரம் இரண்டையும் சமஅளவு எடுத்து அரைத்து ஆண்குறியில் பூசிக் காய்ந்தபின் உடலுறவில் ஈடுபட்டால் பெண் உச்சம் பெறுவாள்.

ஆஸ்திரியாவில் உள்ள சிரேஸ்ட மருத்துவ பல்கலைக்கழகத்தில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வின்படி ஆண்களின் இரத்தத்தில் உள்ள ''டெஸ்டேஸ்ரரோன் ஹோமோன்'' பாலியல் உணர்வைத் தூண்டுகின்றது. இதற்கு வைட்டமின் ''டி'' அதிக அளவில் தேவைப்படுகின்றது. வைட்டமின் ''டி'' சூரிய ஒளியின் மூலம் அல்லது இறைச்சி, மீன், முட்டை என்பவற்றின் மூலமும் கிடைக்கின்றது.

சூரியக்குளியல் பாலியலுக்கு முக்கிய ஊக்கி எனக் கண்டு பிடித்துள்ளார்கள்.

இதன்படி சூரிய ஒளியில் ஒரு மணித்தியாலம் படுத்தாலே போதும். இப்படிச் செய்வதால் இரத்தத்தில் "டெஸ்டேஸ்ரரோன் ஹோமோன்" இரத்தத்தில் 69 விகிதம் ஊறுவதாக ஆய்வு கூறுகிறது.

மேலும் சில ஆங்கில மருந்துகள்.

ஆங்கிலப் பூச்சு மருந்து
Nufer Caine ointment
Blue Man

போன்றவைகளைப் பாவிக்கலாம். இவைகள் மருந்துக் கடைகளில் கிடைக்கும். இவற்றை ஆண் உறுப்பில் பூசிக்கொள்ள விறைப்பு அதிகரிக்கும்.

Prostoglamdim E எனும் மருந்து மிகவும் வெற்றிகரமான மருந்தாகக் கருதப்படுகின்றது.

ஆனால் இந்த மருந்து இத்தாலி, பிரான்ஸ், பிரேசில், ஜேர்மன் போன்ற நாடுகளில் மட்டுமே கிடைக்கின்றது. ஆண் விபச்சாரம் அதிகமாக உள்ள நாடான ரியோடி ஜெனிராவில் (South America) இந்த மருந்து அதிகம் உபயோகிக்கப்படுவதாக அறியக் கிடக்கின்றது.

## பெண்களுக்கான மருந்து வகை

பெண்களுக்கு பிரசவத்தின் போது உடலில் ஒருவித அதிர்வு ஏற்படுகின்றது. இதனால் மூளை, இதயம் போன்ற முக்கிய உறுப்புக்களுக்கு செல்லும் இரத்தத்தின் அளவு குறைந்து உயிரிழப்புக்கூட ஏற்படலாம்.

உலகில் பிரசவத்தின் பின் அதிக இரத்தப் போக்கினால் ஏற்படும் உயிரிழப்பு 25 சதவிகிதமாகும்.

இதற்கு ஒரு தீர்வாக அமெரிக்காவில் உள்ள நிறுவனம் ஒன்று "அன்டி சொக்" என்ற ஆடையை கண்டு பிடித்துள்ளது.

இதனைக் கால் இடுப்பு மற்றும் தொடைப் பகுதிகளில் அணிந்துக் கொள்ள வேண்டும்.

கால், வயிறு போன்ற இடங்களில் இருந்து இரத்த நாளங்கள் வழியாகச் செல்லும் அதிக இரத்தப் போக்கு இந்த "அன்டிசொக்" ஆடையால் கட்டுப் படுத்தபடுகின்றது.

அதன் காரணமாக அதிக இரத்தப் போக்கு தடைப்பட்டு உயிரிழப்புத் தடுக்கப்படுகின்றது.

வேறு

பொதுவாக இந்துக் கோயில்களில் பிரசாதமாக கொண்டு செல்பவர்களுக்கு விபரம் புரியாமலே பாலியல் பலயீனத்திற்கான மருந்துகளையும் கொடுத்து விடுகின்றார்கள்

உதாரணம்

| | | |
|---|---|---|
| அம்மைக்கு | – | பெண்ணிற்கு வேப்பிலை |
| சிவனுக்கு | – | ஆண் வில்வம் |
| வினாயகருக்கு | – | பிரமச்சாரி அறுகம்புல் |
| விஸ்னுவுக்கு | – | துளசி |
| பிரம்மாவுக்கு | – | அத்தி |

## ஆண்குறி கெட்டியாவதற்கு

அபின், அக்ரகாரம், மருதோன்றி விதை இவைகளை சம அளவாக எடுத்து தேன்விட்டு அரைத்து ஆண்குறியில் பத்துப் போடுவது (பூசுதல் அல்லது அப்புதல்) 15 நாட்கள் செய்ய ஆண் குறி கெட்டியாகும்.

கருவேலம் பிசினை சிறு சிறு துண்டுகளாக்கி நெய்யில் பொரித்து சாப்பிட்டுவர ஆண் உறுப்பு விறைப்பாகும்.

இதுபொல பலாப்பழமும் போக விருத்திக்கு நல்லது. இஃதே போல பேரீச்சம்பழமும் நல்லது. இதே போல முருங்கைப்பூவும் நல்லது. தாமரைக்கிழங்கை உலர்த்தி சூரணமாக்கி பாலில் கலந்து சாப்பிடலாம். ஆண்மைக்குறைவு நீங்கும்.

நாலு கோழி முட்டையை எடுத்து அவித்து ஓடு கழற்றி ஒரு சாமம் (ஒரு மணித்தியாலம்) உப்பில் புதைத்து வைத்து பின் எடுத்து வெள்ளைக் கருவை நீக்கி விட்டு மஞ்சள் கருவை எடுத்து சாதிக்காய், கராம்பு, கைப்பு

என்பவற்றைப் பொடியாக்கி மஞ்சள் கருவோடு சேர்த்து தேன் விட்டுக் குழைத்து சாப்பிட்டால் ஆண் உறுப்பு கெட்டியாகிவிடும்.

இஞ்சிச் சாறு 1 ½ அவுண்ஸ் எடுத்து அதனோடு முட்டையின் மஞ்சள் கருவைச் சேர்த்துச் சாப்பிட்டுவர ஆண் உறுப்பு கெட்டியாகும்.

அத்திப்பழத்துடன் பாதாம்பருப்பு, பூனைக் காலி விதை, ஏலக்காய், குங்குமப்பூ, நெய் தேன் முதலியவற்றைக் கலந்து லேகியம் தயாரித்து சாப்பிட தாது விருத்தியுண்டாகும்.

ஆலம்பழத்தைக் காய வைத்து இடித்த தூளையும் பேரீத்தம் பழத்தைக் காயவைத்து இடித்த தூளையும் அப்பிள் பழத்தைக் காயவைத்து இடித்த தூளையும் சம பங்காகக் கலந்து காலை, மாலை ஒவ்வொரு தேக்கரண்டி அல்லது மேசைக்கரண்டி சாப்பிட்டு வர போக சக்தி கூடும்.

முப்பது முருங்கைப் பூவினை எடுத்து பசும்பால் விட்டு காய்ச்சி இரவு படுக்கைக்கு போகமுன் குடித்துவர தாது விருத்தியாகும்.

**இழை 8**

## ஆண், பெண் விருத்த சேதனம்

பெண்களின் விருத்த சேதனம் பற்றி நீதிமன்றத்தினால் நீக்கப்பட்ட தடை ஒன்றை மீண்டும் அமுலாக்கும்படி எகிப்திய அரசாங்கத்தை அமெரிக்கா கேட்டுள்ளது.

தடைவிதிப்பதே சரியான பரிகாரம் என நாங்கள் கருதுகின்றோம்; எனவே அதை அமுலாக்க சகல முயற்சிகளையும் மேற் கொள்ள வேண்டும் என அமெரிக்க வெளிநாட்டமைச்சரின் பேச்சாளர் ஜோன் டிஞ்சர் நிருபர்களிடம் கூறினார்.

அதாவது எகிப்து அரசு பெண்களின் விருத்த சேதனத்தை தடை செய்தது.

இதனை எதிர்த்து இஸ்லாமிய அடிப்படை வாதிகள் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்து மீண்டும் பெண்களின் விருத்த சேதனத்தை அமுலாக்கத் தீர்ப்பு எடுத்துக் கொண்டனர். இந்தப் பிரச்சினையை அமெரிக்கா பெண்களின் அடிப்படை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு எகிப்து அரசுக்கு விருத்த சேதனத்தை மீண்டும் தடை செய்யுமாறு வலியுறுத்துகிறது.

"பெண்களுக்கெதிரான வலோற்காரம்" என பெண் விருத்த சேதனத்தை கூறுகின்றது அமெரிக்கா.

மேலும், அமெரிக்கா, பெண் விருத்த சேதனத்தின் காரணமாக நீடித்த உடல் உணர்வுப் பாதிப்புக்கும் மரணமடையும் சாத்தியத்திற்கும் உள்ளாகும் பெண்களுக்கு எங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறியுள்ளது.

பெண்கள் பருவமடைவதற்கு முன் அவர்களின் மன்மதபீடத்தின் ஒரு பகுதியை (கிளிட்டோரிஸ்) முற்றாகத் துண்டிப்பதால் பலவகையான பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

உலகம் முழுவதும் நாள் ஒன்றுக்கு 5000 பெண்கள் இத்தகைய விருத்த சேதனத்திற்குள்ளாவதாக பெண்கள் உரிமை இயக்கத்தினர் மதிப்பிட்டுள்ளனர்.

இதுபற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பில் பங்குபற்றிய 14779 எகிப்திய பெண்களில் 97சத விகிதத்தினர் விருத்த சேதனம் செய்யப்பட்டவர்கள். (ராய்ட்டர் செய்தி)

சுன்னத் என்பது அரபுச் சொல். பெருமானாரின் நடைமுறை என்பது இதன் பொருள்.

இது மார்க்கக் கட்டாயக் கடமையல்ல. விரும்பினால் செய்யலாம் அல்லது விட்டுவிடலாம்.

இது இஸ்லாமியர்களோடு சம்பந்தப்பட்ட விடயம். அதனால் அமெரிக்கா இதில் தலையிட வேண்டிய அவசியமே இல்லை.

அமெரிக்காவின் கருத்துச் சரியாக இருக்கலாம். ஆனால், இக்கருத்தினை இன்னொரு சமூகத்தவர்கள் அல்லது மதத்தவர்கள் ஏற்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

பெண்களின் "சுன்னத்" விடயம் உலகில் உள்ள எல்லா முஸ்லிம் நாடுகளிலும் பின்பற்றப் படுவதாகவும் கூற முடியாது.

இலங்கையில், இந்தியாவில் முஸ்லிம்கள் மத்தியில் எல்லோரும் பின்பற்றுகிறார்கள் என்றும் கூற முடியாதுள்ளது.

இதனை ஒரு பிரச்சினையாக அமெரிக்கா எடுக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆடு நனைகிறது என்று ஒநாய் அழுத கதையாகவே நான் இதனை கருதுகிறேன்.

## ஆண்களின் சுன்னத்

ஆண் உறுப்பின் நுனித் தோலை நீக்கி விடுதல்.

இதனால் பல நன்மைகள் உண்டு என பல ஆய்வுகள் கூறுவதால் இதனை முஸ்லிம்கள் அல்லாத ஆண்களும் விரும்பியே செய்துக் கொள்கிறார்கள்.

## நன்மைகள்

நுனித்தோலை நீக்குவதால் மொட்டு விரிந்து செயல்பட வாய்ப்பேற்படுகின்றது.

அழுக்குகள் தேங்காது சுத்தமாக இருக்கும்.

உணர்வு மரத்துப் போக வாய்ப்புள்ளதால் நீண்ட நேரப்புணர்ச்சிக்கு உதவும் வாய்ப்புண்டு அதாவது மொட்டு உடையில் உராய்ந்து உராய்ந்து மரத்துப் போகும்.

ஆண் உடம்புப் புற்ற நோய் ஏற்படாது (இது சம்பந்தமாக இந்தியாவில் நடத்தப்பட்ட புற்றுநோய் ஆய்விலே சுன்னத் செய்யப்பட்ட முஸ்லிம்களிடையே இந்தப் புற்று நோய் அறவே இல்லாதுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்றாகீம் நபியவர்கள் (அலை) (ஏப்ரகாம்) தனது 72வது வயதில் சுன்னத் செய்து கொண்டதாக பைபிள் கூறுகின்றது.

முகம்மது நபி (ஸல்) அவர்கட்டு இயற்கையாகவே சுன்னத் செய்யப்பட்ட மாதரி நுனித் தோல் சுருங்கி மொட்டு விரிந்தே காணப்பட்டது என வரலாறு கூறுகின்றது.

ஜிம்பப்பே நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 170 பேர் சுன்னத்துச் செய்ய முன்வந்துள்ளனர் என்று பத்திரிகை செய்தி கூறியுள்ளது.

காரணம் சுன்னத் செய்வதால் ''எயிட்ஸ்'' நோயில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற அவர்களது நம்பிக்கை.

ஆனால், இந்தச் சுன்னத்துச் சடங்கை முஸ்லிம் ஒஸ்தாதுகளைக் கொண்டு அல்லது முஸ்லிம் டாக்டர்களைக் கொண்டு செய்யாமல் முஸ்லிம் அல்லாத டாக்டர்களைக் கொண்டு செய்யத் தீர்மானித்துள்ளார்கள்.

**இழை 9**

## வாழ்வு வளம் பெற

i தரித்திரம் ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும்.
உதாரணம் : வரவை விடச் செலவு அதிகமாக இருந்தால் இது தரித்திரம்

ii வரவு செலவு, சேமிப்பு என்பவற்றைத் திட்டமிட வேண்டும்.

iii நேர முகாமைத்துவம் மிகமிக முக்கியம்.

iv தாம்பத்திய உறவில் வெற்றி பெற வேண்டும்.

v இளமையோடும் நீண்ட ஆயுளோடும் வாழும் வழி தெரிய வேண்டும்.

vi பத்தும் பதினாறும் என்ன என்று தெரிந்து அவற்றைத் தன்னோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

vii குடும்பத்தவர்களோடு உறவைப் பேணி இன்ப துன்பங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

viii இன்பதுன்பங்களில் அலட்டிக் கொள்ளக் கூடாது.

ix விட்டு கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்.

x தன்னம்பிக்கை வேண்டும்.

**இழை 10**

## சாவித்துவாரத்தின் ஊடே

i "கூபோ தகங் வடச்சாயா, சியாம்யா, ஸ்திருதி இஸ்டகா கிறுகம் சீதம்கரலே பவே துஷ்ணங் உஷ்ணகாலே வசீதலம்.

இதன்பொருள்: கிணற்று நீர், ஆலமர நிழல், உருக்கிய பொன்நிறம் போன்ற பெண், செங்கல்லால் கட்டியவீடு என்பன குளிர் காலத்தில் சூட்டினையும், சூடான காலத்தில் குளிச்சியையும் தரவல்லது.

ii தவளை வருடத்தில் ஒரு முறைதான் புணரும்

iii ஸ்பானிஸ் மொழியில் Wife என்ற வார்த்தைக்கு கைவிலங்கு என்று பொருள்.

iv ஆண்களைவிட பெண்களுக்கே சுவை உணர்வு அதிகம்.

v கொடூரமான குற்றங்களில் ஈடுபடும் "சைகோபாத்" மனநோய் உடைய சுமார் 3 இலட்சம் பேர் கனடா நாட்டில் உள்ளனர்.

பொதுவாக "சைக்கோபாத்" மனநோயாளிகள் நண்பராக மேல்அதிகாரியாக காதலிப்பவராக, என யாராகவும் இருக்கலாம்.

மிகவும் வசீகரமானவராகவும் புத்திசாலிகளாகவும் இவர்கள் இருப்பார்கள்; பொய் பேசுவது இவர்களது விருப்பமான செயல்.

தாங்கள் செய்யும் தவறுகளுக்கு மனம் வருந்த மாட்டார்கள். யாருடனும் இவர்களால் நீண்டகாலம் நட்பாக இருக்க முடியாது.

vi சீனர்கள் தான் முழுமையான உடலுறவை அனுபவிப்பவர்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

சீனர்களிடம் இவர்களது மூதாதையர்கள் விட்டுச் சென்ற "The Multi Orga smicman என்ற ஒரு நூல் உண்டு.

இந்நூல் முழுமையாக உடலுறவை அனுபவிக்க வழிகோலும் நூல்.

vii சுவீடன் நாட்டில் தன்னினத் திருமணம் (ஆண் – ஆண், பெண்–பெண்) சட்டபூர்வமானது.

ஆனால் எக்காரியம் கொண்டும் இவர்கள் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்க சட்டம் அனுமதிக்காது.

சுவீடன் நாட்டு மக்களின் 99 சதவீதமானவர்கள் படித்தவர்கள்.

viii பெண்ணில் பதிவாகியுள்ள ஆணின் "DNA" மூன்று மாதங்களின் பின்தான் அழியும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

கருவியல் விஞ்ஞானியான ரொபட் கிஸ்ஹாம் என்ற விஞ்ஞானியே இவ்வாறு கூறியுள்ளார்.

இஃதே வேளை இஸ்லாமியர்களின் புனித குர்ஆன் "மணவிலக்குகளில் மாதவிலக்குகள் மூன்று முடியும் வரை மறுமணம் செய்யாமல் காத்திருக்க வேண்டும் எனச் சொல்லுவது இதுவே காரணமாக இருக்கலாம்.

ix பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை இப்படியும் ஓரளவு திட்டப் படுத்த முடியும்.

கர்ப்பத்தில் இருப்பது ஆண் குழந்தையாக இருந்தால் தாயின் உடல் வண்ணம் அழகாக இருக்கும்.

அத்தோடு குழந்தை பிறப்பது எளிதாக இருக்கும்.

கர்ப்பம் தரித்து ஆறு வாரங்கள் ஆனதும் துடிக்கும்.

பெண்குழந்தையாக இருந்தால் நாற்பது நாளைக்குப் பிறகும் சில நாட்கள் சென்ற பின்பே துடிக்கும்.

ஆண் குழந்தையாயின் தாயின் உடல் கனதியாக இருக்கும்.

கால் சற்று வீக்கம் அடைந்தும் வயிறு சற்று பெருத்தும் காணப்படும்.

x தாம்பத்திய உறவு சீராய் அமைய நேரம் காலம் தெரியாது புணரக் கூடாது. உணவு உண்ட உடனேயே புணரக்கூடாது.

# நூல் 03

# அறிவியல்

## சாவிக்குறிப்பு

“அறிவில்லாதவனால் இந்த உலகத்தில் எதுவும் செய்ய முடியாது. சந்தோஷமாக வாழவும் முடியாது.” என்ற வசனத்தில் உள்ள “அறிவு” என்ற சொல்லின் பொருளை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டியுள்ளது.

நான் நூல்களின் மத்தியிலேயே இருக்கின்றேன்.

தினமும் அதிகாலையில் எழுந்து பள்ளிக்குச் சென்று தொழுதுவிட்டு தினசரிப்பத்திரிகையை வாங்கி வந்து வாசிக்கும் பழக்கம் இன்றுவரை தொடர்கிறது.

என்னை சுற்றி பத்துப்பன்னிரெண்டு ஆட்டாச் சாரதிகள் இருக்கிறார்கள். இவர்கள் காலையில் எழுந்து ஆட்டாவைத் தட்டித் துடைத்துவிட்டு அவர்களும் குளித்து முழுகி தொழிலுக்குச் சென்று விடுகிறார்கள். அன்றாடப் பத்திரிகைகளைப் புரட்டிக் கூடப் பார்ப்பதில்லை.

இஃதேபோல என்னைச் சுற்றி நான்கைந்து கடைகள் உண்டு அவர்களும் அதிகாலையில் தங்களுடைய தொழில்களைத் தொடங்கி விடுகிறார்கள். பத்திரிகை வாசிப்பதும் இல்லை, நூல்களைப் படிப்பதும் இல்லை.

நூல் ஒன்றினைக் கொடுத்தாலும் வாங்கவும் மாட்டார்கள் “எனக்கு வாசிக்க நேரம் எங்கே இருக்கிறது” என்று கூறி விடுவார்கள்.

எனக்குத் தெரிந்த ஆசிரியர்கள் அதிபர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களும் இப்படியே. ஒரு சிலரைத் தவிர.

எனக்குத் தெரிந்த மௌலவிகள் (மார்க்க வாதிகள்) பல பேர் இருக்கிறார்கள். அவர்களும் புதிதாக எதனையும் வாசிப்பதில்லை.

மத்ரசாவில் ஓதும் போது வாங்கிய குர்ஆன், ஹதீஸ்; சட்ட நூல்கள் போன்ற ஒரு சிலதை பிரச்சனை என்று வரும்போது புரட்டுகிறார்கள். அவ்வளவுதான். கோயிலோடு; தேவாலயங்களோடு சம்பந்தப் பட்டவர்களும் இப்படியே.

அரசியல் வாதிகள் அன்றாடப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கிறார்கள். அவர்களைப் பற்றி ஏதும் செய்திகள் படங்கள் வந்துள்ளதா எனப் பார்ப்பதற்கு.

ஆனால் நான் முன் சொன்ன சில்லறைக் கடை வியாபாரி ஒவ்வொருநாளும் பல நூல்களைப் படிக்கின்ற ஒரு மேதாவியை இலேசில் ஏமாற்றி விடுவான். அவன் தொழிலில் மிகமிக நுட்பமானவன்.

இந்த இடத்தில் நாம் யோசிக்க வேண்டியது என்னவெனில் "அறிவு" என்பது வாழ்வியலுக்கான அறிவே தவிர – அதாவது தொழிலுக்கான அறிவே தவிர "சிறுகதை" நாவல்" "கட்டுரை" "அறிவியல்" நூல்கள் படித்துவருகின்ற அறிவல்ல.

இன்னும் இதுபற்றி ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

**இழைகள்**

1. நூலில் இருக்க வேண்டியது நூலில் இருக்கக் கூடாதது, நூலாசிரியருக்கு இருக்க வேண்டியது.
2. மனத்தில் இருத்த வேண்டியதும், தவிர்க்க வேண்டியதும்.
3. வாசிக்க வேண்டிய நூல்கள்
4. படிக்க வேண்டிய நூல்கள்
5. ஓத வேண்டிய நூல்கள்
6. அறிய வேண்டியவர்கள்
7. அறிவியலில் அசத்தியவர்கள்
8. வெற்றி பெற வழிகள்
9. பத்துப் பத்தாய் பல பத்துக்கள்
10. சாவித் துவாரத்தின் ஊடே

இழை 1

## நூலில் இருக்க வேண்டிய பத்து

சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோருக்கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாகுதல், முறையில் வைப்பே, உலகமலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்து ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே

நன்நூல்

## நூலாசிரியருக்கு இருக்க வேண்டிய பத்து

i அருள்
ii மேன்மை
iii தெளிவு
iv கட்டுரை வன்மை
v கடவுள் பக்தி
vi நீதியான தன்மை (தராசி போன்ற)
vii மலைநிகர் மாட்சி – கொள்கையில் அசையாத்தன்மை
viii உலக அறிவு
ix உயர் குணம்
x சேர்ந்து போகும் தன்மை, உயர்குடி

இது கற்பிக்கும் ஆசிரியருக்கும் பொருந்தும்

இழை 2

## மனதில் இருக்க வேண்டிய பத்து

i. போற்ற வேண்டியவர்கள் தாய் தந்தை
ii. மறக்கக் கூடாதது இறைவன், குரு
iii. வந்தால் போகாதது புகழ், பழி
vi. தானாக வருவது இளமை, முதுமை
v. தவிர்க்க முடியாதது பசி, தாகம்
vi. இறப்பின்பின் நம்முடன் வருவது நன்மை, தீமை
vii. அடக்க வேண்டிது ஆசை, தீமை
viii. அழிவைத் தருவது பொறாமை, பொய்மை
ix. போனால் வராதது மானம், உயிர்
x. உயர்வுக்குவழி தன்னம்பிக்கை, முயற்சி

## உணவு அருந்தியவுடன் தவிர்க்க வேண்டிய பத்து

- i சாப்பிட்டவுடன் சிகரெட் குடித்தல்
- ii பழங்கள் சாப்பிடல்
- iii தேநீர் அருந்துதல்
- iv இடுப்பு வார்களை அவிழ்த்துவிடல்
- v குளித்தல்
- vi வேகமாக நடத்தல்
- vii படுத்தல்
- viii புணருதல்
- ix படித்தல்
- x நீர் அருந்துதல்

**இழை 3**

## வாசிக்க வேண்டிய நூல்கள் பத்து

- i. ஆயிரத்து ஒரு இரவுகள் (அரபு நாட்டுக் கதைகள்)
- ii. நாநா (பிரஞ்சு நாவல் ) எமிலி ஜோலா
- iii. யார் அழுவார் நீ உயிர் துறந்தால் – ரொபின் சர்மா
- iv. டேவிட் கொப்பர் பீல்ட் (நாவல்) – சார்ள்ஸ் டிக்கன்சன்
- v. கடலும் கிழவனும் (நாவல்) – ஏனட் ஹெமிங்வே
- vi. போரும் சமாதானமும் (நாவல்) – டால்ஸ்டாய்
- vii. சமுக ஒப்பந்தம் – ரூசோ
- viii. சதுரங்கக்குதிரை (தமிழ் நாவல்) நாஞ்சில் நாடன்
- ix. கடவுள்கள் – இங்கர்சால்
- x. அர்த்தமுள்ள இந்துமதம் – கவிஞர் கண்ணதாசன்

## i ஆயிரத்து ஒரு இரவுகள்

அல்புலைலாவலைலா என அரபியில் அழைக்கப்படும் ஆயிரத்து ஒரு இரவுகள் அற்புதமான கற்பனை வளம் கொண்ட நூல். இந்த நூல் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பிரபலம் பெற்றதாகும். அதனால் இந்த நூலில் உள்ள "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்" "அலாவுதீனும் அற்புத விளக்கும்" "ஒருநாளும் சிரிக்காத மனிதன் கலீபாவின் சிரிப்பு" "உதவி மனப்பான்மை கொண்ட நாசுவன்" "குள்ளனும் மீன் முள்ளும் போன்ற கதைகள் உலகளாவிய பிரபலம் பெற்ற கதைகளாகும். இவைகளில் சில சினிமாப் படங்களாகவும் வெளிவந்துமனித மனங்களில் நீங்காத இடம் பெற்றுள்ளன. இக்கதையின் களம் என்னவெனில் அரபு

நாட்டு அரசன் ஒருவனின் மனைவியின் கூடாத நடத்தையைக் கண்டதும் அவளை வெட்டிக் கொலை செய்து விட்டுத் தான் இனித் திருமணமே செய்து கொள்வதில்லை என்ற இறுமாப்புடன். திருமணமே செய்து கொள்ளாது இருந்து கொண்டு ஒரு நாளைக்கு ஒரு பெண் என்ற வகையில் நாட்டில் உள்ள பெண்களை அழைத்துப் புணர்ச்சி முடித்ததும் வெட்டிக் கொலை செய்துவிடுவான். இதில் இருந்து தப்புவதற்காக ஒரு பெண் அரசன் புணருமுன் ஒரு கதை சொல்லுகிறாள். அக்கதை முடிந்த பின்பே புணர்ச்சி என்ற ஒப்பந்தத்தில், அக்கதை முடியவில்லை. விடிந்து விட்டது. அரசன் கதையின் முடிவை அறியும் ஆவலில் அடுத்த நாளைக்கு அவளை விட்டு வைக்கிறான். அடுத்த நாளும் கதை முடியவில்லை.

அரசன் அவளைப் புணரவும் இல்லை, கொல்லவும் இல்லை. இவ்வாறு ஆயிரத்து ஒரு இரவுகள் கதை முடியாது செல்கிறது.

கி.பி. 950ஆம் ஆண்டில் "மசூதி" என்ற அரேபியர் இந்தக் கதைகளைத் தொகுத்து வைத்திருந்தார்.

## ii. நாநா (பிரஞ் நாவல்)

1956, 1957களில் தென் இந்தியாவைப் போன்று இலங்கையிலும் பேமன்ட்களில் புத்தகங்கள் போட்டு விற்கும் வழக்கு இருந்தது.

மருதானையில் எல்பிஸ்டன் தொடக்கம் டவர் ஹோல் முடியும் வரையுள்ள ஓரங்களில் (பேமென்ட்) புத்தக விற்பனை செய்வார்கள்.

இந்த புத்தகப் பேமென்ட்டில் எமிலி ஜோலாவின் "நாநா" ஊடுருவின் தமிழ் மொழி பெயர்ப்பும் விற்பனைக்கு இருந்தது. இந்த "நாநா" நாவல் தடை செய்யப்பட்டது! எப்படியோ தமிழ் நாட்டிற்குள் வந்து ஊடுருவினால் தமிழ் மொழி பெயர்த்து விற்பனைக்கு வந்தது! நல்ல நாவல் என்று பேசிக்கொண்டார்கள். இரண்டு ரூபா 50சதம் கொடுத்து நானும் "நாநா" நாவலை வாங்கிக் கொண்டேன். நேரம் கிடைத்த போது வாசித்துப் பார்த்தேன். எனக்கு எதுவுமே விளங்கவில்லை.

"நாநா" என்ற பெயர் கூட எனக்குச் சரியாக புரியவில்லை. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் முஸ்லிம்கள் சகோதரனை நாநா என அழைக்கும் வழக்கு இருந்தது. இன்றும் சகோதரனை நாநா என்றழைக்கும்வழக்கு உண்டு. எங்கிருந்து வந்தது என்பது யாருக்கும் தெரியாதுள்ளது.

நான் நினைத்தபடி நாவலில் சகோதரனைக் குறிக்க இச்சொல் பயன்படவில்லை. நாநா என்பது நாவலின் கதாபாத்திரத்தின் பெயர். கதை புரியாத படியால் வாசித்து அரைவாசிலேயே நாவலை புத்தகங்களோடு புத்தகமாக அடுக்கி வைத்துவிட்டேன்.

பலவருடங்களின் பின் வாசிக்க எதுவுமில்லையே என்ற போது இந்த நாவலை எடுத்து வாசித்தேன். அற்புதமான நாவல் என எனக்குப்பட்டது.

கதையின் கரு, கதையை நடத்தி செல்லும் பாணி, துணைப்பாத்திரங்களின் விசித்திர நடமாட்டம், கதையை முடித்திருத்தல் எல்லாமே என்னை ஆச்சரியத்துள் ஆழ்த்தியது. எனது நண்பர்கள் பலருக்கும் வாசித்துப் பாருங்கள், வாசித்துப் பாருங்கள் என கொடுத்து உதவினேன்.

## iii. யார் அழுவார் நீ உயிர் துறந்தால்

றொபின் சர்மா அவர்களின் மிகமிகப் பிரபலமான, வாசகர்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொண்ட "தனது பொக்கிசத்தை விற்ற துறவியில் இருந்து வாழ்க்கைப் பாடங்கள் எனும் நூலின் மூன்றாவது தொடரே "யார் அழுவார் நீ உயிர் துறந்தால்" எனும் இந்த நூல்.

றொபின்சன் ஷர்மா அவர்கள் பிரபலமான உலகெங்கும் பாராட்டுப் பெற்ற தலைமைப் பண்பினை வளர்க்கும் பேச்சாளர் "வாழுங்கலையை மக்கள் மத்தியில் பிரபலமாக அறிமுகப்படுத்தியவர் இவர். இந்த நூலிலே

அ. அந்தராத்மாவின் அழைப்பை அறியுங்கள்
ஆ. அன்றாடம் ஒரு அன்னியனிடம் அன்பு காட்டு
இ. நிலைமாறாக் கண்ணோட்டம்
ஈ. கடின அன்பைப் பழகு
உ. குறிப்பேடு வைத்துக் கொள்

போன்ற 101 தலைப்புக்களில் இந்நூல் நடைபோடுகிறது. ஒவ்வொரு தலைப்பிலும் அலட்டிக் கொள்ளாமல் மிகமிகச் சுருக்கமாக விடயம் சொல்லப் படுகிறது.

## iv. டேவிட் கொப்பபீல்ட்

சார்ல்ஸ் டிக்கன்ஸ் அவர்களின் புகழ்பெற்ற நாவல்களில் இதுவும் ஒன்று.

ஒரு காலத்தில் இது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் H.S.C. (இன்றைய A/L) பரீட்சைக்கு இங்கிலிஷ் இலக்கியப் பாட நூலாக இருந்தது. இந்நாவலை சால்ஸ் டிக்கன்ஸ் தனது 38வது வயதில் எழுதி வெளியிட்டார். இந்த நாவல் இவரது வாழ்க்கைப் பின்னணியோடு எழுதப்பட்டுள்ளதாகக் கூறுவர். அதாவது இவரது சுயசரிதம் என்றும் கூறுவர்.

தனது படைப்புக்களில் மிகவும் பிடித்தமான படைப்பு இந்நாவல்தான் என சால்ஸ் டிக்கன் கூறியுள்ளார்.

## v. கடலும் கிழவனும்

இந்நாவல் ஒரு ஏழை மீனவனின் வாழ்வை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. கிருஸ்மஸை பிள்ளைகளோடு சேர்ந்து சந்தோசமாகக் கொண்டாட வேண்டுமாயின் கிறிஸ்மஸ் லீவு, என்றும் பாராமல் அவன் கடலுக்குச் சென்றுதான் ஆக வேண்டியிருந்தது ஓய்வைப் பொருட்படுத்தாது கடலுக்குச் செல்கிறான்.

அவன் எண்ணம் போல அவனது வலையில் பெரியதொரு மீன் அகப்பட்டுக் கொண்டதை அவன் உணருகிறான்.

நீருக்கடியில் அதை பார்க்க முடியவில்லை கனபாரம். சந்தோசத்தோடும்பல நம்பிக்கையோடும் கரைநோக்கி ஓடி வருகிறான். கரைசேர்ந்த போது முடிவு ஏமாற்றம். இந்த குறுநாவலுக்கு ஹேமிங்வேக்கு 1954ஆம் ஆண்டு நோபல் பரிசு கிடைத்தது. 1899ஆம் ஆண்டு பிறந்த ஹெமிங்வே 1968ஆம் ஆண்டு காலமானார். அமெரிக்கரான இவரின் முதல் தொழில் பத்திரிக்கைச் செய்தி சேகரித்தல்.

## vi. போரும் சமாதானமும்

லியோடால்ஸ்ட்டாய் ரஸ்ய எழுத்தாளர் இவருடைய ''போரும் சமாதானமும்'' எனும் நாவல் நோபல் பரிசு பெற்றது. இவருக்கு இந்நாவலை எழுத ஏழு ஆண்டுகள் ஆயிற்று.

இவர் அண்ணல் காந்தியின் ஞானகுரு. ரயில் வண்டி நிலையத்தில் உட்கார்ந்தபடி உயிர் நீத்தார்.

இவருக்கும் இவரது மனைவிக்குமிடையே போர் நடந்து கொண்டே இருக்கும். இதற்கு காரணம் இவர் சேர்த்த பணம். இவர் பணத்தையெல்லாம் ஏழைகளுக்கு கொடுக்கவிரும்பினார். மனைவி விரும்ப வில்லை.

1828ஆம் ஆண்டு பிறந்து 1910ஆம் ஆண்டில் மறைந்தார். 7 இலட்சம் சொற்கள் கொண்டது இந்நாவல். இந்நாவலில் 534 பாத்திரங்கள் உண்டு. நெப்போலியனின் ரஸ்யப் படையெடுப்பு இந் நாவலின் பின்னணியாகும். ஐந்து குடும்பங்களில் நடக்கும் சம்பவங்கள் இந்நாவலை வளர்த்துக் கொண்டே செல்கிறது.

## vii. சமூக ஒப்பந்தம்

1789ஆம் ஆண்டு நடைபெற்ற பிரஞ்சுப் புரட்சி உலகை ஒரு உலுக்கு உலுக்கியது.

நானே அரசு எனக் கருதிய அரசன் மக்களால் தூக்கி வீசப்பட்டான். இந் நிகழ்வு ஜனநாயக அமைப்பிற்கு வித்திட்டது என்றும் இந்த மாற்றத்தின் முக்கிய பங்காளராக பிரஞ்சு எழுத்தாளர் ரூசோ கருதப் படுகிறார்.

ரூசோ 1769இல் எழுதிய நூலே "சமூக ஒப்பதந்தம்" இந்நூல் 20 வருடங்களின்பின் மக்கள் புரட்சியை ஏற்படுத்தியது.

## viii. சதுரங்கக் குதிரை

விஜயா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்நாவலை நாஞ்சில் நாடன் எழுதியுள்ளார். 15 அத்தியாயங்களைக் கொண்ட இந்நாவல், ஒரு பிரமச்சாரியின் வாழ்வை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. படித்த அரச உத்தியோகத்தராக குக்கிராமத்தில் இருந்து பம்பாய்க்கு போன பிரமச்சாரி நாராயணன் வாழும் வாழ்க்கை அழகாகச் சித்தரிக்கப் படுகிறது. 1993ஆம் ஆண்டின் சிறந்த நாவலுக்கான தமிழக அரசின் முதற்பரிசும் புதியபார்வை – நீல மலைத்தமிழ்ச் சங்க பரிசும் பெற்றது.

"எனது அனுபவங்கள் எனது பலம் ஒருவித சுதந்திர உணர்வுடன் இந்த நாவலில் செயற்பட்டிருக்கிறேன். இது இந்த நாவலின் பலம் என்கிறார் நாவலாசிரியர்.

## ix. கடவுள்கள்

இந்நூல் கடவுள் கொள்கையை விமர்சிக்கிறது. உதாரணமாக இந்நூலில் இங்கர்சால் பின்வருமாறு கூறுகின்றார். கடவுள்களையும் பேய் பிசாசுகளையும் மனிதன்தான் படைத்தான். அவனுக்குச் சுலபமாகக் கிடைத்த பொருட்களைக் கொண்டே அவைகளை உற்பத்தி செய்தான். பொதுவாக தன்னைப் போலவே அவைகளுக்கும் கை, கால், தலை, காதுகள், வாய், மூக்கு முதலியவற்றை வைத்தான்.

நீக்கிறோக்கள் தங்கள் கடவுள்களை கறுப்புத் தோலோடும் சுருட்டைமயிரோடும் சிரிஸ்டித்தார்கள். மங்கோலியர்கள் கடவுளுக்கு மஞ்சள்வர்ணம் தந்தார்கள்,

எகிப்தியக் கடவுள்கள் எகிப்தியர்களின் முகத்தைப் போலவே படைக்கப்படுகின்றன. வடக்கே குளிர்பிரதேசங்களின் கடவுள்கள் கம்பளி ஆடைகளையே அணிந்திருக்கின்றன. உஷ்ணப் பிரதேசங்களில் நிர்வாணமாக இருக்கின்றன. இந்தியாவில் அடிக்கடி யானைகள் மீது சவாரி செய்கின்றன. ஆக எல்லா மக்களும் தங்களைப் போலவே கடவுள்களையும் உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது''

## x. அர்த்தமுள்ள இந்துமதம்

காட்டுமிராண்டிகளாகச் சிதறிக் கிடந்த மனிதர்கள் குடிபெயர்ந்து வந்து ஓர் இடத்தில் சேர்ந்தார்கள் அதனால் அவர்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் ''ஊர்'' என அழைக்கப்பட்டது. இதில் இருந்து பலர் நகர்ந்து பெருங் கூட்டமாக வேறு ஓரிடத்தில் குடியேறினார்கள் இவ்விடம் ''நகர்'' என்றழைக்கப்பட்டது. தனி மனிதர்களுக்கான நியதிகளோடு சமுதாயத்திற்காகச் சில சம்பிரதாயங்களும் உருவாகின.

அந்தச் சம்பிரதாயங்களுள் சில புனிதங்களாகக் கருதப்பட்டு தர்மங்களாயின. கணவன், மனைவி உறவு தாய் – தந்தை பிள்ளைகள் உறவு, தாயாதிகள், பங்காளிகள் உறவு, ஊர்ப் பொது நலத்துக்கான உறவு முதலியனவும் தோன்றின. தந்தை வழித் தோன்றல்களெல்லாம் பங்காளிகளாகவும், தந்தையுடன் பிறந்த சகோதரிகளெல்லாம் சம்பந்திகளாகவும் தாய்வழித் தோன்றல்களெல்லாம் தாயாதிகளாகவும் ஒரு மரபு உருவாகிற்று.

இந்த விளக்கத்தை எல்லோரும் விளங்கும் வண்ணம் விளக்கியுள்ளார் கவிஞர் கண்ணதாசன். அதுதான் "அர்த்தமுள்ள இந்துமதம்" எனும் நூல் எந்த மதத்தாரும் வாசித்துப் பார்க்கக்கூடியது.

**இழை 4**

## படிக்க வேண்டிய நூல்கள்

i. றொபின்சன் குருஸோ – டானியல் டிபோ
ii. மூலதனம் – கார்ல்மார்க்ஸ்
iii. கொக்கோகம் – அதிவீரராமபாண்டியன். அல்லது காம சாஸ்திரம் வாத்ஸாயனர் அல்லது மன்மதன் நடனசாலை எனும் அந்தரங்கம் முனிவர்கலியாணமல்லர். (மூன்றில் ஒன்றை படித்தாலே போதும்.)
iv. அர்த்த சாஸ்திரம் – சாணக்கியன்
v. சத்திய சோதனை – மகாத்மா காந்தி
vi. முகம்மத் – மாட்டின்லிங்ஸ்
vii. மனித மனத்தின் மாபெரும் சக்திகள் (Power of the mind) – ஸ்வாமி
viii. விடுதலை துவக்கமும் முடிவும் – J.O. கிரஷ்ணமூர்த்தி
ix. The Hundred – மைக்கல் ஹார்ட்
x. கார்ல் மாக்ஸ் – ஏங்கல்ஸ் நினைவுக் குறிப்புகள் – புறோகிறஸ் பதிப்பகம் மொஸ்கோ

## i றொபின்சன் குருஸோ

1660ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் ஒரு வர்த்தகரின் மகனாக் டானியல் டிபோ பிறந்தார்.

இவர் எழுதிய இந் நாவல் இருபத்தெட்டு ஆண்டுகளை தனியனாக ஒரு தீவில் கழித்து தன் நம்பிக்கையையும், உறுதியையும் இழக்காமல் ஊருக்குத் திரும்பும் ஒரு இரும்பு மனிதனின் கதை. இக்கதையை தனது 60 வயதில் டிபோ எழுதினார். இது இறவாப் புகழ் பெற்ற நாவல்.

இந்நாவலின் கதாநாயகன் றொபின்சன் குருஷோ பட்ட கஷ்டங்கள் கடல் அலையாக மாறி மாறி அவரை மோதுகின்றன. ஆனால் அவர் அசைய வில்லை. ஓராண்டல்ல, ஈராண்டல்ல இருபத்து எட்டு ஆண்டுகளும் இரண்டு மாதங்களும் ஒரு தீவில் கழிக்க நேர்ந்தது.

பசி, பட்டினி, பயம் ஆகியவைகளுக்கு நடுவில் போராடினான் கடைசியில் வெற்றி பெற்று தோணி ஒன்றின் மூலம் அந்தத் தீவில் இருந்து வெளியேறினான். பொறுமையுடன் சோம்பலின்றி செயல்பட்டால் எப்படிப்பட்ட இன்னல் ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றி பெறமுடியும் என்பதை இந்நாவல் உணர்த்துகிறது.

## ii. மூலதனம் - கார்ல்மாக்ஸ்

பொருளாதாரத்தின் அடிப்படைத் தத்துவங்கள் இந்நூலில் விபரிக்கபட்டுள்ளன. வறுமை என்பது மனிதனால் உருவாவதே தவிர இறைவனால் அருளப்படுவதில்லை. ஒருவனை ஒருவன் சுரண்டுவதால் ஏற்படுவதே வறுமையும் செல்வமும் என்ற கருத்தோடு சம்பந்தமுடைய பல முற்போக்குப் பொருளாதாரச் சிந்தனைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆசியாவின் மிகப் பெரிய நாடான சீனாவையும், ஐரோப்பாவின் பெரிய நாடான ரஸ்யாவையும் கால்மாக்சின் கொள்கைகள் ஆட்கொண்டு ஆட்சியாகின்றன.

மூலதனம் என்னும் பெயரில் திரட்டப்பட்ட அவரது கொள்கை விளக்க பொருளாதாரக் கட்டுரைகள் கம்யூனிஸ்டுகளின் வேத புத்தகமாக கருதப்படுகிறது. கால்மாக்ஸ் எழுதிய நூல்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது இந்த ''மூலதனம்'' எனும் நூலே. இது மூன்று பாகங்களைக் கொண்டது.

ஜெர்மன் மொழியில் 1867ஆம் ஆண்டில் முதல்பாகம் வெளிவந்தது. மற்ற இரு பாகங்களும் ஏங்கல்சினால் மார்க்ஸ் இறந்த பின் வெளியிடப்பட்டது.

## iii. கொக்கோகம் - அதிவீரராம பாண்டியன்

அதிவீரராம பாண்டியனால் வடமொழியில் இருந்து தமிழில் எழுதப்பட்டது. பாலியல் சம்பந்தமான பல விடயங்கள் இந்நூலிலே எழுதப்பட்டுள்ளன. செய்யுள் நடையில் எழுதப்பட்டுள்ளதால் சிலருக்கு இது படிக்கக் கஸ்டமாக இருக்கும். ஐரோப்பிய நாடுகளில் எத்தனையோ ஆண்டுகளின் பின்தான் பாலியல் சம்பந்தமான "Perfumed garden" போன்ற இங்கிலிஸ் நூல்கள் எழுதப்பட்டன.

இந்நூலில் வரையப்பட்டுள்ள படங்கள் போட்டோக்கள் போன்று யதார்த்தமாக உள்ளன. இந்நூல் மிகப் பழைய நூல் என்றாலும் இரண்டு விடயங்களைத் தவிர மற்றவையெல்லாம் இன்றைய விஞ்ஞான ஆய்வுகளோடு ஒத்திருப்பது வியப்பிற்குரிய விடயமாகும்.

**காமசாஸ்திரம்**

இந்நூல் வாத்ஸாயனரினால் எழுதப்பட்டது. இவரின் நூல் எழுதப்பட்டு பல ஆண்டுகள் கழித்துதான் சிக்மன் பிரைட் வருகிறார்.

மேற்கில் இப்பொழுதான் மாஸ்டர்ஸ் அன்ட ஜோன்சன் போன்றோர் காமயியல் ஆய்வு எனத் தொடங்கியுள்ளார்கள். ஆனால், வாத்ஸாயனர் ஆய்வை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் முடித்துவிட்டார்.

என்னைப்பொறுத்தவரை எனது அறிவுக்கு எட்டியவற்றில் இவரது ஆய்விலும் அதிவீரராம பாண்டியனின் கொக்கோகத்தில் சொல்லப்பட்டுள்ள அறுபத்திநான்கு விடயத்தினுள் இரண்டைத் தவிர எல்லாமே சரியாக உள்ளதாகக் கூறுவேன்.

யோனிப்பொருத்தம்
சாதிப்பொருத்தம்

இந்த இரண்டுமே விஞ்ஞான ஆய்வோடு ஒத்துப் போகவில்லை.

**மன்மதன் நடனசாலை**

மகாரிஸி கலியாண மல்லர் இந்நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் கலியாணம் முடிக்கத் தகாத பெண்கள் யார்யார் என வகுத்துக் காட்டியுள்ளார்.

இதில் இரண்டு விடயங்களை எம்மால் எப்படியும் கலியாணம் முடிப்பதற்கு முன் காணவே முடியாது. ஆனால், காதலர்களாக இருந்தால் அதுவும் அசைவக் காதலாயின் கண்டு கொள்ள முடியும். அதாவது, மார்பங்கள் ஒன்றில் ஒன்று சிறிதும் பெரிதுமாக இருக்கும் பெண்கள் நடத்தை கெட்டவளாக மாறுவாள் எனக் கூறப்பட்டுள்ளது. இதை திருமணம் செய்வதற்கு முன் காணமுடியாதல்லவா?

### iv. அர்த்த சாஸ்திரம்

இந்தியாவில் உருவான அரசியல் பொருளாதார சாஸ்திரங்களில் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம்தான் காலத்தால் முந்தியது.

கி.மு. 300 ஆண்டுகளுக்கு முன்பு உருவான மௌரிய பேரரசின் முதலாவது மன்னனான சந்திரகுப்தரின் காலத்தில் அர்த்த சாஸ்திரம் உருவானது.

சந்திரகுப்தரின் அமைச்சரும் அவரது ஆசானுமான சாணக்கியர் என்பவர்தான் இத்துறையில் முதல் நூலை உருவாக்கியவர். அர்த்தம் என்பதற்கு பொருள் அல்லது செல்வம் என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. இந்தப் பொருளை மக்களிடம் இருந்து அரசன் எப்படிப்பெறலாம் என்றும் அதை எப்படிச் செலவழிக்கலாம் என்றும் சாணக்கியரின் நூல் உரைக்கிறது. அத்தோடு அரசனின் கடமைகள், மக்களின் கடமைகள், வேலைகள் என்பன பற்றியும் கூறுகிறது இந்நூல்.

### V. சத்திய சோதனை

மகாத்மாக்காந்தி அவர்களால் எழுதப்பட்ட அவரது சுயசரிதம். கற்பனைக்கு இடமில்லாத உண்மைகள் மட்டும் இடம்பெறும் நூல்.இந்நூல் இங்கிலீசிலும் வேறு சில மொழிகளிலும் வெளிவந்து விற்பனையாகிய வண்ணமுள்ளது.

''சத்தியசோதனையின் முன்னுரையில் மகாத்மா அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார். ''நான் எனது சரித்திரத்தை எழுதுவது நோக்கமல்ல.

நான் எதிர்கொண்ட சத்திய சோதனைகளை எழுதுவதே எனது நோக்கமாகும். இது எனக்கு மட்டுமே தெரிந்த விடயம். அதனால், அதனை மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புகின்றேன்.

26 நவம்பர் 1925இல் நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார். ஐந்து பாகங்களைக் கொண்டது. கடைசி அத்தியாயமான 44வது அத்தியாயத்தில் ''விடைபெற்றுக் கொள்கிறேன்'' எனக் கூறி விடைபெறுகிறார்.

## vi. முகம்மத் - மாரட்டிங்லிங்ஸ்

பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களைப்பற்றி பலரும் பல நூல்களை எழுதியுள்ளார்கள். ''மார்டிங்லிங்'' அவர்கள் எழுதிய நூல் வித்தியாசமான பார்வையுடையது. கலாநிதி மார்டிங்லிங் அவர்கள் இஸ்லாத்தை படித்து இஸ்லத்தைத் தழுவியவர். இஸ்லாத்தை தழுவிய பின் இவருடைய பெயர் செய்யத் அபூபக்கர் சிராஜுதீன் என்பதாகும்.

இங்கிலிசில் எழுதப்பட்ட இந்நூலை முதலில் தமிழ் மொழி பெயர்ப்பாக வெளியிட்டவர் சைனா போட் பேருவலையைச் சேர்ந்த ஹஜ் முகம்மத் சஹீத் முகம்மத் றஸ்வி. மொழி பெயர்த்தவர் முகம்மது சனீர் (1989) இந்நூலில் பெருமானாருக்கு முன் உள்ள இப்றாகீம் (அலை) அவர்களுடைய சரித்திரம் சொல்லப்படுகிறது. இச்சரித்திரத்திற்கு பைபிளில் இருந்து ஆதாரங்கள் காட்டப்படுகின்றன.

இந்நூல் 85 அத்தியாயங்களை கொண்டது. இந்நூலில் 65ஆம் அத்தியாயம் அற்புதமாக யாரும் எழுதாதவாறு எழுதப்பட்டுள்ளது. தமிழில் எழுதப்பட்ட பெருமானார் பற்றிய நூல்களில் அப்துல் றஹீம் அவர்கள் எழுதிய ''நபிகள் நாயகம்'' எனும் நூலும் வாசிக்க இனிமையான நடையில் எழுதப் பட்டுள்ளது.

கவிதையில் விருப்பம் உள்ளவர்கள் கவிஞர் மு.மேத்தா அவர்கள் எழுதிய நாயக காவியம் படித்துப் பார்க்கலாம்.

## vii. மனித மனத்தின் மாபெரும் சக்திகள் (Power is of the Mind)

ஸ்வாமி எழுதியது

பதிப்பாசிரியர் : விகரு இராமநாதன் ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் 2, முத்து கிருஸ்ணன் தெரு பாண்டி பஸார். சென்னை 6000017 நூலைப் படித்து முடித்ததும், அடேயப்பா நமக்குள் இவ்வாறான அளப்பரிய சக்திகள் அடங்கிக் கிடக்கின்றனவா என்று மூக்கில் விரல் வைக்க வேண்டியிருக்கும்.

பேராசிரியர் ஆபிரகாம் கோவுரும் அவரது பகுத்தறிவு வாத இயக்கத்தினரும் மனிதனுக்கென்று ஒரு அதீத சக்தி கிடையாது என்கிறார்கள். இரண்டுகருத்தையும் உள்வாங்கி நாம் முடிவெடுக்க இந்நூல் துணை புரியலாம்.

## viii. J.O. கிருஸ்ணமூர்த்தி அவர்களின் விடுதலை துவக்கமும் முடிவும்

கிருஸ்ண மூர்த்தி அவர்கள் கிழக்கு நாடுகளில் நன்கு அறியப்பட்ட தத்துவஞானி. அழகு' பற்றி அற்புதமான ஒரு கருத்தைச் சொன்னவர். அத்தோடு வன்முறைக்கு அப்பால் ஒரே ஒரு புரட்சி, அறிந்ததினின்றும் விடுதலை, வாழ்க்கை அடிப்படைக் கேள்விகள், உள் மனப் புரட்சி, ஆகிய நூல்களில் சொந்தக்காரர் "ஒருவரோடு ஒருவர் உள்ளங்கலந்து உரையாடுவது என்பது நாம் ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்திருந்தாலும் கூட மிகக் கடினமாக இருக்கிறது. நான் பயன் படுத்துகின்ற சொற்களுக்கு நான் கொள்கின்ற முக்கியத் துவத்தில் இருந்தும் வேறுபட்ட ஒன்றை நீங்கள் கொள்ளக் கூடும் புரிந்து கொள்வது என்பது நானும் நீங்களும் ஒரே தளத்தில் ஒரே நேரத்தில் சந்திக்கும் போதுதான் அது ஏற்பட முடியும்.

மனிதர்களுக்கு இடையில், கணவன் – மனைவிக்கு இடையில் நெருங்கிய நண்பர்களுடையில் உண்மையான அன்பிருக்கும் போதுதான் அது ஏற்படுகின்றது. அதுதான் உண்மையான உள்ளம் கலந்த உரையாடல், உடனடியாகப் புரிந்து கொள்வது நம் ஒரே நிலையில் ஒரே நேரத்தில் சந்திக்கும் போது ஏற்படுகின்றது.

இந்தப் பந்தி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் விடுதலை துவக்கமும் முடிவும் எனும் நூலின் முன்னுரையில் முதலாவது பக்கத்தில் முதலாவது பந்தி, ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் எனக் கூறி விலக விழைகிறேன்.

## ix. The Hundred

இந்நூலை கல்லூரிப் பேராசிரியரும் சட்டத்தரணியுமான மைக்கல் ஹாட் எழுதியுள்ளார். இந்நூலில் பின்வரும் தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

100 பேரில் முதலிடம் முகம்மது நபி (ஸல்) அவர்கட்குக் கொடுக்கப்பட்டு அதற்கான காரணமும் கூறப்பட்டுள்ளது. இயேசு நாதர் கூட மூன்றாம் இடததிலேயே உள்ளார்.

மற்றது 100 பேரில் 19 பேர் திருமணம் செய்து கொள்ளாதவர்கள். இந்த 100 பேரில் செல்வச் செளிப்புடனும் உடல் நலத்துடனும் இருந்தவர்கள் திருமணம் செய்யாதவர்களே.

மேலும் இதில் இடம்பெற்றுள்ள நூறு பேரில் திருமணம் செய்தவர்கள் எல்லோருமே சந்ததிகளைப் பெற்றவர்கள் அல்ல. அதாவது திருமணம் செய்து கொண்ட 81 பேரில் 28 பேருக்கு குழந்தைப் பாக்கியமே இல்லை. குழந்தைகளைப் பெற்றிருந்தவர்கள் ஓரிரு தலைமுறைக்கிடையில் சந்ததி அழிந்து விட்டன. மேலும் நூறு பேரில் 10பேர் கீல் வாத நோயினால் (Gout) பாதிக்கப்பட்டவர்கள். என்பதும் குறிப்பிடத்தக்கது.

## X. கார்ல் மாக்ஸ் ஏங்கல்ஸ் நினைவுக் குறிப்புக்கள்

புறொகிறஸ் பதிப்பு மொஸ்கோ

இந்நூலில் நான்காம் அத்தியாயம் கார்ல்மார்க்சின் மரணம் பற்றி ஏங்கல்ஸ் எழுதிய கடிதங்கள் மனத்தை உருக்குவதாக உள்ளன.

அத்தோடு கார்ல் மாக்சின் இறுதிச் சடங்கின் போது ஏங்கல்ஸ், கார்ல் மாக்சின் மரணத்தைப் பற்றிக் கூறிய வரிகள் இடம்பெற்றுள்ளன.

இந்நூலின் கடைசி வரிகளில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளன.

கடைசி நேரத்தில் டாக்டர்கள் கொடுத்த மருந்தினால் கால்மாக்சுக்கு பசி குறைந்து சீரான சக்தி குறைவு ஏற்பட்டதைத் தவிர வேறு ஏதும் நடைபெறவில்லை. நாளுக்கு நாள் அவர் மெலிந்து வருவது நன்றாகத் தெரிந்தது. இவையெல்லாம் இருந்தும் மொத்தத்தில் நோய் குணமடைந்து வந்தது. பிரோங்கைட்டிஸ் கிட்டத்தட்ட குணமாயிற்று.

அதன் பின் அவரைப் பார்க்க தகுந்த சமயமான 2மணிக்கும் 3 மணிக்கும் இடையில் நான் வந்த போது வீடு முழுவதும் கண்ணீரும் கம்பலையுமாக இருப்பதைக் கண்டேன்.

அவர் மிகவும் பலயீனமாக இருந்ததாகவும் முடிவு நெருங்கி விட்டது என்றும் என்னிடம் கூறப்பட்டது.

நாங்கள் சென்ற போது அவர் நல்ல உறக்கத்தில் இருந்தார் என்றும் எழுந்திராத நிரந்தர தூக்கம். சாய்பு நாற்காலியில் மார்க்ஸ் அடைந்த மரணத்தை விட அமைதியான மரணத்தை எந்த மனிதரும் விரும்ப முடியாது.

1818இல் ஜெர்மனியில் பிறந்த இவரது முதல் நூல் ''வறுமையின் வரலாறு''

1867இல் கெபிடல் நூலை எழுதினார் (மூலதனம் )

1883இல் இவருடைய மனைவி ஜெனி இறந்தார்.

## ஓத வேண்டிய நூல்கள்

i. அல்குர்ஆன், அல் ஹதீஸ்
ii. பைபிள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)
iii. மகாபாரதம் (பகவத் கீதை)
iv. திரிபீடகம் (தம்மபத) (Tri Pita Kaya)
v. வேதா – ஹிந்து
vi. Tao Te Ching (சீனமதக் கோட்பாடு)
vii. Tel Mud
viii. மோசேயின் பத்துக்கட்டளை
ix. Lao – TZU – லாவ் தசு
x. திருக்குறள்

### i அல்குர்ஆன், அல் ஹதீஸ்

அல்குர்ஆன் என்பது இறைவனால் முகம்மது நபிமூலம் மனுக்குலத்திற்கு அருளப்பட்டது. இவ்வேதத்தில் ஓர் இறைக்கொள்கை வலியுறுத்தப்படுவதோடு இந்த ஓர் இறைவனுக்கு இணை வைத்தல் என்பது மாபெரிய பாவம் எனவும் வலியுறுத்துவதோடு மனிதன் வாழ வேண்டிய வழி முறைகளும், முன் வாழ்ந்து மடிந்த மக்கள் சரித்திரங்களும் குர்ஆனில் கூறப்பட்டுள்ளன.

அல்ஹதீஸ் என்பது இறை தூதரின் நடைமுறைகளும் குர்ஆனின் விளக்க உரைகளும் எனலாம்.

### ii. பைபிள் (புதிய ஏற்பாடு பழைய ஏற்பாடு)

அதிகமானவர்களால் ஓதப்படும் நூல். இதில் பழையது, புதியது என்று இரண்டு பகுதிகள் உண்டு இது 66 புத்தங்களை உள்ளடக்கியது. இந்த 66 நூல்களிலும் தீர்க்கதரிசிகள், அரசர்கள், வானசாஸ்திரிகள் பிரபுக்கள் போன்றவர்களைப் பற்றிக் கூறுகிறது. இந்த பைபிளில் கடைசி நாளைப் பற்றியும் ஏசு மீண்டும் பிறப்பது பற்றியும் கூறுகிறது.

## iii. மகாபாரதம் (பகவத்கீதை)

மகாபாரதம் சமஸ்கிருதத்தில் வியாசர் என்பவரால் எழுதப்பட்டது. இதில் ''பகவத்கீதை'' எனும் பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளது. பகவத்கீதை என்பது இறை பக்தர்களுக்கான நூல் என்பதாகும். ஐந்து ஆதார உண்மைகளை பகவத் கீதையின் பொருள் உள்ளடக்கியுள்ளது..

மகாபாரத கதை பாண்டவர், கௌரவர் ஆகியோரின் ஆட்சிப் போட்டியே எனலாம். இதனை அறம், மறம் இரண்டினதும் போட்டி என்றும் கூறலாம். இதில் யுத்த களத்தில் அறம் பற்றிப் போதிப்பதுவே ''கீதை உபதேசம்''

## iv. Tripitakaya திரிபீடகம், தம்மபத

இது புத்தரின் போதனைகளை மூன்றாக வகுத்து கூறும் நூல்.

அ. Suttapitakaya
ஆ. Vidaya pitakaya
இ. Ali damma pitakaya

முதலாவது Sutta மனோநிலை பிரச்சனைகளையும் நடைமுறைப்பிரச்சனைகளையும் பற்றிக் கூறுகிறது.

இரண்டாவது ''வினய'' பௌத்த பிக்குகள் பின்பற்ற வேண்டிய விதிகள் பற்றிக் கூறுகிறது.

மூன்றாவது ''தம்ப'' புத்த சமயம் பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றது.

**தம்மபத**

தம்மபத (உண்மையைபற்றிய சொற்கள்) 423 வசனங்களைக் கொண்டது. பாளி மொழியில் உள்ள இந்நூல் வண கே. சிறீதம்மானந்த நாயக மகா தேரர் அவர்களால் இங்கிலிஸ் மொழயில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## v. வேதா (நான்கு வேதம்)

இந்து சமயத்தில் றிக், சாம, யசூர், அதர்வம் என வேதங்கள் நான்கு வகை. இவைகள் பற்றிய குறிப்புக்கள் உண்டு. தனி நூல்களை காண முடியவில்லை.

## vi. Tao te ching

இது சீனர்களின் தத்துவ நூல். இது சீனர்களின் மார்க்க நூல் என்றும் கூறலாம். 81 சிறிய அத்தியாயங்களைக் கொண்டது (கவிதை வடிவிலானது) வாழும் வழிகளைக் கூறுகின்றது.

## vii. Telmud

இது யூதர்களின் Oral Law இது ஹீப்ரு மொழியல் எழுதப்பட்டுள்ளது. இதனை பழைய வேதாகமம் என்று கூறலாம். இதன் தொடர்தான் கிறிஸ்து மதம்

## viii. மோசேயின் பத்துக் கட்டளைகள்

அ. இறைவன் ஒருவனே

ஆ. எனக்கும் உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்திக் கொண்டிரு

இ. கொலை செய்யாதே

ஈ. என் பெயரில் பொய்ச் சத்தியம் செய்யாதே

உ. பொய் சாட்சியம் கூறாதே

ஊ. பொறாமைப்படாதே

எ. திருடாதே, விபச்சாரம் செய்யாதே

ஏ. இறைவனைத் தவிர வேறு யாருக்கும் பயப்படாதே

ஐ. அண்டை வீட்டானின் மனைவி மீது ஆசைப்படாதே

ஒ. நீ விரும்புவதையே மற்றவர்களுக்கும் விரும்பு

இது மோசேக்கு (மூசாவுக்கு) இறைவனால் வழங்கப்பட்ட மக்களுக்கு போதிக்க வேண்டிய கட்டளைகளாகும்.

## ix. லாவ் - தசு (Lao - Tzu)

சீனாவில் எழுத்தப்பட்ட பல்லாயிரக் கணக்கான நூல்களில் அந் நாட்டிற்கு வெளியே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பிரபலம் பெற்ற நூல். இந்நூல் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டதாகும். இந்நூல் "விழுமிய நெறியும், அதன் ஆன்மீக ஆற்றலும்" எனும் பொருளடக்கத்தைக் கொண்டதாகும். இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களில் ஒன்று பின்வருமாறு அமையும்.

"தண்ணீர் மிக மிக மென்மையானது. அது எதுவித எதிர்ப்பும் காட்டாமல் மிக மிக தாழ்ந்த இடங்களிலும் போய்ப் பாய்கிறது. மிக மிக அற்பமான இயற்கை ஆற்றலுக்கும் கூட எதிர்ப்பின்றி பணிகின்றது. எனவேதான் நீரை அழிக்க முடியாமல் நிலைபேறுடையதாக விளங்குகின்றது. இதே சமயம் மிகக் கடினமாக இருக்கும் பாறைகள் கூட நீர் ஒட்டத்தால் நாளடைவில் நலிந்து சிதைந்து போகின்றது.

## x. திருக்குறள்

திருக்குறள் பொதுநூல் எந்த மதத்தையும் சாராதது. அறக்கருத்துக்களைக் கொண்டது கடவுளை மறுக்கவில்லை. இல்லறம், நல்லறம், துறவறம் மூன்றையும் முக்கியத்துவப் படுத்துகின்றது. பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இங்கிலிசில் மட்டும் நாற்பதுக்கு மேற் பட்ட மொழி பெயர்ப்புக்கள் உள்ளன.

இந்நூல் எம்மதத்தையும் சாராது பொதுவாக உள்ளதும் இந்நூலின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். குறள் வெண்பாவில் எழுதப்பட்டுள்ளது.

"தாழ்த்தப்பட்ட வள்ளுவர்" ஒருவரால் எழுதப்பட்டது என்பது மற்றொரு சிறப்பம்சமாகும்.

இழை 6

## அறிய வேண்டியவர்கள்

i. யூரி ககாரின்

ii. மகாத்மாக்காந்தி

iii. அரிஸ்டோட்டில்

iv. ரவீந்திரநாத் தாகூர்

v. இங்கர்சால்

vi. வால்ட்டிஸ்னி

vii. மேரி கியூரி

viii. பிரான்ஸ்பேக்கன்

ix. வில்லியம் ஹார்வி

ix. வாஸ்கோடகாமா

### i யூரி ககாரின்

இவர் ரஸ்யாவைச் சேர்ந்தவர். விண்வெளிக்குப் பயணமான முதல் மனிதர். இவர் 1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி வாஸ்டொக் 1 எனும் விண்கலத்தில் பயணித்து 108 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்தவர்.

இவர் மாஸ்கோநகருக்கு மேற்கே உள்ள குளுஷினோ எனும் இடத்தில் 9மார்ச் 1934 பிறந்தவர். இவரின் பெற்றோர் விவசாயப்பண்ணை ஒன்றில் கடமையாற்றியவர்கள். இவர் சென்ற விண்கலம் 1.48 மணிநேரம் பறந்து பூமியை குவிமையப்படுத்தி நீள்வட்ட வீதியில் சுற்றி வந்தது.

### ii. மகாத்மா காந்தி

மகாத்மாக்காந்தி பற்றி பல மொழிகளில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. போர்க்கருவியின்றியே ஒரு போரினை நடத்தி வெற்றி பெற்று இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர். இங்கிலாந்து சென்று ''பாறட்லோ'' பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். ''சத்திய சோதனை எனும் நூலை எழுதியவர்.

காந்தி தனது தாய் மொழியாகிய ''குஜராத் மொழியிலேயே ஆரம்பக் கல்வியை கற்றவர். சிறுவயதில் திருமணம் செய்து கொண்டாலும் பிரமச்சரியத்திற்கு மதிப்புக்

கொடுத்தவர். தாய்க்குக் கொடுத்த சத்தியத்தை கடைசி வரை காப்பாற்றியவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் துணிச்சல் மிக்கவர் எனச் சரித்திரம் கூறுகிறது.

## iii. அரிஸ்டோட்டில்

அரிஸ்டோட்டில் கிரீஸ் நாட்டில் வாழ்ந்தவர். இவர், கி.மு. 384இல் ஸ்டெகிராஹிகிரஸ் எனும் நகரில் பிறந்தார். ஏதென்ஸ் நகரில் பிளட்டோவின் பாடசாலையில் கல்வி கற்றார். தர்க்க சாஸ்திரத்தில் வல்லவரான அரிஸ்டோட்டில் அதுபற்றி நூல் ஒன்றினையும் எழுதினார். இவர், மொத்தமாக எழுதிய நூல்கள் 47 எனலாம். இவர் மக்களை புதிய விஞ்ஞான ரீதியில் சிந்திக்கத் தூண்டினார்.

தனது குருவான பிளட்டோவின் மரணத்தின் பின் ஏதென்ஸ் நகரத்தை விட்டுச் சென்று, 2ஆம் பிலிப்ஸ் மன்னனின் மகனான அலெக்சாண்டரின் குருவாக கடமையாற்றினார்.

மீண்டும் ஏதன்ஸ் நகரத்திற்கு வந்து "சிலிசியம்" என்ற பெயரில் பாடசாலையொன்றை ஆரம்பித்தார். இப்பாடசாலையின் வளவிற்குள் நடந்து கொண்டே மாணவர்கட்கு பாடம் படிப்பிப்பார். இதனை,(Walk About) கல்வி முறை என்பர்.

## iv. ரவீந்திரநாத் தாஹூர்

இவர், 1913ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர். இந்திய தேசிய கீதத்தைப் பாடியவர். "சாந்திநிகேதன்" கல்விக் கூடத்தை நிறுவியவர். இக்கல்விக்கூடத்தில் கட்டிடங்கள் கிடையாது.

மரநிழலிலேயே கற்றல் கற்பித்தல் நடைபெறும். லண்டனில் கல்வி கற்றவர். ஆசிய ஜோதி எனும் நூலின் தந்தை. இவரின் கவிதைத் தொகுப்பு "கீதாஞ்சலி" என்பதாகும்.

இவர் 1861ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி கல்கத்தாவில் ஜோர்ஷா வட்டாரத்தில் மகாரிசி தேவேந்திரநாத் தாகூர் சாரதா தேவி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.

1883ஆம் ஆண்டு மிணாளினியைத் திருமணம் செய்துகொண்டார். தாய்மொழியிலேயே கல்வி கற்க வேண்டும் என்பதிலும் பழைய குருகுலக்கல்வியிலும் நம்பிக்கை கொண்டவர் தாகூர். 1941ஆம் ஆண்டு ஜூலை 29இல் காலமானார்.

## V. சிந்தனையாளர் இங்கர்சால்

அமெரிக்காவில் நியுயோக் மாகாணத்தில் "சினிகா" என்ற ஏரிக்கு அருகே இருந்த திரிஸ்டன் என்ற ஊரில் ஜான் இங்கர்சால் என்ற கடவுள் பக்தியுள்ள ஒருவருக்கும் நீக்ரோ அடிமை ஒழிப்பில் மிக்க அக்கரை கொண்டிருந்த மேரி லிவிங் ஸ்டன் என்ற பெண்ணிற்கும் 1833ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி சிந்தனையாளர் றொபேட் கிறீன் இங்கர்சால் பிறந்தார்.

இவர், ஆரம்பத்தில் ஆசிரியராக இருந்து பின் அத்தொழிலை விட்டு நீங்கி சட்டத்தரணியாகத் தொழில் செய்தவர். பின் இராணுவத்தில் சேர்ந்து கொண்டார். 1899ஆம் ஆண்டு இறப்பெய்தினார். இவருக்கு எப்போது கருத்துப் புரட்சி ஏற்பட்டது என்று கூற முடியவில்லை.

இங்கர்சால் 18 வயதான போது கட்டான உடலும் சுறுசுறுப்பான மூளையும் இரக்கம் நிறைந்த இதயமும் கொண்டவராக இருந்தார். "நான் மதத்தை நம்புகிறேன். புனித வேதத்தைப் போற்றுகிறேன்" என்று அவர் எதிரில் சொல்ல எந்த மாணவனுக்கும் தைரியம் வராதாம்.

கடவுள்கள், கோயில்கள் என்பன இவர் எழுதிய நூல்கள்

## Vi. வால்ட்டிஸ்னி

எந்த மொழி எழுத்தாளனாக இருந்தாலும் வால்ட்டிஸ்னியை அறியாதிருந்தால் அவரை எழுத்தாளனாகக் கொள்ளவே முடியாது. காரணம் எல்லாரிடமும் பேனா இருந்தது இவரிடம் அது உயிர்த்தது. அதனால் அவரை எல்லோரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இவர் 35 தடவைகள் ஆஸ்கார் விருதினைப் பெற்றுள்ளார். விருது பெற்றுள்ளார் என்பதற்காக இவரை அறிய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. விருதுகள் இவரால் மகிமை பெற்றது என்பதனாலேயே அப்படிக்கூறினேன்.

இவர் எழுதத் தொடங்கியது முதல் இறக்கும் வரை எழுதியவார்த்தைகள் 10 மில்லியன்களாகும். இவர் பிரான்ஸ் நாட்டில் பிறந்த போதும் இவர் பிரஞ்சு மொழியுடன் வேறு ஐந்து மொழிகளிலும் பாண்டித்தியம் உடையவர்.

ஒரு நாளைக்கு நான்கு மணித்தியாலமே நித்திரை கொள்ளும் இவர் மீதிவேளை அத்தனையிலும் எழுதுவதிலேயே இருந்தார்.

1694ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி. பதினேழாவது வயதில் எழுதத் தொடங்கியவர். இறக்கும் மட்டும் எழுதிக் கொண்டே இருந்தார். 1734இல் அரசு இவரது நூல்களைத் தடை செய்தது.

## vii. மேரிகியூரி

மேரிகியூரி புகழ்பெற்ற போலாந்து மற்றும் பிரஞ்சு வேதியியல் அறிஞர் ஆவார். இவர் போலாந்தில் வார்சா எனும் இடத்தில் 1967ஆம் ஆண்டு பிறந்தார். பின்னர் பிரான்சில் வசித்தார். இவர் வேதியியல் மற்றும் இயற்பியலுக்கான நோபல் பரிசை 1911ஆம் 1903ஆம் ஆண்டுகளில் பெற்றார். இரண்டு நோபல் பரிசுகளை பெற்ற முதல் நபர் இவரே.

பொலோனியம், ரேடியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டு பிடித்தார். அத்துடன் பாரிஸ் பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் பேராசிரியரும் இவர்தான்.

1934ஆம் ஆண்டு அப்பிலாஸ்டிக் இரத்த சோகையால் இறந்தார்.

உலகில் பெருமைமிக்க குடும்பம் விஞ்ஞானி மேரிகியூரியின் குடும்பமாகும்.

## viii. பிரான்சிஸ் பேக்கன்

இவர் சிறந்த இராஜதந்திரியும் விஞ்ஞானியும் சட்டவியலாளருமாவார் இவர் பொது மக்களிடம் இருந்து லஞ்சம் வாங்கும் வழக்கமுடையவராக இருந்தார்.

அதனால் இவர் மீது வழக்குத் தொடரப்பட்டு நிரூபிக்கப்பட்டது. ஆயுட் காலத் தண்டனையும் நாற்பதனாயிரம் பவுண் அபராதமும் விதிக்கப்பட்டது. பாராளுமன்றத்திடம் மன்னிப்புகேட்டார் மன்னிக்கப்படவில்லை.

## ix. வில்லியம் ஹார்வி

மருத்துவத்துறையின் தலையெழுத்தை மாற்றிய பெருமை வில்லியம் ஹார்வி அவர்களையே சாரும். இவர் தனது 30வது வயதில் An Anato mical disquis iti on the motion of the Heart Blood in Amimals என்ற நூலை வெளியிட்டதும் மருத்துவ உலகம் ஸ்தம்பித்துப் போனது. புதினைந்து நூற்றாண்டுகளாக நம்பப்பட்டுவந்த கருத்து கேலிக் கூத்தாகிவிட்டது இந்நூலினால். இவர் தனது 79வது வயதில் முடக்கு வாதத்தால் பீடிக்கப்பட்டு காலமானார்.

இவருக்குப் பிள்ளைகளே இல்லை. அதனால் இவர், தனது சொத்து முழுவதையும் றோயல் மருத்துவக் கல்லூரிக்கு எழுதி வைத்தார்.

## x. வாஸ்கோடகாமா

இவர் ஒரு தேசசஞ்சாரி. இந்தியாவிற்கு வர கேப்பு முனையின் ஊடான வழியை கண்டு பிடித்தவர்.

**இழை 7**

## அறிவியலில் அசத்தியவர்கள்

i. ஐன்ஸ்டீன்
ii. அலி இப்னு சீனா
iii. சாள்ஸ் டார்வின்
iv. தாமஸ் அல்வா எடிசன்
v. பெஞ்ஜமின் பிராங்ளின்
vi. ஹிப்போ கிரேட்டஸ்
vii. கலிலியோ
viii. ஜொகானல் கெப்பர்
ix. பேட்டன் ரஸ்ஸல்
x. சேர் ஐசாக் நியூட்டன்

## i அல்பிரட் ஐன்ஸ்டீன்

முதலில் மூன்று கல்வி நிலையங்களில் வேலைக்குச் சேர்ந்து திறமையில்லாத ஆசிரியர் என்று வேலையில் இருந்து நீக்கப்பட்டார்.

இவர் வறுமையின் போது இவரது மாணவி ஒருத்தி உதவி செய்தார். பின் இவளையே இவர் மணந்துக் கொண்டார்.

கிழக்கு ஜெர்மனியின் சிற்றூர்களில் ஒன்றான "உல்ம்" எனும் இடத்தில் 1879ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் திகதி ஹெர்மன் ஜன்ஸ்டீன் என்பருக்கும் பாலின் என்ற அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர்.

ஹிட்லரின் ஆட்சிக்குப்பயந்து அமெரிக்காவில் குடியேறினார். 1955ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாள் இறந்தார். ஐன்டீனுக்கு பணம் என்றால் பிடிக்காது. அதனால் நோபல் பரிசை தனது முதல் மனைவிக்கு அனுப்பினார். இவர் பயன்பாட்டு கணிதத் திறமைகள் கொண்ட ஒரு கோட்பாட்டு இயற்பியல் அறிஞராவார். இவர் புகழ் பெற்ற சார்புக் கோட்பாட்டை முன்வைத்ததுடன் குவாண்டம் பொறிமுறை, புள்ளியற் பொறிமுறை (Statistcal Machanics) மற்றும் அண்டவியல் ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

1921ஆம் ஆண்டு ஈற்பியல் (Theoretical Phisics) சேவைக்காக இவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

## ii. இப்னுசீனா

இவரது முழுப்பெயர் அபூஅலிஅல் ஹுசைன் இப்னு அப்துல்லா இபின் சீனா. இவரை அபூசினா என அழைக்கும் வழக்கமுண்டு. இவர் தனது இருபத்தி ஏழாவது வயது பூர்த்தியாகமுன் "கனோன்" என்ற பிரசித்தி பெற்ற மருத்துவ விஞ்ஞான நூலை எழுதினார்.

இவர் மரணித்து பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் கூட ஐரோப்பிய ஆசிய மருத்துவ கல்லூரிகளில் அது பிரதான அங்கீகாரம் பெற்ற நூலாக விளங்கியது.

இவர் செல்வமும் செல்வாக்குமுள்ள பல பாரசீகர்கட்கு மருத்துவராக இருந்தார். இவர். கி.பி. 980இல் புஹாரா மாகாணத்தில் ஹர்மெய்தென் என்ற இடத்தில் பிறந்தார். 1037இல் வட பாரசீகத்தின் மதன் நகரில் மரணித்தார். லத்தீன் மொழியில்

"அவிசென்னா" என அழைக்கப்பட்டார். இவர் அதிகூடிய விவேகம் உள்ள மாணவனாகக் கருதப்பட்டார்.

பத்து வயதில் குர்ஆனை மனனம் செய்தார். பதினாறு வயது அடையுமுன் பௌதீகவியல், கணிதம், அளவையியல், மெய்யியல் ஆகியவற்றைக் கற்றுத்தேறினார். 16 வயதிலேயே மருத்துவரானார். இவர் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டு பல இலக்கியத் தொகுதிகளை எழுதியுள்ளார். இவர் சிறிதும் பெரிதுமான 217 நூல்களை எழுதியுள்ளார்.

## iii. சார்ள்ஸ் டார்வின் (1809 - 1882)

இயற்கைத் தேர்வு (Natural Selection) எனும் முறையின் ஊடாக உருமலர்ச்சி (Evolution) ஏற்படுகிறது எனும் உயிரியல் கோட்பாட்டினை வகுத்த இங்கிலிஸ் விஞ்ஞானி இவராவார். இவர் இங்கிலாந்தில் ஷிரூஸ்பரி எனும் ஊரில் 1809ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதி பிறந்தார். (இதே நாளில் தான் ஆபிரஹாம் லிங்கனும் தோன்றினார்) இவர், முதலில் வைத்தியம் படிக்க பல்கலைக்கழகம் சென்றார். இது அவரது மனத்திற்கு பிடிப்பில்லாததால் சமயகுருவாகக் கல்வி கற்கலானார்.

பல்கலைகழகததில் தாவர இயல் பேராசிரியராக இருந்த ஹென்ஸ்லோ என்பவரின் அன்பைப் பெற்று அவருடைய நெருங்கிய நண்பரானார். அப்போது பீகிங் (Beagle) என்ற அரச கப்பல் 1831இல் தென் அமெரிக்காவுக்கும் பசுபிக் பெருங்கடலுக்குச் சென்று ஆராய்ச்சி செய்வதற்கு இருந்தது. நண்பர் ஹென்ஸ் லோவின் முயற்சியால் அந்தக் கப்பலின் இயற்கை விஞ்ஞானிகாக (Naturalist) டார்வின் நியமனம் பெற்றார். டார்வின் தனது 22வது வயதில் 1831இல் இந்த ஆய்வு பயணத்தை மேற்கொண்டார். இந்த கப்பலில் தாம் சேகரித்த ஆராய்ச்சிப் பொருள்களுடனும் குறிப்புக்களுடனும் 1836இல் டார்வின் இங்கிலாந்து வந்து சேர்ந்தார். 1859ஆம் ஆண்டு டார்வின் வெளியிட்ட இனங்களின் தோற்றம் (Origin of Species) பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. வேறு எந்த அறிவியல் நூலும் இதைப் போன்று உலகியல் விஞ்ஞானிகள் பாமர மக்களிடையே பெரிய சர்ச்சையை ஏற்படுத்தவில்லை. இந்நூலின் மூலம் டார்வின் பரிணாமக் கொள்கையை நிலைநாட்டினார்.

மேலும் ஒரு நூலின் மூலம் வாலில்லாக் குரங்கு போன்ற ஒரு பிராணியில் இருந்து மனிதன் தோன்றியதாக கூறினார்.

1882ஆம் ஆண்டு டார்வின் நோய்வாய்ப்பட்டு நீண்டகாலம் கஸ்டப்பட்டு இறந்தார். டார்வின் கொள்கைப்படி இன்னொரு காலத்தில் மனிதனின் செல்வாக்கு மறைந்து அதாவது மனித இனம் மறைந்து வேறு ஒரு இனம் ஆதிக்கம் செலுத்தக்கூடும் என்பதையும் கூறி வைத்துள்ளார்.

## iv. தோமஸ் அல்வா எடிசன் (1847 - 1931)

இவர் அமெரிக்காவில் ஒஹியோ மானிலத்தில் மிலான் நகரில் 1847இல் பிறந்தார். இவர் மூன்று மாதங்கள் மட்டுமே முறையாகக் கல்வி கற்றவர். பள்ளி ஆசிரியர் இவரை மூளைவளர்ச்சி குன்றியவர் எனக் கருதினார். எடிசன் கண்டுபிடித்த முதல் சாதனம் ஒரு மின் வாக்குப் பதிவுக் கருவி. (Electric Voice Recorder)இதனை இவர் 21 வயதிலேயே கண்டுபிடித்தார். இதில் இருந்து இவர் பல கருவிகளை கண்டுபிடித்து ஆயிரம் கருவிகளின் கண்டுபிடிப்பாளராக உரிமைய பெற்றிருந்தார். கடைசியில் இவர் தனது கேட்கும் திறனை அதிகரித்தார். 1931ஆம் ஆண்டு எடிசன் காலமானார்.

இவர் ஒரு புத்தாக்க மேதை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். இவர் தந்தை படகு தயாரிக்கும் தச்சர். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்தவர்.

## v. பெஞ்சமின் பிராங்ளின்

வரலாற்றில் பல்வேறு துறைகளில் மிகச் சிறந்து விளங்கிய மேதை இவர்.

அதாவது வணிகம், அறிவியல், இலக்கியம், அரசியல் ஆகிய துறைகளில் இவர் வெற்றி பெற்றவர். வாணிபத்தில் பெஞ்சமின் பிராங்ளின் பெற்ற வெற்றியை ஆண்டியாக இருந்து அரசனாக உயர்ந்த சாதனை என குறிப்பிடலாம்.

1706ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் பிறந்தார். இவர் அவரது குடும்பத்தில் 17பேரில் 10வது பிள்ளையாக பிறந்தவர். பள்ளியில் இரண்டு ஆண்டுகளே படித்தவர். படிக்க வசதியில்லாத படியால் தந்தையின் மெழுகு வர்த்திக் கடையில் வேலை செய்தார்.

அதன் பின் அச்சுக் கூடமொன்றில் வேலைக்குச் சேர்ந்தார். பிராங்ளினுக்கு இயற்கையாகவே நூல் வாசிக்கும் பழக்கமிருந்தது. அச்சுக்கு வரும் புத்தகங்கள்

அனைத்தையும் வாசிக்கும் இயல்பால் அறிவினை பெற்றுக் கொண்டார். அதனால் எழுதும் ஆற்றலும் ஏற்பட்டது. அச்சுக் கந்தோரில் இருந்து விலகி தானாக ஒரு அச்சகத்தை ஆரம்பித்தார். இதன் மூலம் செய்தி இதழ் ஒன்றையும் நடத்தினார்.

அத்தோடு கணப்படுப்பு (Stove) வெள்ளெழுத்துக் கண்ணாடி இடிதாங்கி (Lightningrod) போன்ற பல சாதனங்களை உண்டாக்கினார். மேற்கூறிய நான்கு துறைகளையும் கடந்து ஐந்தாவது துறையாக மக்களுக்கு சேவை செய்யும் நற்பணித்துறையிலும் ஈடுபட்டார்.

முதலாவது அறிவியல் கழகத்தை ஏற்படுத்தியவரும் இவரே. இவர் 84 ஆண்டுகள் சிறந்த உடல் நலத்துடன் வாழ்ந்தார்.

## vi. ஹிப்போ கிரேட்ஸ்

இவரை மருத்துவத்தின் தந்தை என உலகம் கதைக்கிறது. இவர் கி.மு.460–379 வரை வாழ்ந்தார். ஐரோப்பாவில் ''ஓணின்'' எனும் தீவில் பிறந்தார்.

மருத்துவத்தின் முன்னோடி. இவரால் தொகுக்கப்பட்ட நூல் ''ஹிப்போ கிரேட்டிக் ஒத்'' Hippocratic Oath''

நோய் இறைவனின் தண்டனை. பேய் பிசாசுகளின் செயல், சூனியத்தின் விளைவு என நம்பப்பட்ட காலத்தில் அப்படியெல்லாம் இல்லை எனத் துணிந்து கூறியவர். சூழல் காரணிகளே காரணம் என இவர் கூறினார்.

## vii. கலிலியோ கலிலி

கலிலியோ இன்றைய அறிவியல் புரட்சிக்கு 15ஆம் நூற்றாண்டிலேயே வித்திட்டவர். நவீன வானியலின் தந்தை. இத்தாலியில் பிறந்தவர். சூரிய குடும்பம் பற்றிய பல தகவல்களை உலகிற்கு உணர்த்தியவர்.

விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் மானசீகக் குரு. கடிகாரத்தை உருவாக்கப் பெரும்பாடு பட்டார். ஆனால் முடியவில்லை. இத்தாலியில் உள்ள பைசாநகர பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராக இருந்தவர். இவரது சூரியக் குடும்பம் உலகம் உருண்டை. பூமி சூரியனைச் சுற்றுகிறது எனற் கருத்துள்ள நூலுக்காக

வத்திகான் நகர கத்தோலிக்க நிர்வாகத்தால் விசாரணைக் குட்படுத்தப்பட்ட பின் 1633இல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

1938இல் இருகண்களையும் பார்வையிழந்து பாதிக்கப்பட்டு 1642இல் இறந்தார். கலிலியோ இறந்து 100 ஆண்டுகளின் பின் 1737இல் இவரது கல்லறையில் இருந்து இத்துப்போகாது இருந்த எஞ்சிய பாகங்களை எடுத்து சாண்டாகுரோஸ் தேவாலயத்தில் அமைக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

இவரை புரிந்து கொள்ள 100 வருடங்கள் சென்றது இத்தாலியருக்கு.

## viii. ஜொகானஸ் கெப்பர்

ஜேர்மனிய கணிதவியலாளரான இவர் அறிவியல் புரட்சியில் முக்கியமான ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் ஜோதிடராக, கணிதப் பேராசிரியராக இருந்தவர்.

கலிலியோவின் சமகாலத்தவர். இவர் சில வேளைகளில் முதலாவது கோட்பாட்டு வானவியலாளராகவும் கருதப்படுகிறார். இவர் 1571ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி வைல்டோ ஸ்டாட்ற் எனும் இடத்தில் பிறந்தார்.

இந்நகரத்தின் மேயராக இருந்தார். இவர் பிறந்த போது உடல் வலுக்குறைந்த குழந்தையாய் பிறந்தார்.

சிறு பிள்ளையாக இருந்தபோது ஏற்றபட்ட சின்னம்மை நோயினால் பார்வைக் குறைவு உள்ளவராகவும் காணப்பட்டார். இவரது கைகூட வலுவிழந்ததாகக் காணப்பட்டது.

கெப்லரின் முதலாவது வானவியல் புத்தகம் மைஸ்டிரியம் கோஸ்மோ கிராபிகம் என்பதாகும்.

## ix. பேட்டன் ரஸ்ஸல்

உலகப் பேரறிஞர் பேட்டன் றஸ்ஸல் இறக்கும் போது வயது 98. இந்த வயதிலும் இவர் தெளிவாகப் பேசினார். எழுதினார். இவர் நோபல் பரிசு பெற்றவர்.

"தனி ஒரு தத்துவத்தை தமெக்கெனக் கொண்டிராத ஒரு தத்துவ ஞானி இவர். இவர் எல்லாத் தத்துவங்களுக்குமான தத்துவஞானி. இவரது நூல்களில் காணப்படாத எந்தவொரு தத்துவார்த்தத்தையும் எம்மால் உலகில் காணமுடியாது.

1872ஆம் ஆண்டு பிறந்தார். 40க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 1ஆம் உலக யுத்தத்தின் போது போர் மறுப்பு இயக்கத்தை உண்டாக்கிப் பிரச்சாரம் செய்ததால் சிறையில் வைக்கப்பட்டார். இவர் வாழ்வில் தம்மை ஆட்கொண்ட மூன்று அம்சம், அன்பு, அறிவு அருள் என்றார்.

தன் வாழ்நாளில் கணித உண்மை எது? சமய உண்மை எது? விஞ்ஞான உண்மை எது என்று அறிய ஆவல் கொண்டார்.

## x. ஐசாக் நியூட்டன்

உலகில் தோன்றிய விஞ்ஞானிகள் அனைவரிலும் தலை சிறந்தவராகவும் செல்வாக்கு மிக்கவராகவும் திகழ்ந்தவர்.

"நியூட்டனின்" முதல் இயக்க விதி" மிகப் பிரபலமானது.

இயந்திரவியல் துறையில்தான் பெரும்பாலான முக்கிய கண்டுபிடிப்புகளை நியூட்டன் செய்தார். இவர், 1687ஆம் ஆண்டு தனது தலைசிறந்த நூலாகிய "இயற்கைத் தத்துவத்தின் கணித விதிகள்" என்ற நூலை வெளியிட்டார்.

நியூட்டன் 1727இல் காலமானார். இவர் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால், இவர், அடக்கம் செய்யப்பட்டது பிரிட்டிஸ் பெரு மக்கள் அடக்கம் செய்யப்படும் வெஸ்மினிஸ்டர் அபேயில்" இதில் இருந்து அவரது பெருமையை அறிய முடிகிறதல்லவா?

எப்பொழுதும் சிரித்த முகத்துடனேயே இருப்பார். கோபம் இல்லாமல் எல்லோரிடமும் இனிமையாகப் பேசுவார். ஆரம்பத்தில் வறுமையில் வாடிய இவர் பின் பணக்காரர் ஆனதும் வறுமையில் இருந்த தனது இனத்தவர்கள் எல்லோருக்கும் உதவினார்.

இவர் தனது வாழ்நாள் முழுவதையும் ஆய்வுக்காகவே செலவு செய்தார். இரசவாதம், ஜோதிடம், கண்ணிற்கு புலப்படாத மாயை இரகசியங்கள் பற்றி சுமார் ஒரு லட்சம் பக்கங்களுக்கு மேல் குறிப்புக்கள் எழுதி வைத்தார்.

### இழை 8

## வெற்றி பெற வழிகள்

i. தன்னம்பிக்கை
ii. எளிய கனவுகள் போதும்; அவற்றை அழுத்தமாகச் சொல்லிப் பழகுங்கள்
iii. எல்லோரையும் அனுசரித்துச் செல்லவும்
iv. பொறுமையாய் இரு
v. சந்தோஷப்படு, சந்தேகப்படாதே
vi. தன்னொழுக்கம் முக்கியம்
vii. எல்லோரும் புரியும் மொழியில் பேசு
viii. மௌனமாக இருக்கப் பழகு
ix. நேரம் தவறாமை வெற்றியின் முக்கிய அம்சம்
x. யாரையும் அலட்சியப் படுத்தாதீர்.

### இழை 9

## பத்துப்பத்தாய் பல பத்து

i. நாயிடம் கற்க வேண்டிய பத்து
ii. சந்தோசம் நிலைத்திருக்க வழிகள் பத்து
iii. தரித்திரம் ஏற்படாதிருக்க வழிகள் பத்து
iv. இல்லாதது பத்து
v. இருக்க வேண்டிய பத்து
vi. பறக்கும் பத்து
vii. ஆறோடு சேரும் பத்து
viii. நபிகளார் சொன்ன பத்து
ix. செய்யக் கூடாதவை பத்து
x. இப்படியும் பத்து

## i நாயிடம் இருந்து நாம் கற்க வேண்டிய பத்து

அ. நாய் பசியுடன் இருக்கும். உணவு எப்பொழுது கிடைகிறதோ அப்பொழுது சாப்பிட்டுத் திருப்திப் பட்டுக் கொள்ளும்

ஆ. நாய் இரவு வேளைகளில் சிறிது நேரம்தான் தூங்கும்

இ. ஒரு நாளைக்கு ஆயிரம் தடைவை வீட்டை விட்டுத் தூரத்தினாலும் தன் எஜமானனின் காலடியை விட்டு எங்குமே சென்று விடாது.

ஈ. அது இறந்து விட்டால் அதற்கு வாரிசு எனும் சொந்தக்காரர் யாரும் இல்லை.

உ. அது பூமியில் கொஞ்சம் இடம் கிடைத்தாலும் பொருந்திக் கொள்ளும்.

ஊ. யாராவது போடும்வரை பார்த்துக் கொண்டேயிருந்து போட்டதும் சாப்பிடும்.

எ. அது நிற்குமிடத்தில் இன்னுமொரு நாய் வந்து சேர்ந்தால் அந்த இடத்தை விட்டு போய்விடும்.

ஏ. எஜமான் விரட்டி மண்ணை அள்ளி வீசினாலும் கொஞ்சமும் கோபப்படாது.

ஐ. அதற்கு யாராயினும் ஒரு கவளம் உணவிட்டாலும் உண்டு திருப்தியோடு அந்த இரவைக் கழித்துவிடும். இது ஊர்விட்டு இன்னுமோர் ஊர் போனாலும் கட்டுச்சாதம் எடுத்து செல்வதில்லை.

ஒ. அர்த்த ராத்திரியில் நாய் ஊளையிட்டால் அபசகுணமாகும். யாரோ மரணமடையப் போகிறார்கள் என்று பொருள். நாய்க்கு விசேட உணரும் சக்தியுண்டு.

## ii. சந்தோசம் நிலைத்திருக்க வழிகள் பத்து

அ. நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விட வேண்டும்

ஆ. சில நேரங்களில் சில சங்கடங்களை சந்தித்தே ஆக வேண்டும் என்று உணர வேண்டும்.

இ. நான் சொன்னதே சரி நான் செய்ததே சரி என வாதிடக் கூடாது.

ஈ. குறகிய மனப்பான்மையை விட்டுவிடவேண்டும்.

உ. எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் சொல்லிக் கொண்டிராதீர்கள்.

ஊ. கேள்விப் படுகின்ற எல்லா விடயத்தையும் நம்பி விடாதீர்கள்.

எ. பேச்சிலும் நடத்தையிலும் பண்பை வெளிப்படுத்துங்கள்.

ஏ. கணவன், மனைவி, குடும்பம் என மனத்தில் எண்ணும் அதே வேளை ஓரளவு பற்றற்ற நிலையிலும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஐ. செல்வம் முக்கியம். இது, பலவகைப்படும் – பொருட்செல்வம், குழந்தைச் செல்வம், கல்விச் செல்வம், உடல் நலச் செல்வம்.

ஒ. பாலியல் அறிவு இருக்க வேண்டும். இதன் மூலம் மனைவியை சந்தோசமாக வைத்துக் கொள்ளலாம். மனைவி சந்தோசம் இல்லா விட்டால் வண்டியில் ஒரு சில்லு கழன்ற மாதிரி.

## iii. தரித்திரம் ஏற்படாதிருக்க வழிகள் பத்து

அ. கணவனை கேவலமாக எண்ணக் கூடாது.

ஆ. கணவனை பெயர் சொல்லி அழைக்கக் கூடாது

இ. அவரை பலர் மத்தியில் அவமதிப்பாக பேசக் கூடாது.

ஈ. கணவனுக்கு முன்னால் நடந்து செல்லக் கூடாது.

உ. கணவன் மனைவியை வேலைக்காரிபோல் நடத்தக் கூடாது.

ஊ. மனைவியின் கன்னத்தில் அறையக் கூடாது.

எ. கண்டதற்கெல்லாம் அவளைக் கேவலமாகத் திட்டக் கூடாது.

ஏ. பல் உடைந்த சீப்பால் தலைவாரக் கூடாது.

ஐ. உடைந்த பாத்திரங்களை பாவனைக்கு எடுக்கக் கூடாது.

ஒ. அதிகம் உண்ணுவதும், வாசப்படியில் உட்கார்வதும் கூடாது.

## iv. இல்லாதது பத்து

அ. சவூதி அரேபியாவில் நதிகள் இல்லை.

ஆ. ஈக்களுக்கு பற்கள் இல்லை

இ. நண்டுகளுக்கு தலை இல்லை

ஈ. ஈசலுக்கு வயிறு இல்லை

உ. வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை

ஊ. முதலைக்கு நாக்கு இல்லை – உண்டு வெளியே தெரிவிதில்லை என்றும் ஒரு கருத்துண்டு.

எ. பாம்பிற்கு காது இல்லை

ஏ. பாம்பு பால் குடிப்பதே இல்லை

ஐ. தேன் பூசினால் தலை மயிர் நரைக்கும் என்பது உண்மையில்லை.

ஒ. நட்சத்திர மீன்களின் உடலில் மூளை என்ற ஒரு பகுதி இல்லை

## V. இருக்க வேண்டிய பத்து

அ. அழகிய இரு உள்ளங்கைகள்

ஆ. அழகிய பாதங்கள்

இ. கடைக்கண்கள்

ஈ. அழகான உதடுகள்

உ. அழகான நகம்

ஊ. நாக்கு

எ. மார்பு, நெற்றி அகலமாக இருக்க வேண்டும்

ஏ. கபோலம் (கன்னம்) முழந்தாளின் கீழ், ஆண்குறி என்பன சிறியதாக இருக்க வேண்டும்

ஐ. நாபி, ஓசை, வலிமை ஆகிய மூன்றும் ஆழ்ந்து இருக்க வேண்டும் (நாபி – தொப்புள்)

ஒ. மூக்கு நீண்டு இருக்க வேண்டும்.

இது சாமுந்திரிகா இலட்சணம் 32இல் கூறப்பட்டுள்ளது. இதனை அதிவீரராம பாண்டியன் எனும் அரசன் தனது "துளியகாசி கண்டம்" எனும் நூலில் கூறியுள்ளார்.

## Vi. பறந்து போகும் பத்து

மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை, தானம் தவ முயற்சி, தாளான்மை. சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும் பசி வந்திடப் பறந்து போகும்.

அவ்வை (நல்வழி)

### vii. ஆறோடு சேரும் பத்து

(பத்தும் பதினாறும் பெற்று நீடூழி வாழ் என்பதில் உள்ள பத்தும் ஆறும்)

புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மைகள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, நீடித்த வாழ்வு

### viii. நபிகளார் சொன்ன பத்து

அ. இறைஞானம் என் மூலதனம்

ஆ. பகுத்தறிவு என் பக்திவேர்

இ. அன்பு என் அடிப்படை

ஈ. ஆர்வம் என் வாகனம்

உ. தியானம் என் தோழன்

ஊ. உறுதி என் உடைமை

எ. துக்கம் என் துணைவன்

ஏ. அறிவு என் ஆயுதம்

ஐ. பொறுமை என் போர்வை

ஒ. திருப்தி என் வெற்றிப்பொருள்

### ix. செய்யக்கூடாதவை பத்து

அ. வீட்டின் தலைவாசலுக்கு எதிராக கண்ணாடி வைக்கக் கூடாது.

ஆ. புராணத்தில் உள்ள யுத்தக் காட்சிகள் எதுவும் படங்களாகவோ ஓவியங்களாகவோ வீட்டில் இருக்க கூடாது.

இ. படுக்கை அறையின் படுக்கை கண்ணாடியில் தெரியும் அளவுக்கு கண்ணாடி அமையக் கூடாது.

ஈ. பெரிய கட்டிலில் இரண்டு மெத்தைகள் சேர்த்து போடக் கூடாது

உ. கதவுக்கு நேராக கட்டில் போடக் கூடாது

ஊ. கொடுத்ததை நினைக்கக் கூடாது

எ. பஞ்சமாபாதகம் செய்யக் கூடாது

ஏ. பேராசை கூடாது

ஐ. பெண்ணாசை கூடாது

ஒ. ஊண்ஆசை, பதவி ஆசை கூடாது

## X. இப்படியும் பத்து

அ. கறையான் அரிக்காத மரம் தேக்கு

ஆ. வேகமாக ஓடும் விலங்கு சிறுத்தை

இ. வெட்டுக்கிளிக்கு இரத்தம் வெள்ளை

ஈ. சத்தம் போடாத விலங்கு ஒட்டகச் சிவிங்கி

உ. சிறிய இதயம் கொண்ட மிருகம் சிங்கம்

ஊ. நினைவாற்றல் கொண்ட மிருகம் யானை

எ. தூங்காத பறவை புறா

ஏ. நீந்தத் தெரியாத மிருகம் ஒட்டகம்

ஐ. கூடு கட்டத் தெரியாத பறவை குயில்

ஒ. ஏதிரொலி மூலம் பாதையை அறியும் பறவை வவ்வால்

**இழை 10**

## சாவித்துவாரத்தின் ஊடே

i. உலக சனத்தொகை 2011 ஒக்டோபர் 31இல் 700 கோடியாக இருந்தது. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா. சீனாவின் சனத் தொகை உலக சனத்தொகையில் பத்தொன்பது விகிதமாகும்.

ii. எமது அறிவின் தரத்தை பின்வருமாறு அளவிட்டுக் கூறுகின்றனர். இது 1 – 200 வரை கணக்கிடப்பட்டுள்ளது.

அ. 90 – 100 வரை சராசரி மனிதன்

ஆ. 100–120 வரை சற்று மேலானவர்கள்

இ. 120–130 வரை சிறந்த புத்திசாலிகள்

ஈ. 130–140 வரை பிறவிப் புத்திசாலிகள்

உ. 140க்கு மேல் மேதை

iii. 4000 ச.கி. மீட்டர் பரப்பளவு கொண்ட சிறிய நாடான எகண்ட்டலியில் 25 பல்கலைக்கழகங்கள் உள்ளன.

iv. முதன் முதல் மனிதன் தயாரித்த உலோகம் வெண்கலம்

v. உலகில் முதல் முதல் இருதய மாற்று சிகிச்சை நடைபெற்றது

vi. உலகின் மிகப்பெரிய நூலகம் மொஸ்கோவில் உள்ள "லெனின்" நூலகம்

vii. உலகில் அதிகமான நோபல் பரிசைப் பெற்ற நாடு அமெரிக்கா

viii. ஒரு மனிதன் தலையில் சராசரியாக 1 இலட்சம் முடிகள் இருக்கும்

ix. உலகப் படத்தை முதலில் வரைந்த முஸ்லிம் அல் – இத்ரீஸ்

x. அல்பிறட் நோபல் இறந்து பதினைந்து ஆண்டுகள் கழித்து சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் முதன் முறையாக நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன.

# நூல் 04

# விஞ்ஞானவியல்

**சாவிக்குறிப்பு**

விஞ்ஞான அறிவில்லாத மெஞ்ஞானம் கண் இல்லாதவனையும், மெஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானம் கால் இல்லாதவனையும் போன்றது என்று அறிவியல் விஞ்ஞானி ஒருவர் கூறியதை இங்கு ஞாபகப் படுத்தியவனாக, விஞ்ஞானத்தின் ஆரம்பம் உருண்டையான மரக்குற்றி என்றும், இது பாரமான பொருளை இலகுவாக அங்கும் இங்கும் அசைக்க அல்லது எடுத்துச் செல்ல மனிதனுக்கு உதவியது என்றும், இதில் இருந்து அவன் சக்கரத்தை, உருளையை வட்டமான ஒரு சில்லை; றோதையை உருவாக்கி தன் தேவைக்கு பயன்படுத்திக் கொண்டான் என்றும், இதன் வளர்ச்சியே இன்றைய விஞ்ஞானம் என்றும், இந்த விஞ்ஞானம் இறைவன் உண்டா? இல்லையா? என்று ஆராயும் அளவிற்கு வளர்ந்து விட்டது என்றும் கூறலாம்.

அல்லது

இறைவன் என்ற கருப்பொருளை சக்தியை உண்மையென்று நிரூபிக்க உதவியது என்றும் கூறலாம். விஞ்ஞானம் கூரான ஓர் ஆயுதம்! இதனை நன்மைக்கும் பயன்படுத்தலாம் தீமைக்கும் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையில் பின்வரும் இழைகளை எடுத்து நோக்குவோம்.

**இழைகள்**

1. விஞ்ஞானக் கருத்துக்கள்
2. இதுவம் விஞ்ஞானக் கருத்துக்களே
3. ஆறறிவில்லாத விஞ்ஞானிகள்
4. எமது முன்னோர் சொன்ன விஞ்ஞானக் கருத்துக்கள்
5. விஞ்ஞானத்திற்கு சவால் விடும் சம்பவங்கள்
6. எதிர்வு கூறலும் பிழைத்தவைகளும்
7. திட்டமான சில உண்மைகளும் நம்பமுடியாத சில உண்மைகளும்
8. உலகில் ஏற்பட்ட பூகம்பங்கள்
9. காலக்கணிப்பு
10. சாவித்துவாரத்தின் ஊடே.

**இழை 1**

## விஞ்ஞானக் கருத்துக்கள்

i. செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழலாம்
ii. வியக்க வைக்கும் புதிய சூரியன்
iii. முதல் தோன்றியது முட்டையா? பறவையா?
vi. பூமியின் ஆழம்
v. வெள்ளி இடை மறிப்பு
vi. பூமியில் வெப்பம் அதிகரிப்பு
vii. வேற்றுக்கிரக வாசிகளுடன் தொடர்பு
viii. பூமியின் ஒட்சிசன் தோன்றிய காலம்
ix. பூமிக்கு வெளியே
x. டைட்டனில் நைல் நதி போன்ற பாரிய நதி

## i செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழலாம்

செவ்வாய் கிரகம் பூமியில் இருந்து 3 ½ கோடி மைல்களுக்கு அப்பால் உள்ளது. செவ்வாய் கிரகத்திற்குச் செல்ல வேண்டுமானால் ஆறு மாதம் பயணம் செய்ய வேண்டும்.

புதிதாக ஒரு ரொக்கட் வடிவமைக்கப் படுகிறது. இது முடிந்தால் 39 நாட்களில் செவ்வாயைச் சென்றடையலாம்.

செவ்வாய் கிரகத்தில் மனிதன் குடியேறி வாழ முடியும், அதுவும் இந்த நூற்றாண்டு இறுதிக்குள் என சுலபமாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இஃதே வேளை செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழலாம் என்ற நம்பிக்கை விஞ்ஞானிகளிடையே குறைந்து வருவதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

## ii. வியக்க வைக்கும் புதிய சூரியன்

விண்வெளி என்பது விசித்திரங்களின் உறைவிடம்.

குளிர்ச்சிதரும் நிலவு தொடக்கம் வெப்பமான சூரியன் உட்பட பல்வேறு அம்சங்கள் நிறைந்த கிரகங்கள் இங்குண்டு.

சூரியனைப் போன்ற இலட்சக்கணக்கான சூரியன்கள் விண்வெளியில் மிதக்கின்றன.

சூரியனைப் போல ஆயிரம் மடங்கு பெரிய கோள்களும் நட்சத்திரங்களும் இருக்கின்றன. சூரியன் வெளியிடும் வெப்பமே பூமியில் உயிரினங்கள் வாழ முக்கிய காரணமாக இருக்கின்றன.

தற்போது விண்வெளி விஞ்ஞானிகள் சூரியனைவிட 35 மடங்கு வெப்பம் நிறைந்த நட்சத்திரத்தைக் கண்டு பிடித்துள்ளார்கள்.

இந்த நட்சத்திரத்திற்கு "பக்நெபுலா" என்று பெயரிடப்பட்டுள்ளது. இது பூமியில் இருந்து 3500 ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ளது.

## iii. முதலில் தோன்றியது முட்டையா? பறவையா?

பதிலளிக்க முடியாத புதிராக பல ஆண்டுகளாகவே இந்த கேள்வி இருந்து வருகிறது.

ஆயினும் விஞ்ஞானி சார்ள்ஸ் டார்வின் அவர்களின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையின்படி இந்தக் கேள்விக்கு பதில் உண்டு.

முதன் முதலில் பூமியில் ஓர் உயிரணுவை மட்டுமே கொண்ட புரொட்டோசவா (Protozoa) என்ற உயிரினம்தான் தோன்றியது. அது சற்று வளர்ந்த பின்

இரண்டாகப் பிரிந்து இரண்டு இரண்டாகப் பெருகி சில நூற்றாண்டுகளில் கோடிக்கணக்கில் பெருகின. அதன் பிறகு இத்தகைய பிறப்பு நின்றது.

அவற்றுள் சில மாறுபட்ட மரபணுக்களை (Muted Genes) உற்பத்தி செய்ய அவை இணைந்து புதிய ஜீவராசிகளும் தோன்றின. அதுபோல ஒரு ஜோடிப் பறவை மாறுபட்ட மரபணுக்களை உற்பத்தி செய்து இணைந்துதான் முட்டை உண்டாகி இருக்க வேண்டும். இப்படி ஏதோ ஒரு பறவைக்கு முட்டை தோன்றி அதில் இருந்து குஞ்சு தோன்றி இருக்கலாம். இந்த குஞ்சு வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்று அதில் இருந்து பறவைகள் பரம்பரை உருவாகி இருக்கலாம். எனவே, பறவைதான் முதல்.

## iV. பூமியின் ஆழம்

பூமியின் மேற்குப் பகுதியில் இருந்து மையம் வரை உள்ள ஆழம் 4000 மைல். பெட்ரோலியம் உலோகத்தாதுகளுக்காக பூமியில் சுமார் 5 மைல் ஆழம் வரை தோண்டிப் பார்க்கப் பட்டிருக்கிறது. அதற்குக் கீழ் கடுமையான வெப்பம் இருப்பதால் மனிதனால் தொடர்ந்து தோண்டிக் கொண்டு போக முடியாது போய்விட்டது.

இப்படித் தோண்டிக் கொண்டு போனால், என்று கற்பனை செய்தால் இந்தியாவில் குழிதோண்டி உள்ளே போகும் மனிதன் அமெரிக்காவால் வெளியே வருவான்.

## V. வெள்ளி இடைமறிப்பு

சூரியன், சந்திரன், பூமி ஆகியவை ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் அபூர்வ நிகழ்வு 2012 ஜுன் மத்தியில் நடைபெற்றது.

சராசரி 100 ஆண்டுகளக்கு ஒரு முறையே இது நிகழும் இதை வெள்ளி இடைமறிப்பு என்று கூறுவர்.

## Vi. மனிதர்கள் வாழ முடியாதவாறு பூமியில் வெப்பம் அதிகரிக்கிறது

பூமி தொடர்ந்து வெப்பமாகி வருகிறது. இது பற்றி அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார்கள்.

அடுத்த 300 ஆண்டுகளில் இப்பொழுது இருப்பதை விட 53 டிகிரி பரன்னைட் அளவிற்கு வெப்பம் உயர்ந்து விடும் என அவர்கள் கூறுகிறார்கள்.

## vii. வேற்று கிரக வாசிகளுடன் தொடர்பு

இன்னும் 12 வருடங்களுக்குள் வேற்றுக் கிரகத்தில் வாழும் உயிர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். இது உலகில் பிரமாண்டமான வானொலி தொலைக்காட்சியின் உதவியுடன் சாத்தியமாகும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இது 2024ஆம் ஆண்டு சாத்தியமாகுமென விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். 100 ஒளியாண்டுகளுக்கு முன் நாகரிகம் ஒன்று இருக்குமானால் (உயிர் வாழ்வு) இந்த பிரமாண்டமான வானொலித் தொலைக்காட்சியின் உதவியுடன் பூமிக்கு அப்பால் உள்ள உயிர் வாழ்வின் சாத்தியம் குறித்த விடயங்களை ஆய்வாளர்கட்கு இந்தத் தொலைக்காட்சி வழங்கும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## viii. பூமியில் ஒட்சிசன் தோன்றிய காலம்

உலகில் ஒட்சிசன் தோன்றி 232 கோடி ஆண்டுகளை தாண்டியுள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பூமியின் தட்ப வெட்ப நிலை மற்றும் புவியியல் அமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் 248 கோடி ஆண்டில் இருந்து 232 கோடி ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் ஒட்சிசன் தோன்றியுள்ளது. எனவே இந்த கால கட்டத்தில்தான் உயிரினங்களும் பூமியில் தோன்றி இருக்கும் எனக் கருதப்படுகிறது.

## ix. பூமிக்கு வெளியே

பால் வெளி அண்டத்தில் நமது பூமியின் அளவுடைய 1700 கோடி கிரகங்கள் இருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக விண்வெளியியலாளர்கள் கருதுகின்றனர்.

## x. டைட்டனில் நைல் நதி போன்ற பாரிய நதி

சனிக்கிரகத்தின் துணைக் கோளான டைட்டனில் நைல் நதி போன்ற பாரிய நதி ஒன்று ஓடுவதை சனி மற்றும் அதன் துணைக்கோள்களை சுற்றி வரும் கஸ்ஸினி விண்கலம் அவதானித்துள்ளது.

பூமிக்கு அப்பால் இவ்வாறான ஒரு நதி கட்டமைப்பொன்று அவதானிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும் என வானவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். டைட்டானின் வடதுருவத்தில் சுமார் 400 கிலோ மீட்டருக்கு ஓடும் திரவ நதியையே நாசாவினால் அனுப்பப்பட்ட கஸ்ஸினி விண்கலம் அவதானித்துள்ளது.

பூமிக்கு அப்பால் திரவப் பொருளில் இயக்கம் கொண்ட பகுதியை டைட்டான் மாத்திரமே அவதானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இழை 2**

## இதுவம் விஞ்ஞானக் கருத்துக்களே

i. ரெலிபதி (Telepathy)
ii. கிளைர்வையன்சி (Clairvoyance )
iii. பேசோகினிஸ் (Pycho Kinesis)
vi. பிறிகோகினிசன் (Precognition)
v. E.S.P (Extra sensory Perception)
vi. சைக்கோலஜி (Psycology)
vii. நியூமோரோலஜி (numerology)
viii. சைக்கோ பார்மோலோஜி
ix. முதமையை கட்டுப்படுத்தல் (gerontology)
x. மனம் பாதிக்கப்பட்டு (Psychosomatic) ஜுரம் வந்தது
மனம் சீரடைந்து (Sovato psychology ) உடல் நலமடைந்தது

## i. ரெலிப்பதி (Telepathy) இரத்த உறவு

ஒருவரை ஒருவர் மனதார கள்ளமில்லாது நேசிக்கும் போது அல்லது இரத்த உறவாக இருந்தால் இருவருக்குமிடையே ஒரு தொடர்பு இருக்கும். இத்தொடர்பு வெகு தூரத்தில் இருந்தாலும் சம்பவங்களிடையே நெருக்கமேற்படும். உதாரணமாக தகப்பன் கல்முனையிலும் மகன் கொழும்பிலும் இருந்தாலும் தகப்பன் தீடீரென இறந்து விட்டால் மகனுக்கு இந்த நிகழ்வு உடன் அதே நிமிடம் உணர்த்தப்படும்.

எப்படி எனின் காலை வேளை 9 மணியாக இருந்தாலும் நீட்டி நிமிர்ந்து படுக்க வேண்டும் போல் இருக்கும் அல்லது ஊருக்கு போக வேண்டும் போல் இருக்கும்.

அல்லது கையில் இருந்து கிளாஸ் போன்ற பொருட்கள் விழுந்து உடையும் அல்லது தகப்பனுக்கு ஏதோ நடப்பது போன்று உணர்வு உள்ளத்தில் ஏற்படும். இப்படியான நிகழ்வினை ரெலிப்பதி என அழைக்கிறார்கள்.

## ii. கிளைர்வையன்சி (Elairvoyance) ஞானம்

அறிவுக்கு அப்பால் சென்று அறிந்து கொள்வது கிளர்வையன்சி எனப்படும். இதனை ஞானம் என்றும் அழைக்கலாம். அல்லது தீர்க்க தரிசனம் என்றும் கூறலாம், அல்லது செய்தி என்றும் கூறலாம்.

## iii. Psycho Kinesis – பேசோகினிஸ் - மனோசக்தி

ஒரு பொருளை மனோ சக்தியால் நகரச் செய்வது "பேசோகினில்" Payecho Kimesis) என்றழைக்கப்படுகிறது.

ஆனால் அப்படி ஒரு சக்தி இல்லை எனச் சில பகுத்தறிவு வாதிகள் கூறுகின்றனர். உதாரணத்திற்கு டாக்டர் ஆபிரஹாம் கோவூர் போன்றோரைக் கூற முடியும்.

## iV. Precogrition – பிறிகோஜினேசன் - தீர்க்க தரிசனம்

பின்னால் நடக்கப் போவதை முன்னால் சொல்வது. இதுவும் ஒரு வகையில் தீர்க்க தரிசனமே. சாஸ்திரிகள், சாதகம் பார்ப்பவர்கள், குறி சொல்பவர்கள் எம்மை நம்ப வைப்பதும் உண்டு. சில வேளைகளில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடப்பதும் உண்டு. தீர்க்க தரிசனமாக அரசியல் வாதிகள் கூறியது நடந்தும் இருக்கின்றன.

## V. E.S.P (Extra sensory Perception) ஆன்மா

மனமென்பது மனிதனுடைய சக்தியை பன்மடக்காகப் பெருக்கிக் காட்டும் ஆற்றல் படைத்தது.

இந்த சக்தியை வளர்த்துக் கொள்ளத் தெரிந்தவர்களே வாழ்க்கையின் மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள். சாதனைகளைப் புரிந்துள்ளார்கள்.

இதனை E.S.P. என்று சுருக்கமாகச் சொல்லுவார்கள். இதற்கு Extra Sensory Perception என்று பெயர். ஐம்புலன்களையும் பயன்படுத்தாமலேயே எதிர் காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதை அறிந்து சொல்லும் ஆற்றலே இது.

இந்த ஆற்றல் மனதின் நூதனமான ஆற்றல் என்பதில் சந்தேகமே இல்லை.

அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம்வரை பௌதீக உடலுக்கப்பால் "ஆன்மா" என்ற ஒன்றைப் பற்றி குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள்.

இதனை ஆத்மா அல்லது ஆன்மா என்றும் கூறியுள்ளார்கள்.

இந்த ஆன்மாபற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனால் ஆன்மா என்பது என்ன என்பது பற்றி விஞ்ஞான ரீதிபதியாக நிருபிக்ப்படாமல் இருக்கலாம். ஆயினும் அப்படி ஏதோ ஒன்று இருப்பதாக ஏராளமான மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.

## vi. சைக்கோலஜி (Psychology) உளவியல்

இதனை உளவியல் என்று தமிழில் அழைக்கலாம். மனிதன் செய்யும் எல்லாக் காரியத்திற்கும் அவனது உள்ளமே காரணம் என்கிறார் சிக்மன் பிறைட் எனும் உளவியல்வாதி. இதனைக் கல்வி கற்கும் மாணவர்களின் உயர்ச்சிக்காகப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளார்கள்.

ஒரு மாணவன் கல்வியில் பின்தங்கி நிற்கிறான் என்றால் அவனது உளவியலோடு சம்பந்தமுடைய காரணங்களின் தாக்கமே இது என்று கூறுகிறார்கள் உளவியலாளர்கள்.

## vii. நியூமோறோலஜி (Numerology) எண் சாஸ்திரம்

மகான் மாகஸ்முல்லர் என்பவர் எண்கள் முதன் முதலாக அரேபிய நாட்டில்தான் தோன்றியது எனக் கூறியிருக்கிறார். எண்கள் தோன்றியது சுமார் 5500 ஆண்டுகளக்கு முன் என சில நூல்கள் தெரிவிக்கின்றன. அரபியில் இதனை "நுஜூம்" என அழைக்கின்றனர்.

நியுமோறோலஜி இலக்கங்களைக் கூட்டிக் கழித்து கணக்கிட்டு பலன் சொல்லுவது என்று பொருள். ஒருவன் பிறந்த நேரம் காலம் என்பனவே அவனது வாழ்க்கையில் ஆட்சி செய்கிறது என்பதுதே நியுமோறோலஜி யாளர்களின் கருத்தாகும்.

## ix. முதுமையைக் கட்டுப்படுத்தல் (Geronotology)

முதுமையைக் கட்டுப்படுத்த இரண்டு வழிகள் கூறுகிறார்கள்.

அ) ஜீன்சை மாற்றுதல்

ஆ) இயற்கைபோடு வாழ்தல்

### அ) ஜீன்சை மாற்றுதல்

ஜீன்சை மாற்றுதல் என்றால் இருபது வருடத்திற்கு ஒருதரம் ஜீன்சை புதுப்பித்தல் என்பது பொருள். உதாரணமாக 80 வயதுடைய ஒருவர் உடலில் புதிய ஜீன்சை ஏற்றிக் கொண்டால் மீண்டும் அவர் அறுபது வயதுடையவராக இயங்கத் தொடங்குவார். அறுபது வயதில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தினால் அவர் 40 வயதுடையவர் போன்று இயங்கத் தொடங்குவார்.

### ஆ) .இயற்கையோடு வாழ்தல்

அறுபத்தி யொரு வயதான ஒருவர் இளமையோடு வாழ விரும்பினால் அவர் ஒரு வயதுக் குழந்தை என நினைத்துக் கொண்டு ஒரு வயதுக் குழந்தை போல் வாழ்தல். ஒரு வயதுக் குழந்தை பால் மட்டும்தான் குடிக்கும். பால் மட்டுமே அவர் அருந்த வேண்டும்.

அறுபத்தி மூன்று வயதில் அவர் மூன்று வயதுக் குழந்தை யென நினைத்துக் கொண்டு மூன்று வயதுக் குழந்தை சாப்பிடும் உணவுகளையே உண்ண வேண்டும்.

அத்தோடு இயற்கையான வாழ்க்கையையே பின்பற்ற வேண்டும். பிரயாணம் அதிகமாக நடையாகவே இருக்க வேண்டும். பால் பழங்களே சாப்பாடாக இருக்க வேண்டும்.

**X. பாதிக்கப்பட்டு ஜுரம் வந்தது (Psychso Matic)**
**மனம் சீரடைந்தது (Soma to Psychic)**
**ஜுரம் இல்லாது போய்விட்டது.**
**இது மனநிலையோடு சம்பந்தமுடையது.**

இழை 3

## ஆறறிவில்லாத எமது விஞ்ஞானிகள்

### i. தவளைகள்

பூகம்பத்தை முன் கூட்டியே அறியக் கூடியது. பூகம்பம் வருவதை ஐந்து நாட்களுக்கு முன் தவளையால் அறிந்து கொள்ள முடியும் என்று பிரான்ஸ் நாட்டில் செய்யப்பட்ட ஆய்வுகள் கூறுகின்றன. இத்தாலியின் "லாகுய்யா" நகரில் 2010ஆம் ஆண்டு ஏப்ரலில் ஏற்பட்ட பூகம்பத்தின் போது 500 பேர் பலியாகினர். 60000 பேர் தங்களின் உடமைகளையும் வீடுகளையும் இழந்து தவித்தனர். இப்பகுதியில் பூகம்பத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்புவரை வசித்த தவளைகள் பூகம்பத்தின் போது ஒன்று கூட அங்கு இல்லாமல் வேறு இடத்திற்கு சென்று விட்டதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

பூமியின் உள்ளே இருந்து பூகம்பத்திற்கு முன் வெளிவரும் ஒருவித வாய்வுத் துகள்களை வைத்து ஆண் தவளைகள் பூகம்பம் வரப்போவதை அறிய முடியும் என்று கூறுகிறது ஆய்வுகள்.

இத்தாலியில் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி நில நடுக்கம் ஏற்பட்டது. அப்போது சான்ரா பினோவில் உள்ள ஏரியில் வாழும் தவளைகள் பூகம்பம் ஏற்படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்பே தவளைகளின் நடவடிக்கையில் மாற்றம் தெரிந்தது. 5 நாட்களுக்கு முன்பு 96விகித ஆண் தவளைகள் அங்கிருந்து வெளியேறி விட்டன.

மூன்று நாட்களுக்கு முன்பு அனைத்துத் தவளைகளும் வெளியேறி விட்டன. பின்பு பூகம்பம் முடிந்து ஆறு நாட்களின் பின்பு அதே ஏரிக்கு திரும்பி வந்து விட்டன.

ஆய்வு செய்து இதனை இங்கிலாந்து மில்டன் கெய்னஸ், பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானி ராஜல் கிராண்ட் கண்டு பிடித்துள்ளார்.

### ii. ஆந்தை

மனிதனின் இறப்பை முன்கூட்டியே அறியக் கூடியது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதாவது மனிதன் இறப்பதற்கு முன்பே அவனது செல்கள் இறந்து கொண்டிருக்கின்றன. இந்தச் செல்களின் இறப்பை வழியினூடாக அறியக் கூடியது ஆந்தை. அதனால் இறப்பு நடைபெறப் போகும் இடத்திற்கு பக்கத்தில் வந்து இருந்து கத்தும் தன்மை கொண்டது ஆந்தை. நாயும் இவ்வாறு அறியக் கூடியதே.

### iii. கோழி

கோழிகளும் பூகம்பம் வருவதை முன்கூட்டியே அறியும் தன்மையுள்ளன. கோழிகள் பூமியில் இரை தேடுவதை நிறுத்திக் கொண்டு உயரங்களில் அதாவது வீட்டுக் கூரையில், மரத்தில், வேலிகளில் ஏறி நின்று கொள்ளும். இப்படிச் செய்தால் பூமியில் ஏதோ ஒரு நிகழ்வு நடைபெறப் போகிறது என்று அர்த்தம். அதிலும் குறிப்பாக பூகம்பம் ஏற்படப்போகிறது என்பது அர்த்தம்.

கோழிகள் அதிக உணர்வு பூர்வமானவை. மிகுந்த பாசம் கொண்டவை துயர் ஏற்படும் நேரத்தில் வருந்தும். குணமுடையவை இந்த வருத்தங்களை மாற்றங்கள் மூலம் வெளிப்படுத்தும் தன்மையுள்ளது.

### iv. எலி

எலியும் இவ்வாறே முன் கூட்டியே அறிந்து கொண்டு பொந்துகளை விட்டும் நீங்கி உயரங்களில் வசிக்கத் தொடங்கி விடும்.

### v. மயில்

மயில் தோகை விரித்தாடினால் மழை வரப்போகிறது என்று பொருள்.

### vi. நாய், பூனை

மனிதன் இறக்கப் போகிறான் என்றால் அவனது செல்கள் அவன் இறப்பதற்கு முன்பே இறக்கத் தொடங்கி விடும். இந்த செல்களின் இறப்பு மணத்தை நாய்கள் உணர்ந்து கொண்டு ஊளையிடத் தொடங்கி விடும்.

### பூனை

மகிழ்ச்சியாகத் துள்ளிக் குதித்து ஓடி ஆடினால், அதன் மயிர்கள் புடைத்துக் கொண்டு நின்றால், கண்களை அகல விரித்து அச்சம் மேலிட்டுக் காணப்பட்டால் பலத்த காற்று வீசும் அல்லது புயல் வரப் போகிறது என்று அர்த்தம். இன்று கூட கப்பல் பிரயாணத்தின் போது கப்பலில் மாலுமிகள் ஒரு பூனையை அழைத்துச் செல்வதன் நோக்கம் இதுதான் என்று புரிகிறதல்லவா?

## vii. செண்பகம்

செண்பகம் ஊருக்குள் மனிதர்களிடையே வாழ்வது குறைவு. புழு பூச்சிகளை உண்டு வாழும். இது ஊருக்குள் வந்து மரத்தில் இருந்து கொண்டு அல்லது பூமியில் நடமாடியவாறு கத்தினால் மழை வரப் போகிறது, வெள்ளம் வரப் போகிறது என்று பொருளாகும்.

## viii. நீர்ப்பாம்பு

சுனாமி வருவதை நீர்ப்பாம்பு முன் கூட்டியே அறிந்து கொண்டு கடலில் இருந்து வாவிகளுக்குள் வந்து சேரும். வாவிகளுக்குள் இருந்து கரைகளில் உள்ள அதர்களுக்குள் அல்லது கரையை அண்டிய பகுதிகளில் கரை ஒதுங்கும். கிழக்கிலே சுனாமியின் போது இவ்வாறு மட்டக்களப்பு வாவியில் இரண்டு மூன்ற நாளைக்கு முன்பே நீர்ப்பாம்புகளும் மீன்களும் கரையொதுங்கத் தொடங்கிவிட்டன.

## ix. பூச்சிகள்

பூச்சிகளும் மழைவருவதை அறிந்து கொள்ளும் தன்மையுள்ளது.

பூச்சிகள் ஆகாயத்தை நோக்கி மேலே பறந்தால் மழை வரப்போகிறது என்பது பொருள். மழை மேகத்திற்கு மேல் செல்ல அல்லது மழை மேகம் இல்லாத பகுதிக்குச் செல்லவே பூச்சிகள் மேலெழுந்து பறக்கின்றன.

காற்று வேகமாக வீசுவது பூச்சிகள் மேல் எழுந்து பறக்கக் காரணமாகும்.

## x. எறும்பு, நத்தை

எறும்புகள் சாரை சாரியாக உணவுகளை அல்லது முட்டைகளை எடுத்துக் கொண்டு புற்றினுள் சென்றால் மழை வரப் போகிறது என்பது பொருள்.

மழைகாலங்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்கவே இந்த முன் ஏற்பாடு. அத்தோடு மழைகாலங்களில் எறும்புகளால் வெளியே ஊர்ந்து செல்லவும் முடியாதல்லவா? அத்தோடு எறும்புகளுக்கு மழை, புயல் என்பவற்றையும் அறியும் ஆற்றல் உண்டு.

## நத்தை

வானநிலை நிலவரத்தை முன்கூட்டியே தெரிவிப்பதில் நத்தைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என லண்டன் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். லண்டன் யார்க் பல்கலைக்கழக ஆய்வாளர் ஆன்றிகர்லோ இது குறித்து கூறியதாவது.

ஒரு தாவரத்தையோ அல்லது கம்பத்தையோ நோக்கி நத்தை நகர்கிறது என்றால் நிச்சயமாக மழை வரப்போகிறது என்று அர்த்தம்.

நிலத்தில் வாழும் நத்தைகள் மனிதர்களின் குணாதிசயங்களைத் தெரிவிப்பதாகவும் உள்ளன.

ஸ்பெயின் மற்றும் இத்தாலியில் நத்தையினை பல்வேறு கால கட்டங்களில் ஆய்வு செய்ததில் இவைகள் தெரிய வந்துள்ளன.

## இழை 4

## முன்னோர் சொன்ன விஞ்ஞானக் கருத்துக்கள்

i. குளித்திப் பூச்சியும் கண்பார்வையும்

ii. அட்டை கடித்தல்

iii. உணவை வெளியே எடுத்துச் செல்லும்போது

vi. திரிசங்கு சொர்க்கம்

v. பால் மரங்கள்

vi. புளிய மரம்

vii. கத்தரிக்காயும் பற்சூத்தையும்

viii. வேப்பமரம்

ix. இரவில் முட்டை கொடுத்தல்

x. ஏன் வலக்காலை முன் வைத்துச் செல்ல வேண்டும்

### i. குளித்திப்பூச்சி

(கறுத்த எறும்பு) தேநீரோடு சேர்ந்து வயிற்றுக்குள் போய்விட்டால் கண்பார்வை வெளிச்சமாகும் என்று அன்று எமது முன்னோர் சொல்லி வைத்தனர். இன்று விஞ்ஞானிகள் இதனை உண்மையென நிரூபித்துள்ளார்கள். இந்தக் கறுத்த எறும்பில் உள்ள அமிலம் கண்பார்வைக்கு நல்லது என்கிறார்கள்.

கண்களுக்கு வரும் நோய்களைத் தடுக்கக் கூடிய தேவையான சக்தி வாய்ந்த திரவம் குளித்திப் பூச்சி எனப்படும். கறுத்த எறும்பின் உடலில் உற்பத்தியாகிறது எனக் கண்டு பிடித்துள்ளார்கள் விஞ்ஞானிகள். எறும்பிற்கு ஃபார்மிகா (Formica) என்று இலத்தீன் மொழியில் பெயர். இதனை ஆதாரமாகக் கொண்டு இந்த எறும்பின் உடலில் உள்ள திரவத்திற்கும் .பார்மிக்அமிலம் (Formic Acid) என்ற பெயர் சூட்டியுள்ளார்கள்.

மிகப் பழங்காலத்தில் இந்த கறுத்த எறும்புகளைக் கொண்டே இத்திரவத்தைப் பெற்றார்கள். ஆனால்,இப்படியெல்லாம் செய்யாமல் இந்தியாவில் இரசாயண முறைகளில் எறும்புகளைக் கொல்லாமல் இந்த அமிலத்தைப் பெற்று குறைந்த விலையில் விற்பனை செய்கிறார்கள்.

## ii. அட்டை கடித்தல்

எமது முன்னோர் அட்டை கடிப்பது நல்லது என்பார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம் அட்டை மனிதனில் உள்ள வாதநீரை உறிஞ்சிக் குடித்துவிடும் என்பதாகும்.

இதனை இன்றைய விஞ்ஞானிகள் உண்மையென்று ஏற்றுள்ளார்கள்.

## iii. வீட்டில் இருந்து சமைத்த சோறு கறியினை வெளியே எடுத்து செல்லும் போது கரித்துண்டு ஒன்றினை அவற்றின் உள்ளே வைத்து எடுத்துச் செல்வார்கள்.

இது எமது முன்னோர்களின் வழக்கம்.

ஏன் இப்படி செய்தார்கள் என்பது அவர்களிடம் கேட்டால் பேய் பிசாசு பார்வை படாமல் இருக்க என்பார்கள். இதன் உண்மையான விஞ்ஞானக் கருத்து ஒன்று உள்ளது. அது வெளியே உள்ள கரியமல வாயு உணவில் வந்தடையாமல் கரி உள்வாங்கிக் கொள்ளும்.

## iv. திரிசங்கு சொர்க்கம்

மேலே போக முடியாமலும் கீழே வர முடியாமலும் உள்ள ஒரு நிலையை எமது முன்னோர்கள் ''திரிசங்கு சொர்க்கம்'' என அழைப்பர்.

''திரிசங்கு'' என்பது ஒரு தவசியின் பெயர்.

இவர் நிஜ உடம்போடு சுவர்க்கம் போக எத்தனித்தார். இதற்கு விசுவாமித்திரர் உதவினார். ஆனால், தேவர்கள் மானிடன் நிஜ உடம்போடு சுவர்க்கம் வருவதை விரும்பவில்லை. இந்தப் போட்டியில் திரிசங்கு பூமியிலும் இல்லாமல் சுவர்க்கத்திலும் இல்லாமல் நடுவில் நின்றான். இதனைக் குறிக்கவே திரிசங்கு சொர்க்கம் என்ற வசனம் பாவனையில் உள்ளது.

இப்படியான மேலே போகவும் முடியாமல் கீழே வரவும் முடியாத ஒரு இடம் விண்வெளியில் உண்டு என்கிறார்கள். அதாவது பூமியில் இருந்து சந்திரனுக்குப் போகும் போது இடைவெளியில் "வாக்குவம்" எனும் ஒரு சூனியப் பகுதி இருக்கிறது. இங்கே காற்று கிடையாது. இந்த இடத்தில் எதைப் போட்டாலும் அது அப்படியே மேலும் போகாமல் கீழும் போகாமல் அப்படியே கிடக்கும். இந்த இடத்தைத்தான் திரிசங்கு போய்ச் சேர்ந்திருக்க வேண்டும்.

## V. வீட்டின் முற்றத்தில் ஏன் பால் மரங்களை நட்டக்கூடாது

வீட்டிற்குள் புகுவதும் வீட்டின் உள்ளிருந்து வெளியே வருவதும் வீட்டின் முற்றத்தினூடாகவே நடைபெறும்.

வீட்டில் உள்ள பிள்ளைகள் கூட முற்றத்திலேயே விளையாடுவார்கள்.

இப்படிப் போகும் போதும் வரும் போதும் முற்றத்திலே உள்ள பால் மரங்கள் சிலவேளை உரஞ்சலாம். அல்லது தாக்கப் படலாம் அல்லது அதன் கிளைகள் இலைகள் ஒடியலாம். இப்படி நடைபெறும் போது அதன் பால் எப்படியும் எமது தேகத்தில் அதுவும் குறிப்பாக கண்ணில் பட்டுவிட்டால் விபரீதம் எற்படலாம். அதிலும் குழந்தைகள் உள்ள வீட்டில் இது நடக்க வாய்ப்புகள் அதிகம்.

இஃதே வேளை புதிதாக வீட்டிற்கு வருவோருக்கு இம்மரம் இடைஞ்சலாக இருக்கலாம். எனவேதான் வீட்டின் முற்றத்தில் பால் மரங்கள் நடுவது கூடாது எனக் கூறியுள்ளார்கள்.

## Vi. புளிய மரத்தின் கீழ் படுக்கக் கூடாது பேய் வரும்

புளிய மரத்தின் கீழ் படுக்கக் கூடாது பேய் வரும் என்பார்கள். இதற்குக் காரணம் என்னவென்று எமது முன்னோர் சொன்னதில்லை. ஆனால், இன்றைய விஞ்ஞானிகள் புளிய மரம் கரிய மலவாயுவை இரவும் பகலும் வெளியிடுவதாகச் கூறியுள்ளாரகள். மனிதன் வெளிவிடுவது கரிமல வாயு. சுவாசிப்பது பிராணவாயு.

எனவேதான் புளியமரத்தின் கீழே படுக்கவோ இருக்கவோ கூடாது என்று எமது முன்னோர் கூறியள்ளார்கள். இதனால்தான் போலும் குடியிருக்கும் இடத்தில் வீட்டின் அருகே புளியமரம் கூடாது என்று கூறியுள்ளார்கள்.

## vii. பிள்ளைகள் ஏன் வழுதலங்காயை (கத்தரிக்காய்) கடிக்கக்கூடாது

எமது முன்னோர்கள் பிள்ளைகள் வழுதலங்காயைக் கடிக்கக் கூடாது என்று கண்டிப்பாக இருப்பார்கள். காரணம் என்ன என்று கேட்டால் பல் சூத்தையாகிவிடும் என்பார்கள். இது உண்மையென்று இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது. கத்திரிக்காயில் உள்ள அமிலம் பல்லிற் பட்டு பல் பழுப்பு நிறமாகி விடும். இதனை எப்படியும் போக்க முடியாது அதனால்தான் அப்படி கூறியுள்ளார்கள்.

இதுபற்றி 05.01.1989ஆம் ஆண்டு குமுதத்தில் ஒரு செய்தி எழுதப்பட்டிருந்தது. (வழுதுலங்காய் என்பது சங்ககாலச் சொல் இச்சொல்லே இன்றும் கிழக்குமாகாணத்தில் வழக்கில் உள்ளது)

## viii. வேப்பமரம்

இரவிலும், பகலிலும் பிராணவாயுவை வெளியிடும் என்பதால் இம்மரம் மனிதனுக்கு உதவும் மரம் எனக் கொள்ளப்படுகிறது.

இது மட்டுமல்ல இது தொற்று நீக்கியும் கூட. எந்தப் பூச்சியும் புழுவும் இம்மரத்தை அரிக்காது அதனால் இந்த மரத்தால் செய்யும் பெட்டியுள் இருக்கும் பொருட்கள் பாதுகாப்பாக இருக்கும் இதனை எம்முன்னோர் பேயோட்டி மரம் என்று கூறினர்.

## ix. இரவில் ஏன் முட்டை கொடுக்கக் கூடாது

அ) முட்டை என்பது உயிர் உள்ள ஒரு பண்டம்

ஆ) இதை இரவில் கொடுக்கும் போது தட்டுப்பட்டு உடைந்தால் உயிர்க்கொலை. இது ஒரு பண்டமாற்றுப் பொருள். இதை கொடுத்து, வேறு ஒரு தேவையான பொருளை வாங்கிக் கொள்ளலாம். பணத்தைப் போன்று உதவக் கூடியது.

இ) ரெடிமெட் கறி இரவில் திடீரென விருந்தினர்கள் யாரும் வந்து விட்டால் இது கறியாக்க உதவும். இது ஒரு ஒளடதம் இரவில் இருமல், நெஞ்சுவலி ஏற்பட்டால் உதவக் கூடியது.

## x. ஏன் வலக்காலை முன்வைத்துச் செல்ல வேண்டும்

பூமி இடமிருந்து வலமாக சுற்றுகிறது. அதனால் அதனோடு சேர்ந்து போவது இலகுவாக இருக்கும் என்பதினாலேயே வலது காலை வைத்துச் செல்ல வேண்டும் என்கிறார்கள்.

## இழை 5

## விஞ்ஞானத்திற்கு சவால் விடும் சம்பவங்கள்

i. பறக்கும் தட்டு
ii. ரேகை சாஸ்த்திரம்
iii. குண்டலிய சக்தி
vi. மனோ சக்தி
v. பனி மனிதன்
vi. கடலுக்கடியில்
vii. பெர்மூடா முக்கோணம்
viii. கூடு விட்டு கூடு பாய்தல்
ix. இரச வாதம்
x. முளிவிசளம்

## i. பறக்கும் தட்டு

புவியில் வாழ்வதைப் போன்று வேறு கிரகங்களில் மனிதர்கள் வாழ்கிறார்களா? என்ற சந்தேகம் மனிதனைத் தொடர்ந்து வாட்டி வருகிறது.

இந்தச் சந்தேகத்தை வலுவூட்டும் நடவடிக்கையாகவே பறக்கும் தட்டு விடயம் இடம்பெற்று வருகிறது.

விஞ்ஞானம் இவ்வளவு தூரம் வளர்ந்தும் கூடப் பறக்கும் தட்டு விடயம் இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளது.

ஆதர்சி கிளாக் போன்றோர் இது பொய்யானதொரு தகவல் மட்டுமல்ல வெறும் கற்பனை என்று கூறியிருந்தார்கள். ஆனால், அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் உண்மையெனச் சான்று பகரக்கூடியதாக உள்ளன.

## X. ஏன் வலக்காலை முன்வைத்துச் செல்ல வேண்டும்

பூமி இடமிருந்து வலமாக சுற்றுகிறது. அதனால் அதனோடு சேர்ந்து போவது இலகுவாக இருக்கும் என்பதினாலேயே வலது காலை வைத்துச் செல்ல வேண்டும் என்கிறார்கள்.

**இழை 5**

## விஞ்ஞானத்திற்கு சவால் விடும் சம்பவங்கள்

i. பறக்கும் தட்டு
ii. ரேகை சாஸ்த்திரம்
iii. குண்டலிய சக்தி
vi. மனோ சக்தி
v. பனி மனிதன்
vi. கடலுக்கடியில்
vii. பெர்மூடா முக்கோணம்
viii. கூடு விட்டு கூடு பாய்தல்
ix. இரச வாதம்
x. முளிவிசளம்

## i. பறக்கும் தட்டு

புவியில் வாழ்வதைப் போன்று வேறு கிரகங்களில் மனிதர்கள் வாழ்கிறார்களா? என்ற சந்தேகம் மனிதனைத் தொடர்ந்து வாட்டி வருகிறது.

இந்தச் சந்தேகத்தை வலுவூட்டும் நடவடிக்கையாகவே பறக்கும் தட்டு விடயம் இடம்பெற்று வருகிறது.

விஞ்ஞானம் இவ்வளவு தூரம் வளர்ந்தும் கூடப் பறக்கும் தட்டு விடயம் இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளது.

ஆதர்சி கிளாக் போன்றோர் இது பொய்யானதொரு தகவல் மட்டுமல்ல வெறும் கற்பனை என்று கூறியிருந்தார்கள். ஆனால், அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் உண்மையெனச் சான்று பகரக்கூடியதாக உள்ளன.

உதாரணமாக இங்கிலாந்தில் வெஸ்ட் மிட்லான்ஸ் பகுதியில் வேற்றுக் கிரக பறக்கும் தட்டினை ஒத்த விண்கலம் ஒன்றை இரண்டு யுத்த விமானங்கள் துரத்திச் சென்ற காட்சியை பொதுமக்களின் கமராக்கள் பதிவு செய்துள்ளன.

மிட்லான்ஸில் இருந்து தொடர்ந்து 30 வினாடிகளுக்கு இக்காட்சிகள் படம் பிடிக்ப்பபட்டுள்ளன.

மேலும், பிரிட்டன் பாதுகாப்பு அமைப்பு பறக்கும் தட்டுச் சம்பந்தமாக தொடர்ந்து சேகரித்து வந்துள்ள இரகசிய அறிக்கைகளை அண்மையில் வெளியிட்டது.

சுமார் 6000 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை 1994 – 2000 வரையான காலப்பகுதியில் பறக்கும் தட்டுக்கள் குறித்து சேகரிக்கப்பட்ட குறிப்புக்களாகும்.

எத்தனையோ பேர் பறக்கும் தட்டுக்களை நேரில் கண்டதாக சத்தியம் செய்தாலும் இன்னும் ஆதார பூர்வமாக அதனை நிரூபிக்க முடியவில்லை என்பது பெரும் குறையாகும்.

## ii. கைரேகை சாஸ்திரம்

மனிதனின் கை ரேகைகள் அவன் கருவில் இருக்கும் போது கைகளை பொத்திக் கொண்டிருப்பதால் அதில் ஏற்பட்ட மடிப்புகளின் அடையாளங்களே ரேகைகள் என மானிட இயலாளர்கள் கூறுகிறார்கள். இந்த ரேகைகள் ஆறு மாதத்திற்கு ஒரு தடைவை மாறும் தன்மையுள்ளது என்பதுவும் அவர்களது கருத்தாகும்.

இதே வேளை மனிதனின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் தன்மையுள்ளது ரேகைகள் என்ற கருத்தும் உண்டு. ஒரு மனிதனின் கைகளில் உள்ள ரேகைகளைக் கொண்டு அவனது நிகழ்கால, எதிர்கால வாழ்வைக் கூறலாம் என்பது எந்த அளவு உண்மை என்று கூற முடியாதுள்ளது.

இஃதேவேளை ஒருவனது தலை விதி அவனது உள்ளங்கையில் குறுக்கும் நெடுக்குமாக ஓடும் ரேகைகளில் தங்கியுள்ளது என ரேகை பற்றி பல ஆண்டுகள் நுணுக்கமாக ஆராய்ந்து எழுதிய "கை சோ" எனும் இங்கிலிஷ் நாட்டு மேதை கூறியுள்ளார்.

கைரேகையைக் கொண்டு ஒருவனது எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியும் எனச் சாஸ்திரங்கள் கூறினாலும் சில விஞ்ஞானிகள் அவை பிள்ளைகள் கருவாக

இருக்கும் போது கைகள் பொத்தப்பட்டிருப்பதால் ஏற்பட்ட மடிப்புக்களே என்பதால் எதிர் காலத்தை எவ்வாறு கணிக் கமுடியும் எனக் கூறுகிறார்கள். ஆனால், பெரு விரலின் அதிசயத்தை விஞ்ஞானிகளே ஆவென்று வாய் பிளந்து ஆச்சரியப் படுகின்றனர்.

உடலில் உள்ள அவயவங்களுக்கு தனித்தனி கேந்திர ஸ்தானங்கள் மூளையில் (Brain) பரிணமித்துள்ளன.

இதன் பிரகாரம் கைப்பெருவிரலுக்கு தனிப்பட்ட கேந்திர நிலையம் அமையப் பட்டுள்ளதனால் பெருவிரலுக்கு எவ்வளவு மகிமை என்பது தெளிவாகின்றது.

மனிதனுடைய விரல்களுள் பெருவிரலானது (Thump) உன்னத ஸ்தானத்தை வகிக்கின்றது. இது இல்லாவிட்டால் எழுதுவதற்குச் சிரமப் படவேண்டியிருக்கும். உணவு உண்ணும் போதும் பெருவிரலே உறுதுணை. பெருவிரல் சாஸ்திரத்தை பூதவியல் விஞ்ஞானம் என அழைக்கின்றனர்.

இரத்தோட்ட மண்டலத்தில் ஓடுகின்ற குருதியானது இடுப்பின் மேன்பகுதியில் உள்ள கைகளில் செல்லும் போது விரல் முனைவரை முட்டி மோதி விட்டுத்தான் சுற்று வட்டத்தைத் தொடர்கிறது. எனவேதான் பெருவிரல் நகத்திற்கும் பெருவிரலுக்கும் பெருவிரல் ரேகைக்கும் பெருமதிப்புக் கொடுக்கப்படுகின்றது.

பெருவிரலைக் கொண்டு ஒருவனுடைய மனோநிலையை அறியலாம். கிறிமினல் குற்றங்களைப்புரிந்து விட்டுத் தலைமறைவானவர்களை பெருவிரல் ரேகை கண்டு பிடிக்க உதவுகிறது. ஒருவரின் பெருவிரல் போல் மற்றவரின் பெருவிரல் ரேகை இருக்காது.

பெருவிரல் ரேகைகளைப் பற்றி நன்கு அறிந்து கொண்டால் உள்ளங்கை ரேகைகளை பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. பெருவிரலைக் கொண்டே ஒருவரது வாழ்க்கை நிலை உடல்நிலை என்பவற்றைக் கூற முடியும். பெருவிரலின் அமைப்பு தந்தை வழியைப் பின்பற்றி வருவதாகத் தெரிகிறது.

பெருவிரலின் நுனியை அமுத்தும்போது அது பின் நோக்கி வளைகிறது. சிலருக்கு வளையாது. அப்படி வளையாதிருப்பவர்கள் மனத்திடம் உள்ளவர்கள் மேற்கொள்ளும் எந்தக் காரியத்தையும் விடாப்பிடியாக நின்று முடிப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். பிடிவாதக் குணம், திட உடலமைப்புப் பெற்றவராக இருப்பார்.

வளையும் பெருவிரலையுடையவர்கள் சூழ்நிலைக்கு ஏற்றபடி நடக்கக் கூடியவராவார். தனக்கு ஒரு பணி செய்வது கஷ்டம் எனக் கண்டால் அதனைத் தந்திரமாகத் தட்டிக் கழித்துவிடுவார். பணச் செலவு பரவாயில்லை. கஷ்டம் இல்லாமல் காரியம் நடைபெற வேண்டும் என்னும் மனப்பான்மையுள்ளவர். தன் மனத்தில் தோன்றும் எந்தக் காரியத்தையும் பிறரிடம் ஒளிவு மறைவின்றிச் கூறிவிடுவார்.

## iii. குண்டலிய சக்தி

தாவரத்தின் வெளிச்ச சக்தி ஈர உணர்ச்சியோடு வளர்ந்து பருவத்தில் வித்தாக வந்து முடிவாகிறது.

அது போல எல்லா ஜீவராசிகளும் அனேக வித நிறமுடைய இரத்த உணர்ச்சியாக வளர்ந்து முடிவில் வித்தாகின்றது. மனித உடம்பில் 13, 18 வயதிற்கு மேல் விந்து விளைகிறது. உடம்பில் இரத்த நாடிகள் இருக்குமிடமெல்லாம் விந்து வியாபித்திருக்கிறது.

விந்துவின் உள்ளும்புறமும் இருக்கும் சக்தியே ''குண்டலினி'' யாகும்.

புறத்தே காணப்படும் உறுப்புக்களாலும் மெய், வாய், மூக்கு, செவி, கண் ஆகிய புலன்களின் வாயிலாகவும் அனுபவிக்கும் இன்பத்திற்கும் மேலானது. ஞான குருவின் தொடுகையால் பிடரி, நெற்றி, உச்சி ஆகிய உறுப்புகளில் ஏற்படும் உணர்ச்சியின் இன்பமாகிய பேரானந்தம்! பேரின்பத்தால் எல்லாம் அறியக்கூடிய அறிவுப் பெருக்கத்தின் முடிந்த விளக்கமே ஞானக்கண்.

ஒரு மனிதனின் கண், புருவம், இமை, பார்வை இவைகளை நோக்கி அம்மனிதனின் நோக்கம் செயல் நடைமுறை பாவனைகள் இன்ன இன்ன விதமாகத்தானிருக்கும் என்று யூகித்து நிர்ணயிக்கலாம்.

ஒருவன் தன் விருப்பத்தை தன் கண் பார்வை மூலம் சைகையால் மற்றவர்களுக்குத் தெரிவிக்கலாம்.

பசியோடிருக்கும் மனிதனும் பட்டினியாய் இருக்கும் வேங்கையும் எதிரெதிரே சந்தித்தால் இமையா வல்லமையுடைய கண்களே வெற்றி கொள்ளும்.

கூர்ந்த பார்வையால் எதிரியை வெற்றி கொள்ளலாம்.

அநேக வியாதிகளையும் தீர்க்கலாம். கண்களை இமையாதிருக்கச் சிறிது சிறிதாகப் பழகி வந்தால் நாளடைவில் இருதயமும் மூளையும் திடப்படும். வீண் பயம், மனச் சலனம் ஏற்படாது.

சூரியனையும், சூரிய கிரகணத்தையும் விளக்கு வெளிச்சத்தையும் வேறு பொருட்களையும் கூர்ந்து முறைத்துப் பார்ப்பது கூடாது. அவ்வாறு பார்ப்பதால் கண்களின் ஒளி குன்றி பார்வைக்குறைவு ஏற்படும்.

எமது இரண்டு கண்களுக்கும் மூக்கின் மேல் சுழி முனைக்கும் புருவங்களுக்கு மிடை நடுவே சிறு ஊசித்துவாரத்தில் பத்தில் ஒரு பங்களவு மிக நுட்பமாக இருக்கும் துவாரத்திற்கு "நெற்றிக்கண்" என்று பெயர்.

இதை மிக இலேசான சவ்வுமூடிக் கொண்டிருக்கிறது. இடுப்புக்குக் கீழ் சிறுநீர்த்துவாரத்திற்கும் மலத்துவாரத்திற்குமிடையேயுள்ள மூலாதாரத்தில் ஊறும் விந்தாகிய குண்டலிய சக்தியை முதுகந்தண்டு எலும்புக்குள் உள்ள மிகச் சிறிய துவாரத்தின் உள்ளே கூடிப் பிடரிப் பின்புறுத்தில் இருந்து சிரசின் நடு உச்சி மண்டை ஓட்டிற்குள் உள்வழியாக குருவின் பரிச உணர்ச்சியாலும் நுட்ப வேகத்திறமையாலும் குண்டலினியை எழுப்பிக் கொண்டு வந்தால் நெற்றிக் கண் திறக்கப்படுகிறது. இந்தக் குண்டலிய சக்தியினால் ஏற்படும் நெற்றிக் கண்ணால் ஆண்டவனை அறிய முடியும். உடம்பில் பலவியாதிகள் காரணமாக ஏற்படும் வலியை நெற்றிக் கண்ணில் நாட்டம் வைத்து அந்த உணர்வோடு உறங்கி விட வியாதி அனைத்தும் தீரும்.

## iv. மனோசக்தி

இன்பதுன்பங்களின் கர்த்தா மனிதனேயாவான். அவன் தான் தன்னுடைய இன்பதுன்பங்களை உண்டு பண்ணவும் நிலை நிறுத்தவும் செய்கிறான். அவை வெளியில் இருந்து அவன் மீது திணிக்கப்படுவதில்லை. இன்பதுன்பங்களுக்குக் காரணம் அவனது மனமேயாகும். மனமே எண்ணங்களை உற்பத்தி செய்கிறது.

துன்பத்திற்குப் பதிலாக ஒருவன் இன்பத்தைப் பெற விரும்புவானாயின் அவன் தன் மனத்தில் பதிந்து கிடக்கும் இயல்புகளையும் அவனது துன்பத்திற்குக் காரணமான ஒழுக்கவீனங்களையும் மாற்றியமைக்க வேண்டும்.

மனத்தின் செயல்பாடு என்ன அதைக் கண்டு பிடிக்க மனம் உண்மையில் என்ன செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என யோசிக்க வேண்டியுள்ளது.

## மனவலிமையால்

அ) பசிதாகத்தை வெல்லலாம்

ஆ) கூடு விட்டு கூடு பாயலாம்

இ) ஆகாயத்தில் உலாவலாம்

ஈ) பூமிக்குள் மறைந்திருக்கும் கனிமங்கள், எண்ணெய், புதையல் முதலியவற்றை அறிந்து கொள்ளலாம்.

உ) விண்வெளிக் கோள்களின் விபரம் அறியலாம்

ஊ) நீர் மேல் நடக்கலாம்

எ) காற்றில் மறையலாம்

ஏ) உடலில் இருந்து ஒளியை வீசலாம்

இவைகள் மனத்தின் வலிமைகளாகக் கூறப்பட்டிருந்தாலும் யதார்த்தத்தில் செயல் வடிவம் பெறுதல் என்பது ஒரு விகிதமும் சாத்திய மானதாகத் தெரியவில்லை. சந்தேகத்திற்குரியதாகவே உள்ளன.

மனிதனின் அதீத சக்தி (மனோசக்தி) உண்டா இல்லையா?

எந்த ஒரு மனிதரும் தனக்கு அதீத சக்தி இருப்பதாக நிரூபித்துக் காட்டினால் அந்த நபருக்கு 10 இலட்சம் ரூபாவை பரிசாக வழங்குவதாக பேராசிரியர் கார்லோ பொன்சேகா கூறியுள்ளார்.

இதற்காக இலங்கை பகுத்தறிவு சங்கத்துடன் இணைந்து 12 சவால்களை முன்வைத்ததாகவும் அதில் ஒன்றையேனும் நிறைவேற்றிக் காட்டினால் போதுமானது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். 1964ஆம் ஆண்டு பேராசிரியர் ஆப்ரகாம் கோவூர் முன்வைத்த 21 சவால்களை மீண்டும் மக்கள் முன் வைக்கும் ஒரு திட்டமே இது என்று கூறும் பேராசிரியர் கார்லோ பொன்சேகா 21 சவால்களை 12 சவால்களாக குறைத்துள்ளதாகவும் கூறுகின்றார். மனம் என்பது அதீத சக்திகளை கொண்டது என்ற கருத்து தற்போது அதிக அளவில் பேசப்படுகிறது. எனினும் அவ்வாறு ஒரு சக்தி இருக்கிறதா? என்பதை பிரயோக ரீதியில் நிரூபித்துக் காட்டுவதற்காகவே இந்த சவால் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக பேராசிரியர் பொன்சேகா கூறுகின்றார்.

மனோசக்தி உண்டா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள இந்தச் சவால் வழிகாட்டும் என்றும் கூறியுள்ளார்.

இச்சவாலில் ஏற்றுக் கொள்ளும் நபர் 10000 ரூபாவை கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும் இதே வேளை சவாலை வெற்றிக் கொள்ளும் நபருக்கு 10 இலட்சம் ரூபா நிதி தற்போது சனச வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியின் வைப்புச் சான்றிதழ் ''லக்பிம' ஞாயிறு பத்திரிகையின் பிரதம ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**சவால்கள்**

அ) எரியும் நெருப்பில் அடிப்பாதம் எரியாமல் 30 செக்கன்கள் நின்று கொண்டிருத்தல்.

ஆ) ஒட்டி முத்திரையிடப்பட்ட கடித உறையொன்றில் வைக்கப்பட்டுள்ள இலங்கையில் செல்லுபடியாகும் ரூபாத் தாளின் பெறுமதியை சரியாகச் சொல்லுதல்.

இ) நடுவர் சபையினால் பெயரிடப்படும் இலங்கையின் செல்லுபடியான நாணயத்தாளை உருவாக்கிக் காட்டுதல்

ஈ) நடுவர் சபையினால் பெயரிடப்படும் ஒருவரினால் ஓட்டப்படும் வாகனத்தை அதிக சக்தி மூலம் நிறுத்துதல்.

உ) நடுவர் சபையினால் கூறப்படும் பொருளை அதீத சக்தி அல்லது வேறு எந்தச் சக்திகளையும் பயன்படுத்தி மறையச் செய்தல்.

ஊ) நடுவர் சபை கொடுக்கும் திரவத்தின் அளவை 10 சதவீதத்தால் அதிகரித்தல் அல்லது குறைத்தல்.

எ) நடுவர் சபைக்குத் தெரியும் வகையில் புதைக்கப்படும் ஒரு பொருளை அதிக சக்தியின் மூலம் வெளியே எடுத்தல். சவாலை ஏற்பவரால் புதைக்கப்படும் சூனியம் என்றாலும் பரவாயில்லை. எனினும் உலோகப் பொருளுக்கு இடமளிக்க முடியாது. ஏனெனில், அதில் இலத்திரனியல் உபகரணம் பயன்படுத்தப்பட்டால் அது சவாலை ஏற்பவரின் திறமையாக ஏற்க முடியாது.

ஏ) தண்ணீரை வைன் ஆக அல்லது பெற்றோலை தண்ணீராக அல்லது வைனை இரத்தமாக மாற்ற வேண்டும்.

ஐ) அதீத சக்தி அல்லது அது போன்ற வேறு சக்தியை உபயோகித்து ஒருவர் சபையின் முன் இலங்கை முழுவதும் இன்டநெட் (இணையம்) சேவையை இடைநிறுத்தல்.
அல்லது

ஓ) வெவ்வேறு 10 பேரின் பிறந்த இடம் பிறந்தநாள் மற்றும் நேரத்தைக் கொடுத்தால் அவர்களைப் பற்றிய கீழ்க்காணும் விபரங்களை நடுவர் சபையில் கையளிக்க வேண்டும்.

1. ஆணா? பெண்ணா?
2. உயிருடன் இருந்தால் அவர் இலங்கையில் இருக்கிறாரா? இல்லையா?
3. இறந்திருந்தால் எந்த ஆண்டில் இறந்தார்.

அல்லது

ஓ) உங்களுக்கு வழங்கப்படும் பட்டியலில் ஆபத்தான நிலையில் 10 நோயாளிகளில் இருந்து 5 பேரைத் தெரிவு செய்து (குறிப்பிட்ட 10 பேரின் லக்கினம் திகதி பிறந்த நேரம் வசிக்கும் இடம் ஆகிய விபரங்கள் தரப்படும் .

ஒரு கால வரையறைக்குள் அதீத சக்தி, நம்பிக்கை சக்தி, தெய்வ சக்தி, அல்லது மந்திர சக்தி மூலம் முழுமையாகக் குணப்படுத்தல்.

ஔ) முற்றாக பார்வையிழந்த அல்லது நடக்க முடியாத 10 பேரில் 5 பேரை தெரிவு செய்து (லக்கினம், திகதி, பிறந்த நேரம், வசிக்கும் இடம் ஆகியன தரப்படும்)

முழுமையாகக் குணப்படுத்துதல். மேற் குறிப்பிட்ட 10, 11, 12 ஆகிய சவால்களை ஏற்றுக் கொள்ளவோ ஜோதிடப் புத்தகங்கள் பஞ்சாங்கங்கள் கலண்டர்கள் மற்றும் கணனி ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

இந்தச் சவால் இன்னும் ஒருவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் சக்திபற்றிய கதையுண்டு.

## V. பனி மனிதர்கள்

பனி மனிதர்கள், குரங்கினத்தைச் சேர்ந்தவர்கள். நேபாளம், தீபேத்தை அடுத்துள்ள இமயமலைத் தொடரில் வாழ்ந்து வருவதாக நம்பப் படுகிறது.

இப்பனி மனிதன், 7 அல்லது 8 அடியுயரமுடையவனாக இருப்பான். மனிதனைப் போன்று இரண்டுகால்களாலேயே நடக்கிறான். உடல் முழுவதும் உரோமம் உண்டு. 19ஆம் நூற்றாண்டில் மேற்கத்தய நாட்டைச் சேர்ந்த மலை யேறிகளின் தகவல்களை அடுத்தே இவர்கள் பற்றிய தகவல் உலக மெங்கும் பரவத் தொடங்கியது.

பனி மனிதர்கள் அமெரிக்காவிலும் வாழ்ந்து வருவதாக இப்பொழுது தகவல்கள் கிடைத்துள்ளன.

1921ஆம் ஆண்லேயே முதன் முதல் பனி மனிதனின் காலடிகள் மலையேறிகளால் அவதானிக்கப்பட்டன. எவரெஸ்ட் சிகரத்தை டெல்மன்ட், ஹிலாரி, டென்சிங் நோர்க்கே போன்றோரும் பனிமனிதனின் காலடிகளைக் கண்டதாகக் கூறியுள்ளார்கள்.

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைக்க வேண்டு மென்ற முயற்சிகளில் 1921ஆம் ஆண்டு ஈடுபட்ட லெப்டினன் கேணல் சாள்ஸ் சவோட் பெரி (Lievterant colomel Charles Howard Buar) தலைமையிலான குழு எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முற்பட்டபோது 21ஆயிரம் அடி உயரத்தில் இந்தக் குழுவினர் காலனி இன்றி நடந்த ஒரு மனிதனின் காலடி போன்று ஒரு காலடியைக் கண்டதாக ஊர்ஜிதப்படுத்தினர்.

1938ஆம் ஆண்டில் இமய மலைக்கு ஏறிய பில்டிமன் (Bill Timan) எவரெஸ்ட் என்ற தனது நூலில் இந்த பனி மனிதன் மிகவும் வெறுக்கத் தக்க மனிதன் என்று எழுதியுள்ளார்.

இன்னும் ஒருசில எழுத்தாளர்கள் பனி மனிதன் வெறும் கற்பனை பாத்திரம், மக்களை சந்தோசப்படுத்த உருவாக்கப்பட்ட பாத்திரம் என எழுதியுள்ளார்கள்.

## vi. கடலுக்கடியில்

பெல்டிக் கடல் ஆழத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மர்மப் பொருளை சில வாரங்களின் பின் ஆய்வு செய்வதற்காக ஒரு ஆய்வுக்குழு உரிய மர்மப் பொருளின் அருகே சென்ற போது கமரா உட்பட உபகரணங்கள் அனைத்தும் செயழிழந்து விட்டன.

அதனைவிட்டு விலகிக் கொஞ்சம் தூரம் சென்றதும் மீண்டும் கருவிகள் செயல்படத் தொடங்கியுள்ளது.

கடலில் உள்ள புதையல்களைத் தேடும் "உசியன் எக்ஸ் குழு கடந்த ஆண்டு இந்த மர்மப் பொருளைக் கண்டு பிடித்தனர். சுவீடனுக்கும் பின்லாந்திற்கும் இடைப்பட்ட "பெல்டிக்" கடற் பகுதியிலேயே இது கண்டு பிடிக்கப்பட்டது. வட்டவடிவான இந்தப் பொருள் மின்சாரப் பொருட்கள் அனைத்தும் அந்த மர்மப் பொருளுக்கு அண்மையில் சென்றால் செயலிழந்து விடுகின்றன.

இந்த மர்மப் பொருளின் மேற் தளத்தில் 25 சென்றி மீட்டர் விட்டம் கொண்ட துளை ஒன்று இருப்பதாகவும் அது எங்கு செல்கிறது என்று தெரிய வில்லை யென்றும் ஆய்வுக்குழு கூறுகின்றது. ஆய்வுகள் தொடர்கின்றன.

## vii. பெர்மூடாக் கோணம் (பிசாசு முக்கோணம்)

கடல் பகுதியில் கப்பல்கள் விமானங்கள் காணாமல் போகும் மர்மம்.

விஞ்ஞானத்திலும் விடை காண முடியாத விந்தை பிசாசு முக்கோணம்.

வட அத்லாந்திக் கடலில் பெர்மூடா மியாமி, பியூர் டொரிகோ ஆகிய மூன்று துறை முகங்களை இணைத்து ஒரு முக்கோணம் வரைந்தால் கிடைக்கும் பகுதியே பிசாசு முக்கோணம் எனப்படும்.

புரியாத புதிராக இருக்கும் இம் முக்கோணத்தின் இயல்பு வியப்பானதும் அச்ச மூட்டக் கூடியதுமாகும்.

இம் முக்கோணப் பகுதியில் காணப்படும் ஆழ்கடல் நீரின் மேற் பகுதி எழிலுடன் காணப்படுவதுடன் கிளர்ச்சி ஊட்டுவனவாக இருந்த போதிலும் இதன் ஆழத்தில் ஆற்றல் வாய்ந்த நீரோட்டங்கள் உள்ளன.

கடந்த நூற்றாண்டின் கணக்கெடுப்பின் படி இவ் வெல்லைக்குள் நுழைந்த கப்பல்களுள் 40 கல்பல்களும் 20 விமானங்களும் மாயமாய் மறைந்து போய்விட்டன. 1872ஆம் ஆண்டில் மேரி செலஸ்டி என்று பெயருடைய ஒரு பாய்மரக் கப்பல் மறைந்த நிகழ்ச்சியே முதன் முதலில் பதிவு செய்யப்பட்டது. இன்று வரை பெர்முடாக் கோணத்தின் பரப்பினை (இரண்டரை மில்லியன் சதுர கிலோ மீட்டர்) கடந்து செல்லும் போது மாயமாய் மறைவதும் பின் அது பற்றிய தகவல்கள் ஏதும் கிடைக்காது போவதும் உலகின் மிகப் பெரிய அதிசயமாக உள்ளன. “இப்படி மறையும் கப்பல்களும் விமானங்களும் எங்கும் போய் விடவில்லை அவை அதே இடத்தில் வேறு பரிமாணத்தில் இருக்கின்றன” என்று உலகின் புகழ் பெற்ற விஞ்ஞானி ஜே.எம். வாலன் டைன் கூறுகிறார்.

அமெரிக்க நாட்டின் மேதை எட்கர்கேஸ் தம் ஆபூர்வமான சோதிட திறமையின் மூலம் அட்லாண்டிக் கடலுக்குள் புதைந்து கிடக்கும் அட்லாண்டிக் நகரம் ஒரு சக்தி மையத்தால் கடலுக்கடியில் வாழ்பவர்களால் இழுத்துச் செல்லப்பட்டது. மற்றும்

அவர்களால் அந்த நகரத்தை மறுபடியும் மேலே வரச் செய்ய இயலும் என்று எழுதியிருக்கிறார். இப்படிப் பலரும் பல கருத்தைத் தெரிவித்திருந்தாலும் உண்மை இன்னும் அறியப்படவில்லை.

கப்பல்களும் விமானங்களும் காணாமல் போய்க் கொண்டே இருக்கின்றன.

## viii. கூடு விட்டு கூடு பாய்தல்

கூடுவிட்டு கூடு பாய்தல் பற்றி நாம் கேள்விப்படுவதும் கதைப்பதும் பழைய சம்பவமாகி விட்டது என்று நினைக்கலாம்.

ஆனால், இந்த விடயம் விஞ்ஞானத்திற்குள் உட்படுத்தலாமா? இது உண்மையா அல்லது அதீதக் கற்பனையா என்பது பற்றிய ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதுபற்றி இந்தியாவில் நூல்கள் வெளிவந்துமுள்ளன.

நானும் இதுபற்றி பல நூல்களில் படித்துள்ளேன். இந்த நூல்களைப் படிக்கும் போது இது உண்மையான விடயம் போல் படுகிறது. சற்று நேரத்தின் பின் அப்படி இருக்க முடியாது என்ற முடிவுக்கு வர வேண்டியுமுள்ளது.

மீண்டும் இந்த எண்ணம் தலை தூக்கி உண்மையாக இருக்குமோ என்று எண்ணத தோன்றுகிறது.

இப்படி எண்ணத் தோன்றுவதற்கு எங்கள் ஊரின் பக்கத்திலேயுள்ள மாவடிப்பள்ளி எனும் ஊரில் வாழ்ந்த செயின் மௌலானா அவர்களோடு சம்பந்தமுடைய சம்பவங்களும் காரணமாக இருக்கலாம்.

மௌலானா அவர்கள் பலரும் பார்த்திருக்க காலியில் இருந்த அவருடைய உறவினர் ஒருவருடைய வீட்டில் இருந்து சுடச் சுட ஆவி பறக்க கறி அழைப்பித்ததாகவும் அவர் அடிக்கடி பல இடங்களில் ஒரே நேரத்தில் நின்றதாகவும்  எம்முன்னோர் கதைக்கக் கேட்டது காரணமாக இருககலாம். இஃதே போல் திருமூலர் மாட்டிடையனின் செத்த உடம்பில் மாட்டிடையனாக அவர் வீட்டிற்குள் சென்ற சம்பவம் போன்றவைகளையும் கூற முடியும். ஆனால், இன்னும் திட்டமான முடிவில்லாத விடயமாகவே அவைகள் உள்ளன எனலாம்.

"அணிமா மகிமா இலகிமா அரிய கரிமா பிராத்தி மலப் பிணிமா கடையோர்க் கடைவரிய பிராகா மியமீ சத்துவ மெய் துணிமா யோகர்க் கெளியவசித் துவமென்

றெட்டாமிவை யுளக்கண். மணிமா விளையாட்டின் வகையா மவற்றின் வகையுரைப்போம் என்று திரு விளையாடல் புராணத்தில் ஒரு பாடல் வருகிறது.

இது அட்டமா சித்திகளைப் பற்றிப் பேசுகிறது இந்த எட்டுச் சித்திகளும் மாபெரும் கலைகள்.

| | | |
|---|---|---|
| அணிமா | – | பூதவுடலை அணுப்போன்று சிறிதாக்குதல் |
| மகிமா | – | உடலை மலைபோன்று பெரிதாக்குதல் |
| இலகிமா | – | காற்றைப் போன்று இலகுவாக்குதல் |
| கரிமா | – | பளுவாக்குதல் |
| பிராப்தி | – | அனைத்தையும் ஆளுதல் |
| வசித்துவம் | – | யாரையும் வசியப் படுத்துதல் |
| பிராகாமியம் | – | கூடு விட்டு கூடு பாய்தல் |
| துணிமா | | |

இதில் கூடு விட்டுக் கூடுபாய்தல் என்பது இறந்தவரின் உடலில் தனது ஆத்துமாவையும் உயிரையும் உட்புகுத்தி நடமாடுவது ஒருவகை. மற்றது தனது உடலை விட்டு உயிரும் ஆத்துமாவும் நீங்கி போய் வேண்டிய இடமெல்லாம் போய் மீண்டும் தனது உடல் வந்தடைதல்.

## ix. இரசவாதம்

சித்த மருத்துவமானது வாதம், வைத்தியம், யோகம், ஞானம் எனும் நான்கு பகுதிகளையுடையது. விசாலமான பரப்புடைய மருத்துவமாகும்.

இவற்றுள் வாதம், வைத்தியம் இரண்டையும் ஏம வைத்தியம் என்றும், யோகம், ஞானம் இரண்டையும் பிரம்ம வைத்தியம் என்றும் அழைப்பர். வாதம் என்றால் இரசவாதம் (Alchemy) என்பதனைக்குறிக்கும். உலோகங்களை, குறிப்பாக இரும்பைப் பொன்னாக்குவதுதான் இரசவாதம் என்று கருதுவோர் பலர் ஆனால் இது சித்தர் ரசாயணமாகும்.

(Siddher Chemistry) தற்கால இரசாயண நூல்கள் மூலகங்கள் சேர்வைகள், உலோகங்கள் முதலியன எவ்விதம் ஒன்றில் இருந்து ஒன்று உருவாகின்றன. அவை பிரியும் போது ஆரம்ப மூலகங்கள் எவ்விதம் உண்டாகின்றன. என்று அறிவது.

இஃதே வேளை இரசவாதம் என்பது இரும்பைத் தங்கமாக மாற்றுதல் எனும் மூலிகை மந்திரமாகும். இதுபற்றிப் பழைய நூல்கள் வியாபித்துக் கூறுகின்றன. ஆனால், உண்மையில் இவற்றைச் செய்ததாக சான்று ஆதாரம் எதனையும் காணவில்லை. இதனைச் செய்யக்கூடிய ஆதாரபூர்வமான எந்த மூலிகைகளையும் காணமுடியாதுள்ளது. எனவே இந்த "இரசவாதத்தை எந்நிலையில் வைத்துப் பார்க்கலாம் என்று எண்ணுவது கூடக் கஸ்டமாக உள்ளது.

## X. முளிவிசகளம்

இது அவரவர் மனத்தையும் நம்பிக்கையும் பொறுத்து அமையும். உதாரணமாக கறுத்தப் பூனை குறுக்கறுத்தால் போகிற காரியம் இடைஞ்சல் எனக் கூறுவார்கள்.

இது எவ்வாறு அமைகிறது எனின் கறுத்தப் பூனை என்பது மிகமிக அபூர்வமாகவே சந்திக்கக் கூடியது.

இரண்டாவது பூனையுடைய தன்மை என்னவெனில் எவ்வளவுதான் அடித்து விரட்டினாலும் முன்னோக்கி ஓடுமே தவிர பின்னோக்கி வந்த வழியே போகாது இது எமது மனத்திலே ஒரு தோல்வி. மனப்பாங்கை ஏற்படுத்தும். இதனால் மனம் பாதிக்கப்படும் சிலர் இருக்கிறார்கள்.

எதற்கும் அஞ்சாது "பூனையே புரியாது போகிறாய் ஆனையே வந்தாலும் அசையாத என் உள்ளத்தை பூனையே நீ புரியாது போகிறாய் எனக் கூறிக் கொண்டு நம்பிக்கை இழக்காத இவர்களுக்கு இந்தக் கறுத்தப் பூனை குறுக்கறுப்பு எதவும் செய்யாது.

இஃதே போல கூர்மையாக குத்திட்டு நிற்கும் தனங்களையுடைய பெண்களை எதிரில் வெளிக்கிடும் போது சந்தித்தால் வழிப் பயணத்தை கொஞ்சம் தாமதித்து மனத்தை சரிப்படுத்திக் கொண்டு போக வேண்டும் என்பார்கள்.

காரணம் சந்தித்தவனின் எண்ணமெல்லாம் அந்தப் பெண்ணிண் மார்பகங்களைச் சுற்றிச் சுற்றியே நிற்கும் எதிரில் வரும் வாகனம் ஹோன் பண்ணிணால் கூடக் கேட்காது. ஆதலால் அவன் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பம் ஏராளம் உண்டு. அதனால், இருந்து நிதானித்துப் போவதே சரி.

இஃதே போல வாசலில் கிடக்கும் கல்லொன்று காலில் தட்டுப் பட்டால் கல் காரணமல்ல தட்டியவனே காரணம் கல் நீண்ட காலமாக அவ்விடத்திலேயே கிடக்கிறது. இவன்தான் அதில் போய் தட்டிக் கொள்கிறான் என்றால் சிந்தனையில்லாமல் போகிறான் என்பது அர்த்தம். எனவே, இருந்து நிதானித்துச் செல்வதே நல்லது.

இழை 6

## எதிர்வு கூறலும் பிழைத்தவைகளும்

i. 2000ஆம் ஆண்டு உலகம் அழியும்
ii. 2019இல் பூமி மீது ஒரு விண்கல் தாக்கும்
iii. உலக சனத்தொகை பெருக்கப்ப பயம்
vi. ஹாலி நட்சத்திரம்
v. 2036இல் விண்கல் மோதவுள்ளது
vi. 2012 டிசம்பர் 21இல் உலகம் அழியும்
vii. 2012 ஆகஸ் மாதம் செவ்வாய் கிரகத்தின் ஒரு நவீன கருவி
viii. 3797இல் உலகம் அழியும்
ix. சந்திரனில் அதிகமான தண்ணீர்
x. உலக அழிவிற்கு புதிய திகதி கணிப்பு

### i. 2000ஆம் ஆண்டு உலகம் அழியும்

அ) 2000ஆம் ஆண்டு உலகம் அழியும் எனச் சொல்லப்பட்டது அழியவில்லை.

ஆ) 2012ஆம் ஆண்டு உலகம் அழியும் எனச் சொல்லப்பட்டது அழியவில்லை.

இ) மாயன் கலண்டர் 5126 ஆண்டுகளைக் கொண்டது. இது 2012ம் டிசம்பர் 21ம் திகதியோடு முடிவடைகிறது.

அதாவது உலகம் அழிந்து விடும் என நம்பப் பட்டது அழியவில்லை.

### ii. 2019இல் பூமியை விண்கல் தாக்கும்

2002 என்.டி 7 (2002 N.T.7) என்ற விண்கல் ஒன்று வினாடிக்கு 25 கிலோ மீட்டர் வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

இது 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி பூமியைத தாக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இக்கல் தாக்கினால் 77 இலட்சம் அணுக்குண்டுகள் வெடித்தது போன்ற பேரழிவு ஏற்படும்.

பூமியின் 1/5 பகுதி அழிந்து விடும் கடல் பகுதியில் 1/3 பகுதி வற்றிவிடும். தொடர்ந்து 16 மணிநேரம் வானம் இருட்டாக இருக்கும்.

12 கோடிப் பேர் இறந்து விடுவார்கள். ஓசோன் படலத்தில் பெரியதொரு ஓட்டை ஏற்பட்டு பகலில் கூடுதலான வெப்பமும், இரவில் அதிகமான குளிரும் ஏற்படும். இவ்விண்கல் 2004ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இது பூமியில் மோதினால் உயிர்கள் புல், பூண்டு எதுவுமில்லாத அளவு அழிவு ஏற்படும். பிரான்ஸ் நாட்டின் பரப்பளவு போன்ற ஒரு பகுதி பாலைவனமாகி விடும். இது பூமியில் மோதும் வாய்ப்பு 45 ஆயிரத்தில் ஒரு பங்குதான் உண்டு என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

## iii. உலகம் அதிக பட்சமாக 1200 கோடி மக்களையே தாங்கும்

இன்று உலகின் சனத்தொகை 700 கோடி. இன்னும் 50 வருடங்களில் உலகின் மக்கட்தொகை 1100 கோடி என்ற அளவிற்குப் பெரும்.

இதனால் உலகம் சனப்பெருக்கத்தைத் தாங்காது அதிக பட்சம் 1200 கோடிக்கு மேல் தாங்காது என்பதினாலேயே இப் பயம். ஆனால் இயற்கை அழிவுகள் இந்தப் பயத்தைப் போக்கிக் கொண்டே இருக்கின்றன.

## iv. ஹாலி வால் நட்சத்திரம்

வால் நட்சத்திரம் தோன்றினால் குடும்பத்தில், நாட்டில், உலகில் ஏதோ கெடுதல் நடக்கப்போகிறது என்று எம்முன்னோர் நம்பினர். (இது மூடநம்பிக்கை) வான் வெளி ஆய்வாளர்கள் வால் வெள்ளியை தூம சேது (தொகுமத்) என்று அழைக்கின்றனர்.

இந்த வால் வெள்ளி பல நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் தோன்றும். இந்த வால் வெள்ளியின் நீளம் பல இலட்சம் கிலோ மீட்டராகும். முன் ஒரு முறை தோன்றிய " ஹாலி" வால் நட்சத்திரத்தினால் எந்தத் தீங்கும் ஏற்படவில்லை.

அப்பொழுது ஹாலியின் வாலின் நீளம் 3.2 கோடி கிலோ மீற்றர். வால் வெள்ளியின் தலைப்பகுதியால் பூமியை ஊடறுத்துச் சென்றால் தீங்கு ஏற்பட்டிருக்கும் எனக் கூறுகின்றனர் விஞ்ஞானிகள்.

இரண்டாயிரத்து அறுபத்தொன்றில் (2061இல்) விண்வெளியில் தோன்றவுள்ள "ஹாலிவால் வெள்ளியை" எதிர்பார்த்திருங்கள்.

## V. விண்கல் மோதும்

2036ஆம் ஆண்டு பூமி மீது ஒரு விண்கல் மோத உள்ளது.

இக்கல்லின் பெயர் அபோபிஸ். இது சுமார் 1150 அடி விட்டமுள்ளது. இது 2036ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி (இலங்கையின் புத்தாண்டு தினத்தன்று பூமிக்கு வந்து மோத உள்ளது. இந்த மோதலில் பூமி அதிர்ச்சியுடன் சுனாமி ஏற்படுவதோடு அந்தப் பிரதேசம் புல்பூண்டற்று பாலைவனமாவதுடன் உயிரினங்களும் அழிந்து விடும்.

அத்தோடு இந்த மோதலின் போது ஏற்படும் வெடிப்பின் காரணமாக உண்டாகும் தூசுத்துணிக்கைகள்கொண்ட முகில்கள் சூரிய ஒளி பூமிக்கு வருவதை தடைசெய்வதால் பூமி குளிர்ந்து உயிரினங்களின் வாழ்வைக் கேள்விக்குறியாக்கி விடும் என்று கருதப்படுகிறது.

## Vi. 2012ல் டிசம்பர் உலகம் அழியும்

பல தசாப்தங்களாக 2012இல் உலகம் அழிவதாக நம்பப்பட்டது. பிழைத்துவிட்டது. 5126 ஆண்டுகள் கொண்ட மாயன் நாட்காட்டி கடந்த டிசம்பர் 21ஆம் திகதி முடிவடைந்தது. ஆனால் உலகம் அழியவில்லை.

"மாயா" இனத்தவர்களின் கணிப்பீட்டின்படி 2012ஆம் ஆண்டு அழிந்துவிடும். சூரிய குடும்பத்தில் அங்கம் வகிக்கும் பூமி 2012ஆம் ஆண்டு சூரிய மண்டலத்தின் நேர் கோட்டிற்கு வருமாம். இதையடுத்து நேர் கோட்டில் இருந்து முன்பு பயணித்த திசையில் இருந்து நேர் எதிராக விலகி பயணிக்கும் போது புவியின் காந்தப் புலன்கள் திசைமாறி துருவங்கள் இடமாற்றம் ஏற்படும் என மாயா நாட்காட்டி கூறுகிறது. இது பிழைத்துவிட்டது 2012, 12ஆம் மாதம் 21ஆம் திகதி மாயன் கலண்டர்படி உலகம் அழிந்திருக்க வேண்டும். அழியவில்லை.

## Vii. நவீன கருவி

2012 ஆகஸ்ட் மாதம் செவ்வாய் கிரகத்திற்கு ஒரு நவீன கருவி பொருத்தப்பட்டது. இக்கருவி செவ்வாய் கிரகத்தில் ஓட்டை போட்டு ஆராய்ந்தது.

## viii. 3797இல் உலகம் அழியும்

என எழுதி வைத்துள்ளார் நாஸ்ட்ராடாமஸ். இந்த நாஸ்ட்ராடாமஸ் யார்? இவர், தான் இறக்கப் போகும் காலத்தை சரியாகக் கூறியவர். இவரது முழுப்பெயர் கெல்–தி–நஸ் ட்ரடாமஸ். லண்டன் தீ விபத்து, ஜோன் எப். கேனடியின் மரணம், பிரஞ்சுப் புரட்சி, செலஞ்சர் விண்கல விபத்து என்பன இவர் சொன்னபடி நடந்துள்ளது. என்பதால் இவர் சொன்னபடி உலகம் அழியும் என்பதற்கு உத்தரவாதமில்லை. இது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டாது கூறப்பட்ட ஒரு கருத்தாகும்.

## ix. சந்திரனில் ஏராளமான தண்ணீர்

சந்திரயானர் அளித்த தகவல்கள் மூலம் சந்திரனில் ஏராளமான தண்ணீர் இருப்பதாகக் கூறப்பட்டது. சந்திரயான் என்பது இந்தியர்கள் சந்திரனுக்கு அனுப்பிய ஆய்வு விண்கலம் கடந்த நாற்பது ஆண்டுகள் சந்திரனில் தண்ணீர் இல்லையென்று கூறிவந்தார்கள். இப்பொழுது தண்ணீர் இருக்கிறது என்று கூறுகிறார்கள். இதனை விஞ்ஞானி பிரான்ஸிஸ் மெக்கப்பின் ஏற்றுக் கொண்டுள்ளார்.

## x. உலகம் அழிவதற்கு புதிய திகதி

மாயன் நாள்காட்டியை காரணம் காட்டி உலகம் அழிவதாக நம்பி வந்தோர் உலகம் அழிவதற்கான மேலும் சில திகதிகளைக் கணித்துள்ளனர். இதன்படி உலகம் அழியும் உண்மையான திகதி 2017 ஜனவரி முதலாம் திகதி என கடவுள் சகோதரத்துவம் என்ற அமைப்பு கூறியுள்ளது.

இஃதே வேளை புனித பைபிளை ஆய்வு செய்யும் மத விவகார நிபுணர் இயன் கன்னி 2023ம் ஆண்டே இறுதித் தீர்ப்பு நாள் எனக் கூறியுள்ளார்.

இஃதே போல அயர்லாந்து கிறிஸ்தவ மதத் துறவி “மலர்ச்சி கி.பி.” 43இல் உலகம் அழியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது 112வது பாப்பாண்டவர் தேர்வாகும் போது உலகம் அழியும் என்கிறார். இப்பொழுது இருப்பவர் 111வது பாப்பாண்டவர்.

## திட்டமான சில உண்மைகள்

i. நேரம், மரணம், மூச்சு ஆகிய மூன்றும் யாரையும் எதிர்பார்ப்பதில்லை.
ii. பெற்றோர், அழகு, இளமை ஆகிய மூன்றும் வாழ்வில் ஒருதரம்தான் கிடைக்கும்.
iii. சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் மட்டும்தான்.
iv. கண்களைத் திறந்து கொண்டு தூங்க முடியாது.
v. வித்தியாசமான இரண்டு வாசனைகளை ஒரே நேரத்தில் உணர முடியாது.
vi. கருவான குழந்தைக்கு வால் இருக்கும். கருவில் முதலில் கண்தான் உருவாகின்றன. எட்டாம் மாதம் கருவில் எல்லா உறுப்புகளும் தோன்றி விடும்.
vii. இறந்த பின்பும் கண்ணில் சிறிது நேரம் உயிர் இருக்கும்.
viii. மண்ணீரலை நீக்கி விட்டால் மனிதனுக்குக் கோபம் வராது
ix. உடலின் நடுக்கம் வெப்பத்தை உண்டாக்குகிறது
x. 12 வயதிற்கு மேல் பல் விழுந்தால் திரும்ப முளைக்காது. 22 வயதிற்கு மேல் எலும்புகள் வளர்வதில்லை. 25 வயதில் மனிதன் பூரண வளர்ச்சியடைந்து விடுகிறான்.

## நம்ப மறுக்கும் சில உண்மைகள்

i. காய்க்காத மரத்திற்கு கல் எறி
ii. சாக்கடலில் மிதக்கலாம்
iii. அமீபாதான் முதன்மையானது
iv. கடலுக்குள் இருந்த இமய மலை
v. மாதா கோயில் சிலுவை
vi. மாதா கோயில்
vii. இறந்தவர் மீண்ட சம்பவம்
viii. நாகபாம்பும் மாணிக்கக்கல்லும்
ix. கடற்கன்னி
x. இலங்கையில் 21ஆம் நூற்றாண்டில்

## i. காய்க்காத மரத்திற்கு கல்லெறி (அடிப்பதும் வெட்டுவதும் ஏன்?)

அக்கால கிராமிய மக்களிடையே ஒரு நம்பிக்கை இருந்தது. மாமரம் காய்க்காது இருந்தால் அம் மரத்திற்கு தும்புத்தடியால் மரத்தின் அடியில் அடித்துவிட்டு தும்பால் பூக்களைத் தடவி விடுவார்கள்.

இதன் பின் மரம் நன்றாக காய்க்கும். இதற்குக் காரணம் என்ன வெனில் பூக்களைத் தும்பால் தடவி விடும்போது பூக்களிடையே மகரந்தச் சேர்க்கை நடைபெற்று காய்க்கிறது. இஃதே போல மரத்தின் பட்டையை கத்தியால் வெட்டி விடுவார்கள். இதனால் மரத்தின் இலைகள் உதிர்ந்து மரம் நன்றாக காய்க்கும்.

## ii. சாக்கடலில் மிதக்கலாம்

சாக்கடலை Dead Sea என இங்கிலீசில் அழைப்பர்.

இக்கடலில் உயிர்கள் வாழ முடியாதவாறு உப்பு மிகைத்து காணப்படுவதே இதற்கு சாக்கடல் என்ற பெயர் வரக் காரணம் எனலாம். சாதாரண கடலில் காணப்படும் உப்புத் தன்மைகளைவிட 8.6 மடங்கு உப்புத் தன்மை கூடியது இக்கடல். இதனால் சாதாரண கடலில் மனிதர்கள் ஆழ்வது போல இக்கடலில் ஆழ்ந்து விட மாட்டார்கள். மிதப்பார்கள்.

## iii. அமீபாதான் முதன்மையானது

அமீபாதான் உலகத்தின் ஆதி உயிரினம் . அதுதான் இன்றைய உயிரினங்களின் மூதாதையருள் முதன்மையானது. ஒற்றை உயிர்மம் கொண்ட அமீபா 57 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. இது உயிரியல் வல்லுனர்களின் கருத்தாகும்.

## iv. கடலுக்குள் இருந்த இமயமலை

சில உண்மைகளை நம்மால் எளிதில் நம்ப முடியாது. அப்படியானவைகளில் ஒன்றுதான் இமய மலை கடலுள் மூழ்கி இருந்தது என்பது.

நம்முடைய நிலப்பகுதி ஒரே துண்டாக இல்லாமல் பல துண்டுகளாக இருப்பதால் அவை நகர்ந்து கொண்டே இருக்கின்றன. இதனால் ஒரு காலத்தில் நிலமாக இருந்த பகுதி கடலாகவும் கடலாக இருந்த பகுதி நிலமாகவும் இருக்கின்றன.

இந்தியாவின் தென் நாட்டிற்குத் தெற்கே லெமூரியாக் கண்டம் என்ற ஒரு நிலப்பரப்பு இருந்தது என்றும் அது பின்னர் கடலுக்குள் மூழ்கி விட்டது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இஃதே போல பல ஆண்டுகளுக்கு முன்னால் ஈரானும் சீனாவும் ஒரே கடலால் இணைக்கப்பட்டிருந்தன என ஆய்வுகள் கூறுகின்றன.

இமய மலைப் பகுதியைத் தோண்டி ஆராய்ச்சிகள் நடத்தியபோது அங்கு கடல்வாழ் விலங்குகளின் புதைபடிமங்கள் காணப்படுகின்றன. இந்த கடல் வாழ் விலங்கினங்கள் கோடி ஆண்டுகளக்கு முன் கடலில் வாழ்ந்தவை எனவே பல கோடி ஆண்டுகளுக்கு முன் இந்தப் பகுதி கடலாக இருந்துள்ளது என்று முடிவெடுத்துள்ளனர்.

## V. மாதா கோயில் சிலுவை

ஆஹரின் பாக் மாதா கோயிலின் சிலுவையின் இரண்டு பக்கமும் கிளைகள் கொண்ட நிஜ மரத்தடி மீது ஏசுநாதரின் சிலுவை வைக்கப்பட்டுள்ளது. முன்னூறு ஆண்டுகளாக மரம் பச்சை இலைகளுடன் அப்படியே இருப்பதுதான் இதில் வியப்பானது.

## Vi. இறந்தவர் மீண்ட சம்பவம்

இறந்து போனதாக நம்பப்பட்டு உயிர் பிழைத்தவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து பல நூல்கள் வெளிவந்துள்ளன. அப்படிப்பட்ட நூல்களில் இருந்து பெறப்பட்ட விடயம். பிரிட்டிஸ் இராணுவத்தளபதி எல்சுமி என்பவர் சில நாட்கள் இங்கிலாந்திற்கு வெளியே இருந்து விட்டு திரும்பிய போது அவர் மணந்து கொள்ள இருந்த அழகிய பெண் "எல்லோ ஃபீவர்" என்ற மஞ்சள் காமாளையால் இறந்ததாக கருதப்பட்டு சமாதிக்குள் வைக்கப்பட்டார்.

திரும்பி வந்த ஜெனரல், தான் அவள் முகத்தைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கவே புதைத்த இடத்தைத் தோண்டி சவப் பெட்டியை திறந்த போது அப்பெண் மூச்சுவிட்டபடி உதடுகள் துடிக்க உயிருடன் இருந்தாள். இந்தப் பெண் இதன்பின் 41 வருடங்கள் உயிர் வாழ்ந்தாள்.

## vii. நாகப்பாம்பும் மாணிக்கக் கல்லும்

ஒரு நாகபாம்பு 100 வருடங்கள் உயிர் வாழும் என்பதும், அந்தப் பாம்பு தன் வாழ்நாளில் யாரையும் கடிக்காமல் இருந்தால் அதன் விஷம் இறுகி ஒரு மாணிக்கக் கல்லாக மாறும் என்பதுவும் அந்த மாணிக்கக் கல்லை இரவு நேரங்களில் பாம்பு உமிழ்ந்து விட்டு அதன் வெளிச்சத்தில் இரை தேடப் பயணிக்கும் என்பதுவும் பல நூற்றாண்டுகளாக மக்களிடையே உள்ள கதையாகும். இது உண்மையல்ல என்ற கருத்து அண்மைக் காலமாக பிரபலம் பெற்று வருகிறது.

## viii. கடல்கண்ணி

கடல் கன்னி பற்றி எம்மிடையே ஏராளமான கதைகள் உண்டு. கடல் கன்னியில் சிலைகள் கூட பல இடங்களில் உண்டு. ஆனால் கடற்கன்னி என்ற ஓர் உயிரினம் இருப்பதற்கான ஆதாரம் எதுவுமில்லை என அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. புராண உயிரினங்கள் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றைத் தொடர்ந்து பொதுமக்கள் கடல் கன்னி பற்றி கேள்வி எழுப்பியதால் அமெரிக்க தேசிய பெருங்கடல் சேவை இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

பாதிமீன், பாதி மனிதன் உடல் கொண்ட கடற்கன்னி ஒன்றினைக் கண்டுபிடித்ததாக "டிஸ்கவரி" சனல் ஒலிபரப்பியதாலேயே இந்த அறிவிப்பு செய்யப்பட்டது.

## ix. இலங்கையில் 21ம் நூற்றாண்டில்

58000 மக்கள் பிணக்கின் காரணமாக உயிர் இழந்துள்ளார்கள்.

தற்போது 270000 பிள்ளைகள் இடம்பெயர்ந்துள்ளார்கள்

நூற்றுக் கணக்கான பிள்ளைகள் கண்ணிவெடிக்கு தமது அவயங்களை இழந்துள்ளார்கள்

## x. திராவிட நாட்டின் அரசியல் இலங்கை அரசியலை நம்பித்தான் நடக்கிறது.

இன்றைய திராவிட நாட்டின் அரசியலை உற்று நோக்குபவர்கள் அல்லது. ஆராய்ந்து பார்ப்பவர்கள் இதனை ஏற்றுக் கொள்ள முடியும்.

## இழை 8

## உலகில் ஏற்பட்ட பூகம்பங்கள்

i. டோக்கியோவில் 1923ஆம் ஆண்டு 7.9 ரிச்சட் பூகம்பம் 140000 உயிரிழப்பு

ii. சீனா 1976 ஜூலை 28 8.2 ரிச்சட் 240000 உயிரிழப்பு

iii. ஈரான் 1990 யூன் 21 7.3 ரிச்சட் 50000

iv. ஈரான் 2003 மார்ச் 26 6.5 ரிச்சட் 26000

v. ஜப்பான் 1995 ஜனவரி 17 7.2 ரிச்சட் 6000

vi. இந்தியா 1993 பெப்ரவரி 30 6.0 ரிச்சட் 10000

vii. துருக்கி 1999 ஒகஸ்ட் 17 7.4 ரிச்சட் 17000

viii. குஜராத் 2001 ஜனவரி 7.9 13000

ix. இந்தோனேசியா 2004 26.9 ரிச்சட் 279000

x. ஜப்பானில் அடிக்கடி

## இழை 9

## காலக்கணிப்பு

i. புதன் கிரகம் தன்னைத்தானே சுற்ற 59 நாட்களாகும். அதாவது எமது பூமியின் 59 நாட்கள் புதனில் ஒரு நாள் அதனால் அங்கு ஒரு மாதம் பகல், ஒரு மாதம் இரவு. பூமியின் 88 நாட்கள் புதன் கிரகத்தில் ஒரு வருடம்.

ii. பூமியின் 100 ஆண்டுகள் யுரேனஸ் கிரகத்தில் ஒரு வருடம்

iii. பூமியின் 248 வருடம் புளுட்டோவில் ஒரு ஆண்டு

iv. பூமியின் 687 நாட்கள் செவ்வாயில் ஒரு வருடம். அதாவது செவ்வாயில் ஒரு ஆண்டு பூமியில் இரண்டு ஆண்டுகள். செவ்வாயில் 9 மாதங்கள் பகலாக இருக்கும்.

v. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நோர்வே

vi. ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்

vii. தென்துருவ பகுதியில் ஆண்டிற்கு ஒருமுறைதான் சூரியன் உதிக்கும்.

viii. பூரண ஆயுள் என்பது 120 ஆண்டுகள்.

ix. ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு 186000 மைல்கள். ஒரு நிமிடத்திற்கு 1866000 x 60 மைல்கள்.

x. குறைந்த நாட்களைக் கொண்ட கிரகம் வியாழன். வியாழனில் 3 மணி நேரத்திற்கு ஒரு பகல் 3 மணி நேரத்திற்கு ஒரு இரவு ஒரு நாள் 10 மணித்தியாலம்.

இழை 10

## சாவித்துவாரத்தின் ஊடே

i. இறந்த பின்பும் சிறிது நேரம் உயிர் இருக்கும். அதனால்தான் உயிர் போய்விட்டதா எனத் திட்டமாக அறிந்து கொள்ள டாக்டர்கள் கண்ணில் ஒளியைப் பாய்ச்சி (டோச் வெளிச்சம்) பார்க்கிறார்கள். கண்ணின் கரும்புள்ளி ஒளிக்கு அசையாது இருந்தால் உயிர் பூரணமாகப் போய்விட்டது என்று பொருள். சுருங்கி விரிந்தால் உயிர் பூரணமாக இன்னும் போகவில்லை என்பது பொருள்.

ii. சூரியனைவிடப் பெரிய நட்சத்திரம் அதாவது 300 மடங்கு பெரிய நட்டசத்திரம் பீட்டர்ஸ் கிஸ்.

iii. சந்திரனில் மனிதன் கால் வைத்தது 20.07.1969. சந்திரனில் இருந்து பூமியைப் பார்த்த போது முதலில் தெரிந்தது சீனப் பெருஞ்சுவர்.

iv. நாம் வாழும் உலகம் தோன்றி 460 கோடி ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன.

v. உலகில் முதன் முதல் செயற்கைக் கருத்தரித்தலின் மூலம் குழந்தை பெற்றுக் கொண்டவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பிரிஸ்டல் நகரில் வாழ்ந்த "லெஸ்லி பிரவுண்" என்பவராகும். இப்படிக் கருத்தரித்துப் பிறக்கும் குழந்தை ஊனமுள்ளதாக இருக்கும் எனச் சிலர் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் உரிய நேரத்தில் தேகாரோக்கியத்தோடு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இக்குழந்தையைப் பெற்றவர் இறந்து விட்டார். இவருக்கு 5 பேரப்பிள்ளைகள் உண்டு இது நடைபெற்றது (1978ஆம் ஆண்டு) கருவூட்டல் நடைபெற்றது.

vi. சூரிய ஒளியானது பூமியை வந்தடைய 9 நிமிடங்கள் ஆகும்

vii. நிலவு சாதாரண நாட்களைவிட பௌர்ணமியில் ஒன்பது மடங்கு அதிகப் பிரகாசமாக இருக்கும்.

viii. பூமியைப் பொல 1700 கோடிக் கிரகங்கள் பிரபஞ்சத்தில் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ix. 1903ஆம் ஆண்டு ரைட்சகோதரர்கள் ஆகாய விமானத்தை வெள்ளோட்டம் விட்டனர்.

x. சூரியனுக்கு மிகச் சமீபமாக மிக பிரகாசமான விண்மீன் ஒன்று உள்ளது. இதனை "சிரியஸ்" என அழைப்பர் இது ஏறக்குறைய 8 1/2 ஒளியாண்டு தூரத்தில் உள்ளது. இது சூரியனை விட 26 மடங்கு பெரியத.

அலகு 05

# உடல்நலவியல்

**சாவிக்குறிப்பு**

"சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம்"

"விளையாடு அதன் பின் வித்தையாடு" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" போன்ற எமது முன்னோரின் கருத்துக்கள் உடல் நலத்தின் முக்கியத்துவத்தையும் விளையாட்டு இந்த உடல் நலத்தில் பங்கெடுக்கும் வகிபாகத்தினையும் எமது தாய் தந்தையர் எமது உடல் நலத்தில் எந்தளவு பங்களிப்புச் செய்கிறார்கள். நாம் எமது பிள்ளைகளுக்கு அவர்களது இளமைக்கும் முதுமைக்கும் பொறுப்பாளிகளாக உள்ளோம் என்பதினையும் அதாவது உடல் நலத்தில் பரம்பரையின் பங்களிப்பு போன்றவற்றையும் மனத்தில் கொண்டு

**இழைகள்**

1. விளையாட்டும் அதுபற்றிய செய்திகளும்
2. பழங்கால விளையாட்டுக்கள்
3. தேசிய விளையாட்டுக்கள்
4. விளையாட்டின் உச்சங்கள்
5. உடலும் உள்ளமும்
6. உடலும் உலோகமும்
7. சவால் விடும் நோய்கள்
8. வைத்திய முறைகள்
9. ஆரோக்கிய விதிகள்
10. சாவித்துவராரத்தின் ஊடே என்பவற்றை எடுத்து நோக்குவோம்.

**இழை 1**

## விளையாட்டும் அது பற்றிய செய்திகளும்

i. உலக கால்பந்து விளையாட்டுப் போட்டி 1930ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. முதன் முதல் இந்த விளையாட்டை ஆரம்பித்தவர்கள் இங்கிலாந்தவர்களே.

ii. கால்பந்தாட்ட வீரர் ஒருவர் விளையாடும் போது ஒவ்வொரு ஒன்பது நிமிடத்திற்கும் சராசரி ஒரு மைல் தூரம் ஓடிக்கொண்டிருப்பார்.

iii. பழங்காலத்தில் ஒலிம்பிகில் வெற்றி பெற்ற ஒருவருக்கு ஆர்மினிய நாட்டை ஆளும்படி பரிசாகக் கொடுத்துள்ளார்கள். இந்த ஒலிம்பிக் போட்டி கிரேக்கத்தில் கி.மு. 776இல் ஒலிம்பியாவில் முதன் முதல் ஆரம்பமாகியது.

iv. இலங்கையிலிருந்து ஒலிம்பிக் போட்டியில் 1948ஆம் ஆண்டு கலந்து கொண்ட வீரர் டங்கன்வைட் என்பவராகும்.

v. பண்டைய ஒலிம்பிக் வீரர்கள் அனைவரும் நிர்வாணமாகத்தான் விளையாடுவார்கள். பெண்களில் யாரும் ஒலிம்பிக் விளையாட்டில் கலந்து கொள்ளவும் இல்லை. பார்வையாளர்களாகவும் அனுமதிக்கப்படவில்லை. பெண்கள் கலந்து கொண்டது 1900ஆம் ஆண்டிலேயே. நவீன ஒலிம்பிக்கின் முதல் போட்டி 1896 ஏப்ரல் 5ஆம் திகதி ஆரம்பமானது. அன்று நல்ல மழை. பல ஆண்டுகளக்குப்பின் மீண்டும் ஆரம்பமான முதல் போட்டி என்பதனால் மழை பெய்து ஆசிர்வதித்ததோ என்னவோ இந்தப் போட்டியில் 70000 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். 13 நாடுகளின் 311 வீரர்கள் கலந்து கொண்டனர்.

vi. முதல் போட்டியில் முதன் முதலாக தங்கம் வென்ற 27 வயதான ஜேம்ஸ் கானலி என்ற அமெரிக்கர் றிபிள் ஜம் (தத்தி மிதித்துப் பாய்தல்) முதலிடத்தை பெற்றார்.

vii. முதல் தங்கம் வென்ற பெருமை ஜேம்ஸ் கானலியையே சாரும். பிற்காலத்தில் கானலி 25க்கு மேற்பட்ட நாவல்களை எழுதிய எழுத்தாளராகப் புகழடைந்தார்.

viii. 1896ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி மாலை 3 மணிக்கு கிரேக்க இளவரசர் ஜோர்ஜ் முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

ix. ஒரு வீரனாவது கிரேக்கத்தில் இருந்து முதல் இடம் பெறவில்லை. இது கிரேக்கத்திற்கு பெரியதொரு அவமானமாக இருந்தது. ஆனால் அந்நாட்டு மக்கள் எல்லாருமே கடைசி நிகழ்ச்சியிலாயினும் எமது கிரேக்க வீரன் முதல் இடம் பெற மாட்டானா என ஏங்கினர் கிரேக்க வீரர்களை உட்சாகப்படுத்த (இதில் கிரேக்கத்தில் இருந்து 16 வீரர்கள் கலந்து கொண்டனர்) பலவகையான உட்சாக அறிவிப்புகளைச் செய்தனர்.

x. கிரேக்க நாட்டின் செல்வந்தர்களில் ஒருவரான ஜோர்ஜ் அவரோவ் மரதன் ஓட்டப் போட்டியில் எனது நாட்டு வீரன் முதலாவதாக வந்தால் தனது அழகிய மகளை மணமுடித்து வைப்பதாக அறிவித்தார். ஆத்துடன் சீதனமாக 1 கோடி டிராமாஸ் (கிரேக்க நாட்டுப் பணம்) கொடுப்பதாகவும் அறிவித்தார்.

## உடல் நலத்தில் முக்கிய இடம் வகிக்கும் விளையாட்டுக்களை

i. உடல், உள, மூளை வளர்ச்சிக்கான விளையாட்டுக்கள்

ii. சந்தோசத்தைக் கொடுக்கக் கூடிய விளையாட்டுக்கள் அதாவது பொழுது போக்கு விளையாட்டுக்கள்.

iii. ஆண்களுக்குரிய சாகச விளையாட்டுக்கள்

iv. பெண்களுக்குரிய சாகச விளையாட்டுக்கள்

v. பிள்ளைகள் முதியோருக்கான விளையாட்டுக்கள்

vi. போட்டி விளையாட்டுக்கள்

vii. சூது விளையாட்டுக்கள்

viii. போர்விளையாட்டுக்கள்

ix. தற்காப்பு விளையாட்டுக்கள்

x. அரசர்க்குரிய விளையாட்டுக்கள் என மேலோட்டமாகப் பத்தாக வகுத்து நோக்க முடியும்.

இதனை

i. பந்து விளையாட்டு
ii. தற்காப்பு விளையாட்டு
iii. தடகள விளையாட்டு
iv. பொழுது போக்கு விளையாட்டு
v. ஆண், பெண்களுக்கான விளையாட்டு
vi. முதியோர் பிள்ளைகளுக்கான விளையாட்டு
vii. அரசர்க்குரிய விளையாட்டு
viii. சாகச விளையாட்டு
ix. வாகனம் ஓட்டும் விளையாட்டு
x. நீர் விளையாட்டு

என்றும் கூறலாம்

**இழை 2**

## எமது பழங்கால விளையாட்டுக்கள்

i. ஜல்லிக்கட்டு – வீர விளையாட்டு
ii. கவண்விளையாட்டு – குருவிகளுக்கு கல் எறிதல்
iii. கண்ணாம் பூச்சி விளையாட்டு
iv. குரவை விளையாட்டு
v. கலர் தூள் எறிதல்
vi. நீர் விளையாட்டு
vii. பூப்பந்து விளையாட்டு
viii. ஒழிந்து விளையாடல்
ix. சறுக்கு மரமேறும் விளையாட்டு
x. கிட்டிப்புள் விளையாட்டு

இழை 3

## உலக நாடுகளில் தேசிய விளையாட்டுக்கள்

i. உதைபந்து : பிரான்ஸ், பிரேசில், ஜேர்மனி, கிறிஸ், இத்தாலி,

கரபந்து : இலங்கை

ii. றக்பி : நியூசிலாந்து

iii. கிரிகட் : அவுஸ்திரேலியா , இங்கிலாந்து

iv. கபடி : பங்களாதேஸ்

v. கூடை பந்து : கியூபா, அமெரிக்கா, பிலிப்பைன்ஸ்

vi. ஹொக்கி, : இந்தியா, பாகிஸ்தான்

பனிஹொக்கி : கனடா

vii. கராட்டி, ஜூடோ, சுமோ, பர்மம் : ஜப்பான்

மல்யுத்தம் : துருக்கி

viii. பேஸ்போள் : கியூபா, அமெரிக்கா

ix. குதிரையோட்டம் : சவூதி

x. குங்பூ : சீனா

இழை 4

## விளையாட்டின் உச்சங்கள்

i. முகம்மது அலி – குத்துச்சண்டை

ii. பீலே – உதைபந்து

iii. உசேன் போல்ட் – ஓட்டம்

iv. ஜேம்ஸ் கானலி – தத்தி மிதித்து பாய்தல்

v. கார்லூாயிஸ் – நீளம் பாய்தல்

vi. வில்லி ஜேம்ஸ் – கராத்தே

vii. ஹெய்ஸ் கேப்றிலோசி – மரதன் ஓட்டம்

viii. மைக்கல் பெல்பஸ் – நீச்சல்

ix. பொப்பீமன் – நீளம் பாய்தல்

x. கிச்சின் புனாகோசி – கராட்தே

## i. குத்துச் சண்டை வீரர் முகம்மது அலி

இவர் மூன்று முறை உலக அதிபார குத்துச் சண்டை வீரராக தெரிவு செய்யப்பட்டார். அமெரிக்காவில் "அஸ்பா" எனும் இடத்தில் இவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இவர் அழகிய பலம் பொருந்திய ஒரு மனிதர். இவரது இலக்கு முதலில் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் பெறுவதாக இருந்தது.

இதனை இவர் 1960ஆம் ஆண்டு ரோமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்து தங்கம் வென்றார்.

இவர் முதன் முதல் 1964ஆம் ஆண்டு சோனிலிஸ்டன் என்பரோடு மோதி வெற்றி பெற்ற போது உலக அதிபார குத்துச்கண்டை வீரராகக் கணிக்கப்பட்டார்.

இவர் இன்று நரம்புத்தளர்வு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்நோய் தனக்கு குத்துச்சண்டையினால் வந்ததல்ல என்கிறார் முகம்மது அலி.

முகம்மது அலி அவர்கள் இஸ்லாத்தைத் தழுவ முன் அவரது பெயர் கசியஸ் மார்க் செல்லஸ்கிளே ஜூனியர் என்பதாகும்.

குத்துச்சண்டை வரலாற்றில் ஜோஃபிரேசியர், ஜோர்ஜ் ஸ்போர்மன் ஆகியோரை வீழ்த்தி உலக அதிபார குத்துச் சண்டை வீரர் பட்டத்தைப் பெற்றவர்.

இவர் பங்கேற்ற சர்வதேச போட்டிகள் 61. இதில் 56போட்டிகளில் வெற்றி பெற்றார். 5 முறை மட்டுமே தோல்வியை கண்டுள்ளார்.

இவருடைய மகள் லைலா அலியும் குத்துச் சண்டை வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. உலக குத்துச் சண்டை கவுண்சில் அதன் 50வது மாநாட்டின் போது, முகம்மதலிக்கு "குத்துசசண்டை மன்னன்" என்ற பட்டமளித்து கௌரவித்தது. முகம்மது அலி அவர்கட்கு ஏழு பெண்களும் ஒரு ஆண்மகனும் உண்டு. இவர் 1942ஆம் ஆண்டு ஜனவரி 17இல் பிறந்தவராகும். 1981 இல் ஓய்வு பெற்றார்.

## ii. உதைபந்தாட்ட வீரர் பீலே (Pele)

கால் பந்தாட்டம் உலகின் பிரபலமான விளையாட்டுகளில் ஒன்று. எல்லா விளையாட்டுக்களையும் விட அதிகமான ரசிகர்களைக் கொண்ட விளையாட்டு கால் பந்தாட்டமே.

உலக கிண்ணப் பந்தாட்டத் தொடர் 1930ஆம் ஆண்டு உருகுவே நாட்டில் ஆரம்பமானது. இந்த விளையாட்டில் "பீலே" என்பவர் பிரசித்தமானவர்.

இவருடைய உண்மையான பெயர் எட்சன் அரந்தஸ்ரோ தாஸி மெந்தோ என்பதாகும். இவர் பிரேசில் நாட்டில் 1940 அக்டோபர் 23ஆம் திகதி பிறந்தார்.

நீக்கிரோ இனத்தவர். கறுப்பு நிறம் உடையவர் என்பதால் கறுப்பு வைரம் எனவும் அழைக்கப்பட்டார். இவர் ஏழை என்பதால் நான்காம் வகுப்போடு படிப்பை நிறுத்திக் கொண்டார்.

பதினொரு வயதுச் சிறுவனாக இருந்த போது புகழ் வாய்ந்த கால் பந்துப் பயிற்சியாளர் வால்டி மார்த்தோ பிரித்தோவின் ஆதரவைப் பெற்றார். 1958இல் நடந்த உலக உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து அபாரமாக ஆடி பிரேசிலுக்கு புகழைத் தேடிக் கொடுத்தார். 1962லும் 1970லும் இவர் பிரேசிலுக்கு உலக கிண்ணத்தை வென்று கொடுத்தார்.

பீலே 1956 செப்ரம்பர் 7ஆம் திகதியில் இருந்து 1974 ஒக்டோபர் 2ஆம் திகதி வரை 1254 விளையாட்டுகளில் கலந்து 1216 கோல்கள் போட்டார். தனியொரு ஆட்டக்காரர் இதுவரை இப்படித் தொகையான கோல்கள் போட்டதில்லை.

"பீலே" நாட்டுப்பற்றுடையவர். இவரைப் பலநாடுகள் பணம் கொடுத்து வாங்க முயற்சித்தும் இவர் மசியவில்லை. அதனால் பிரேசில் நாடும் இவரை கௌரவிக்கிறது.

பிரேசில் நாட்டில் இவர் பெயரால் பல சாலைகள், தூபிகள், சிலைகள் என்பன நிறுவப்பட்டுள்ளன.

17 வயதில் உலகக் கோப்பையை வென்று சாதனைப் படைத்தார். இந்தச் சாதனை இன்றும் முறியடிக்கப்படவில்லை.

இளமைப் பருவத்தில் ஒரு கால் பந்து வாங்க காசு இல்லாமல் துணிப்பையில் பேப்பர்களை அடைத்து பந்து செய்து விளையாடிப் பயிற்சி எடுப்பார். ரயில் நிலையங்களில் பாதணிகளுக்கு பொலிஸ் போடும் வேலையையும் செய்துள்ளார்.

## iii. உசேன் போல்ட்

சிறுத்தை மனித உருவில் வந்ததா? என நினைக்கத் தோன்றுகிறது. உசேன் பொல் அவர்களின் ஓட்டத்தைப் பார்க்கும் போது! இவர் 100 மீட்டர் ஓட்டத்தின் சொந்தக்காரர். உலக சாதனையாளர். 2008இல் சீனாவில் பீஜிங் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலும் உலக சாதனையை நிலைநாட்டினார். 2012இல் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலும் வெற்றி பெற்று உலகசாதனையை நிலைநாட்டினார். இவர் ஜமேக்காவைச் சேர்ந்தவர். வேகமாக ஓடுபவர்களை ஈன்ற நாடு ஜமேக்கா என அழைக்கப்படுவதற்குக் காரணம் உலகின் தற்போதைய அதிவேக ஓட்ட வீரர்களின் ஐந்து பேரைப் பெற்றெடுத்த நாடு ஜமேக்கா என்பதனாலேயே ஜமேக்கா இவ்வாறு அழைக்கப் படுகின்றது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் 45 தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தது. ஜமேக்கா இதில் 13 தங்கப் பதக்கங்களை உசைன் போல்ட் பெற்றுக் கொடுத்தார்.

1986 ஆகஸ்ட் 21ஆம் திகதி வெஸ்லி போல்ட் ஜெனியர் போல்ட் ஆகிய இருவருக்கும் குழந்தையாக உசேன் செனட் லியோ போல்ட் பிறந்தார்.

உசேன் பிறந்தது ஜமேக்காவின் வடபகுதியில் உள்ள ஷெர்வூட் கொன்டென்ட் என்ற கிராமத்தில். இவரது தாய் தந்தையர் ஒரு இனிப்பு விற்கும் கடையை நடத்தினர். 2013ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான "லாரியஸ்" விருதுக்கு உசைன் போல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

## iv. ஜேம்ஸ் கானலி

இவர் நவீன ஒலிம்பிக் போட்டியில் முதன் முதல் தங்கம் வென்றவர். 1896 ஏப்ரல் 5ஆம் திகதி இப்போட்டி நடைபெற்றது. இதற்கு முன் 1ஆம் பரிசாக வெள்ளி பதக்கமே அளிக்கப்பட்டது. இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவர் பங்குபற்றிய விளையாட்டு றிபிள் ஜம் (தத்தி மிதித்துப் பாய்தல்) பிற்காலத்தில் இவர் எழுத்தாளராக புகழடைந்தார்.

### v. கார் லூயிஸ்

நீளம் பாய்தலில் ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து நான்குமுறை தங்கம் வென்றார் கார் லூயிஸ். இவர் ஒரு நாய் பிரியர். தனது 35வது வயதில் ஓய்வு பெற்றார். 32 வயதில் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 9.86 நொடிகளில் ஓடி உலக சாதனையை ஏற்படுத்தினார். இவரது சாதனை அசைக்க முடியாத சாதனையாக உள்ளது. இவர் 8 தடவை ஒலிம்பிக் சம்பியன் பட்டம் பெற்றவர்.

### vi. வில்லி ஜேம்ஸ்

டோக்கியோவில் நடந்த அகில உலக கராத்தே சம்பியன் போட்டியில் எட்டு அமெரிக்க கராத்தே வீரர்களுடன் ஒரே சமயத்தில் மோதி வில்லி ஜேம்ஸ் என்பவர் முதல் தடவையாக வெற்றி பெற்றது உலகில் இதுவே முதல் தடவையாகும். இத்தனைக்கும் வில்லி ஜேம்ஸின் வயது இருபதே.

### vii. றேய்ல் கேப்றி லோசி

2008ஆம் ஆண்டு பேர்லினில் 2 மணித்தியாலங்கள் 3 நிமிடம் 59 செக்கனில் மரதன் ஓட்டத்தை நிறைவு செய்து கேப்றி லோசி புதிய உலக சாதனையை நிலை நாட்டியவர்.

1993இல் இருந்து மெய் வல்லுனர் போட்டிகளில் எட்டுப் பட்டங்களை வென்ற இவர் தனது மெய்வல்லுனர் வாழ்க்கையில் 27 தடவைகள் அதிசிறந்த நேரத்தைப் பதிவு செய்தவர்.

1993இல் தனது 20வது வயதில் ஸ்டுட்கார்ட் அரங்கில் 10000 மீட்டர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். 1996இல் அட்லான்டா, 2000இல் சிட்னி ஆகிய இரண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் தங்கப் பதக்கங்களை வென்றார். இது 10000 மீட்டர் ஓட்டப் போட்டியாகும். 130க்கு மேற்பட்ட ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

### viii. மைக்கல் பெல்ப்ஸ்

லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கடைசியாக இவர் கலந்து கொண்டு ஓய்வு பெற்றார். அமெரிக்க ஒலிம்பிக் சுப்பர் ஸ்ரார் எனப் புகழப்பட்டவர். இவர் 18 தங்கங்கள் உட்பட 23 பதக்கங்களைக் குவித்துள்ளார். ஒலிம்பிக் வரலாற்றில் அதிக பதக்கங்களை வென்றவர் என்ற புகழைப் பெற்றவர் இவர்.

### ix. பொப்பீமன்

1000 ஆண்டுகள் அசைக்க முடியாதது பொப்பீமன் சாதனை . இவர் 7500 அடி உயரத்தில் 1968ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடந்த பத்தொன்பதாவது ஒலிம்பிக் போட்டியில் நீண்ட தூரம் பொப்பீமன் 19அடி 2 ½ அங்குலம் பாய்ந்து உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவருக்கு முன் பாய்ந்தவர் 27அடி 4 ¾ அங்குலமே பாய்ந்தார். பொப்பீமனில் சாதனை மிக மிக உச்சமானது இவர் அமெரிக்க நீக்ரோ வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

### x. கிச்சின் புனாகோசி

1868இல் பிறந்த இவர் சொட்டோகான் என்கின்ற பிரபல கராத்தே முறையின் தந்தையாவார். இவரது பாலர் பாடசாலை காலத்து தோழனான அங்கோ அசாட்டோ என்பவரின் தந்தை ஜிகுன்லியு என்பவர் இவரின் முதலாவது கராத்தே ஆசான் ஆவார். பிற்காலத்தில் அங்கோ அசாட்டாவே இவரின் வழிகாட்டியாக இருந்துள்ளார்.1930இல் ஒரு கராத்தே பாடசாலையை தொடங்கிய இவர் 1939இல் முதன் முதலாக சொடோகான்னை அறிமுகப்படுத்தினார்.

**இழை 5**

## உடலும் உள்ளமும்

மனநல குறைபாடுகள் உடலினால் உண்டாகின்றன. அஃதே போல உடல் நலக்குறைபாடுகள் மனத்தினால் உண்டாகின்றன. என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இதனை மகாபாரதம் ஏலவே கூறிவைத்துள்ளது.

உடல் இயக்கத்தையும் மன இயக்கத்தையும் சமநிலையில் வைத்திருக்கும் மையங்கள் மூளையின் வெவ்வேறு பாகங்களில் உள்ளன. ஆனால் இவைகளுக்கு இடையில் உள்ள நரம்பு முடிச்சுகள் இவை இரண்டையும் இணைக்கின்றன. எனவே ஆரோக்கியமாக இருக்கும் பொழுதும் நோயுள்ள சமயத்திலும் திரும்ப ஆரோக்கிய

நிலைக்குத் திரும்பும் பொழுதும் உடலும் உள்ளமும் இணைந்தே செயல்படுகின்றன. இரசாயணப் பொருள்களின் சமநிலையில் நம் உடலும் உள்ளமும் இயங்குகின்றன. குழந்தை பயந்து விட்டது அதனால் ஜூரம் (காய்ச்சல்) வந்து விட்டது என்கிறார்கள். பயமும் மற்ற உணர்வுகளும் மூளையில் "ஹைப்போதாலமஸ்" என்ற உறுப்பில் இருந்து வெளிப்படுகின்றன.

உடலின் வெப்பநிலையை இந்த உறுப்பு சமநிலையில் வைத்திருக்கிறது. உடலையும் மனத்தையும் கவனித்துக் கொள்கிறது பயம் ஏற்பட்டவுடன் உணர்வுகள் வெப்பநிலையில் மாறுதலை ஏற்படுத்துகின்றன. இங்கு மனோநிலை உடல் நிலையை பாதிக்கின்றது.

ஜூரம் கண்ட ஒருவரை நண்பர்கள் உறவினர்கள் போய் பார்த்து ஆறுதல் கூறுகின்றார்கள். ஜூரம் கண்டவருக்கு நம்பிக்கை ஏற்படுத்துகிறார்கள். இதனால் மனம் சீராகி உடல் வெப்பம் குறைந்து நலம் பெறுகிறார்.

இதனை இவ்வாறு கூறலாம் முதலில் உளம் பாதிக்கப்பட்டு உடல் பாதிப்படைந்தது. பின் உளம் சீர் அடைந்து நம்பிக்கையேற்பட்டு உடல் நலமடைகிறது.

மனம் பாதிக்கப்பட்டு ஜூரம் வந்தது (Psychosomatic) மனம் சீர் அடைந்து தைரியப்பட்டு உடல் நலமடைந்தது (Somato phychic)

**இழை 6**

## உடலும் உலோகமும்

i. செம்பு : உடலில் மேலதிகமாக உள்ள வெப்பத்தை வெளியேற்ற உதவும். இரத்தோட்டத்தை அதிகரிக்கும் மனிதன் முதல் முதல் பாவித்த உலோகம் செம்பு

ii. இரும்பு, வெள்ளை இரும்பு : உடலுக்கு சக்தியை கொடுக்கும். மனிதனுக்கு ஆயுதமாக இது உதவியது

iii. வெள்ளி : இது உலோகங்களின் இராணி என அழைக்கப்படுவது மட்டுமல்ல, ஏழைகளின் பரோபகாரி எனவும் கூறப்படுகிறது. தங்க ஆபரணங்களை பணக்காரர்கள் அணிய இதற்குப் பகரமாக வெள்ளி ஆபரணங்களை ஏழைகள் அணிந்து கொண்டனர். வெள்ளி உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

iv. காரியம் : கதிர்கள் ஊடுருவாத உலோகம்

v. ரேடியம் : இது மனித உயிரைக் காப்பாற்றும்

vi. பொஸ்பரஸ் : தானாகப் பற்றி எரியும். மக்கள் தீக்குச்சியாகப் பயன் படுத்திக் கொள்ள உதவிய உலோகம் இது

vii. தங்கம் : தற்கொலை எண்ணத்தைத் தவிர்க்கும். நச்சுத் தன்மையை குறைக்கும். ஆண்மையைக் குறைக்கும். பெண்மையைக் கூட்டும். வளரும் தன்மையுள்ளது. துருப்பிடிக்காது. பெறுமானம் உள்ளது. எந்த நாட்டிலும் சந்தை பெறுமானம் உள்ளது. அழகானது. பஸ்பமாக்கிச் சாப்பிட்டால் அதே நிறத்தைப் பெறலாம். வெப்பம் தாக்காது. குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளும்.

viii. கொப்பர் : வாதம், மூட்டுவீக்கம் என்பவற்றை போக்கும். கடத்தும் சக்தி மிக்கது.

ix. மைக்கா (காக்காப் பொன்) : ஒளிபுகக் கூடியது

x. அலுமினியம் : இடை குறைந்தது. இது மனிதனுக்கு பாத்திரமாக இருந்து உதவுகிறது. கரையும் தன்மையுள்ளது. அதனால் சில நோய்களுக்கு இது காரணமாகின்றது.

**இழை 7**

## சவால் விடும் நோய்கள்

i. புற்றுநோய்

ii. இருதய நோய்

iii. எக்சிமா – சொறி சிரங்கு

iv. ஆஸ்மா

v. நீரிழிவு

vi. எயிட்ஸ்

vii. டெங்கு

viii. அல்சர் – குடற்புண்

ix. கேணியா – குடலிறக்கம்

x. காசம்

## i புற்று நோய்

புற்று நோய்க்குக் காரணமாக கொழுப்பு, புரதச் சத்து புகையிலை போன்றவை என முன்னர் கூறப்பட்டது.

பிற்காலத்தில் ஆய்வு புற்றுநோய்க்கு மனமே காரணம் எனக் கூறுகிறது. என்னைப் பொறுத்தவரை பரம்பரையும் ஒரு காரணமாக இருக்கலாம் எனத் தோணுகின்றது.

## புற்று நோய் ஒரு புரியாத புதிர்

அது யாருக்கு வரும் எப்போது வரும் யாருக்கு வராது என்று யாராலும் கூறமுடியாதுள்ளது. காரணம் புற்று நோய் வாழ்க்கைமுறை மற்றும் உணவுப் பழக்கவழக்கம் சார்ந்த ஒரு உயிர்க்கொல்லி நோயாக இருப்பதுதான்.

ஆக புற்றுநோயில் இருந்து தப்பிக்கொள்ள ஒரேயொரு வழிதான் இருக்கிறது. அது புத்திசாலித்தனமாகவும் கட்டுப்பாட்டுடனும் இருந்து புற்றுநோய் வரும் முன் காப்பது.

அ) உடற் பயிற்சி செய்தல்

ஆ) சரியான உணவுகளை உண்ணுதல்

இ) புகைப்பழக்கத்தை கைவிடுதல்

போன்றவற்றால் இந்நோயிலிருந்து தப்ப வழியேற்படும்.

## ii. இருதய நோய்கள்

வாழ்வுத்திறன் அதிகரிக்க காலையில் எழுந்ததும் மெதுவாக இதயத்தை தட்டிக் கொடுக்க வேண்டும். இப்படித் தடடும் போது மார்பின் நடுப் பகுதியில் அமைந்துள்ள “தைமஸ்” சுரப்பி சுரந்து வாழ்நாளை அதிகரிக்கும்.

அதாவது நெஞ்சில் மார்பு எலும்பின் மேற்புறத்தில் இருக்கும் “தைமஸ்” கைவிரல்களை ஒன்று சேர்த்து 20 முறை நெஞ்சிலே தட்டும் போது இது சுரந்து வேலை செய்யும்.

“தைமஸ்” சுரப்பிதான் உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கிறது.

இது வெள்ளை அணுக்களை உற்பத்தி செய்கிறது. (சில இடங்களில் நடுவிரலால் மெதுவாக இருபது முறை தட்டினால் போதும் என்றும் எழுதப்பட்டுள்ளது.

இன்றைய ஆய்வு மனிதனின் 95 சதவிகிதமானோருக்கு இந்த ''தைமஸ்'' சுரப்பி வலுக்குறைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தைமஸ் சுரப்பி வலுவாக இருந்தால் மூட்டு வாதம், மன அழுத்தம் வராமல் இருக்கும். உள்ளங்கையிலுள்ள புள்ளிகளை அமத்துவதன் மூலமும் ''தைமஸ்'' சுர்பபியை உறுதியாக்க முடியும்.

## இரத்த அழுத்தம்

இதயம் ஒவ்வொரு முறையும் சுருங்கி விரிவது இரத்தத்தை உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்புவதற்கே. இவ்வாறு இதயம் இயங்கும் போது குழாய்களில் உள்ள இரத்தம் அவற்றின் உட்பகுதியில் ஒருவகையான அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதைத்தான் இரத்த அழுத்தம் என்கின்றோம்.

ஆரோக்கியமாக இருக்கும் ஒரு மனிதனின் இரத்த அழுத்தம் 120/80 என்ற அளவில் இருப்பது இயல்பானது. இரத்த அழுத்தமானது இரண்டு வகைப்படும். 120 என்பது சுருங்க அழுத்தத்தையும் 80 என்பது விரியும் அழுத்தத்தையும் குறிக்கின்றது.

இந்த அளவு கூடும்போது (Hypertention) என்றும் இந்நோய்க்கான அறிகுறி சில சமயங்களில் தலைவலி, படபடப்பு நெற்றிப் பொட்டு எலும்புப் பகுதியில் உள்ள மணிகள் துடித்தல் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். இதய வலிப்பு ஏற்படும். இதன் பின் (Heart Failure) ஏற்பட வாய்ப்புண்டு.

இதற்கு உப்பைக் குறைத்துக் கொள்ளல், தக்க உடற்பயிற்சியை செய்தல், கொழுப்பு நிறைந்த உணவுகளைத தவிர்த்தல், நாள் ஒன்றிற்கு ½ மாத்திரை ஆஸ்பிரின் சாப்பிட்டு வந்தால், நோய் தாக்கத்தில் இருந்து தவிர்ந்துக் கொள்ளலாம்.

முன்னர் ஆண்களிடம் காணப்பட்டது இப்பொழுது பெண்களிடமும் காணப்படுகின்றது. 35–45 வயதுடையவர்களை இது அதிகமாகத் தாக்குகிறது.

### iii. எக்சிமா (சொறி, சிரங்கு)

அலர்ஜி மனித உடலில் எவ்வாறெல்லாம் தோன்றுகிறது.

அ) சுவாசம் மூலம்

ஆ) உணவு மூலம்

இ) பிற காரணங்களால்

சுவாசம் மூலமாகவே பெரும்பாலும் அலர்ஜி தோன்றுகிறது. இது தூசுப் படலம் மூலமும், இரண்டாவது உணவு மூலம் ஏற்படலாம். உதாரணமாக பால், மோர், தயிர், தக்காளி, கத்தரிக்காய், சேனைக்கிழங்கு, பீர்க்கங்காய், நெய், நெய்யால் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள் மற்றும், செம்மறி ஆட்டிறைச்சி, முட்டை, இறால், நண்டு, சூனி, நெத்தலி போன்ற சிலவகை மீன்கள் ஆகியவற்றாலும், ஆரஞ்சு, எலுமிச்சம்பழம், நாத்தங்காய், சீத்தாப்பழம், இஃதே போல தலையில் பூசும் டை வேறு சாயப் பூச்சுக்கள், நைலோன் காலுறைகள்,உடைகள் போன்றவற்றாலும். இவை தவிர வீட்டில் நாம் செல்லமாக வளர்க்கும் கிளி மைனா போன்ற பறவைகளின் சிறகுகளில் இருந்து தெறிக்கும் துகள்கள். நாய், பூனை போன்ற பிராணிகளின் உடலில் நின்று உதிரும் உரோமங்கள் இவற்றின் மலசலங்கள் ஆகியவையும் அலர்ஜியை உண்டாக்குவதுண்டு.

சில மருந்துகளும் அலர்ஜியை ஏற்படுத்தும். சில விடயங்கள் எமக்கு ஒத்துக் கொள்ளாது. இதனை ஒவ்வாமை என்று கூறலாம். இத்தன்மையால் ஏற்படுவதுவே அலர்ஜ்ஜி. இந்த அலர்ஜ்ஜியால் உடல் எங்கும் நமைச்சல் (சொறிச்சல்) ஏற்பட்டு உடல் எங்கும் தடித்துக் காணப்படும். இதுவே அலர்ஜ்ஜி. இது பரம்பரை நோய் என்பதால் குடும்பமே இந்நோயில் மிக மிகக் கவனமாக இருக்க வேண்டும் இதன் அடுத்த பக்கமே ஆஸ்மா. (இழுப்பு நோய்)

## iV. ஆஸ்துமா (ஈழ நோய்)

இந்நோய் வயது வித்தியாசமின்றி எல்லோரையும் தாக்கக்கூடியது. அதாவது பாதிக்கக் கூடியது. இதனைக் கட்டுப் படுத்த பரிபூரணமாக இன்னும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. என்றாலும் அஞ்ச வேண்டியதில்லை. யோகத்தில் கூறப்படடுள்ள பிரணாயாமம் இதற்கு மிகவும் நல்லது. அதாவது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள கைசிறந்த ஔடதம் என யோகா கூறுகிறது.

இந்நோய் ஏற்பட முக்கிய காரணம் சுவாசப் பையில் உள்ள காற்றுச் செல்லும் குழாய்கள் தடைப்பட்டு, வீக்கமுற்று அதன் துவாரங்கள் சிறிதாகி சுருங்குவதே. இந்நோயினால் உலகில் 150 மில்லியன் பேரும் இலங்கையில் சுமார் 1 மில்லியன் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அ) இந்நோயைக் கட்டுப்படுத்த இளநீர், ஐஸ்கிரீம், குளிரூட்டப்பட்ட உணவுப் பொருட்களை தவிர்க்க வேண்டும்.

ஆ) பகல் 11.00 12.00 மணிவரையான காலமே இவர்கள் குளிக்க சாதகமான நேரமாகும்.

இ) குளிர்நீர் பொருத்தமில்லையென்றால் இளம் சூடான நீரைச் சேர்த்துக் கொள்ளலாம். குளிப்பதால் பிரச்சினை இருக்குமாயின் வாரத்திற்கு இரண்டு தடவை அல்லது 3 தடவை குளிக்கலாம். குளிர்காலத்தில் வெளியே நடமாடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஈ) தூசி, புகை உள்ள இடங்களைத் தவிர்க்க வேண்டும்.

உ) மின்விசிறி பாவிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இரவில் படுக்கப் போகும் போது மின்விசிறியைத தவிர்ப்பது நல்லது.

ஊ) செல்லப் பிராணிகள் வளர்ப்பதை தவிரக்க வேண்டும்.

எ) தலைமுடிக்கு டை அடிப்பதை கூடியவரை தவிர்க்க வேண்டும்.

## சில முக்கிய குறிப்பு

சிலருக்கு சில நிறங்கள், சில செல்லப்பிராணிகள், சில வீடுகள், சில மனிதர்கள், சில உணவுகள் என்பன ஒத்து வராது. இது எது தனக்கு ஒத்து வராது என்பதை அவரே அந்த நோயாளியே கண்டு பிடித்துத் தவிர்த்துக் கெண்டால் நோயில் இருந்தும் பாதுகாத்து கொள்ளலாம்.

உதாரணமாக ஒரு சிலருக்கு மஞ்சல் நிறம் ஒத்துக் கொள்ளாது, மஞ்சள் பெயின்ட் அடித்த வீட்டிற்கு சென்று வந்ததும் ஆஸ்த்துமா கூடினால் இன்னுமொரு தடைவ இதனைச் சோதனை செய்து பார்க்க வேண்டும். மஞ்சள் நிறம் அணிந்த ஒருவரைச் சந்தித்தால் நோய் கூடுகிறதா என்று பார்க்க வேண்டும். இவ்வாறு சோதனை செய்து கண்டிபிடித்துத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

## இவ்வியாதி

வளி மாசடைதல், புகை பிடித்தல், வறுமை ஆகியவற்றுடன் தொடர்புடையது.
ஆஸ்மாவுக்கு இயற்கை மருந்து ஒரு கோப்பையில் சுத்தமான தேன் எடுத்து முகர்ந்து பார்த்தால் மூச்சுத் திணறல்நிற்கும்.

இரவில் உணவு உண்ணும் பழக்கத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். மாலையில் ஆறு மணிக்கு முன் இரவு உணவை முடித்துக் கொள்ள வேண்டும்.

தினமும் காலையிலும் மாலையிலும் இரண்டு தேக்கரண்டி தேனை தண்ணீரில் கலந்து சாப்பிட வேண்டும். வெதுவெதுப்பான வெந்நீரில் காலை நனைத்து வைத்துக் கொண்டிருப்பது நல்லது. நல்ல காற்றோட்டமுள்ள அறையில் உயரமான படுக்கையில் தலையை உயரமாக வைத்துக் கொண்டு படுத்துக் கொள்ள வேண்டும்.

நெஞ்சிலும் விலா எலும்பிகளிலும் கைகளால் தேய்த்து விட வேண்டும். பெரும்பாலும் கால்கள் குளிர்ச்சியடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## V. நீரிழிவு

உலகளாவிய ரீதியில் மக்களைப் பாதிக்கும் நோய்களில் நீரிழிவும் ஒன்று.

நீரிழிவு நோயில்
டைப் I
டைப் II என இருவகையுண்டு.

நீரிழிவுக்கு தடுப்பு ஊசி ஒன்றினை "நானோ" தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்திக் கண்டு பிடித்துள்ளனர். "நானோ" என்பது மிகச் சிறிய பொருளாகும்.

நீரிழிவை ஏற்படுத்தும் செல்களைவிட ஆயிரத்தில் ஒரு பங்கு சிறிதாக இந்த "நானோ" மருந்து உள்ளது. இருப்பினும் மிகச் சக்தி வாய்ந்தது. இந்த மருந்தினைப் பயன்படுத்தி நீரிழிவு நோய் உள்ள எலிகளை குணப்படுத்தியுள்ளனர்.

இதே போல மனிதர்களுக்கும் குணமாக்கலாம் என்பது மருத்துவ விஞ்ஞானிகளின் கருத்தாகும். நீரிழிவு வியாதி உள்ளவர்கள் பின்வரும் நான்கு விடயங்களில் மிகமிக

i. நீரிழிவு பற்றிய அறிவுள்ளவராக இருக்க வேண்டும்
ii. உணவுக் கட்டுப்பாடு
iii. தேகப்பியாசம் அல்லது நடை
iv. வைத்தியரின் ஆலோசனையோடு மருந்துப் பாவனை கட்டாயம்.

அத்தோடு முகத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ அந்த அளவிற்கு பாதங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வயது போகப் போக பாதங்களின் இரத்தோட்டம் குறைவடைவது இயற்கையே அதனால் நோய் தொற்று அதிகரிக்க வாய்ப்புண்டு.

## இதை தடுக்க

அ) மிதமான சுடுநீரில் கால்களைக் கழுவுதல்

ஆ) கால் பாதங்களை உலர்ந்த நிலையில் வைத்திருக்க வேண்டும்

இ) கால் விரல் நகங்களை வெட்டும் போது கவனமாக இருக்க வேண்டும்

ஈ) கால்களுக்கு மூடிய பாதணிகளையே அணிய வேண்டும்.

## நீரிழிவு நோய்க்கான உணவு

நீரிழிவு நோயாளிகள் சில உணவுகளை தவிர்க்க வேண்டும்.சில உணவுகளை சேர்த்துக் கொள்ள வேண்டும்

**தாராளமாக சாப்பிடக்கூடியவகைள்**

காய்கறிகள், கீரை வகைகள், முட்டை (மஞ்சள் கரு நீங்கலாக), மீன், கோழி

**தவிர்க்க வேண்டியவைகள்**

கிழங்கு வகை, இனிப்புவகை

## vi. எயிட்ஸ் HIV

இந்நோய்க்கு மூன்று விடயங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.
இந்திரியம், பெண் உறுப்பு, இரத்தம்

HIV நோயுள்ளவருடன் பாதுகாப்பற்ற முறையில் பாலுறவு வைத்தல்

நோயுற்றவருக்குப் போட்ட ஊசியை மற்றவர்கள் உபயோகிப்பது (இது போதையூசியாலும் பரவுகிறது)

தாயிடம் இருந்து குழந்தை பிறக்கும் போதும், பாலுட்டும் போதும்

இரத்தம் ஏற்றும் போது (தொற்றுள்ளவரின் இரத்தம் மற்றவருக்கு ஏற்றப்பட்டால்.

1984ஆம் ஆண்டு எயிட்ஸ் நோயின் பயங்கர விளைவுகளை மருத்துவ உலகம் தெரிந்து கொண்டதும் முதன் முதலில் மருத்துவ உலகம் திக்கு முக்காடிப் போனது. ஆரம்பத்தில் சுயபால் உணர்ச்சியில் ஈடுபடுபவர்கள் மத்தியில் மட்டுமே பரவக் கூடிய ஒரு நோய் என்ற ஆறுதலான செய்தியையும் மருத்துவ உலகம் தெரிவித்தது.

தன்பால் புணர்ச்சியை மதங்கள் கடுமையாகக் கண்டித்தன. இதன் தொடரே இறைவன் தன் பால் புணர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு இறைவன் தண்டனையாக அனுப்பியுள்ளான் எனவும் எயிட்ஸ் பற்றிக் கூறப்பட்டது.

பின் வந்த ஆய்வுகள் எயிட்ஸ் நோய் இயற்கையான பாலுணர்வு உள்ளவர்களுக்கும் ஏற்படலாம் என அறியப்பட்டது.

அத்தோடு இரத்த நாளத்தின் ஊடாகவும், சுத்திகரிக்கப்படாத ஊசிகளால் மருந்தேற்றும் போதும் போதைப் பொருட்களை ஊசி மூலம் ஏற்றும் போதும் எயிட்ஸ் வைரசுகள் ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு பரவ முடியும் என்ற செய்திகளும் நாளடைவில் கிடைக்கப்பெற்றன.

இப்படியிருக்க இலங்கையில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஆசுபத்திரியில் சேர்த்த போது அந்த வாட்டில் இருந்தவர்கள் எதிர்த்தார்கள். தங்களுக்கு அவருடன் இருக்க முடியாது என வெளியேறினர். அதனால் அவர் தனியறையில் வைக்கப்பட்டார். இஃதே வேளை அவரைக் கவனிக்க எந்த நர்சும் முன்வரவில்லை. இஃதே போல டாக்டர்களும் மறுதலித்தனர்.

இது எதனைக் காட்டுகிறது எனின் எயிட்ஸ் பற்றிய பூரண விளக்கம் தெரியாமையையே காட்டுகிறது எனலாம்.

அதாவது டாக்டர்களுக்குக் கூட இதுபற்றிய அறிவு ஆரம்பத்தில் இருக்கவில்லை என்பது தெளிவாகிறது. இலங்கையில் இதுவரை கிட்டதட்ட 550 எயிட்ஸ் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். (இது 16.11.2008க்கு முந்திய புள்ளி விபரம்).

## vii. டெங்கு

இந்நோய் டெங்கு நுளம்பினால் பரவுகிறது. இந்நோய் நுளம்பு குழந்தைகளை கடிக்கும் போது உடன் காய்ச்சல் ஏற்பட்டு உரிய காலத்தில் கவனிக்காது விட்டால் இறப்பு நேரிடலாம். இந்நுளம்பு பரவும் அசுத்தமான சூழலை சுத்தமாக்குவதன் மூலம் இந்நோயைத் தடுக்க முடியும்.

டெங்கு நோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதற்கான சிகிச்சைகளை அமுலாக்க நவீன கதிரியக்க தொழில்நுட்ப முறையொன்றை சுகாதார அமைச்சு இலங்கையில் அமுல் படுத்தத் தொடங்கியுள்ளது. சிங்கப்பூர் டெங்கு நோய் நிபுணர்கள் குழுவுடன் இணைந்து இந்தச் சிகிச்சைமுறை அமுலாக்கப்படுகிறது.

### viii. அல்சர் (குடற் புண்)

உரிய நேரத்திற்கு சாப்பிடாமல் விடுவதால் இந்நோய் ஏற்படலாம். குடல்புண் என இதனை அழைப்பர். காரம், புளி போன்ற உணவுகள் இந்நோயை ஏற்படுத்தும்.

### ix. கேணியா (குடலிறக்கம்)

இதனைக் குடல் இறக்கம் என அழைக்கிறார்கள். இது பாரம் தூக்குவதால், மலச்சிக்கலால் முக்குவதால் அல்லது இயற்கையாகவே குடலைத் தாங்கி இருக்கும் பகுதி மென்மையாகிக் கிழிந்து விடுவதால் ஏற்படுகின்றது எனவும் கூறப்படுகின்றது. சிறு அறுவைச்சிகிச்சை மூலம் இதனைச் சரிப்படுத்துகிறார்கள்.

### x. காசநோய்

நேருஜீயின் மனைவி கமலா, பாகிஸ்தானின் சிற்பிமுகம்மதலி ஜின்னா, எழுத்தாளர் புதுமைப்பித்தன், கால் மாக்ஸ் ஆகியோரை காவுகொண்ட நோய் காசநோய்.

நீண்டகாலம் நிலைத்துநிற்கின்ற இருமல் அல்லது குரலில் வித்தியாசம்.

குணமடையாத புண்

தழும்பு அல்லது உண்ணி போன்றவற்றில் ஏற்படும் திடீர் மாற்றம் அல்லது விரைவான வளர்ச்சி.

மார்பகங்களில் அல்லது வெறு இடங்களில் ஏற்படும் கட்டுக்கள் அல்லது தடிப்புக்கள்.

யோனி வழியில் இருந்து அசாதாரண முறையில் இரத்தம் அல்லது சீழ் வெளியாதல்.

மலம் அல்லது சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் வித்தியாசமான தன்மை அதாவது இரத்தம் வருதல்.

அதிக காலத்திற்கு நீடிக்கும் அஜீரணம் அல்லது விழுங்குவதில் கஷ்டம் போன்ற அறிகுறிகள் இருக்கும்.

இந்நோயினை உரிய காலத்தில் கண்டு பிடித்து சிகிச்சை செய்தால் முற்றாகக் குணப்படுத்த முடியும்.

## வைத்திய முறைகள்

உலகில் பல சாத்திரங்கள் இருக்கின்றன. இவைகளில் வைத்திய சாஸ்திரமொன்றில்தான் குருட்டு நம்பிக்கைகளும் கற்பனைகளும் மலிந்து இருக்கின்றன என்பது எக்காலத்திலும் ஒரு முகமாகச் சொல்லப்படுகின்ற கருத்தாகும்.

ஆகவே மனிதனுக்கு இவ்வுலகிலே எல்லா வற்றிலும் அருமையான விலை மதிக்க முடியாத உயிர் எனும் பொருளைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்கும் வைத்திய சாஸ்திரம் உண்மையை அடிப்படையாக கொள்ள வேண்டும் என்பதை மறக்க யாருக்கும் உரிமையில்லை.

ஹனிமன் – ஹோமியோபதி வைத்திய தந்தை

## வைத்திய முறைகள் பத்து

i. அலபோதி
ii. அக்குபஞ்சர்
iii. சித்த ஆயுள் வேதம் (சீன வைத்தியமான "ஹுவாங்டி நெய்வுங் என்பது ஆயுள் வேதமே)
vi. யூனானி
v. கலர் வைத்தியம்
vi. தொடு வைத்தியம்
vii. ஹிப்னாடிசம், பேயோட்டல் – இரண்டும் மனோ வைத்தியம்
viii. ஹோமியோபதி
ix. காந்த சக்தி வைத்தியம்
x. ஆத்மீக வைத்தியம்

இழை 9

## ஆரோக்கிய விதிகள்

i. இறைபக்தியும், பக்குவமும் (எல்லாவற்றையும் ஒன்றாக நோக்கும் பக்குவம்)
ii. உழைப்பு, உடற்பயிற்சி,
iii. பரம்பரை
vi. உணவுப் பழக்கம்
v. சுத்தமும் சூழலும்
vi. தாம்பத்தியமும் துறவறமும்
vii. உபவாசம்
viii. உடல் உள ஆரோக்கியம்
ix. தீய எண்ணங்களை இல்லாமல் செய்தல்
x. எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் (இன்பம் துன்பம் இரண்டையும் ஒன்றாகவே நோக்கும் தன்மை)

நூறு வயதுக்கு மேல் வாழ வேண்டுமா 10 மணிநேரம் தூங்குங்கள். முன்பெல்லாம் எட்டு மணிநேரம் தூங்க வேண்டும் எனக் கூறப்பட்டது. அதிலும் கடின உழைப்பில்லாதவர்கள் ஆறுமணித்தியாலம் தூங்கினால் போதும் எனக் கூறப்பட்டது. இன்றைய ஆய்வு பத்து மணித்தியாலம் தூங்க வேண்டுமென்று கூறுகிறது.

அமெரிக்காவில் உள்ள போர்ட்லன்ட்ஸ்ரேட் பல்கலைக்கழக பேராசிரியர்கள் நடத்திய ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

உடலுக்கு புத்துணர்வு அளிப்பதிலும் நோய் எதிர்ப்புச் சக்தியை தூண்டுவதிலும் தூக்கம் பெரும் பங்கு வகிக்கின்றது 100 வயதைத் தொட்டவர்களிடம் நடாத்திய ஆய்வில் அவர்கள் தினமும் 10 மணிநேரம் தூங்கியது தெரியவந்துள்ளது.

தூக்கத்தில்தான் மனித உடலில் உள்ள செல்கள் தங்களைத் தாங்களே புதுப்பித்துக் கொள்ள முடிகின்றது. அத்தோடு நோய் எதிர்ப்புச் சக்தியை உத்வேகம் பெறச் செய்ய முடிகின்றது என்று அந்தப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டானான்கு தெரிவித்தார்.

தூக்கம் வருவதற்கு உடலையும் உள்ளத்தையும் தளர்த்திக் கொள்ள வேண்டும். அதாவது மூளையில் எதுவித சலனமும் இல்லாமல் செய்து கொள்வது. இதற்குக்

கடுமையான பயிற்சி வேண்டும். தூக்கம் வரத் தாமதாகும் எனத் தெரிந்தால் இதமான உணர்ச்சியை எண்ணிப் பார்த்துதூக்கம் வருகிறது, தூக்கம் வருகிறது, தூக்கம் வருகிறது என உச்சாடனம் பண்ணினால் தூக்கம் தானாக வரும்.

மனதை புண்படுத்திய எண்ணங்களை கொஞ்சமும் எண்ணாதீர்கள்.

உணவு எப்படி இருக்க வேண்டும் எனின் உங்களின் வயது உங்களின் தொழில் அல்லது வேலை, உங்களின் உடற் கூறு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். ஊதாரணமாக உங்களின் வயது எழுபதாயின் பல்லும் விழுந்திருக்குமாயின் இறைச்சியை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதுவும் வேலையின்றி வீட்டிலேயே இருப்பவராயின் நீர்ப்பதார்த்தங்களே உணவாக இருக்க வேண்டும்.

இரவு சாப்பாடு மிக முக்கியம். பசித்தால் மட்டுமே உண்ண வேண்டும். காய்ந்த வறுத்த பொரித்த உணவுகளை உண்ணக் கூடாது.

வயது ஏற ஏற உணவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

## மனத்தினால் ஏற்படும் நோய்கள்

i. ஆஸ்துமா
ii. குடற்புண்
iii. நாள்பட்ட பேதி, பெருங்குடலின் புண் மலச்சிக்கல்
vi. திடீரெனத தோன்றும் அரிப்பு நோய்
v. ஒருவகை மூட்டு நோய்
vi. ஒற்றைத்தலைவலி
vii. தைராய்டு சுரப்பிகளின் அதிக இயக்கம்
viii. நீரிழிவு நோய்
ix. இரத்த அழுத்தம், இதய இயக்கத்தில் ஏற்படும் மாறுபாடு
x. மாதவிடாய் சார்ந்த நோய்கள். மாதவிடாய் நின்றதும் ஏற்படும் மனநிலை

நாட்டமின்மை விதைகளின் பகுதிகள் பெண் முட்டைகளாக மாறுவது போன்ற விளைவுகள் ஏற்படும்.

இப்போதே ஆண்களின் விந்துகளின் சராசரி எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஆண் மலட்டுத் தன்மை பெருகுகிறது. இது மேற் கூறிய ஆணினம் பெண்ணினமாக மாறும் தன்மையைக் குறிக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

iii. உலகில் முதலாவது முஸ்லிம் பெண்களின் மாபெரும் விளையாட்டுப் போட்டி 1993ஆம் ஆண்டு பெப்ரவரி 13இல் இருந்து 19 வரை தெஹ்ரான் நகரில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியை ஈரான் ஜனாதிபதி ஹஷிமி ரப்சன்ஜானி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இந்த விளையாட்டுப் போட்டியில் அஜர்பைஜான் துருக்கி மேனஸ்தான் கஜகிஸ்தான், கிர்கிஸ்தான், பஹ்ரைன் பங்களாதேஸ் பாகிஸ்தான், மாலைத்தீவு, மலேசியா, சிரியா, ஈரான் போன்ற நாடுகளில் இருந்து 407 வீராங்கணைகள் கலந்து கொண்டனர்.

iv. இலங்கையில் ஆண் இனம் கூடுதலாக உள்ளது. பெண் இனம் அருகி வருகின்றது என கிழக்கிலே நடைபெற்ற ஒரு ஆய்வு கூறுகிறது.

அண்மையில் 80களில் இருந்து 2010வரை நடைபெற்ற இனமுறுகல் போர் என்பவற்றால், வடக்கிலும் கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் ஆண் இனமே அழிந்திருக்க வேண்டும். அப்படியாயின் பெண்கள் தொகை கூடி இப்பதுதான் முறை. ஆனால் ஆணினம் கூடியது எக்காரணம். ஆய்வுகள் பின்வரும் காரணங்களை கூறுகின்றன.

v. வாழ்க்கையில் சதமடித்த 40 ஆயிரம் பிரஜைகள் ஜப்பானில் வாழ்கின்றனர். இவர்களின் தொகை 2050இல் பத்து இலட்சமாக உயரும். ஜப்பானில் "ஒகினாவ" நகரத்தில் வயது முதிர்ந்தவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள்.

பிறந்த குழந்தை பெண்ணாயின் அதிக கவனம் செலுத்துதாது விடல் பிறந்த உடனேயே அழித்து விடுதல்.

கருவில் இருக்கும் போதே ஆணா? பெண்ணா என ஸ்கேன் பண்ணிப் பார்த்துப் பெண் ஆயின் கருவிலேயே அழித்தல் போன்ற காரணங்கள் பெண்கள் குறைவதற்கு காரணமாகலாம்.

## மனபாதிப்பை உண்டாக்கும் உடல்நோய்கள்

i. மூளைக்காய்ச்சல்
ii. மூளையில் காயம் ஏற்படல்
iii. வலிப்பு நோய்
vi. தைராய்டு சுரப்பியின் அதிக அல்லது குறைந்த இயக்கம்
v. இரத்தசோகை
vi. வைட்டமின் குறைபாடுகள்
vii. போதையின் அடிமைநிலை
viii. புற்றுநோய்
ix. எய்ட்ஸ்
x. நீரிழிவு

**இழை 10**

## சாவித்துவாரத்தின் ஊடே

i. 1973இல் எமது நாட்டு பிலியட் விளையாட்டு வீரர் எம்.ஜே.எம். லாபிர் உலகச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ii. உலகில் உள்ள எல்லா ஆண்களும் பெண்ணினமாக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இதற்கு காரணம் மனிதர்களே என்றும் அந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். நாம் பாவிக்கும் பிளாஸ்டிக் பொருட்கள், ஸம்புகள், பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றில் உள்ள ஒரு வேதி நாளமில்லாச் சுரப்பிகளைப் பாதித்து நிணநீர்களையும் ஹார்மோன்களையும் கெடுக்கின்றதாகக் கண்டு பிடித்துள்ளார்கள்.

சுற்றுச் சூழலில் இத்தகைய வேதிகளின் அறை கூடிக் கொண்டே போகின்றது.இதற்கெல்லாம் பொறுப்பு மனிதனே எனலாம்.

இப்போதே மனித ஆண்களின் விந்துகளின் சராசரி எண்ணிக்கை என்ற பெண்பால் ஹோமோன்களைப் போல் நடிக்கின்றன. இதனால் ஆண்களின் இனப்பெருக்க உறுப்புக்கள் அளவில் சுருங்குவது பால் உணர்வில்

vi. மூச்சை அடக்காமலும் வாய்வழியாக சுவாசிக்காமலும் மகிழ்வு, துக்கம், வியப்பு, தூக்கம், போகம், விழிப்பு ஆகியவை அளவுக்கு மிஞ்சாமலும் மயக்கம் தரும் பொருட்களை உபயோகிக்காமலும் இருந்தால் நூறு வயது வரை வாழலாம் என்கிறார் பரஞ்சோதி மகான்.

vii. 200 கோடி பேருக்கு ஒருவர்தான் 116வயதைக் கடந்து வாழ்கிறார்கள்.

viii. ஒரு குழந்தையின் சுவாசம் ஆரம்பிப்பது முதலாவது அழுகையின் போதுதான்.

ix. தாயின் கருவில் குழந்தை கருத்தரித்த 18வது நாளிலேயே மூளை வளர ஆரம்பித்து விடுகிறது.

x. விவாகரத்தை அனுமதிக்காத நாடு அயர்லாந்து.

# நூல் 06

# அரசியல்

## சாவிக்குறிப்பு

தனிமனிதன், நதிக்கரைகளை அண்டிக் கூட்டமாக வாழத் தலைப்பட்டபோது அக் கூட்டத்தில் பலசாலியாக, செல்வந்தனாக இருந்தவன் தலைவனானான்.

மாடுகளே அக்காலத்தில் பெரும் செல்வமாகக் கருதப்பட்டது. இப்படிப்பட்ட செல்வமான மாடுகளை வைத்திருப்பவன் தலைவனாகி அரசனாக மாறினான்.

இப்படி ஏற்பட்ட அரச பதவிக்கு சில விதிகளை மக்கள் ஏற்படுத்திக்கொண்டனர்.

விதிகளுள் அரசனுக்கு "வித்தைகள்" தெரிந்திருக்க வேண்டுமென்பதுவும் ஒரு விதியாகும்.

வேத ஞானம், பொருளாதார ஞானம், அரசியல் ஞானம் ஆகிய மூன்று மட்டுமே வித்தைகள் என்பது ஒரு சில அறிஞர்களின் கருத்தாகும்.

ஒரு சிலர் வேத ஞானத்தை வித்தையாக ஏற்றுக்கொள்வதில்லை. பொருளாதார ஞானம் மட்டுமே வித்தை எனக் கூறுவோரும் உளர்.

உலக விவகாரங்களை அறிந்தவர்கட்கு வேதங்கள் தேவையில்லை.

மற்றவர்கள் தங்களை நாஸ்திகர்கள் என்று கூறாதிருப்பதற்காக வேத ஞானம் எனும் போர்வையை தங்கள் மீது போர்த்திக்கொண்டு பாசாங்கு செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உலகில் ஏராளம் உண்டு என்ற கருத்தும் உண்டு.

இதேவேளை தண்ட நீதி எனும் அரசியல் ஞானம் மட்டுமே வித்தை என்று கூறும் அறிஞர்களும் உண்டு.
இது அர்த்த சாஸ்திரக் கருத்தாகும்.

இந்தக் கருத்துக்களோடு சேர்த்து பின்வரும் கருத்துக்களையும் சேர்த்து எடுத்து நோக்குவோம்.

**இழைகள்**

1. அரசனிடம் அல்லது தலைவனிடம் இருக்க வேண்டிய பண்புகள்.
2. பிரபலமான அரசியல் விடயங்கள்
3. பிரபலமான யுத்தங்கள்
4. பதவி பறிக்கப்பட்டோர்
5. அரசியல் கொலைகள்
6. சட்டமும் சம்பிரதாயமும்
7. அரசியல் சாதனையாளர்கள்.
8. அரசனுக்குரியது
9. யுத்த தர்மம்
10. சாவித்துவாரத்தின் ஊடே

**இழை 1**

## அரசனுக்கு அல்லது தலைவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் பத்து

i. உயர் குடிபிறப்பு
ii. தெய்வபலம்
iii. புத்திப்பலம்
iv. உடற்பலம்
v. தர்மவானாக இருப்பது
vi. உடனடி முடிவுகளை எடுக்கும் திறன்
vii. வாக்குத் திறமை, பேச்சுத்திறமை, வாதிடும் வன்மை
viii. சத்தியவானாக இருப்பது
ix. தொலைநோக்குச் சிந்தனை
x. இன்பம் துன்பம் இரண்டையும் சமமாக எடுத்துக்கொள்ளும் தன்மை

—அர்த்தசாஸ்திரம்—

இழை 2

## உலகின் பிரபலமான அரசியல் விடயங்கள்

i. பிரான்சியப் புரட்சி 16ஆம் லூயி மன்னன் கொலைசெய்யப்பட்டது. லெனின் தலைமையில் 1917 ஆம் ஆண்டு சோவியத் நாடு உருவானது.

ii. சேகுவேராவின் புரட்சி – சேகுவேரா 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தனது 39வது வயதில் சுடப்பட்டது.

iii. சீனா 1912 ஆம் ஆண்டு சன்யாட்சன் தலைமையில் குடியரசானது. பின் மாஓ சேதுங் குடியரசின் தலைவரானது.

iv. இந்திய சுதந்திரப் போராட்டம் 1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்தது.

v. அப்துல் நாசர் பாறூக் மன்னரை துரத்திவிட்டு ஜனாதிபதியாகி 1956 இல் சுயஸ்கால்வாயை தேசிய மயமாக்கியது.

vi. ஷாமன்னர் துரத்தப்பட்டு ஈரானியக் குடியரசின் ஆத்மீகத் தலைவராக இமாம் கொமைனி வந்தது. காலம் 1979 இல் பெப்ரவரி 10ஆம் திகதி.

vii. 2ஆம் உலக மகாயுத்தமும் ஜப்பானின் வீட்சியும் அத்தோடு ஹிட்லர் முசோலினியின் வீழ்ச்சி.

viii. உலக வர்த்தக நிலையம் தகர்க்கப்பட்டது உசாமா பின் லேடன் கொலை செய்யப்பட்டது.

ix. நம்றூத் அரசன் சுவர்க்கம் கட்டியது. பின் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்தது.

x. பங்களாதேஷின் தந்தை என அழைக்கப்பட்ட சேகு முஜிபுர் ரஹ்மானும் அவரது குடும்பத்தினர் ஆறு பேரும் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி கொலை செய்யப்பட்டது.

இழை 3

## பிரபலமான யுத்தங்கள்

| | |
|---|---|
| i. கொரிய யுத்தம் | 1950–1953 |
| ii. பொஸ்னிய யுத்தம் | 1992–1995 |
| iii. இலங்கை தமிழர் யுத்தம் | 1983–2009 |
| iv. சிலுவை யுத்தம் | 1095–1219 |
| v. அமெரிக்க சுதந்திர யுத்தம் | 1775–1784 |

| | |
|---|---|
| vi. ஈராக்–ஈரான் யுத்தம் | 1980–1988 |
| vii. யோம் கியூர் யுத்தம் | 1980–1988 |
| viii. ஆப்கானிஸ்தான் அமெரிக்கா | 1978–1980 |
| ix. கோசோவா யுத்தம் | 1998–1999 |
| x. இந்திய பாகிஸ்தான் யுத்தம் | 1947–1949 |

**இழை 4**

## பதவி பறிக்கப்பட்டோர்

| | |
|---|---|
| i. மன்னர் ஷா | ஈரான் |
| ii. பாறூக் மன்னர் | எகிப்து |
| iii. குருசேல் | ரஸ்யா |
| iv. நெப்போலியன் | பிரான்ஸ் |
| v. இரண்டாம் இராஜசிங்கன் | இலங்கை |
| vi. 16ஆம் லூயி மன்னன் | பிரான்ஸ் |
| vii. இடியமீன் | உகண்டா |
| viii. சதாம் உசைன் | ஈராக் |
| ix. பிர் அவுன் | எகிப்து |
| x. நம்றூத் | எகிப்து |

**இழை 5**

## அரசியல் கொலைகள்

| | |
|---|---|
| i. ஷியாவுல் ஹக் | பாகிஸ்தான் |
| ii. S.W.R.D. பண்டார நாயக்க | இலங்கை |
| iii. உதுமான் (ரலி) | சவூதி |
| iv. ஸ்ராலின் | ரஸ்யா |
| v. கேணல் கடாபி | லிபியா |
| vi. முல்லா உமர் | ஆப்கானிஸ்தான் |
| vii. பின்லாடன் | சவூதி |
| viii. ரஜீவ் காந்தி | இந்தியா |

ix. இந்திரா காந்தி இந்தியா

x. முஜிபுர் ரஹூமான் பங்களாதேஷ்

**இழை 6**

## சட்டமும் சம்பிரதாயமும்

i. சீனாவில் ஹெய்னான் பகுதியில் நாம் –லோ–லி– என்ற இன மக்கள் ஒருவனது மனைவி மாற்றான் ஒருவனுடன் உடலுறவு கொண்டுவிட்டால் அவள் தண்டிக்கப்படமாட்டாள். அவளது கணவனுக்குத்தான் சிறைத்தண்டனை கிடைக்கும். கணவனின் கவனக் குறைவான பெலயீனத்திற்கான தண்டனை.

ii. ஒரு பெண்ணை எல்லாச் சகோதரர்களும் திருமணம் செய்து கொள்ளல்

புராதன இலங்கையில் "ஒரு வீட்டுச் சாப்பாடு' என்ற முறையில் திருமணங்கள் நடைபெற்றன. இதன் பொருள் என்னவெனில் ஒரு வீட்டில் எல்லாச் சகோதரர்களும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாகும்.

இது கண்டி மன்னன் ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்தது. இங்கிலீஸ்காரர் ஆட்சியின் போது இது தடை செய்யப்பட்டது.

மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர் திரௌபதியை மணஞ்செய்ததுவும் இம் முறைப்படியே.

iii. இங்கிலாந்தில் கர்ப்பிணிப் பெண்கள் அவசர ஆத்திரத்திற்கு எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் சிறுநீர் கழிக்கலாம். காவலாளியின் தலைக் கவசத்தைக் கேட்டாலும் பொலிஸ்காரர் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால் குற்றம்.

iv. தாய்லாந்து நாட்டில் ஆண் பெண் இருபாலாரும் உள்ளாடை அணிய வேண்டும். அப்படி அணியாமல் வெளியில் உலாவினால் (மேலாடையோடு மட்டும்) தண்டனை வழங்கப்படும்.

v. அமெரிக்காவில் தன்னினத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற சட்டமும் இல்லை செய்யக்கூடாதென்ற சட்டமும் இல்லை. ஆனால் அமெரிக்கன் மேரி லேண்ட் மாநிலத்தில் ஓரினச் சேர்க்கையாளர் திருமணம் செய்யச் சட்டம் உண்டு.

vi. ஒருவன் ஒருத்தியை மட்டுமே திருமணம் செய்யலாம் என்ற விதி விவிலிய நூலில் எந்த இடத்திலும் கிடையாது. கிறிஸ்தவச் திருச்சபை மிக மிகப் பிற்பட்ட காலத்தில் வகுத்த ஒரு சட்டமே இது.

யூத மதத்தில் பழைய ஏற்பாடு முழுவதுமே இறை தூதர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. சொலமனுக்கு (சுலைமான் நபிக்கு) 700 மனைவியர் இருந்ததாக பழைய ஏற்பாடு கூறுகிறது.

vii. இஸ்லாத்தில் ஒரு தாயின் இரு பெண் பிள்ளைகளை ஒருவர் ஒரே நேரத்தில் திருமணம் செய்ய முடியாது. ஆனால் வேறு பெண்களை பலதார மணம் செய்துகொள்ளலாம். ஒரு மனைவி உயிரோடிருக்கும் போது இன்னொருத்தியை மனைவியாக்கிக் கொள்ள முதல் மனைவியின் அனுமதி வேண்டும்.

viii. அரோபியாவில் இஸ்லாத்திற்கு முன் இருந்த கலியாணச் சம்பிரதாயம் ''இஸ்திப்ழாஃ'' என அழைக்கப்பட்டது. இது தற்காலிக திருமணமாகும். இது ஈரானில் இன்றும் உண்டு. பிள்ளைகள் பிறந்தால் பிள்ளைகளை தற்காலிக கணவன் பராமரிக்க வேண்டும். பெண் ஒருத்தியை ''மஹர்' கொடுத்து அதாவது (பணம் கொடுத்து) ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் மனைவியாக்கிக் கொள்வது. குறிப்பிட்டகாலம் முடிந்ததும் இருவரும் பிரிந்துவிடுவர் அல்லது சந்தர்ப்பம் கிடைத்தால் மீண்டும் இணைந்துகொள்ளலாம். பெரும்பாலும் இத் திருமணம் நீண்டதூரப் பிரயாணிகள் அந்நிய நாட்டவராக தூர இடங்களில் போர் செய்யும் போர்வீரர்கள் போன்றோர் மத்தியிலேயே இடம் பெற்றது. கி.மு. அதாவது இலங்கையில் இஸ்லாம் பரவுவதற்கு முன் வியாபாரத்திற்காக வந்த அரேபியர்கள் இங்குள்ள சிங்கள திராவிடப் பெண்களை இவ்வாறு தற்காலிகத் திருமணம் செய்து கொண்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

பிள்ளைகள் பிறந்தால் அவர்களின் செலவிற்கு பணம் கொடுத்துச் செல்வார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் மீண்டும் வந்து சேர்ந்து கொள்வார்கள்.

ix. அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆதிவாசிகள் மனைவியை இழந்து விட்டால் வேறு ஒரு பெண்ணை விவாகம் செய்ய விரும்பினால் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? தங்களின் தாடிப் பகுதியில் சிறிய அளவில் களிமண்ணை ஒட்டிக்கொள்வார்கள். இந்தக் களிமண்ணைப் பார்த்ததும் யாராயினும் ஒரு ஆதிவாசிப் பெண் இவரிடம் மனைவியாக ஒட்டிக் கொள்வாள்.

x. பத்துப் பேர் புணர்தல். பத்துப் பேருக்குக் குறையாத ஆண்கள் ஒன்று கூடி ஒரு பெண்ணுடன் ஒருவர் பின் ஒருவராக மருவுவர். மகப்பேறு பெற்றுச் சிறிது நாள் சென்று அவள் அந்தப் பத்துப் பேரையும் அழைப்பாள். அவர்கள் எல்லோரும் மறுக்காது வந்து கூடுவர். அப்பொழுது அவள் அவர்களை நோக்கி நிச்சயமாக நீங்கள் செய்த செயலை நன்கு அறிவீர்கள். மெய்யாகவே நானும் ஒரு மகவை ஈன்று விட்டேன். இப்பிள்ளை இந்நாருக்குரிதே என்று கூறி தான் யாரை விரும்புகிறாளோ அவருடன் இணைந்து கொள்வாள். அதாவது மண முடித்துக்கொள்வாள்.

இதில் இன்னொருவகை பத்துப் பேரும் இலட்சண நிபுணரை அழைத்து வந்து அந்த பிள்ளையின் அங்க இலட்சணங்களைப் பார்த்து அதற்குரிய தகப்பனிடம் ஒப்படைப்பர்.

**இழை 7**

## அரசியல் சாதனையாளர்கள்

i. லெனின்
ii. ஆப்ரகாம்லிங்கன்
iii. பிரேமதாஸ
iv. இமாம் கொமைனி
v. அப்துல் நாசர்
vi. சேகுவேரா
vii. அறிஞர் அண்ணா
viii. மா ஓ சேதுங்
ix. எம்.ஜி.ஆர்
x. மகா அலக்சாந்தர்

### i. லெனின்

உலகப் பொதுவுடமை சிந்தனையாளர்களின் புரட்சித் தலைவர் இவர். 16 மணித்தியாலங்கள் ஓயாது உழைத்தவர். அதனால் உச்சக்கட்ட மனக்களைப்பு, உள்நாட்டுப் போர்களில் பங்கெடுத்ததால் ஏற்பட்ட உடல் நலக்குறை, பலமுறை இவருக்கு பிரயோகிக்கப்பட்ட கொலை முயற்சி இப்படியான வேளையில் இவரது தொண்டையில் சிக்கிய துப்பாக்கிக்குண்டு அதை நீக்க அறுவைச்சிகிச்சை இப்படி

எத்தனை எத்தனையோ. 1917 ஆம் ஆண்டு புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வந்த லெனின் 1924 ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி தனது 53 ஆவது வயதில் காலமானார். இவரது இழப்புப்பற்றி பிரிட்டிஸ் பிரதமர் வின்சன் சேச்சில் கூறும் போது "ரஸ்யாவின் துர்அதிஸ்டம் லெனின் பிறப்பு. அதைவிட மோசமான துர் அதிஸ்டம் அவருடைய இறப்பு" சம்பிரதாயத்திற்காகச் சொல்லாமல் நிச்சயமாகச் சொல்லலாம். எதிர்காலத்தில் விஞ்ஞான அறிவில் எதுவும் நடைபெறாலம். இறந்தவர்களைக் கூட உயிர்ப்பிக்கலாம் என்று கூறாம். அதனால் அவரது உடலைப் புதைக்காமல் பாதுகாத்து வைத்துக்கொள்வோம் எனப் பாதுகாத்தனர் ரஸ்ய மக்கள்.

## ii. ஆப்ரகாம் லிங்கன் (ஜனாதிபதி) அமெரிக்கா

லீ – ஹாட்லி ஆட்வால்ட் என்பவரால் சுடப்பட்டு இறந்தவர். ஆப்ராம் லிங்கன் பிறந்தது ஒரு ஞாயிற்றுக்கிழமை. வேலைக்குச் சேர்ந்தது திங்கட் கிழமை. இருமுறை அமெரிக்க ஜனாதிபதியானது செவ்வாய்க்கிழமை மத்திய சட்ட சபைக்குச் சென்றது புதன் கிழமை. புகழ்பெற்ற கெட்டிஸ் பர்த்சொற்பொழிவாற்றியது வியாழக்கிழமை.சுடப்பட்டது வெள்ளிக்கிழமை.

புனித வெள்ளியன்று நாடகம் பார்த்துக்கொண்டிருக்கும் போது கொல்லப்பட்டார். வாழ்க்கையில் தனது மனைவி மேரிட்டாட்டினால் கொடுமைப்படுத்தப்பட்டவர்.

அமெரிக்காவின் 16 வது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனுக்கு கொலை அச்சுறுத்தல் இருந்தும் அவர் அதனை பொருட்படுத்தவில்லை. இரும்புப் பெட்டிக்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை நடத்த முடியுமா? நான் இறந்தால் இன்னுமொருவர் ஜனாதிபதியாகி அரசியலை நடத்துவார் எனக் கூறினார்.

## iii. றணசிங்க பிரேமதாஸ

மக்கள் மத்தியில் பிறந்து மக்கள் மத்தியிலேயே வளர்ந்து மக்கள் மத்தியிலேயே வாழ்ந்து மக்கள் மத்தியிலேயே மரணமடைந்த தலைவர் றணசிங்க பிரேமதாஸ. இவர் அபூர்வ மனிதர் ஆயிரத்தில் ஒருவர்.

மக்கள் தலைவர்களாக இருந்தவர்களெல்லாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வை நாட்டில் தான் தேடினார்கள். ஆனால் இவர் நாட்டில் மக்கள் வாழும் வீடுகளில் தேடினார்.

அதனால் தான் இவர் கண்ட தீர்வுகள் ஜனசவிய, ஜங்கம கம் உதாவ ஆடை தொழிற்சாலைகள் இலவச பகல் உணவு இலவச சீருடை போன்ற சமுதாயத்தின் அடிமட்டத்தில் வறுமை சதியில் சிக்குண்டு நலிந்தோர் மெலிந்தோருக்கு நல்வாழ்வு தருகின்ற அருமையான திட்டங்களாக அவை மணம் வீசின. இவரது பத்து இலட்சம் வீடுகள் திட்டம் வெற்றியடைந்ததும் ஐ.நாடுகள் சபை இவரைப் பாராட்டியது. “ஜங்கம' என்பது நடமாடும் ஜனாதிபதிச் சேவை. நிர்வாகத்தைத் தேடி மக்கள் போய்க்கொண்டிருந்த நிலைமைகளை மாற்றி மக்களைத் தேடி நிர்வாகம் போவதுவே ஜங்கம. இப்படியே எல்லாத் திட்டங்களும், கருத்துக்கள் அனைத்தும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை மையமாகக் கொண்டிருந்தன.

இதனால் உலக நாட்டின் தலைவர் அனைவரும் இவரையும் இவரது கொள்கைகளையும் வாயாரப் போற்றினர். இதற்கெல்லாம் காரணம் இவர் ஒரு சின்னஞ்சிறு நாட்டில் வறுமையும் ஏழ்மையும் சாதிவேலிக்குள்ளும் இருந்து வந்தது. இவரது “பிரேமயிஸம்” ஒரு புதிய தத்துவம்.

அவரின் கடைசி காலங்களில் அவரது பேச்சின் சாரம் இவ்வாறு அமைந்திருந்தது. என் உடலை வேண்டுமானால் கொல்லுங்கள் ஆனால் நான் சிறுபிராயம் முதல் கட்டிக்காத்து வந்த என் ஒழுக்கப் பண்பை மட்டும் கொலை செய்யாதீர்கள்.

இலங்கை ஜனாதிபதியான இவர் தற்கொலைத்தாக்குதலில் உயிர் துறந்தார். 1993 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி கொழும்பு ஆமர் வீதியில் இவர் கொல்லப்பட்டார். மேதின ஊர்வலம் நடந்த போது இது நடைபெற்றது. இவ் ஊர்வலத்தில் ஏ.ஆர்.எம். மன்சூர் மந்திரி அவர்களோடு நானும் நடந்து வரும் போது இச்சம்பவம் நடைபெற்றது.

சத்தம் கேட்டதும் வர்த்த வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் அவர்கள் என்னைப் பார்த்து வெடிச்சத்தம் கேட்டதே என்ன அதுவென்று கேட்டார். நான் யாரோ வெடிச்சுடுகிறார்கள் (ரதிஞ்சா) என்றேன். சொல்லிவாய்மூடவே இல்லை ஊர்வலத்தில் உள்ளவர்கள் ஓடுகின்றனர். அதன் பின் மன்சூர் அவர்கள் விசாரித்ததும் தற்கொலை குண்டுத் தாக்குதல் எனச் செய்தி கிடைத்தது. நாங்கள் ஒரு அரச வாகனத்தை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டோம். எங்கு போவதென்றே தெரியவில்லை. கடைசியாக மந்திரி மன்சூர் அர்களின் வீடு போய் சேர்ந்தோம்.

## iv. இமாம் கொமைனி

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஸ்தாபகரும் இஸ்லாமிய புரட்சியின் தந்தையுமான இமாம் ஆயதுல்லாஹ் கொமைனி பல்வேறு பரிமானங்களைக் கொண்டவராகத் திகழ்ந்தார்.

இமாம் கொமைனி ஒரு மதபோதகராக தனது வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இமாம் கொமைனியை நாடு கடத்தினர். இது கொமைனியின் புகழை உலகறியச் செய்தது. இவர் பிரான்சில் இருந்து கொண்டே ஷாவுக்கு எதிராக கசெட்டுகள் துண்டுப் பிரசுரங்கள் அனுப்பிக் கொண்டே இருந்தார்.

கோமைனி கி.பி. 1900இல் பிறந்தார். இவர் மார்க்க அறிஞர்களதும் போராளிகளினதும் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவர் நஜாபிலும் ஸாமாராவிலும் கல்வி கற்றவர்.

இவரின் தந்தையார் அவரது 42வது வயதில் சில கொலைஞர்களால் கொலை செய்யப்பட்டார்.

கோமைனி சிறுவயதிலேயே சுயகட்டுப்பாடும் ஒழுக்கமும் உள்ளவராகத் தன்னை ஆக்கிக் கொள்ளவே முயற்சித்தார்.

1946 நவம்பர் மாதம் 4ஆந் திகதி இரவு "கும்" நகரம் முற்றிகையிடப்பட்டு இமாம் கொமைனி கைது செய்யப்பட்டு துருக்கிக்கு நாடு கடத்தப்பட்டார்.

இமாம் கொமைனி துருக்கியில் இருந்து ஈராக்கிற்கு நாடு கடத்தப்பட்டார். இங்கிருந்து பல நூல்களை எழுதினார்.

கோமைனி "மெண்ராபாத்" விமான நிலையத்தில் இருந்து நேராக புரட்சியிலே தனது உயிரைத் தியாகம் செய்தவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள பெஹெஸ்திஸஹ்ரா மையவாடிக்குச் சென்று அங்கிருந்து மக்கள் முன்னிலையில் சொற்பொழிவாற்றினார்.

பெப்ரவரி மாதம் 10ம் திகதி விடுத்த பகிரங்க அறிவித்தலில் அன்று மாலை 4.00 மணிக்கு நாட்டில் அமுல் செய்யப்பட்டிருந்த இராணுவச் சட்டத்தை மீறுமாறு மக்களுக்கு கட்டளை இட்டார். அதனால் மக்கள் சட்டத்தை மீறி தெருக்களில்

அணிதிரண்டு பொலிஸ் நிலையங்களையும் சிறைச்சாலைகளையும் தாக்கினார்கள்.

மறுநாள் அரசாங்கத்தின் கேந்திர நிலையங்கள் வீழ்ந்தன. இமாம் கொமைனி அவர்கள் எதுவித தடையுமின்றி ஆத்மீகத் தலைவரானார்.

கம்பீரமும் கவர்ச்சியான தோற்றமும் கொண்டவர். இமாம் கொமைனி அவர்கள் தமது, தனித்துவம், கௌரவம், சுதந்திரம், தலைவிதி, ஐக்கியம், கலாச்சாரம் மற்றும் உரிமைகளின் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக கிளர்ந்து எழுமாறு அவர் முஸ்லிம் உலகிற்கு எடுத்துரைத்தார்.

பாரிசில் அஞ்ஞானவாசமிருந்தவாரே இஸ்லாமியப் புரட்சியின் வெற்றியை நெறிப்படுத்திய மாமனிதர் இவர். 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த முடியாட்சியொன்றையும் அதற்குத்துணை போன மேற்கத்திய வல்லரசுகளையும் எதிர்த்து நின்றதன் மூலம் அவர் உலகுக்கு அறிமுகமானார்.

இதன் மூலம் நவீன உலகில் இஸ்லாத்தின் மூலம் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வழியை ஆரம்பித்து அதில் வெற்றியும் கண்ட முன்னோடி இவர்.

உதுமானிய பேரரசின் வீழ்ச்சியுடன் இஸ்லாம் அழிந்தது என்ற நிம்மதியில் இருந்த மேற்கத்திய வல்லரசுகள் இவரது எழுச்சி கண்டு குழப்பமடைந்தனர். இதேவேளை இவர் மத நம்பிக்கையும் அரசியல் சித்தாந்தமும் ஒரு போதும் ஒன்று இணைய முடியாது என்ற நம்பிக்கையை தனது புரட்சியின் வெற்றியால் தகர்த்தெறிந்தார்.

1இவரின் புரட்சி கிலாபத் ஆட்சியை தொடர வழியமைத்தது எனலாம். யூதர்களின் திட்டமிட்ட சதி இஸ்லாமிய நாடுகளில் ஊடுருவியுள்ளது என்பதை எடுத்துக் காட்டி “அமெரிக்காவை மாபெரும் சைத்தான்” என கொமைனி அவர்கள் வர்ணித்தார்கள்.

1979 பெப்ரவரி மாதம் 10ம் 11ம் திகதியின் ஈரானில் இஸ்லாமிய ஆட்சி ஆரம்பமாகியது.

## V. அப்துல் நசார்

"The Boss" தலைவர் என்றும் நைல் நதியின் புத்திரன் என்றும் மக்கள் இவரை அழைத்தனர்.

1952ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் திகதி இளம் ஆமி வீரர்கள் குழுவொன்று எகிப்து அரசின் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

இவர் இறந்த போது, இவரது இறுதி ஊர்வலத்தில் ஒரு கோடிக்கு மேல் மக்கள் நடந்து சென்றார்கள். இது உலக சாதனை.

எகிப்தின் புரட்சி ஒரு தொடர் இதன் ஆரம்பம் ஒராபி பாஷா

இரண்டாவது முஸ்தபா

மூன்றாவது முகம்மது பசீட்

நான்காவது அப்துல் நாசர்

இவர் பிறந்தது அலக்சாந்திரியாவில் 1918 ஜனவரி 15இல்

இவர் தந்தை தபாலக ஊழியர். அப்துல் நாசர் குடும்பத்தில் மூத்த மகன். இவருடைய தாயார் நைல்நதி பள்ளத்தாக்கின் வடபுலத்தைச் சேர்ந்தவர். அப்துல் நாசர் வாசிக்கும் பழக்கமுள்ளவராக இருந்தார்.

அதனால் இவர் மகா அலெக்சாந்தர் ஜூலிய ஸீஸர், நெப்போலியன்போனபாட், மகாத்மா காந்தி போன்றோரின் வரலாறுகளை வாசித்து தன்னுள் வாங்கிக் கொண்டார்.

## vi. சேகுவேரா

நீ கொல்லப்போவது ஒரு மனிதனைத் தான் புரட்சியை அல்ல. நாங்கள் புதைக்கப்படவில்லை விதைக்கப்படுகிறோம் என்ற பஞ்சியடலொக் சொன்னவரே சேகுவேராதான்.

1928ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் திகதி ஆர்ஜன்டினாவில் பிறந்தவர். 1967 ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி பொலிவியாவில் இறந்தார்.

கியூபாவில் பெடல்கஸ்ரோவின் கம்யூனிஸ அரசாங்கம் மலர்வதற்கு அஸ்திவாரம் போட்டது சேகுவேராதான்.

இவர் ஆர்ஜன்டினாவில் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். எர்னஸ்டோ சேகுவேரா மரணமடைந்தது 2007 ஒக்டோபர் 9ஆம்திகதி.

இவர் கியூபா புரட்சியின் முக்கிய பங்காளி.

இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கைவிடப்பட்ட பாடசாலை ஒன்றில் சிறைவைக்கப்பட்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார். அப்போது அவருக்கு வயது 39. இவரைச் சுட்டபின் பொலிவிய இராணுவ வீரன் மாரியோடெரான் லத்தீன் அமெரிக்க மார்க்ஸிஸ் புரட்சியாளர் ஏர்னெஸ்ட் சேகுவேரா கம்யூனிஸ்களின் சின்னமாக கருதப்பட்டவராவார்.

கம்யூனிசத்தை நூறுவீதம் எதிர்க்கும் அமெரிக்காவில் கம்யூனிசத்தை விதைத்தவர் இவர். கியூபா நாட்டில் பெடல்கஸ் ரோவின் கம்யூனிஸ அரசாங்கம் அமைவதற்கு துணை நின்றவர் இவர்தான்.

இவர் பெடல்கஸ்ரோவின் நண்பனாக மாறியதும் கியூபாவை ஆட்சி செய்த படிஸ் சர்வதிகாரியை தாக்க சேகுவேராவின் கொரில்லாப் படையணி உதவி செய்தது.

அதனால் கியூபா அரசு பிடல்கஸ்ரோவின் கைக்குவந்தது. அதன்பின் சேகுவேராவை பெடல்கஸ்டோ பொருளாதார அமைச்சராக்கினார்.

கியூபாவை பன்னெடுங்காலமாகச் சுரண்டி வந்த அமெரிக்க நிறுவனங்களின் உடைமைகளை சேகுவேரா பறிமுதல் செய்தார்.

1959 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி கியூபாவின் புரட்சி தலைமைத்துவத்திற்கு சர்வதேச ரீதியில் வலுவூட்டும் எண்ணத்திலேயே இலங்கைக்கு வந்தார்.

## vii. அறிஞர் அண்ணா

சாதிப் பிரச்சினைக்கு தீர்வு கண்டவர்

மது ஒழிப்பு

கடமை கண்ணியம் கட்டுப்பாடு

இலக்கிய ஜாம்பவான்

காஞ்சிமா நகரில் அறிஞர் அண்ணா பிறந்தார். இவரது உண்மைப்பெயர் நடராஜன் அண்ணாத்துரை. இவர் தமிழ் மொழியை எல்லோரும் விரும்பிக் கேட்கச் செய்தவர் அண்ணாவின் மூலம் தங்கத் தமிழ் தகதகத்தது.

இவர் பிறந்தது 15.09.1909இல் இவர் 1930 ஆம் ஆண்டு இந்திராணியை திருமணம் செய்து கொண்டார். 02.02.1960 இல் இறையடியெய்தினார்.

இவர் இறைவன் இல்லையென்று சொல்லவில்லை பல தெய்வம் இல்லையென்றே கூறினார். பேராசிரியர் கல்கி தலைமையில் தலையங்கம் இல்லாக் கரும்பலகையில் உள்ள கருமை, பற்றி அண்ணா தன் அறிவுக் களஞ்சியத்தை பிரயோகித்து ஆற்றிய உரையினால் அண்ணாவுக்கு "அறிஞர்" பட்டம் தேடி வந்தது.

அண்ணா பொடி போடும் பழக்கமும், வெத்திலை சாப்பிடும் பழக்கமுடையவர். அதனால் அவருக்கு புற்றுநோய் ஏற்பட்டது. இறப்பும் அதனாலேயே ஏற்பட்டது. இரண்டாவது உலக ஆராய்ச்சி மாநாட்டை நடத்தியவர். அண்ணாவுக்கு அண்ணா பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது.

### viii. மாஓ சேதுங்

சர்வதேச அரங்கில் சீன மக்கள் குடியரசு உதயமானபோது அதை ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஏனைய புரட்சிகர சக்திகளும் உட்சாகத்துடன் போற்றி வர வேற்றன.

சீன மக்களைப் போலவே மற்றைய நாடுகளும், அதன் மக்களும் வறுமைப் பிடியில் இருந்து விடுபட்டு வெற்றிநடை போட எண்ணினர்.

இதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்தான் மாஓ சேதுங்.

"மாவோயிஸ்டு" என்ற பதம் உலகெங்கும் பிரபலமாகக் காரணமானவரே மாஓதான்.

### ix. எம்.ஜி.ஆர்

இந்த உலகில் எத்தனையோ மாந்தர் நித்தம் நித்தம் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், இறக்கிறார்கள். ஆனால் ஒருசிலர் மட்டுமே மக்கள் மனத்தில் நிலைத்து வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் மறைந்த மாமனிதர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

"ஆயிரத்தில் ஒருவன்" என திரையுலகிலே பெயர்பெற்ற பொன்மனச் செம்மல் இவர்தான்.

இவர் இலங்கையில் 17.01.1917ல் கண்டியில் பிறந்தார். இவரது பூர்வீசம் கேரள.

எம்.ஜி.ஆர் பிறந்ததும் தந்தை இறந்து விட்டார். அதனால் இலங்கையில் இருந்து தென்நாடு (தனுஸ்கோடி) வந்து சேர்ந்தார்கள். சிறுவனாக இருக்கும் போதே நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார்.

1934இல்ல் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார். வறுமை பறந்தோடியது. தான் வறுமையில் வாடியது போல் மக்கள் வறுமையில் வாடக் கூடாது என்ற உயர் எண்ணத்தில் ஏழைகளுக்கு உதவுவதை தனது இலட்சியமாகக் கொண்டார்.

இதனைதான் நடிக்கும் படங்களிலும் எடுத்துக் கூறிக் கொண்டே இருந்தார். "நான் ஆணையிட்டால்" என்ற பாடல் வரிகளைப் பொன்ற பல பாடல் வரிகளைதான் நடிக்கும் படங்களில் சேர்த்துக் கொண்டார்.

கேரளநாட்டில் கருத்தரிப்பு. இலங்கையில் பிறப்பு, தமிழ் நாட்டில் வளர்ப்பு எங்கு சென்றாலும் வறுமை வாட்டி வதைப்பு. இருந்து வறுமையை எதிர்த்துப் போராடி வெற்றிக்கண்ட மனிதன் என்ற உயிர்த்துடிப்பு மக்களின் வறுமை போன்ற அரசியலில் அண்ணாவோடு சேர்ந்தார். அண்ணாவிற்குப் பின் ஆஸ்பத்திரியில் கட்டிலில் இருந்து கொண்டே தென்நாட்டு மக்களின் மனங்களை வென்று தமிழ் நாட்டின் முதலமைச்சரானார். உழைப்பால் தான் உயர்ந்தது மட்டுமல்லாமல் மற்றவரையும் உயர்த்திய உத்தமர் எம்.ஜி.ஆர்.

பெற்றோர் : மருதூர் கோபால மேனன் சத்யபாமா
1977 – 1987 வரை மூன்றுமுறை தமிழக முதல் அமைச்சராக இருந்தவர்.

## X. மகா அலெக்சாந்தர்

எட்டு ஆண்டுகளில் 18 ஆயிரம் கிலோமீற்றர் பயணம் செய்துள்ளார்.

நான்கு பெரிய நதிகளைக் கடந்துள்ளார். அவன் கண்களுக்குத் தெரிந்த மொத்த உலகமும் அவனுக்குச் சொந்தமாக இருந்தது. பயணம் தான் அவனது வெற்றிக்குக் காரணம்.

அழகிய தோற்றமும் அபாரத் திறமையும் கொண்டவர். நண்பர்களிடமும் எதிரிகளிடமும் பரிவோடு நடந்து கொள்வதில் இவனுக்கு நிகர் யாருமில்லை என்று கூறலாம்.

உலகின் பெரும் பகுதியை ஒன்பது ஆண்டுகளில் வெற்றி கொண்டவன் இவன். கிறீசில் இருந்து இந்தியா வரை இவனது பேரரசு பரவி இருந்தது. கி.மு. 336இல் தனது தகப்பன் சதிகாரர்களால் கொல்லப்பட்டதும். தனது 20 வது வயதில் அலெக்சாண்டர் அரசனானான். சிறந்த அறிஞரான அரிஸ்டாட்டிலிடம் கல்வி கற்றார்.

முதல் வெற்றி பாரசீகரோடு போரடியே பெற்றுக்கொண்டான். அதன்பின் எகிப்து நைல் நதிக்கரையில் அலெக்ஸாண்டர் என்ற புதிய நகரத்தை நிறுவினான். நம்பிக்கையோடு ஒரு செயலை செய்தால் வெற்றி நிச்சம்ய என்பதில் நம்பிக்கை கொண்டவன் அலெக்சாண்டர். தொடர்ந்து ஆசியாவின் ஆப்கானிஸ்தான் சமரர்க்கண்ட பகுதிகளை வென்றான்.

இந்தியாவின் பஞ்சாப் மன்னரை எதிர்த்து நடந்த போர் தான் அலெக்ஸாண்டரின் கடைசிப்போர்.

கிரேக்கத்தில் இருந்து எகிப்து, பாரசீகம் ஆசியாமைனர், இந்தியாவின் சிந்துவெளி வரை படை நடத்தியவர். 35 வது வயதில் எதியோப்பியாவில் மரணமடைந்தார்.

## இழை 8

## அரசனுக்குரியது

படை, குடை (வெண் கொற்றாக்குடை) கொடி, முரசு, புரவி (குதிரை), களிறு (யானை), செங்கோல், தார் (மாலை), தேர், சிம்மாசனம்

## இழை 9

## யுத்ததர்மம்

i. பெண்களுக்கு, முதியோருக்கு குழந்தைகளுக்கு தீமை செய்யாமை
ii. காய்க்கும் மரங்களை வெட்டாமை
iii. எதிரியை நெருப்பால் தாக்காமை
iv. பயன்தரு மிருகங்களை கொல்லாமை
v. வீடுகளுக்கும் உயிர்களுக்கும் நெருப்பு வையாமை
vi. சரண் அடைந்தவனை கொல்லாமை
vii. ஒழிந்திருந்து தாக்காது நேருக்கு நேர் நின்று தாக்குதல்
viii. உணவு பண்டங்களை நாசம் செய்யாமை
ix. தூதுவனைக் கொல்லாமை
x. விளை நிலங்களை தீயிட்டு கொழுத்தாமை

இழை 10

## சாவித்துவாரத்தின் ஊடே

1. நாடுகளும் நாணயங்களும்
2. சர்வதேசக் குறியீடுகள்
3. நாடுகளின் தலைநகர்
4. நாடுகளின் சுதந்திர தினம்
5. விசேட பெயர்களால் அழைக்கப்படும் நாடுகள்
6. உலகில் மிகப் பெரியவை
7. உலகம்
8. தபால் வரலாறு
9. உலகில் சனத்தொகை
10. கியூபா விடுதலை பெற்றது.

### 1. நாடுகளும் நாணயங்களும்

| | | |
|---|---|---|
| i. ஒஸ்ரியா | AT | சிலிங் |
| ii. சவூதி | BH | (றியாத்) |
| iii. பங்களாதேஷ; | BD | ராக்கப |
| iv. பெல்ஜியம் | BE | பிராங் |
| v. புறூணை | BN | டொலர் |
| vi. கனடா | CA | டொலர் |
| vii. அவுஸ்திரேலியா | AU | டொலர் |
| viii. சீனா | CN | ரெஸ்மின்பியுவான் |
| ix. சைப்பிரஸ் | Cy | பவுண் |
| x. இலங்கை, இந்தியா | RS | ரூபா |

### 2. சர்வதேச குறியீடுகள்

| | |
|---|---|
| i. ஒலிவ் மரத்தின் இலை | ஒலிம்பிக் |
| ii. புறா | சமாதானம் |
| iii. சக்கரம் | வளர்ச்சி |

| | |
|---|---|
| iv. தாமரை | பண்பாடு நாகரிகம் |
| v. கறுப்புக்கொடி | எதிர்ப்பு |
| vi. எலும்புகள் மத்தியில் மண்டையோடு | ஆபத்து அபாயம் |
| vii. சிவப்பு விளக்கு | ஆபத்து, நிறுத்து |
| viii. கையில் தராசு | நீதி |
| ix. அரைக் கம்பத்தில் கொடி | துக்கம், இரங்கல் |
| x. மஞ்சள் கொடி | தொற்றுநோய் |

## 3. நாடுகளும் அதன் தலைநகரங்களும்

| | |
|---|---|
| i. பெல்ஜியம் | பிரான்ஸ் |
| ii. ஆர்ஜன்டினா | போனஸ் எயாரிஸ் |
| iii. அரூபா | ஒரெஞ் ஜென் ரெட் |
| iv. பல்கேரியா | சோஃபியா |
| v. பேர்முடா | ஹமில்ரன் |
| vi. பிரான்ஸ் | பாரிஸ் |
| vii. பிரேசில் | பிரேஸ்லியா |
| viii. ஜோர்டான் | அம்மான் |
| ix. பின்லாந்து | ஹெல்சிங் |
| x. இலங்கை | சிறீ ஜயவர்தனபுர |

## 4. நாடுகளின் சுதந்திர தினம்

| | |
|---|---|
| i. அவுஸ்திரேலியா | ஜனவரி 4 |
| ii. இலங்கை | பெப்ரவரி 4 |
| iii. பெல்ஜியம் | ஜூலை 21 |
| iv. சீனா | ஒக்டோபர் 10 |
| v. கனடா | ஜூலை 01 |
| vi. பிரான்ஸ் | ஜூலை 14 |
| vii. இந்தியா | ஓகஸ்ட் 15 |
| viii. இஸ்ரவேல் | ஏப்ரல் 03 |

| | |
|---|---|
| ix. இத்தாலி | மார்ச் 26 |
| x. ஜப்பான் | ஏப்ரல் 29 |

## 5. விசேட பெயர்களால் அழைக்கப்படும் நாடுகள்

| | |
|---|---|
| i. ஐரோப்பாவின் தொட்டில் | சுவிட்சர்லாந்து |
| ii. ஐரோப்பாவின் நோயாளி | துருக்கி |
| iii. இருண்ட கண்டம் | ஆபிரிக்கா |
| iv. உலகின் கூரை | திபேத் |
| v. ஆயிரம் நதிகள் கொண்ட நாடு | பின்லாந்து |
| vi. ஆறகள் இல்லா நாடு | சவூதி |
| vii. உலகின் சர்க்கரை கிண்ணம் | கியூபா |
| viii. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு | நோர்வே |
| ix. சூரியன் உதிக்கும் நாடு | ஜப்பான் |
| x. புனித பூமி | ஜெருசலேம் |

## 6. உலகில் மிகப் பெரியவை

| | |
|---|---|
| i. கண்டம் | ஆசியா |
| ii. சமுத்திரம் | பசுபிக் |
| iii. தீவு | கிறின்லாந்து |
| iv. மலை | இமயம் |
| v. பாலைவனம் | சஹாரா |
| vi. நதி | மிசூரி, மிசிசிப்பி |
| vii. துறைமுகம் | ரொடர்ரடாம் |
| viii. நூலகம் | லெனின் தேசிய நூலகம் – ரஸ்யா |
| ix. எரிமலை | கொட்டப்பாங்கு |
| x. செயற்கைத்தோட்டம் | மியாட் |

## 7. உலகில்

i. Iதொள்ளாயிரம் மில்லியன் வருடங்களின் பின்னர் புவியியல் உயிரினங்கள் யாவும் அழிந்து போகும்.

ii. சூரியன் 250 மடங்கு விரிவடைந்து சிவப்பு நிற நட்சத்திரமாக மாறும்.

iii. உலகம் அதிகபட்சம் 1200 கோடி மனிதர்களைத்தான் தாங்கும்.

iv. உலகில் காகிதத்தால் ஆன பணத்தை சீனர்கள் தான் 1910ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினர்.

v. உலகில் முதல் கடன் அட்டையை 1949 ஆம் ஆண்டு பிராங்க் மென் நமாரா என்பவர் அறிமுகப்படுத்தினார்.

vi. உலகில் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க

vii. Iஇந்தியாவில் பதவியில் இருக்கும் போது இறந்த ஜனாதிபதி சாக்கீர் உசைன்

viii. பாண்டுங் மாநாடு ஆரம்பமானது 1955இல்

ix. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது 1945இல்

x. மார்க்கிரட்தச்சர் இங்கிலாந்தின் பிரதமரானது 1925 இல்

## 8. உலகின் தபால் வரலாறு

i. புறாவில் கட்டியனுப்புதல்

ii. மனிதன் எடுத்துக் கொண்டு ஓடுதல்

iii. குதிரையில் எடுத்துச் செல்லல்

iv. புகையிரதத்தில்

v. விமானத்தில்

## 9. உலகின் சனத்தொகை

| ஆண்டு | தொகை |
|---|---|
| 1100 | 33 கோடி |
| 1200 | 38 கோடி |
| 1300 | 42 கோடி |
| 1400 | 46 கோடி |
| 1500 | 50 கோடி |

| | |
|---|---|
| 1600 | 60 கோடி |
| 1700 | 72 கோடி |
| 1800 | 160 கோடி |
| 1900 | 170 கோடி |
| 2000 | 600 கோடி |

**10. கியூபா விடுதலை பெற்ற ஆண்டு 1902**

# நூல் 07

# மானிட இயல்

**சாவிக்குறிப்பு**

சக்தி, பிரபஞ்சம், உயிர்கள், இறைவன், உலகம், மனிதன். எப்படிப்பார்த்தாலும் பொருளும் முடிவும் ஒன்றுதான்.

உலகில் மனிதன் அனுபவத்தின் ஊடே வாழ்க்கையை இலகுவாக்கி வெற்றிபெற அல்லது சந்தோசமாக வாழச் சில வழிகளைக் கண்டான். இந்த வழிகளினூடே மற்றவர்களையும் வாழுமாறு கேட்டுக்கொண்டான்.

இதேவேளை மனிதனின் அங்க இலட்சணங்களைக் கொண்டு அவன் எப்படி இருப்பான் என்றும் அனுபவத்தின் மூலமும் ஆய்வின் மூலமும் கண்டு அதனை மனிதன் இலகுவாகப் புரிந்து கொள்ள அறிவியல், கலை, இலக்கியம், கலாசாரம் எனப் பகுத்துக்கூறி வைத்தான்.

இதனை இந்த அத்தியாயத்தில்

**இழைகள்**

1. மறக்க முடியாத மனிதர்கள்
2. பாதாதிகேசம்
3. வெற்றிக்கான வழிகள்
4. செய்யக் கூடியது
5. செய்யக் கூடாதது
6. கலை, இலக்கிய, ஜாம்பவான்கள்
7. நட்பிற்கு இலக்கணமானவர்கள்
8. மின்னலின் போது
9. கடுகுச் செய்திகள்
10. சாவித்துவாராத்தினூடே

என்ற இழைகளினூடே ஆராய்வோம்.

**இழை 1**

## மறக்க முடியாத மனிதர்கள்

i. கொன்பூசியஸ்
ii. அல்பிரட் நோபல்
iii. நீல் ஆம்ஸ்ரோங்
iv. ஆர்க்கிமிடிஸ்
v. தொலமி
vi. மார்ட்டின் லூதர் கிங்
vii. சோக்கிரட்டீஸ்
viii. எட்டாம் எட்வேட்
ix. ஹெலன் கெல்லர்
x. விக்டோரியா மகாராணி

## i கொன்பூசியஸ்

இவர் சீன நாட்டைச் சேர்ந்தவர். பெண்களுக்கான ஒழுக்கக் கோவையை உருவாக்கியவர். ஜப்பானில் இன்றும் இவரது ஒழுக்கக் கோவை, பெண்களின் ஒழுக்கக் கோவையாகப் பயன்படுகிறது.

இவர் கிமு. 551 இல் சீனாவின் ஷாண்டுங் மாநிலத்தில் பிறந்து கி.மு. 479 இல் இறந்தார்.

இவர் உண்டாக்கிய மதத்தின் பெயர் "குங்சியா ஓ" அல்லது "பூ சியா யோ" என்பதாகும்.

சீன அரசின் உதவியோடு கல்வி நிறுவனமொன்றை ஆரம்பித்தார். இந்த நிறுவனத்தின் மூலம் முன்னேற்றம் வாழ்வியல் நெறிகள் போன்ற பாடங்களை இளைஞர்கட்கு கற்பித்தார்.

இசைத்துறையில் ஆர்வம் உடையவராக இருந்த இவர் மன அமைதிக்கு இசை மருந்தாகும் என்றார். சீனர்கள் தன்னை தெய்வமாகக் கொள்வதை இவர் விரும்பவில்லை.

கன்பூசியசின் கருத்துப்படி "ஜென்" "லி" ஆகியவையே முக்கிய இரு நற் பண்புகளாகும்.

"ஜென்" என்பது அன்பு எனச் சில இடங்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "லி" என்பது ஒழுக்கமுறை வழிபாட்டு முறை ஆகியவற்றைக் குறிக்கும். கொன்பூசியசின் பொன்னான விதி "உனக்கு மற்றவர்கள் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாயோ அதையே நீ மற்றவர்களுக்குச் செய்"என்பதாகும்.

## ii. அல்ப்ரட் நோபல்

அல்ப்ரட் நோபல் 1834 ஆம் ஆண்டு அக்டோபர் 21ஆம் திகதி ஸ்டொக்ஹோம் நகரில் பிறந்தவர்.

இவர் தன் கல்வியை ரஸ்யாவில் முடித்துவிட்டு அமெரிக்கா சென்று இயந்திரவியலில் சிறப்பு பயிற்சி பெற்றார்.

ஐந்து மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த இவர் அறிவியலிலும், இலக்கியத்திலும் சிறந்து விளங்கினார்.

வெடிமருந்து தொடர்பான ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டார். இதனால் இவர் "டைனமைட்" எனும் வெடிமருந்தைக் கண்டுபிடித்தார். இந்த "டைனமைட்" அல்ப்றட் நோபலுக்கு புகழையும் செல்வத்தையும் தேடிக்கொடுத்தது.

ஆனால் "டைனமெட்" அழிவை ஏற்படுத்த பயன்படுதவது கண்டு மனம் வருந்தினார். இதற்குப் பரிகாரமாகவே தான் தேடிய செல்வத்தை மக்களுக்காக செலவு செய்ய எண்ணினார். இதன்மூலம் ஏற்பட்டதுவே நோபல் பரிசுத் திட்டம். இது 1895 இல் ஆரம்பிக்கப்பட்டது. உலகில் புதிய கண்டுபிடிப்புக்களுக்காக புதிய ஆக்கங்களுக்காக திறமையான சில இலக்கியங்களுக்காக வழங்கப்படும் உலகின் மிகப் பெரிய பரிசுத்தொகை இதுவே. இவர் 16–12–1896 ஆம் ஆண்டு காலமானார்.

### iii. நீல் ஆம்ஸ்ரோங்

ஆம்ஸ்ரோங் அமெரிக்க விண்வெளி வீரர். சந்திரனில் முதன் முதல் கால்வைத்த மனிதர் என்ற வகையில் இவரையும் நாம் மறக்க முடியாத மனிதர்களில் ஒருவராகக் கொள்ள முடியும்.

விண்வெளிப் பயணம் என்பது உயிரை துச்சமாக மதித்துப் புறப்படும் பயணம். அதிலும் வேறு ஒரு கிரகத்தில் கால் வைத்தல். அதுவும் அங்கு நீரில்லை, பிராணவாய்வு இல்லை, மனிதனுக்குத் தெரிந்த எதுவுமில்லாத ஒரு கிரகத்தில் போய் கால் பதித்தல் என்பது கற்பனைக்கே எட்டாத ஒரு விடயம். இதனைச் செய்வதற்கு துணிந்து முன்வந்த மனிதர் என்ற வகையில் இவரையும் மறக்க முடியாத மனிதராகக் கொள்ள முடியும்.

### iv. ஆர்க்கிமிடிஸ்

ஆர்க்கிமிடிஸ் குளித்துக்கொண்டிருந்த போது நீண்ட காலமாக தேடிக்கொண்டிருந்த கேள்விக்கு விடை கிடைத்ததும் தான் நிர்வாணமாக குளித்துக்கொண்டிருப்பதையும் மறந்து கிரேக்கத்தின் தெருவிலே "யுரேக்கா யுரேக்கா" என்று கத்திக்கொண்டு ஓடினார். "யுரேக்கா" என்றால் கண்டுபிடித்து விட்டேன் என்பது பொருள். இவர் கண்டுபிடித்தது என்னவெனில் பொருட்களின் அடர்த்தி பற்றிய நெம்புகோல் தத்துவம் என்பதுவே. கிரேக்கத்தின் சிசிலி என்ற பகுதியில் சிரகூஸ் நகரில் கி.மு. 287 ஆம் ஆண்டு ஆர்க்கிமிட்டிஸ் பிறந்தார்.

இவரது தந்தை ஓர் ஆராய்ச்சியாளர். குடும்பம் செல்வமிக்கது. அதனால் தனது மகன் நன்கு கல்வி கற்று தன்னைப்போல் ஆராய்ச்சியாளராக வரவேண்டும் என்பதற்காக படிப்பதற்கு எகிப்து நாடடிற்கு அனுப்பி படிக்க வைத்தார்.

படித்து தன் நாடு திரும்பிய காலகட்டத்தில் அந் நாட்டு அரசன் இரண்டாம் ஹெயிரோ தனக்கு தங்கத்தால் ஒரு கிரீடம் செய்ய பொற்கொல்லரிடம் தங்கத்தைக் கொடுத்தான். பொற்கொல்லன் தங்கத்தால் கிரீடம் செய்து கொடுத்தான். ஆனால் கொல்லன் கலப்படம் செய்யாது கிரீடம் செய்துள்ளான் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது இந்தப் பொறுப்பை அரசன் ஆர்க்கிமிட்டிஸினிடம் ஒப்படைத்தான். ஆர்க்கிமிட்டீசுக்கும் பல நாட்களாக இது பிரச்சினையாகவே இருந்தது.

ஒரு நாள் குளிப்பதற்கு நீர்த் தொட்டியில் இறங்கிய போது நீரின் ஒரு பகுதி தொட்டியில் இருந்து வெளியேறிய போது தான் அவருக்கு பிரச்சினைக்குக் தீர்வு கிடைத்தது.

அந்தச் சந்தோசத்தில்தான் வீதியில் நிர்வாணமாக ஓடினார். இதன் அடிப்படையில் அவர் எழுதி வெளியிட்ட "Blotting Bodies" என்ற புத்தகம் இன்றைய நவீன இயற்பியலுக்கு அடிப்படையாக விளங்குகிறது.

## V. தொலமி

உலகப் படத்தை முதன் முதல் வரைத்தவர் தொலமிதான். கி.பி 160இல் இதனைக் செய்தார். அப்போது அவருக்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் அண்டார்ட்டிகா ஆகியனஇருப்பது தெரியாது. ஆனால் இவர் வரைந்த உலகப் படம் ஓரளவு இன்றைய உலகின் சாயலை ஒத்திருப்பது ஆச்சரியமாக உள்ளது.

## Vi. மார்ட்டின் லூதர் கிங்

இவர் அமெரிக்க நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர். அமெரிக்க நீக்கிரோ மக்களின் முடி சூடா மன்னனாகத் திகழ்ந்தார். பலாத்கார முறைகளை வெறுத்து அஹிம்சை முறையில் தனது மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடியவர். இவரை இந்தியாவின் மகாத்மாகாந்தி போன்ற ஒருவராகக் கொள்ள ப்படுகின்றார். 1929 ஆம் ஆண்டு ஜார்ஜியா மாநிலத்தில் அட்லாண்டா நகரில் மைக்கல் லூதர் கிங் எனும் பாதிரியாருக்கு மகனாகப் பிறந்தார். தாயார் ஒரு பள்ளி ஆசிரியை.

மார்ட்டின் லூதர் கிங் ஒருநாள் பிரயாணம் செய்த போது கறுப்பு இனப் பெண் ஒருவரும் பஸ்ஸில் சீட்டில் இருந்தவாறு பிரயாணம் செய்தாள். பஸ்ஸில் ஒரு வெள்ளைக்காரப் பெண் இருக்க இடமில்லாது நின்றுகொண்டு பிரயாணம் செய்தார். நீக்ரோ பெண்ணை பஸ் ஓட்டுநர் எழுந்து வெள்ளைக்காரப் பெண்ணிற்கு இடம் கொடுக்குமாறு கூறினார். அந்த நீக்ரோ பெண்ணை கீழே இறக்கிவிட்டு பஸ்ஸை ஓட்டிக்கொண்டு போனார். இது மார்ட்டின் லூதர் கிங் மனதில் ஆவேசத்தை ஏற்படுத்தியது. அன்று மாண்ட மொன்ட் கொமரியில் பஸ் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். நகரில் வசிக்கும் சுமார் 50,000 நீக்ரோக்கள் வெள்ளையர்களின் பஸ்களில் ஏற மறுத்து போராட்டம் நடத்தினார்கள்.

இது 381 நாட்கள் தொடர்ந்து நிகழ்ந்தது. இது உலகப் புகழ் பெற்ற ஒத்துழையாமை இயக்கமாகப் பேசப்பட்டதோடு மார்ட்டின் லூதர் கிங் சுமார் இரண்டு கோடி நீக்ரோக்களின் தலைவராகவும் கொண்டாடப்பட்டார்.

## vii. சோக்கிரட்டீஸ்

தத்துவ ஞானியான சோக்கிரட்டீஸ் 2450 ஆண்டுகளுக்கு முன் பிறந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அப்பொழுது எந்த மதமும் தோன்றவில்லை. இயற்கை மதங்களைத் தவிர.

இப்படிப்பட்ட காலகட்டத்தில் தத்துவங்கள் அறிவியல் ரீதியான கருத்துக்கள் பலவற்றைச் சொல்லியவர் சோக்கிரட்டீஸ். ஆனால் அவர் எந்தக் கருத்தையும் எழுதி வைக்கவில்லை. இவரது சித்தாந்தங்களால் கவரப்பட்ட இளைஞர்கள் இவரைச் சூழ்ந்து இருந்து கொண்டே இருந்தனர். இப்படிச் சூழ்ந்து கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவர்தான் பிளாட்டோ. பிளாட்டோவின் மாணவன் அரிஸ் டோட்டில். இவர் சோக்கிரட்டீசின் தத்துவங்களை எழுதினார். கல்லையும், மண்ணையும் கடவுள் என ஒப்புக்கொள்ள மறுக்கிறேன் என்று கூறியவர் சோக்கிரட்டீஸ்.

சோக்கிரட்டீஸை விசம் கொடுத்து கொல்ல வேண்டுமென்று நீதிபதி கி.மு. 339 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி உத்தரவிட்டார். அப்பொழுது விழாக்காலம் என்பதால் 30 நாட்கள் கழித்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. கிறீட்டோ என்பவர் சோக்கிரட்டீஸை தப்புவிக்க முயன்றார் ஆனால் சாக்கிரட்டீஸ் விரும்பவில்லை. அப்படிப்பட்ட பெரிய மனிதர் சோக்கிரட்டீஸ்.

## viii. எட்டாம் எட்வர்ட்

1936 ஆம் ஆண்டு வின்சன்ட் கோமகன் எட்டாம் எட்வர்ட் காதலுக்காக முடி துறந்தார். இவர் முடி துறந்ததற்கு காரணம் விதவையான பிரெஞ்சுப் பெண் ஒருவரைக் காதலித்து திருமணம் செய்ததே. பிரிட்டிஷ் அரசியல் சட்டப்படி முடிக்குரியவர் சாதாரண பெண்களைத் திருமணம் செய்யக் கூடாது. அதுவும் இவர் திருமணம் செய்தது அந்நிய நாட்டுச் சாதாரண பெண்மட்டுமல்ல முதல் திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றுக் கொண்டவர் என்பதால் அரசனாக இருக்கவே முடியாது என்பதால் முடி துறந்து பிரெஞ்சு நாட்டிற்கே சென்று விட்டார்.

காதலுக்காக 56 நாடுகளின் அரச பதவியை துறந்தார் என்பது சாதாரண விடயமாக கொள்ள முடியாது. அதனாலேயே இவர் இன்றுவரை பேசப்படுகின்றார். இந்த உலகத்தில் எத்தனையோ நாடுகளை எத்தனையோ அரசர்கள் ஆண்டு இறந்து விட்டார்கள். எல்லோரும் பேசப்படுகின்றார்களா இல்லை. இவர் இன்றும் பேசப்படுகின்றார் என்றால் இவருடைய துணிவுதான் காரணம்.

## ix. ஹெலன் கெல்லர்

உலகில் உள்ள ஊனமுற்றோர் அனைவருக்கும் ஹெலன் கெல்லர் எனும் பெண்மணி ஓர் எடுத்துக்காட்டு. குழந்தைப் பருவத்திலேயே பார்வையையும், கேட்பதையும் இழந்தவர் ஹெலன் கெல்லர்.

ஆனால் ஊனங்களையெல்லாம் வெற்றிகொண்டு புகழ்பெற்ற எழுத்தாளராகவும் சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தவர். ஹெலன் கெல்லர் பத்து வயதிலேயே வியப்பூட்டும் வரலாறு தொடங்கியது. விக்டோரியா மகாராணி ஹெலன் கெல்லரின் புகழைக் கேள்விப்பட்டு அவரது பெயரை தனது கப்பல் ஒன்றிற்குச் சூட்டினார் என்றால் பாருங்களேன். அதுமட்டுமா அமெரிக்க ஜனாதிபதி கிளீவ்லண்ட் ஹெலன் கெல்லரை வெள்ளை மாளிகைக்கு அழைத்து கௌரவித்து விருந்தளித்தார் என்பதுவும் வரலாற்று உண்மை.

19 ஆம் நூற்றாண்டில் கவர்ச்சி மிக்க இரண்டு மனிதர்களில் ஹெலன் கெல்லரும் ஒருவர். இன்னொருவர் நெப்போலியன் என்று ட்வைன் குறிப்பிட்டார். ஹெலன் கெல்லர் 1880 இல் அலபாமா மாநிலத்தில் உள்ள டஸ்கம்பியா என்ற ஊரில் பிறந்தார். ஏழு வயதில் கண்களை இழந்த இவருக்கு புள்ளி எழுத்துக்களை கற்றுக்கொடுத்தவர் ஆன்சல்லிவனே.

ஹார்வர்ட் பல்கலைக்கழத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற ஹெலன் கெல்லர் "என்கதை" நான் வாழும் உலகம், இருளில் இருந்து விடுபட்டேன், என்மதம், நட்டாறு, நம்பிக்கை கொள்வோம், போன்ற நூல்களை எழுதிப்புகழ் பெற்றார். ஆழ்ந்த பரிவு, நிறைந்த பாசம் நல்ல நகைச்சுவை இவைகளின் உறைவிடம் ஹெலன் கெல்லர்.

## X. விக்டோரியா மகாராணி

விக்டோரியா மகாராணி 1937ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை உயிர் வாழ்ந்தவர். தமது பரிபாலனத்தின் கீழ் இருந்த அகன்ற பேரரசின் அத்தனைபேரும் போற்றும் வண்ணம் கடமை ஆற்றியவர்.

தாயுள்ளம் நிரம்பிய மகாராணியின் முடிசூட்டு விழா உலகமெங்கினும் கொண்டாடப்பட்டது. எமது நாட்டில் கூட மகாராணியின் ஞாபகார்த்த சின்னங்களாக அணைக்கட்டு, பூந்தோட்டம் என்பன அவரின் நல்ல தன்மைகளை எடுத்துக்காட்டி நிற்கின்றன.

உண்மை, சத்தியம், வாய்மை, மெய்மை என்பன தனது உடம்பிலே இரத்தத்தோடு சேர்ந்து ஓடும்படி வாழ்ந்தார்.

**இழை 2**

**பாதாதிகேசம்**

பதாதிகேசம் என்றால் பாதத்தில் இருந்து கேசம் (தலைமுடி) வரையுள்ள மனிதனின் அங்கங்களை பற்றி அச் சொட்டாகக் கூறும் சாஸ்திரம். இது பற்றிப் பழைய நூல் ஒன்று உண்டு! சாமுந்திரிகா இலட்சணம் எனும் (32 அம்சம்) அம்சமும் இதனுள் அடங்கும்.

சாமுந்திரிகா இலட்சணம் என்ற அங்க இலட்சணம் ஆண் பெண் இருவருக்கும் மிக மிக முக்கியம் எனலாம். அங்க இலட்சணம் என்பது ஆய கலைகள் அறுபத்துநான்கில் ஒன்று. இதனை பின்வருமாறு வகுத்து நோக்க முடியும்.

i. கண்டம்

   தலை முடி, நெற்றி, கண்கள், மூக்கு, உதடு, வாய், பல்

ii. கழுத்து

iii. தோள் கைகள்

iv. நெஞ்சு, முதுகு

v. வயிறு

vi. இடுப்பு

vii. ஆண் பெண் குறிகளும் முன் பின் பக்கமும்

viii. தொடைகள்

ix. முன்னங்கால், முளங்கால்

x. கரண்டிக் கால், பாதம்

## i. கண்டம்

கண்டம் என்பது கழுத்திற்கு மேல் உள்ள பகுதியைக் குறிக்கும். அதாவது முடி, தலை, நெற்றி, கண்கள், அதில் உள்ள இமைகள் மூக்கு, உதடு பல் என்பவற்றைக் குறிக்கும். ஒருவரின் முகத்தைப் பார்த்து அவரது குணத்தைச் சொல்லலாம் என்பார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். இவைகளெல்லாம் அனுபவக் குறிப்புகளே. பொய்யில்லா உண்மைகளே.

### முகம்

முகத்தின் தோல் சாம்பல் நிறமாக இருந்தால் சீரண உறுப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது அர்த்தம். முகம் அழகாகவும் வாய் சிறிதாகவும் அமைந்திருந்தால் சீரும் சிறப்பும் செல்வம் மிக்கவராகவும் இருப்பார். முகம் விசாலமானதாக அமைந்திருந்தால் சிறந்த ஞானியாவார். சுகவாழ்வு வாழ்வார்.

குண்டு முகமாக இருந்தால் மோசக்காரர் என்பது பொருள்.

உடலுக்கேற்ற அளவு முகம் அமையவில்லையாயின் அதாவது சிறிதாக இருப்பின் அவர் வாழ்க்கையில் வசதிகளை அனுபவிக்க முடியாதவராக இருப்பார்.

கன்னங்கள் கறுத்து படர் படராக இருந்தால் அவர் கொடியவராவார். கன்னத்தில் குளி விழுந்தால் பெண்களுக்கு அழகாக இருக்கும் இது அதீத அழகு என்பதனால் (இதனால் இவர்கள் அபாயத்தை எதிர்நோக்கும் சந்தர்ப்பம் கூடுதலாக அமையலாம் என்பதால்) கலியாணமல்லர் எனும் ரிசி இவர்களை கலியாணம் முடிக்கத்தகாத பெண்கள் பட்டியலில் சேர்த்துள்ளார்.

பெண்களின் முகம் வட்ட வடிவமாகவும் தாமரை மலர் போலவும் முழு நிலவு போலவும் அமைந்திருந்தால் அவர்களுக்கு நல்ல அதிஷ்டம் உண்டு. வாழ்க்கையில் வசதிகள் பெருகும் இன்பம் உண்டாகும். சகல இன்பங்களையும் அனுபவித்து பெருவாழ்வு வாழ்வார்கள். பெண்களின் கன்னங்களில் கறுப்புப் படர்ந்திருந்தால் அவர் தரித்திரமுடையவளாவாள். கெட்ட நடத்தையுள்ளவராகவும் இருப்பாள். தாடையில் மயிர் இருந்தால் அவள் மோகத்தில் அதிக விருப்பம் உள்ளவளாக இருப்பாள். பெண்களின் கன்னத்தில் எந்த இடத்தில் மச்சம் இருந்தாலும் பெண்களுக்கு நல்லது.

## தலையும் தலைமயிரும் நெற்றியும்

தலைமயிர் கறுப்பாக அழகாக நுனியில் வெடிப்பில்லாமல் அடர்த்தியாக இருப்பவர் நல்ல செல்வாக்குகள் உள்ளவராக இருப்பார்.

பெண்ணின் தலை பெரிதாக இருந்தால் அவள் துன்மார்க்கமாக இருப்பாள். தலைமயிர் மிக நீளமாக இருந்தால் அவள் கெட்ட நடவடிக்கைக்குச் சாதகமானவராக இருப்பாள்.

நெற்றி சமமாக இருந்தாலும் தரித்திர முடையவராக இருப்பாள். நெற்றி முத்துச்சிப்பி போல் இருந்தால் அவர் வேதாந்திரியாக பண்டிதராகவும் இருப்பாள். நெற்றியானது நரம்புகளால் சூழப்பட்டவராக இருந்தால் அவர் கொடூரமானவராக இருப்பாள். நெற்றியில் பள்ளம் இருந்தால் கெட்ட காரியங்களையே விரும்பிச் செய்வாள்.

நெற்றி குறுக்கமாக அமைந்திருந்தால் மூடராகவும் தரித்திரராகவும் இருப்பாள். பெண்களுடைய நெற்றி மூன்று விரல் அகலமுடையதாகவும் நரம்புகள் தோன்றாமலும் வெண் பிறை போல் வளைந்தும் இருந்தால் அவள் செல்வச் செழிப்புடையவளாவாள். நல்ல வளமுடைய வாழ்வுள்ளவளாகவும் இருப்பாள். பெண்களுடைய நெற்றி மிக விசாலமானதாக இருந்தால் அவளுடைய கணவனுக்கு ஆபத்துகள் வரும். நெற்றியில் சுழி இருந்தால் அவள் விதைவையாவாள். நெற்றியில் ஐந்து வரைகள் இருந்தால் வயது100. அகலமான நெற்றியுள்ளவர்கள் அரசியலில் தலைமை தாங்கும் தன்மையுள்ளவர்கள். பொதுநல சிந்தனையுள்ளவர்கள். புத்திசாலிகள் எதையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க வேண்டுமென்று விரும்புவார்கள்.

குறுகிய நெற்றியுள்ளவர்கள் எதையும் வேகமாகச் செய்து முடிக்க விரும்புவார்கள் இது சில வேளைகளில் பிரச்சினைகளை உண்டாக்கும்.

## கண்களும் இமையும்

சேர்ந்த புருவங்கள், தேவையில்லாதவிடதில் தலையிட வைக்கும். புருவங்கள் இணைந்த மாதிரி இருப்பவர்கள் பாலியலில் விருப்பம் உள்ளவர்கள். காம இச்சை கூடியவர்கள். இவர்கள் தூக்கம் இன்மையால் அவதிப்படுவார்கள். வில்போன்ற புருவம் உள்ளவர்கள் பிறர் மேல் ஆதிக்கம் செலுத்த விரும்புவார்கள். அதனால் பிரச்சினைகுரியவர்களாக இருப்பார்கள். கண்கள் சிறிதாக இருந்தால் அடிக்கடி கோபப்படுவார்கள். மதி நுட்பமும் கிரகித்தல் தன்மையும் அதிகமாக இருக்கும். இவர்கள் ஆழ்ந்த அறிவுடையோர் மட்டுமல்ல பணத்தை நேசிப்பதிலும் கருத்துடையவராக இருப்பார்.

வெளியே தள்ளிக்கொண்டிருக்கும் கண்களையுடைவர்கள் ஆர்வமும் அதிகரிசனையும் உடையவர்கள் எதையும் மேலோட்டமாகவே நோக்குவார்கள்.

## மூக்கு

அழகான மூக்கைக் கொண்ட பெண்கள் கணவனுக்கு அடங்கி நடப்பார்கள். அரசியல், இலக்கியம், பேச்சு போன்ற துறைகளில் சாதிக்கும் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள்.

நீண்ட மூக்குடையவர்கள் அரசியலில் ஈடுபாடு கொண்டவர்கள். கட்டை மூக்குள்ளவர்கள் அழகில்லாதவர்களாக தோற்றமளிப்பார்கள்.

## ii. கழுத்து

சங்குக்கழுத்து பெருஞ்செல்வத்தையும் செல்வாக்கையும் காட்டும். கழுத்து உள்ளடங்கியோ அல்லது நீளமாகவோ அல்லது இளைத்தோ இருந்தால் அவர் வறியவராக இருப்பார். கழுத்து குட்டையாக இருந்தால் வாழ்க்கை வசதிகளைப் பெற்று வசதியாக வாழ்வார். எருமையின் கழுத்துப் போல இருந்தால் அவர் அகந்தை மிக்கவராவார். மானின் கழுத்தைப் போல அமைந்திருந்தால் பலராலும் பாராட்டப்படுவார். பெண்களின் கழுத்து குறுகியிருந்தால் ஏழ்மைப்படுவார். உயர்ந்திருந்தால் வெட்கம் இல்லாதவர். ஒட்டகத்தின் கழுத்துப் போன்று மிகவும் நெடுந்திருந்தால் அவள் வம்சத்தை நாசம் செய்வாள்.

கழுத்து மிக மென்மையானதாக அமைந்து அதில் கமுக மரத்தில் (பாக்குமரத்தில்) உள்ளது போல இரண்டு கோடுகள் அல்லது மடிப்புகள் அமைந்திருந்தால் மிக மிக நல்ல குணமுள்ள பெண் என்பது அர்த்தம்.

கொக்கோகமுனி அதிவீர ராமபாண்டியன் இப்படிப்பட்ட பெண்களை முதல் தரமானவர்கள் என்றார்.

சங்குக் கழுத்துப் பெண்கள் வீட்டிற்கும் குடும்ப குலத்திற்கும் பெருமையும் செல்வமும் கொண்டுவருவார்கள். கழுத்துத் துடித்தால் நல்ல பயன் உண்டு. துன்பங்கள் நீங்கும்.

## iii. தோளும் கைகளும்

தோள் பட்டைகள் சமமாக இருந்தால் நற்குணமுடையவராகும். சமன் இல்லாமல் இருந்தால் தீய குணமுடையவராகும். தோள்கள் எடுப்பாக அமைந்திருந்தால் புகழ் பெற்று விளங்குவார். இன்பமும் மகிழ்ச்சியும் வாழ்வில் அமையப்பெறும். தோள்களில் மயிர்கள் முளைத்திருந்தால் தரித்திரம். பெண்களுக்கு தோள்கள் பெரிதாக அமைந்திருக்க கூடாது.

### கைகள்

ஒருவனுடைய கைகள் குண்டாக அமைந்து யானையின் துதிக்கை போன்று வரவரச் சிறுத்து நீளம் முழங்கால் வரையிலும் தாழ்ந்தும் முழங்காலை தொடும்படி இருந்தால் அவர் நாட்டையும் மக்களையும் ஆட்சி செய்யும் பெரு வெற்றியை பெறுவார்.

அத்தோடு அரசியல் கொலைக்கும் ஆளாவார்.

கைகள் தடித்தும் அளவுக்கதிகமாகப் பெருத்தும் இருந்தால் சோம்பேறியாவார். பயந்த சுபாவம் உடையவராகவும் இருப்பார். கைகள் குட்டையாக இருந்தால் தீயகுணமும், வறிய வாழ்க்கையும் உடையவராக இருப்பார். கைகள் ஒன்றிற்கொன்று உயரத்திலும் பருமனிலும் வித்தியாசமாக அமைந்திருந்தால் அவர் பாவி மனிதராவார். கைகள் இரண்டிலும் உரோமம் அடர்த்தியாக இருந்தால் செல்வந்தராவார். பிறருக்கு உதவுபவராகவும் இருப்பார்.

உரோமம் செம்மண் நிறமுடையதாக இருந்தால் ஆடு மாடு வளர்த்துப் பெருகி செல்வம் குவியும். உள்ளங்கைகள் விசாலமாக அமைந்து வெளிச்சமாக இருந்தால்

அதிகம் ரேகைகள் இல்லாமலும் இருந்தால் நீண்ட ஆயுள் உடையவர் சுகபோக வாழ்க்கை வாழ்வார்.

உள்ளங் கைகள் சிவப்பாக அமைந்திருந்தால் செல்வந்தராவார். உள்ளங் கைகள் பள்ளமாக இருந்தாலும் செல்வம் சேரும். சந்திர மேடு உப்பிக்காணப்பட்டால் பல பெண்களோடு தொடர்பு வைப்பவராக இருப்பார். அதனால் தரித்திரமடைவர். கைவிரல்கள் நீளமாக அமைந்திருந்தால் அறிவாளியாக இருப்பார். யோகியாவார். எடுத்த காரியத்தில் வெற்றி பெறும் திறனுடையவராக இருப்பார்.

### நகம்

நகங்கள் நோய்த்தன்மையைக் காட்டக் கூடியது. நகம் மோசமாக இருந்தால் சுவாசம் சம்பந்தமான நோய் உண்டாகும். நகத்தில் ஏதும் பள்ளங்கள் காணப்பட்டால் "சோரியாசிஸ்" வியாதியுண்டு என்று அர்த்தம். நகம் நுனியில் வளைந்து காணப்பட்டால் இரத்தத்தில் ஒக்ஸிஜன் அளவு குறைந்துள்ளது என்பது பொருள். மொத்தத்தில் நகம் கரண்டி போல் வளைந்திருந்தால் இரத்தச் சோகை, இரத்தத்தில் இரும்புச் சத்து குறைவு என்பதைக் காட்டும். நகத்தில் வெள்ளைப்புள்ளிகள் இருந்தால் முடுமை என்பார்கள். அதாவது வறுமை என்பது பொருள். வெள்ளைப் புள்ளிக்குக் காரணம் உயிர் சத்துக் குறைவு என்பதாகும்.

## iV. முதுகு. நெஞ்சு

நெஞ்சு விசாலமாக இருந்தால் புகழ்பெற்று வாழ்வார். தட்டையாக இருந்தால் செல்வராவார். எலும்புகள் காணப்பட்டு மேடுபள்ளமாக இருந்தால் துன்பம் அடைவார். நெஞ்சில் உரோமம் இல்லாதிருந்தால் கபட உள்ளம் படைத்தவராவார். சமர்த்தராவார். நெஞ்சு குறுகி இருந்தால் வறுமையுடைவராவார். ஆரோக்கியம் இல்லாதவராகவும் இருப்பார்.

உரோமம் நிறைந்து காணப்பட்டால் பெண்ணாசை கூடியவராக இருப்பார். ஆண்களின் முதுகில் சக்கரம் அமைந்திருந்தால் மூட்டை சுமந்து வாழ்வார். ஆமையின் முதுகு போன்றிருந்தால் உயர் பதவி வகிப்பார். குதிரையின் முதுகு போன்றிருந்தால் சிற்றின்பக்காரர். புலியின் முதுகு போன்றிருந்தால் செல்வம் வீரம் உடையவர். முதுகு சீராக இருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறுவார். பெண்களின் முதுகு கூனாக இருந்தால் கூடாது.

## v. வயிறு

பெண்களின் வயிறு ஒட்டியதாக இருக்க வேண்டும். இதுதான் அழகு. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்பது இதனையே குறிக்கின்றது. ஆண்களின் வயிறு இரண்டு மடிப்புக்கள் உள்ளதாக இருக்க வேண்டும். சிறிது தொந்தி இருக்கலாம். பானை போன்று வயிறு இருக்கக் கூடாது.

## vi. இடுப்பு

பெரிய இடுப்பு உடையவர்கள் தரித்திரமுடையவர்கள். அளவான இடுப்பு உடையவராக இருந்தால் செல்வந்தராகவும் இருப்பார். இடுப்பு மிகவும் சிறுத்து இருந்தால் நோயுடையவராக இருப்பார். தவளையுடைய இடுப்பைப் போன்று அமைப்பைப் பெற்ற இடுப்புடையவர்கள் மற்றவர்களை அடக்கியாளும் தன்மையுடைவர்கள். இடுப்பு பக்கம் வளைந்திருந்தால் ஏழையாக வாழ்க்கையுடையவர். இடுப்பு இருபக்கமும் சற்று வளைந்திருந்தால் சகல வசதியும் பெற்று வசதியாக வாழ்வார். பெண்களின் இடுப்பு உடுக்கை போன்று இருந்தால் அழகும் செல்வமும் சேரும். இடுப்புப் பெருத்து இருந்தால் துன்பத்தை அடைவாள்.

## vii. ஆண், பெண் குறிகளும் முன்பின் பக்கங்களும்

ஆண்குறியின் அளவு பற்றி எல்லா இளைஞர்கள் மத்தியிலும் ஒரு தப்பான அபிப்பிராயமுண்டு. எனது ஆண்குறி மிகவும் சிறிதானது என்பதுவே அந்த தப்பான அபிப்பிராயம்.

இதற்கு காரணம் ஆதிகாலம் தொட்டு நிலவி வந்த தப்பான அபிப்பிராயமேயாகும். கொக்கோகமுனி அதிவீரராமபாண்டியன் கூட தனது நூலில் பெண்களை அத்தினி சித்தினி, பத்தினி பதுமினி என நான்காக வகுத்து அவர்களது பெண்குறியின் அளவு ஆளுக்காள் வித்தியாசமானது அந்தந்த அளவிற்கேற்ப ஆண்குறிகளும் நீளமாக அமையவேண்டும். இல்லாவிட்டால் கணவன் மனைவியிடையே பிரச்சினைகள் தோன்றலாம் என்று கூறியுள்ளார். இதை அடிப்படையாக வைத்துத்தான் யோனிப் பொருத்தம் பார்க்கும் வழமையும் ஏற்பட்டதாக கூறலாம். ஆனால் இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் இப்படிப் பொருத்தம் பார்ப்பது தேவையற்ற விடயம். இரண்டு அங்குலம் அளவான ஆண்குறி எல்லா வகையான பெண்குறிகளுக்கும் பொருத்தமானது. அதனைப் பயன்படுத்தும் முறையைப் பொறுத்தே. பயன்பாட்டின் தன்மை அமையும் என விஞ்ஞானம் கூறுகிறது.

ஆண்குறி இடப்பக்கம் சாய்வாக இருந்தால், துர் நடத்தையுள்ளவராகவும் தரித்திரமாகவும் இருப்பார். வலப்பக்கம் சாய்வாக இருந்தால் புத்தி விருத்தி இல்லாதவராகவும் இருப்பார், செல்வம் இல்லாதவராகவும் இருப்பார். ஆண்குறியில் நரம்புகள் அதிகம் தென்பட்டால் அற்ப சந்தானம் உடையவராகும். பீ ஜங்கள் (விதைகள்) இரண்டும் சமமாக இருந்தால் வசதி படைத்தவராக இருப்பார். மேலே ஒட்டிக்கொண்டிருந்தால் ஆயுள் குறைவு. ஒன்று மேலும் ஒன்று கீழும் இருந்தால் நோய்வாய்ப்பட வாய்ப்புண்டு. இரண்டும் மிகத் தாழ்வாக தொங்கிக்கொண்டிருந்தால் விசை குறைவாக இருக்கும். காரைத் தள்ளி ஸ்டாப் பண்ணுவது போன்று ஸ்டாட் பண்ண வேண்டும். அதாவது ஆண்குறி வீரியத்தோடு எழுவது கஷ்டமாக இருக்கும்.

பெண்களின் மர்மஸ்தானம் சங்கின் சிறு துவாரம் போன்றிருந்தால் குழந்தைப் பேறு இல்லாத மலடியாக இருப்பாள். இந்த மலட்டுத் தன்மையை உறுதிப்படுத்த இன்னுமொரு சோதனையுண்டு. அதாவது முலைக்காம்பு வெளியே தெரியும் படி இல்லாமல் உள்ளே இருக்குமானால் மலடி என்பது தெளிவாகும். குழந்தை பிறந்தால் பால் குடிக்க வசதி வேண்டும். இல்லையேல் குழந்தை பிறக்காது இதுதான் இயற்கை.

## viii. தொடைகள்

தொடைகள் இரண்டும் அதிக உரோமம் உடையதாக இருந்தால் பெண்கள் மீது நாட்டம் உடையவராக இருப்பார். தொடைகள் வளைந்தோ சிறிதாகவோ இருந்தால் சோம்பேறியாக இருப்பார். தொடைகளுக்கிடையில் அதிக இடைவெளி இருந்தால் நோயுடையவராக இருப்பார்.

தொடைகள் வழுவழுப்பாகவும் உரோமம் இன்றியும் இருந்தால் வாழ்க்கையில் நன்மையுடையவர். பெண்களின் தொடைகளில் உரோமம் இருந்தால் விரைவில் விதவையாவாள். தரித்திரமடைவாள்.

## ix. முளங்கால்

இரண்டு முழங்கால்களும் பெரியதாக அமைந்து சதைப் பிடிப்பில்லாமல் இருந்தால் நீண்ட ஆயுளையுடையவர். இரண்டு முழங்கால்களும் சிறிதாகி இருந்தால் உலகப் புகழ் பெறுவார். இரண்டு முழங்கால்களும் அகன்றிருந்தால் தரித்திரமுடையவனாக இருப்பான். இரண்டு முழங்கால்களும் சிறியவையாக இருந்து சதைப் பிடிப்பும் இல்லாதிருந்தால் சிறைக்குச் செல்ல நேரிடும். அல்லது கொலைசெய்யப்படுவார்.

இரண்டு முழங்கால்களும் வளைந்திருந்தால் உடல் நலமில்லாதவர். தரித்திரர். பெண்களின் முழங்கால்களில் சதைப்பற்று மிகவும் குறைவாக இருந்தால் அவள் முலையை விலை கூறி விற்பவளாவாள். முழங்கால்களுக்கு கீழே தடித்திருந்தால் அவள் கணவனுக்கு ஆபத்துண்டாகும்.

## X. கரண்டிக்கால் அல்லது கணுக்கால், பாதம்

கணுக்கால் எலும்புகள் தென்படாமல் இருந்தால் நாட்டிற்குத் தலைவனாவாள். பெண்களின் புறங்கால் ஆமையின் முதுகுபோல் அமைந்திருந்தால் அவளுடைய கணவனுக்கு ஆபத்து வரும். கணுக்காலில் மயிர் நிறைந்திருப்பதுவும், நரம்புகள் தெரிவதுவும் பெண்களுக்குக் கூடாது. இப்படிப்பட்டவர்கள் தகாத நடத்தையுள்ளவர்களாவார்கள்.

### பாதம்

பாதம் உள் வளைந்து இருந்தால் விளையாட்டு துறைகளில் மேலோங்க முடியும். பாதம் சப்பையாக இருந்தால் ஓடுவது கஷ்டமாக அமையும். கால்களின் பாதங்கள் சிவப்பு நிறமாகவும் சதைப் பிடிப்புள்ளதாகவும் வியர்வை தோன்றாமலும் இருந்தால் செல்வந்தராக இருப்பார்.

பாதங்கள் மிருதுவானதாக இருந்தால் நிலையான புண்ணிய காரியங்களைச் செய்பவராகவும் தைரியசாலியாகவும் எச்சரிக்கையுடையவராகவும் செல்வந்தராகவும் இருப்பார். பாதங்கள் முறத்தைப்போல் (சுளகு) விசாலமாக இருந்தால் தரித்திரமிக்கவராவார். பாதங்கள் நீளமாக அமைந்திருந்தால் தேச சஞ்சாரியாவார். உள்ளங்கால் கரடுமுரடாக இருந்தால் வசதியுடன் வாழமாட்டார். வண்ணச் சீரடி என வர்ணிக்கக் கூடிய பாதங்களையுடைய பெண்கள் அரசகுல பெண்களை ஒத்தவர்களாவார்கள். உள்ளங்கால் பெண்களுக்கு வேர்த்தல் கூடாது. காம இச்சை கூடுதலாக உள்ளவள் என்பதையே இது காட்டும். ஒருவருடைய நடையில் இருந்தே அவருடைய குணங்களை நோய்களை தெரிந்துகொள்ள முடியும்.

இதன் விபரம் என்னால் எழுதி வெளியிடப்படவுள்ள பாதாதிகேசம், அதிவீரராம பாண்டியனின் கொக்கோகம், கல்யாண மல்லரின் கலியாணம் முடிக்கத் தாகாத பெண்கள் ஒரு மீழ்பார்வை எனும் நூலில் இடம் பெற்றுள்ளது ( அச்சில்).

இழை 3

## வெற்றிக்கான வழிகள்

i. இறை நம்பிக்கை, நல்லதே நடக்கும் என்ற மனோபாவம், தன்னம்பிக்கை, ஊக்கம், மிக சரியாக சிந்திக்கும் பழக்கம்.

ii. தீர்மானிக்கப்பட்ட இலட்சியமும் இலட்சியத்தில் அனுபவத்தை கூட்டிக்கொள்ளுதலும்.

iii. சுய ஒழுக்கம், சுயகட்டுப்பாடு விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு

iv. எல்லாவற்றிலும் நேர்மை, கண்ணியம், வீரம், பணிவு, இரக்கம் என்பவற்றை கடைப்பிடித்தல்

v. பாதகமானதை சாதகமாக்குதல், தோல்வியடைந்த பாடத்தை வெற்றிக்குப் பயன்படுத்துதல்.

vi. உடலையும் மனத்தையம் ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதோடு பெற்றோரையும் மற்றோரையும் மதித்தல்.

vii. நேரத்தையும் பணத்தையும் திட்டமிட்டபடியே பயன்படுத்துவதோடு பொறுமைகாத்து முனைப்புடன் வேலை செய்தல்.

viii. ஆசை, தன்னம்பிக்கை, எதிர்பார்ப்புக்கள் ஆகிய மூன்றும் வலுவானசக்திகள் எனப் புரிந்து கொண்டு அதில் கை தேர்ந்தவராகி விட வேண்டும்.

ix. இடம் பொருள் ஏவல் அறிந்து நடக்க வேண்டும்.

x. சில நேரங்களில் எந்தப் பாதையால் செல்வது என்ற குழப்பத்தில் நேரத்தைக் கழிப்பதை விட ஏற்கனவே வெற்றி பெற்றவர்கள் சென்ற பாதையில் பயணிப்பது சுலபமே. அதற்கு வெற்றிபெற்றவர்களின் பாதைகளைப் பின்பற்றுங்கள். அவர்களது வாழ்க்கை வரலாற்றை கூர்ந்து கவனியுங்கள் இதுவும் வெற்றிக்கான பாதைதான்.

## வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள்

ஹோமர், புலிட்சர், ஹெலன் கெல்லர் இவர்கள் மூவருக்கும் கண் தெரியாது. ஹெல்லருக்குக் காது கூடக் கேட்பதில்லை. ஆனாலும் இவர்கள் தன்னம்பிக்கையால் முன்னேறியவர்கள். சாதித்துக்காட்டியவர்கள். ஹோமர் இலியட் ஒடிசி ஆகிய காப்பியங்களை இயற்றியவர். ஹெலன் கெல்லர் பத்துப்புத்தகங்களை எழுதியுள்ளார். பத்திரிகையாளரான புலிட்சர் 24 மணிநேரமும் உழைத்தார். தன் சொத்துக்களில் சிறந்த பத்திரிகையாளர் பரிசுக்காக எழுதி வைத்த புலிட்சர் விருது இதில் இருந்தே கொடுக்கப்படுகிறது.

ஆப்ரஹாம்லிங்கன் ஏழை விறகு வெட்டியின் மகன் ஜனாதிபதியானார். காரணம் அயராத உழைப்பு,

ஜோஸப் ஸ்டாலின் சோவியத் நாட்டின் தலைவராக இருந்தார். இவர் செருப்புத் தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகன்.

கரிபால்ட்டி இத்தாலியில் ஒரு மீன்வியாபாரியின் மகனாகப் பிறந்து பெரும் புரட்சிகளை ஏற்படுத்தி நாட்டையே வழி நடத்தினார்.

இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த றணசிங்க பிரேமதாஸ சிறு தேனீர்க்கடை வைத்து நடத்தியவரின் மகன், உயர் குடிப் பிறந்தவருமல்ல.

இவர்களை உனது வழிகாட்டியாக எடுத்துக்கொள்க.

**இழை 4**

**செய்யக் கூடியது**

வலது காலை முன்வைத்து செல்ல வேண்டும். எதனையும் வலதுபுறத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். மனிதனுக்கு இரண்டு கால்களிலும் இரண்டு கைகளிலும் வலதே பலம் மிக்கது. அத்தோடு பூமி கூட வலம் இடமாகவே சுற்றுகிறது. அதனோடு சேர்ந்து போவதுவே சுகம். அதனால்தான் வலதிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

பெரியோரைச் சந்திக்கவும், எண்ணங்கள் நிறைவேறுவதற்கும், பணம் சேருவதற்கும் வியாழக்கிழமையே நல்லது. அரசர், தலைவர் பெரியவர்கள் போன்றோரைச் சந்திக்கவும் நகம் வெட்டவும் வியாழக்கிழமையே சிறந்தது. இத் தினத்தில் வழக்கமாக நகம் வெட்டிக்கொள்பவர்கள். வறுமையை விட்டும். கண்ணூரை விட்டும் காக்கப்படுவர் என்று பழைய நூல்களில் கூறப்பட்டுள்ளன. இப்றாஹிம் நபியவர்களும் அரசனைப் பார்ப்பதற்கு இத்தினத்திலேயே சென்றார்கள். இதனை சரியென்று நான் கூறவில்லை. பெரிய மனிதர்கள் செய்துள்ளார்கள். அதனால் கூறியுள்ளேன்.

**பிறந்து நாற்பது நாளைக்குள் குழந்தைகளுக்கு மொட்டை அடிக்க வேண்டும்**

ஏன் நேர்த்திக்காகவா? எதுவாக இருந்தாலும் பரவாய் இல்லை இப்படிச் செய்வதற்கு அறிவியல் காரணம் ஒன்று உண்டு. 10 மாதம் குழந்தை தாயின் கருவறையில் இருக்கிறது.

இப்படி இருக்கும் போது இரத்தம், மலம், சலம் என அனைத்தும் குழந்தையின் முடியில்பட்டிருக்கும் இதனைக் களைத்து சுத்தப்படுத்தும் நோக்கமே இந்த மொட்டை அடித்தல். அத்தோடு உடலில் உள்ள (குழந்தையின்) கழிவுகள் மயிர்கால்கள் வழியாக வெளியேறும் இவ்வாறு வெளியேற வழிவகுக்கவே இவ்வாறு செய்கிறோம்.

**இழை 5**

**செய்யக் கூடாதவை**

i. தானே பாய் விரித்துப் படுக்கக் கூடாது

ii. ஆசனப் பலகை இட்டுக் கொள்ளக் கூடாது

iii. ஆன்னம் படைக்கக் கூடாது

iv. சுந்தோஷமாக இருக்கும் போது வாக்குறுதி கொடுக்கக் கூடாது

v. வீட்டைக் கூடிட்டி இரவில் தள்ளக் கூடாது. இரவில் வீட்டை கூட்டும் போது எம்மால் கூர்ந்து பாரக்க முடியாது. சிறு ஊசிகள், மணிகள், நாணயங்கள், தங்கத் துண்டுகள் வெளியே போக வாய்ப்புண்டு. காலையில் வெளிச்சத்தில் நன்றாக பார்த்து ஒன்றும் இல்லையெனில் வெளியே தள்ளிவிடலாம். குப்பி விளக்குக் காலத்தில் இக்கருத்து மிகப்மிகப் பொருத்தமானதே.

vi. காலால் காலை தேய்த்துக் கழுவக் கூடாது.இவ்வாறு நளவெண்பாவில் கூறப்பட்டுள்ளது. அப்துல் றஹீம் தொகுத்த அல் – ஹீஸ் பாகம் 1லும் ஒரு ஹதீஸ் இதுபற்றி பதிவாகியுள்ளது.

vii. நின்றுகொண்டு மலசலம் கழிக்கக் கூடாது.

viii. சூரிய வெளிச்சத்தில் சூடாகிய தண்ணீரில் குளிக்கக் கூடாது. வெண்குஷ்டரோக நோய் வரும்.

ix. துஷ்டர்களுக்கு மந்திரம் வாகடம் பழைய நூல்கள் என்பன கற்றுக் கொடுக்கக் கூடாது.

x. மச்சம் மாமிசம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துச் சாப்பிடக் கூடாது.

## இழை 6

## கலை, இலக்கிய ஜாம்பவான்கள்

| | |
|---|---|
| i. மைக்கல் ஜாக்ஸன் | இசை, நடனம் |
| ii. சேக்ஸ்பியர் | நாடகம் (இலக்கியம்) |
| iii. சார்லி சாப்ளின் | நடிப்பு (ஹாஸ்யம்) |
| iv. ஏ.ஆர். ரஹ்மான் | இசை |
| v. ரவி சங்கர் | வாத்தியம் |
| vi. ரஜனிகாந்த் | நடிப்பு |
| vii. லியோடாடாவின்சி | சித்திரம் |
| viii. பிக்காசோ | சித்திரம் |
| ix. வின்ஸ்டன் சேர்ச்சில் | பேச்சு |
| x. ஹோமர் | இலக்கியம் |

## i. மைக்கல் ஜாக்ஸன்

இவரது இசைப்பாணி யாரையும் பின்பற்றாத பாணி. இவர் பாடியபடியே நடனமாடுவார். அதில் வேகமும், பெண்மை கலந்த ஆண்மைத் தோற்றமும் இருக்கும்.

இலட்சக்கணக்கான பெண் விசிறிகள் இவருக்கு இருந்தனர். இவரது குரலிலும். அசைவுகளிலும் மெல்லிய காமம் கலந்திருக்கும். இவர் அளவுக்கு மிஞ்சிய போதைப்பொருள் பாவனையால் தனது 50வது வயதில் காலமானார். இவர் கடைசியாகச் செய்த இசை நிகழ்ச்சி The final Creation இறுதியாக மூடப்படும் திரை என்பதாகும்.

மைக்கல் ஜாக்ஸன் இசைக் கலைஞரான ஜோசப் ஜக்சன் கதரின் தம்பதியினருக்கு ஆறாவது குழந்தையாக 1958 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்தில் காரி என்ற நகரில் பிறந்ததார் பெரிய குடும்பம்.

ஜக்சன் உண்மையிலேயே படுகெட்டிக்காரர். புதிய புதிய விடயங்களை கண்டறிந்து அதனை அழகாக அமுல்படுத்தினார்.

இந்த உலகை ஒரு கலக்குக் கலக்கிய ஜக்ஸனின் அடுத்த பக்கம் சோகமானது பிரச்சினைகள் நிறைந்தது.

இவர் ஓரினப் புணர்ச்சியில் மிகவும் விருப்புக்கொண்டவர் என்று பேசும் அளவிற்கு இவரது நடவடிக்கைகள் இருந்தன என்பது என்னவோ உண்மைதான்.

இதேவேளை எலிசபெத் டெய்லர் தொடக்கம் விசாரே வரை அவருக்கு பெண் தோழிகளும் இருந்தனர். இரண்டு திருமணங்களும் இவருக்கு இரண்டு குழந்தைகளும் உண்டு. மைக்கல் ஜாக்ஸனுடைய பாணி முன்பிருந்த எந்தவொரு இசைக்குழுவினது பாணியையும் சார்ந்திருக்கவில்லை.

## ii. சேக்ஸ்பியர்

இவரின் தந்தை குதிரை லயத்தின் காவலாளி. சேக்ஸ்பியரின் பெயர் எட்வேட் டி. வேர் என்பதாகும். இவரை நாடக வேந்தன் பாவேந்தன் என்றழைக்கலாம். மொத்தமாக இவரை எழுத்து வேந்தன் என்றழைக்கலாம். சேக்ஸ்பியர் நாடகங்களை எழுதினார். இது தவிர 154 ஈழேழ்வரிப்பாடல்களையும் சில நெடிய கவிதை வரிகளையும் எழுதினார். இவரது நாடகங்களில் ஜூலியர் சீஸர் மக்பெத் (Maebeth) ஒதெல்லோ (Othllo) றோமியோ ஜூலியத் போன்ற நாடகங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை.

இலக்கியவாதிகள் அனைவரிலும் சிறந்தவராகச் சேக்ஸ்பியர் திகழ்ந்தார். சேக்ஸ்பியரின் சொல்லாட்சித் திறன் ஈடு இணையற்றது.

இவரது நாடகங்கள் நடித்துப் பார்ப்பதற்கு சுவை தருவது போலவே வாசித்து கிரகிப்பதற்கும் சுவை தருவது என்பது மிக மிக முக்கியமானவையாகும். அப்படிப்பட்ட சொல்லாட்சி உடையது அவரது பாத்திரப்படைப்புக்கள்.

சேக்ஸ்பியர் நாடகங்கள் இங்கிலீஸ் மொழியில் இருந்து எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

புகழ்பெற்ற எழுத்தாளர்களின் படைப்புக்களை விமர்சகர்கள் விமர்சிப்பதுண்டு. ஆனால் அப்படி எந்த ஒரு விமர்சகர்களும் சேக்ஸ்பியரின் எழுத்துக்களை விமர்சிக்கவில்லை என்பதுவும் முக்கியமான ஒரு விடயமாகும்.

சேக்ஸ்பியர் தனது 48 ஆவது வயதில் திடீரென எழுதுவதில் இருந்து ஓய்வு பெற்றார்.

1616இல் இறந்தார். உலகில் அதிக விலைக்கு விற்பனையான கையெழுத்து (ஒப்பம்) இவருடையது தான். தனது 18 வது வயதில் ஹெக்வே எனும் 25 வயதுப் பெண்ணை மணந்து கொண்டார். இவர் பிறந்தது 23.04.1564இல்.

### iii. சாலி சாப்லின்

மொழிகளைக் கடந்து உலக மக்களை சிரிப்பில் ஆழ்த்தியவர். இவரின் தந்தை வீட்டு வேலைக்காரன். மிகக் குள்ளமானவர். இவரது ஆடை உடுத்தும் முறை இவரை சாலி சாப்ளின் என இனங்காட்டிக் கொடுத்துவிடும். அதிலும் தொப்பியும் கைத்தடியும் இவருடன் எப்பொழுதும் இருக்கும். இவர் மொழியை விட அங்க அசைவுகள் மூலமே மக்களை சிரிக்க வைத்தார். அதனால்தான் இவர் எந்த மொழி பேசுபவரையும் தன்வயப்படுத்தி வைத்திருந்தார்.

### iv. ஏ.ஆர். ரஹ்மான்

சிலம்டோக் (Slumdog) மில்லியனர்'' படத்திற்காக இசையமைத்து இரண்டு ஆஸ்கார் விருதுகளை வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்தார் ஏ.ஆர். ரஹ்மான்.

இவர் முழு இந்தியாவிற்குமே புகழ் தேடிக்கொடுத்தவர்.

### v. சித்தார் மேதை ரவி சங்கர்

சித்தார் மேதை பண்டித் ரவிசங்கர் தனது 92 வது வயதில் காலமானார். இவர் அமெரிக்காவின் லா ஜோல்லாவில் உள்ள ஸ்திரிப்ஸ் மருத்துவ மனையில் காலமானார். இவர் நடன மேதை உதயசங்கரின் இளைய சகோதரர். இவர் உஸ்தாத் அலாவுதீனிடம் இசை பயின்றார். இவர் தனது குருவின் மகளைத் திருமணம் செய்தார். இவரது மனைவியின் பெயர் சுகன்யா. ரவிசங்கர் 1920ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் பிறந்த நகர் ''பெனாரஸ்'' என்பதாகும்.

இவரது தந்தை ஜஹலார் மகாராஜாவிடம் திவானாகப் பணியாற்றியவர். ரவிசங்கர் எண்ணிலடங்கா இராகங்களை தானே உண்டாக்கிப் பாடிய பெருமைக்குரியவர்.

## vi. சுபஸ்ரார் ரஜினிகாந்த்

இவர் ஆரம்பத்தில் பஸ் நடத்துனராக வேலை பார்த்தவர். இவருடைய இயற்பெயர் சிவாஜிராவ். இவருடைய ஸ்டைலான நடை உடை பாவனையை அவதானித்த நண்பர்கள் நீ சினிமாவில் சேர்ந்தால் நல்ல எதிர்காலம் உண்டு என்று அடிக்கடி கூறுவதைக் கேட்டு அவரும் இதனை நடைமுறைப்படுத்த நடிப்புத்துறை கல்லூரியில் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கும் போது அங்கு விஜயம் செய்த டைரக்டர் ஒருவரின் தொடர்பு ஏற்பட்டு நடிப்புத்துறைக்குள் வந்து தனது திறமையால் சுப்பர்ஸ் ஸ்டார் பட்டத்திற்கு உரியவரானார்.

## vii. லியோனாடாவின்சி

புகழ்பெற்ற ஓவியர் இவர் தனது கை ஒப்பத்தை தகைீழாகத்தான் வைப்பார், அதாவது வின்சி லியோனார்டோ என்றுதான் ஒப்பமிடுவார். இவர் கீறிய மோனலிஸா ஓவியத்திற்கு கண் புருவம் கிடையாது. லியோனாடோடாவின்சி (1452–1519) ஆண்டுகளில் வாழ்ந்தவர்.

இவரது இரண்டு ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவை.

மோனாலிஸா (புன்னகை அரசி)

இயேசு கிறிஸ்துவின் இராப்போசனம் (The Last Supper)

இதுமட்டுமல்ல இவர் ஒரு சிறந்த சிற்பி, கலைஞர், இசைக் கலைஞர், கட்டடக் கலைஞர் இப்படிப்பல. இரண்டு கைகளாலும் ஓவியம் வரையும் ஆற்றல் உள்ளவர். 1452 ஆம் ஆண்டு இத்தாலியில் பிளோரன்ஸ் நகர் அருகே இருக்கும் “வின்னி” என்ற மலைகள் சூழ்ந்த ஒரு கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். டாவின்சியின் அப்பாவுக்கும் கூலி வேலைபார்க்கும் பெண் ஒருவருக்கும் சட்டவிரோதமாகப் பிறந்தவர். லியோடாவின்சி தாய்ப்பாசம் என்ன என்று தெரியாமலே வளர்ந்தவர்.

## viii. பிக்காஸோ

இவரை மொடன் ஆட்டின் (Modern Art) தந்தை எனப் புகழ்ந்து கூறுவார்கள். இவர் ஒழுங்கீனத்திற்குள் ஒரு ஒழுங்கைக் கடைப்பிடித்தார். அத்தோடு அசிங்கத்துள் அழகைக் கண்டார். இது இரண்டுமே இவரது முக்கிய கொள்கைகள். இவரது சித்திரங்களை விளங்குவதற்கு தனித்திறமை வேண்டும் என்று சொல்வதைவிட இவரது சில திரண்களை விளங்க முயற்சிப்பவர்களுக்கு மட்டுமே விளங்கும் எனலாம்.

## ix. வின்சன் சேட்சில்

பேச்சால் கொடிகட்டிப் பறந்து மக்களை தன்வயப்படுத்தியவர். பிரிட்டிஸ் பிரதமராக இருந்த போது இரண்டாவது உலகப் போரில் தனது நாடு வெற்றி பெற இவரது பேச்சே காரணம் எனலாம். இவரது வாயில் எந்த நேரமும் பெரியதொரு சுருட்டுப் புகைந்து கொண்டேயிருக்கும்

## x. ஹோமர்

இவருக்கு கண் தெரியாது. இருந்தும் அழியாத காவியம் படைத்துப் புகழ் பெற்றவர். இவர் பாடசாலை சென்று கல்வி கற்கவில்லை. ஒடிசி, இலியட் ஆகிய இரண்டு உலகப் புகழ் பெற்ற காவியங்கள் இவரால் எழுதப்பட்டதே.

**இழை 7**

## நட்பிற்கு இலக்கணமானவர்கள்

i. அபூபக்கர் – முகம்மத் (ஸல்)
ii. கார்ல்மாக்ஸ் – ஏங்சல்ஸ்
iii. இராமர் – குகன்
iv. கன்னன் – குசேலர்
v. ஔவை – அதியமான்
vi. எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க – பதியுத்தீன் முகம்மத்
vii. இயேசு – மத்தேயு
viii. சாக்கிரட்டீஸ் – பிளேட்டோ

ix. உமர்க்கையாம் – கஸ்ஸாலி

x. ஹிட்லர் – முசோலினி

## i. முகம்மது (ஸல்) - அபூபக்கர்

முகம்மது நபி (ஸல்) அவர்கள் நபி எனக் கூறியதும் முதலாவது ஏற்றுக்கொண்ட மனிதர் அபூபக்கர் (ரலி) அவர்களே. முகம்மது நபியவர்கள் மக்காவை விட்டு அகதியாக மதீனாவிற்குச் சென்ற போது கூடச் சென்ற ஒரேயொரு மனிதர் அபூபக்கர் (ரலி) அவர்களே. இஸ்லாமிய பிரச்சாரத்திற்காக தனது செல்வம் அத்தனையையும் செலவு செய்த மனிதர், அபூபக்கர். முகம்மது நபியவர்களுக்கு வயது வித்தியாசம் பாராது தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்தவர்.

## ii. கால்மார்க்ஸ் - ஏங்கல்ஸ்

அறிவியல் சார்ந்த சமதர்மக் கொள்கையை வகுத்தவர் கால்மார்க்ஸ். கார்ல்மாக்ஸ் 1818 இல் ஜெர்மனியில் பிறந்தார். வறுமையின் வரலாறு எனும் முதல் நூலை வெளியிட்டார். பொருளாதார மேதையான இவர் 1867இல் டாஸ்கெபிட்டல் (மூலதனம்) நூலை வெளியிட்டார். இதற்கடுத்த இரண்டு பாகங்களைத் தொகுத்துக் கொண்டிருந்த போதே 1883இல் உயிரிழந்தார்.

காரல்மார்க்ஸ், ஏங்கல்ஸ் இவருக்குமிடையே இருந்த நட்பு மிகமிக நெருக்கமானது. கால்மாக்ஸ் இங்கிலாந்திலிருந்து கொண்டு நூல் எழுதிக்கொண்டிருந்த போது இவரது குழந்தை இறந்துவிட்டது. இப் பிள்ளையை அடக்கம் செய்ய சவப் பெட்டி வாங்கவும் பணம் இல்லாமல் மூன்று நாள் ஏங்கல்ஸ் வரும் வரை குழந்தையின் பூதவுடல் வீட்டினுள்ளேயே இருந்தது. ஏங்கல்ஸ் வந்து சவப்பெட்டி வாங்கி ஈமக்கிரியைகளைச் செய்து அடக்கம் செய்தார்.

## iii. இராமர் - குகன்

இராமர் அரசர் – குகன் மீன்பிடித்து வாழும் கரையாரக் கூட்டத்திற்கு தலைவர். இராமர் தனது சகோதரர்களில் ஒருவராக குகனை ஏற்றுக்கொண்டு அவர் படைத்த விருந்தை உண்டு மகிழ்ந்தவர். குலவித்தியாசம் பார்க்கவில்லை.

## iV. கன்னன் - குசேலர்

கன்னன் அரசன், குசேலர், சாதாரணமானவர். கன்னன் பெரும் செல்வத்திற்கு சொந்தமானவர். குசேலர் வறுமைக்கே சொந்தமானவர். குசேலருக்கு 14 பிள்ளைகள் இந்தப் பிள்ளைகள் அன்றாடம் உணவில்லாது பல நாட்களை பட்டினியால் கழிப்பவர்கள். குசேலர், கன்னன் இருவரும் ஒரே கல்வி கூடத்தில் கற்றவர்கள் என்பதால் ஏற்பட்ட நட்பு! குசேலர் தனது வறுமையை போக்கிக்கொள்ள மனைவியினது ஆலோசனையோடு கன்னனைச் சந்திக்க கொஞ்சம் அவல் கொண்டு சென்றார். அதனை அன்போடு வாங்கிச் சாப்பிட்டவர் கன்னபிரான். குசேலர் வெட்கத்தால் அவரிடம் தனது வறுமையை பற்றி எதுவும் சொல்லவில்லை வெறும் கையோடு வீடு திரும்பினார். ஆனால் வீடு வந்து பார்த்த போது வீடு செல்லச் செழிப்போடு இருந்தது என்று கூறப்பட்டுள்ளது.

## V. ஔவை - அதியமான்

"அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம். இயல்வது கரவேல் ஈவது விலக்கேல் போன்ற அறக்கருத்துக்களை மாணவர்களும் கற்றுக்கொள்ள ஆத்துசூடி போன்ற இலக்கியங்களை ஆக்கியவர்தான் ஒளைவையார், இவருக்கும் அதிகமானுக்குமிடையே இருந்த உறவு மிகவும் பலம் வாய்ந்தது எனலாம். அதிகமான் தனக்குக் கிடைத்த அருங்கனியான நெல்லிக்கனியை ஒளைவையாருக்குக் கொடுத்ததாக வரலாறு உண்டு. இந்த நெல்லிக்கனியை பெறுவது மிக மிக அரிது. இதனை உண்டவர்கள் நீண்டகாலம் உயிர் வாழ்வார்கள். இப்படிப்பட்ட அரியகனி தனது கைக்கு கிடைத்தும் தான் உண்ணாது ஒளைவைக்குக் கொடுத்தான். இவன் ஔவை மேல் கொண்ட நட்பை என்னவென்று கூறுவது இதனை உண்மையென ஔவையின் பாடல் ஒன்றின் மூலம் நாம் அறிய முடிகின்றது.

**சிறிய கள் பெறினே**
**தான் உண்ணுமன்னே**
**பெரிய கள் பெறினே**
**என் கீயு மன்னே:**

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது. இதே வேளை ஔவையின் தலையைத் தடவி ஆசிர்வதித்துள்ளான் என்பதற்கு

**நரந்தம் நாறும் தன் கையால் புரவு நாறும்**
**என்தலை தைவருமி மன்னே**

என்ற பாடலும் இருவரது நட்பையும் விளக்குகிறது எனலாம்.

### vi. எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க - பதியுத்தீன் முகம்மத்

எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க பெரிய செல்வந்தரின் மகன். இங்கிலாந்தில் படித்து பரிஸ்டர் பட்டம் பெற்றவர். பதியுத்தீன் முஹம்மத் சாதாரண குடும்பம் என்றாலும் நன்கு படித்தவர். எஸ்.டபிள்யு.ஆர்.டி. அவர்கள் அரசியல் கட்சி ஆரம்பித்த போது கூடவே இருந்து அதற்காக உழைத்தவர் பதியுத்தீன்! எஸ்.டபிள்யு.ஆர்.டி. அவர்கள் சுடுபட்டு இறந்த பின்பும் கட்சியை முன்னெடுத்துச் செல்லப் பாடுபட்டவர். இருவரும் மதத்தால் வேறுபட்டவர்கள் என்றாலும் நட்பிற்கு இது இடைஞ்சலாக இருக்கவில்லை.

### vii. இயேசு - மத்தேயு

இயேசு பிரான் எங்கு சென்றாரோ அங்கெல்லாம் மத்தேயும் சென்றார். இயேசு பிரான் என்ன சொன்னாரோ அதையெல்லாம் செய்தார். இயேசு இறந்த பின்பும் அவரது பணியைத் தொடர்ந்தார் மத்தேயு.

### viii. சாக்கிரடீஸ் - பிளட்டோ

கி.மு. 427–347 கிரேக்கத்துவ ஞானியான இவர் மேலை நாட்டு அரசியல் தத்துவ சிந்தனை எழுச்சி பெறுவதற்கு தோற்றுவாயாக அமைந்தவர் பிளட்டோ.

இவரது அனுமானங்கள் கடந்த 2300 ஆண்டுகளாகப் படிக்கப்பட்டு வருகின்றன. இவர் மேல் நாட்டுத் தத்துவங்களின் தந்தையாகப் கருதப்படுகிறார். பிளட்டோவுக்கும் சாக்கிரட்டீஸூக்கும் மிடையே நெருக்கமான நட்பு இருந்தது. பிளட்டோ ஏதெனிசில் "கலைக் கழகம்" Academy பள்ளியை நிறுவினார். இப்பள்ளி 900 ஆண்டுகள் வரை இயங்கி வந்தது.

இவரது மாணவர்களில் புகழ்பெற்றவர் அரிஸ்டோட்டில். பிளாட்டோ தனது 80 வயதில் காலமானார். (கி.மு. 347இல்) பிளாட்டோ 36 நூல்களை எழுதியுள்ளார். இவைகளில் முக்கியமான நூல் குடியரசு. "The Republie" எனும் நூலாகும்.

ஆண், பெண் இருவருக்கும் அடிப்படைச் சமத்துவம் இருக்க வேண்டும் என்று கூறிய முதல் தத்துவஞானி இவரே ஆவார். குழந்தைகள் அனைவரையும் அரசாங்கமே வளர்க்க வேண்டும். அவர்களுக்கு அரசாங்கமே கல்வி புகட்ட வேண்டும் என்று கூறியுள்ளார்.

சாக்கிரடீஸ் பிளாட்டோ இருவரும் நண்பர்கள், சாக்கிரடீஸ் இறந்தபோது பிளாட்டோ நான் அறிந்த அனைவரிலும் மிகச் சிறந்த அறிவாளி சாக்கிரடீஸ் என்று கூறியவர் சாக்கிரடீஸ் பொய்க்குற்றச் சாட்டுகள் மூலம் கொல்லப்பட்டதும் மக்களாட்சி மீது பிளாட்டோவுக்கு வெறுப்புண்டாகியது. சோக்கிரடீஸ் இறந்த சில நாட்களிலேயே பிளாட்டோ ஏதன்சை விட்டு நீங்கினார். 10–12 ஆண்டுகள் அவர் ஏதென்சுக்கு வரவேயில்லை.

## ix. உமர்கையாம் - கஸ்ஸாலி

இருவரும் 300 மைல் இடைவெளியில் வாழ்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. ஆனால் இடையிடையே சந்திப்பதற்கு இந்த இடைவெளி இடைஞ்சலாக இருக்கவில்லை. இருவரும் வித்தியாசமான கொள்கையுடையவர்கள். உமர்க்கையாம் கவிஞர். போதையில் மிக விருப்பம் கொண்டவர். கஸ்ஸாலி மார்க்க பக்தர். இருவரது நட்பிற்கும் இவைகள் எதுவும் தடையாக இருக்கவில்லை.

## x. ஹிட்லர் - முசோலினி

ஹிட்லர் வயது வரம்பின்றி எல்லாப் பெண்களையும் கவர்ந்தான். உலக வரலாற்றில் மக்களால் அதிகம் வெறுக்கப்பட்ட ஒரு மனிதர்! 1889ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் திகதி ஒஸ்ட்ரியாவில் பிறந்தார். 11ஆம் வயதில் கல்வியை கைவிட்ட இவர் 1908ஆம் ஆண்டு தொடக்கம் 1913ஆம் ஆண்டு வரை அஞ்சலட்டை அளவிலான ஓவியங்களைத் தீட்டி வாழ்க்கை நடத்தினார். 1வது உலக யுத்தத்தின் போது இராணுவத்தில் இணைந்து பணியாற்றிய இவர் பின் 1918இல் ஜெர்மன் தொழிலாளர் கட்சியில் இணைந்து பிற்காலத்தில் அதனை தேசிய ஷோசலிஸ ஜெர்மன் தொழிலாளர் கட்சி என தலைப்பிட்டு ''நாசி'' கட்சியாக மாற்றினார்.

1933ஆம் ஆண்டு திட்டமிட்ட புரட்சி மூலம் ஜெர்மனியின் பிரதம அமைச்சராக பதவியில் அமர்ந்து கொண்ட அவர் குறுகிய காலத்திற்குள் அந் நாட்டின் சர்வாதிகாரியானார்.

ஹிட்லர் மாமிச உணவு உண்டதில்லை புகைப்பிடித்ததில்லை. பிள்ளைகள் மீதும் மிருகங்கள் மீதும் பாசம் மிக்கவர். 1945ஆம் ஏப்ரல் 3ம் திகதி ஜெர்மனியின் வீழ்ச்சியுடன் தற்கொலை செய்து கொண்டார்.

இறப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் தன்னுடைய காதலி "எம்மாவை" பதுங்கு குளியில் வைத்து திருமணம் பெய்து கொண்டார். அதன் பிறகு இருவரும் தற்கொலை செய்து கொண்டனர். இவர் கி.பி.

## முசொலினி

இத்தாலியின் சர்வாதிகாரி மக்களால் கொல்லப்பட்டு மரத்தில் தலைகீழாக தொங்கவிடப்பட்டு இறந்தான். பெனிற்றோ முசோலினி என்பது இவரது முழுப் பெயர். இவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட போது இவன் பேசிய கடைசி வார்த்தை "என் நெஞ்சில் சுடு" என்பதாகும். ஹிட்லருக்கும் இருவருக்கும் இடையே மிக நெருக்கமான நட்பு இருந்தது.

## இழை 8

## மின்னலின் போது

i. மின்னலின் போது திறந்தவெளி களில் நிற்கக்கூடாது
ii. கடற்கரை போன்றவற்றில் நிற்கக் கூடாது.
iii. தனியாக இருக்கும் மரத்தடியில் தனிக் கட்டடத்தில் நிற்கக் கூடாது.
iv. குளம், குட்டை போன்ற நீர் நிரம்பிய இடங்களில் நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.
v. கார், பேருந்து போன்றவை பாதுகாப்பானவை. அவற்றிற்குள்ளேயே இருக்கலாம்.
vi. தலைமுடியோ, கழுத்துப் பகுதியோ செங்குத்தாக சிலிர்த்தால் மின்னல் வரப்போகிறது என்று பொருள். உடனேயே அருகில் உள்ள கட்டிடத்திற்குள் செல்லுங்கள்.
vii. இயலாவிடின் இரு கால்களையும் நெருக்கி வைத்தபடி உடம்பைக் குறுக்கிக் கொண்டு சுருண்டு உட்காருங்கள் உடலின் காலைத் தவிர எந்தவொரு பகுதியும் தரையைத் தொட வேண்டாம். கட்டிடத்தின் உள்ளிருக்கும் போது மொட்டை மாடிக்குப் போக வேண்டாம்.
viii. மின் கம்பிகள் போன்ற உள்ளே வரும் எந்தக் கம்பிகளின் அருகிலும் போக வேண்டாம்.

ix. தண்ணீர் வரும் குழாய் போன்றவற்றிற்கு அருகில் போக வேண்டாம்.

x. திறந்த படகுகளில் தோணிகளில் இருக்கக் கூடாது.

**இழை 9**

**கடுகுச் செய்திகள்**

i. உங்களிடம் உள்ள செல்வங்கள் அனைத்தும் இழக்கப்பட்ட பின் உங்களின் பெறுமதி எவ்வளவோ அதுதான் உங்களின் உண்மையான பெறுமதி.

ii. பாகிஸ்தான் பிரதமராக இருந்த "பூட்டோ" எழுதிய கடைசிப் புத்தகம் "நான் கொல்லப்பட்டால் என்பதாகும். இதை அவர் ராவல் பிண்டி சிறையில் இருக்கும் போது எழுதி முடித்தார். காகிதங்களை முழங்காலில் வைத்தபடியே எழுதினார். இவருடைய மகள் பினாசீர் பூட்டோ அவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

iii. உலகின் மனிதர்களிடம் பொதுவாகக் காணப்படும் இரத்த இனம் ஓ இரத்த இனமாகும்.

iv. தொலை பேசியை கண்டுபிடித்த கிரஹம் பெல் ஒரு நாளும் தனது தாய்க்கோ மனைவிக்கோ ரெலிபோனில் பேசியது கிடையாது. காரணம் இவருக்கு காது கேட்பதில்லை.

v. சந்திரன் எமது தலைக்கு மேல் நேராய் இருக்கும் போது எமது உடல் எடை சிறிதளவு குறைந்து இருக்கும். காரணம் பூமி சந்திரன் இரண்டினதும் ஈர்ப்பு சக்தி ஒன்றுடன் என்று தொடர்புடையது.

vi. மார்க்க மேதை ஹசறத்தானவி (ரலி) அவர்கள் 1000 நூல்களை எழுதியுள்ளார்.

vii. அறிஞர்களான ரூசோ, சோக்கிரட்டீஸ், ஹோமர் போன்றோர் பள்ளிக் கூடப் பக்கமே போகாதவர்கள்.

viii. முன்னாள் இந்தியப் பிரதமர் முராஜி தேசாய் மிகவும் வறிய நிலையில் இருந்தார். ஒருமுறை நேர்முகப் பரீட்சைக்குப் போவதற்கும் உடையில்லாமல் நண்பர் ஒருவரிடம் உடையை கடனாகப் பெற்று அணிந்து சென்றிருந்தார். இறக்கும்வரை எளிமையாகவே வாழ்ந்தார்.

ix. இரண்டாவது எலிசபெத் மகாராணியின் திருமணத்திற்கு மகாத்மா காந்தி தனது கையால் நெய்த மேசை விரிப்பொன்றை அன்பளிப்பாக கொடுத்தார். எலிசபெத் இராணிக்கு வந்த பரிசுப் பொருட்களில் மிகவும் குறைந்த பெறுமதியுள்ள பொருள் இதுதான்.

x. உலகில் வழக்கில் உள்ள பிரபலமான பெயர் முஹம்மத்

இழை 10

## சாவித்துவாரத்தின் ஊடே

i. பால் கெட்டுப் போவதற்கு காரணம் அதில் உள்ள சக்கரையை காற்றில் உள்ள நுண்ணிய பக்டீரியாக்கள் தின்று அழித்துவிடுவதுதான். இதைத் தவிர்க்க பாலின் நிலையை எந்த குளிர் நிலையில் அல்லது கொதி நிலையில் வைத்தால் பக்ரீரியாக்கள் அவற்றை அணுகாது என்பதனைக் கண்டு பிடித்தவர் லூயி பாஸ்டர்.

ii. சிரிக்கத் தெரியாத மனிதர்கள் அதிகம் இருக்கும் நாட்டுப் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடம் வகிக்கிறது. அடுத்து குரோசியா, ரஸ்யா போன்ற நாடுகள் இருக்கின்றன. இத் தகவல் ‘‘நெக்ஸ்ட் எப்’’ என்ற ஏஜென்சி நடத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

iii. இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களில் ஆண்களே அதிகம். சுமார் 800க்கு மேற்பட்ட ஆண்கள் இதுவரை நோபல் பரிசு பெற்றுள்ளார்கள்.

iv. நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி மேரி கியூரி.

v. விமானத்தில் இருந்து பரசூட் மூலம் குதித்த முதல் பெண் அமெரிக்காவின் ஜார்ஜியா பிரட்விக் என்பவராவார். 1913ஆம் ஆண்டு லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் இச் சாதனையை புரிந்தார்.

vi. உலகில் அதிக ஏழைகள் உள்ள நாடு இந்தியா. இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 36 கோடியே 3 இலட்சம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.

vii. கண் பார்வையில்லாத ஜிம்டிக்கன் தனது 41 வயதில் அத்லாந்திக் கடலை எவருடைய உதவியுமின்றி 4400 கிலோமீட்டர் தூரத்தை படகு மூலம் 32 நாட்கள் கடந்து சாதனை படைத்துள்ளார்.

viii. மனிதனின் முகத்தில் 14 எலும்புகள் உள்ளன. ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் இரத்தத்தின் அளவு 5 லீட்டர்.

ix. உலகிலேயே அதிகூடிய வயதில் பிரதமரானவர் மொராஜிதேசாய் இந்தியாவில்

x. உலகம் அதிகபட்சமாக 1200 கோடி மனிதர்களைத்தான் தாங்கும்.

இழை 10

## சாவித்துவாரத்தின் ஊடே

i. பால் கெட்டுப் போவதற்கு காரணம் அதில் உள்ள சக்கரையை காற்றில் உள்ள நுண்ணிய பக்டீரியாக்கள் தின்று அழித்துவிடுவதுதான். இதைத் தவிர்க்க பாலின் நிலையை எந்த குளிர் நிலையில் அல்லது கொதி நிலையில் வைத்தால் பக்ரீரியாக்கள் அவற்றை அணுகாது என்பதனைக் கண்டு பிடித்தவர் லூயி பாஸ்டர்.

ii. சிரிக்கத் தெரியாத மனிதர்கள் அதிகம் இருக்கும் நாட்டுப் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடம் வகிக்கிறது. அடுத்து குரோசியா, ரஸ்யா போன்ற நாடுகள் இருக்கின்றன. இத் தகவல் ''நெக்ஸ்ட் எப்'' என்ற ஏஜென்சி நடத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

iii. இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களில் ஆண்களே அதிகம். சுமார் 800க்கு மேற்பட்ட ஆண்கள் இதுவரை நோபல் பரிசு பெற்றுள்ளார்கள்.

iv. நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி மேரி கியூரி.

v. விமானத்தில் இருந்து பரசூட் மூலம் குதித்த முதல் பெண் அமெரிக்காவின் ஜார்ஜியா பிரட்விக் என்பவராவார். 1913ஆம் ஆண்டு லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் இச் சாதனையை புரிந்தார்.

vi. உலகில் அதிக ஏழைகள் உள்ள நாடு இந்தியா. இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 36 கோடியே 3 இலட்சம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.

vii. கண் பார்வையில்லாத ஜிம்டிக்கன் தனது 41 வயதில் அத்லாந்திக் கடலை எவருடைய உதவியுமின்றி 4400 கிலோமீட்டர் தூரத்தை படகு மூலம் 32 நாட்கள் கடந்து சாதனை படைத்துள்ளார்.

viii. மனிதனின் முகத்தில் 14 எலும்புகள் உள்ளன. ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் இரத்தத்தின் அளவு 5 லீட்டர்.

ix. உலகிலேயே அதிகூடிய வயதில் பிரதமரானவர் மொராஜிதேசாய் இந்தியாவில்

x. உலகம் அதிகபட்சமாக 1200 கோடி மனிதர்களைத்தான் தாங்கும்.

## சாவித்துவாரத்தின் ஊடே

i. பால் கெட்டுப் போவதற்கு காரணம் அதில் உள்ள சக்கரையை காற்றில் உள்ள நுண்ணிய பக்டீரியாக்கள் தின்று அழித்துவிடுவதுதான். இதைத் தவிர்க்க பாலின் நிலையை எந்த குளிர் நிலையில் அல்லது கொதி நிலையில் வைத்தால் பக்ரீரியாக்கள் அவற்றை அணுகாது என்பதனைக் கண்டு பிடித்தவர் லூயி பாஸ்டர்.

ii. சிரிக்கத் தெரியாத மனிதர்கள் அதிகம் இருக்கும் நாட்டுப் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடம் வகிக்கிறது. அடுத்து குரோசியா, ரஸ்யா போன்ற நாடுகள் இருக்கின்றன. இத் தகவல் “நெக்ஸ்ட் எப்” என்ற ஏஜென்சி நடத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

iii. இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களில் ஆண்களே அதிகம். சுமார் 800க்கு மேற்பட்ட ஆண்கள் இதுவரை நோபல் பரிசு பெற்றுள்ளார்கள்.

iv. நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி மேரி கியூரி.

v. விமானத்தில் இருந்து பரசூட் மூலம் குதித்த முதல் பெண் அமெரிக்காவின் ஜார்ஜியா பிரட்விக் என்பவராவார். 1913ஆம் ஆண்டு லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் இச் சாதனையை புரிந்தார்.

vi. உலகில் அதிக ஏழைகள் உள்ள நாடு இந்தியா. இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 36 கோடியே 3 இலட்சம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.

vii. கண் பார்வையில்லாத ஜிம்டிக்கன் தனது 41 வயதில் அத்லாந்திக் கடலை எவருடைய உதவியுமின்றி 4400 கிலோமீட்டர் தூரத்தை படகு மூலம் 32 நாட்கள் கடந்து சாதனை படைத்துள்ளார்.

viii. மனிதனின் முகத்தில் 14 எலும்புகள் உள்ளன. ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் இரத்தத்தின் அளவு 5 லீட்டர்.

ix. உலகிலேயே அதிகூடிய வயதில் பிரதமரானவர் மொராஜிதேசாய் இந்தியாவில்

x. உலகம் அதிகபட்சமாக 1200 கோடி மனிதர்களைத்தான் தாங்கும்.

# நூல் 08

# மொழியியல்

## சாவிக்குறிப்பு

மொழியென்றால் என்ன? என்று உங்களிடம் ஒரு கேள்வியை கேட்டால் உங்களில் பெரும்பாலானோர் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் சாதனம் அல்லது ஊடகம் மொழி என்பீர்கள்.

ஒரு காலத்தில் இக்கருத்து உண்மையாகவே இருந்தது! ஆனால் இன்று அப்படியில்லை. உண்மைகளை மனக்கருத்துக்களை மறைக்கப்பயன் படும் ஒரு சாதனம் அல்லது ஊடகம் மொழி எனலாம்.

உதாரணமாக ஒருவன் ஒருத்தியிடம் "நான் உன்னை மனதாறக் காதலிக்கிறேன். நீ இல்லாமல் நான் இல்லை. வாழ்ந்தால் உன்னோடு இல்லையேல் மண்ணோடு" எனக் கூறுகிறான். இது உண்மைதானா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அவளும் இதற்குச் சளைத்தவளல்ல என்பதையும் உணர்வீர்கள்.

நீதிமன்றங்களை பாருங்கள். எப்படி வாதாடுகிறார்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள். இப்படியான நிலையை மனத்திலே எண்ணியவாறு, மொழி மனக்கருத்தை வெளிபடுத்தும் ஒரு ஊடகம் என்ற வகையில் பின்வரும் கருத்துக்களை எடுத்து நோக்குவோம்.

இழைகள்

1. உலகளாவிய மொழிகள்
2. பழமொழிகள்
3. மணிமொழிகள்
4. உள்ளத்தை தொடும் மொழிகள்
5. பெரிய மனிதர்கள் பேசிய கடைசி மொழிகள்
6. கடுகு மொழிகள்
7. வழிகாட்டி மொழிகள்
8. உயிர் மொழிகள்
9. அழிந்து வரும் மொழிகள்
10. சாவித்துவாரத்தின் ஊடே

இழை 1

## உலகளாவிய மொழிகள்

i. நாகரிகம், பண்பாடு, பாரம்பரியம், கலாச்சாரம், எழுச்சி, உணர்ச்சிகள், கருத்துக்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் ஊடகமாக அல்லது கருவியாக மொழி பயன்படுகிறது. உலகில் ஏறத்தாள ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன.

ii. 15ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகின் மொத்தச் சனத்தொகை 50 இலட்சம் முதல் ஒருகோடியாக இருந்த போது அவர்களிடையே 12 ஆயிரம் மொழிகள் பேசப்பட்டன.

(ஆதாரம் ஜோன் நோபல் வைல்ட் பீல்ட் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை– டெய்லி நியூஸ் 11.10.2007)

iii. இம்மொழிகளுள் பழமை வாய்ந்த மொழிகள்

a. எபிரேயம்
b. வல்காத்து (Valgate)
c. ஷிட்டா
d. அரமைக் (Aramaic)
e. சால்ட்டியம்
f. பழைய கிரேக்கம் என்பவற்றை கூற முடியும்

iv. உலகில் பேசப்படும் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகளிலே மூவாயிரம் மொழிகள் மட்டுமே எழுத்து வடிவமும் இலக்கண இலக்கியமும் உள்ள மொழிகளாகும்.

v. இந்த மொழிகளிலே ஆறு மொழிகள் உலகளாவிய மொழிகளாகக் கருதப்படுகின்றன. அவை
அரப், இங்கிலிஸ். பிரஞ்சு, ரஸ்யன், சீனம்,ஸ்பானிஸ்

vi. இந்த ஆறு மொழிகள் உலகப் பரிவர்த்தனைக்குரிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

vii. அமெரிக்கத் தீவு ஒன்றில் 200 ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்ட மொழிகளை மீண்டும் உருவாக்குவதில் அந்நாட்டு பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது.

viii. அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேறுவதற்கு முன் 300க்கு மேற்பட்ட மொழிகள் இருந்தன.

ix. மொழியியலாளர்கள் மொழி பற்றிய கருத்தினை பின்வருமாறு வகுத்துக் கூறுகின்றனர்.

a. கடவுள் வகுத்த மொழிக் கொள்கை (Devine Theory)
b. இயற்கை வகுத்த மொழிக்கொள்கை (Contreat Theory)
c. பவ்வு வவ்வு கொள்கை (Bow and Wow Theroy)
d. பூ, பூ கொள்கை (Pooh Pooh Theroy)
e. யோ, ஹி, ஹோ கொள்கை (Yo he ho Theroy)
f. இசைக் கொள்கை (Musical Theory)
g. சைக்கினை கொள்கை (Gesture Throry)
h. டாடா கொள்கை (Tata Throry)
i. ஒட்டுக் கொள்கை (Compound Theroy)
j. விலங்கொலிக் கொள்கை (Animal Theroy)
சுட்டொலிக் கொள்கை (Dlitic Theroy)

(ஆதாரம் : சொற்பிறப்பியல் ஏ.ஆர்.எம். ஹனிபா
பக்கம் 284 ஆண்டு – 2009)

x. மொழிகளின் தன்மை

| | | |
|---|---|---|
| இங்கிலிஸ் | – | வணிகமொழி |
| இலத்தீன் | – | சட்டமொழி |

| | | |
|---|---|---|
| கிரேக்கம் | – | இசைமொழி |
| ஜேர்மன் | – | தத்துவமொழி |
| பிரஞ்சு | – | தூதின் மொழி |
| இத்தாலி | – | காதல் மொழி |
| சமஸ்கிருதம் | – | வீர மொழி |
| தமிழ் | – | பக்தி மொழி |
| அரபு | – | இறைவனின் மொழி |
| ஹீப்று | – | முதல் மொழி |

**இழை 2**

## பழமொழிகள்

பழமொழிகள் பண்பாட்டின் அறிவு முதிர்ச்சியைக் காட்டும். பழமொழி என்பது ஆழமான கருத்துடைய அனுபவ முதிர்ச்சியினால் கண்டு கொள்ளப்பட்ட கருத்தினை சிறிய சொற்றொடர் மூலம் கூறுவது. எழுத்தறிவில்லாத பாமர மக்களும் இதன் மூலம் பயன் அடைகிறார்கள். வேறு ஒருவகையாகக் கூறுவதாயின் ஹைகூ, புதுக்கவிதை, குறள்பா போன்ற பா வடிவங்களைப் போன்றது பழமொழிகள்.

## எமது நாட்டு பழமொழிகள்

i. அஞ்சினவன் கண்ணிற்கு ஆகாயமெல்லாம் பேய்
ii. ஆடத் தெரியாதவள் அரங்கு பிழை என்பாள்
iii. இரண்டு தோணியில் கால் வையாதே
iv. ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாள மட்டும் பாயும்
v. உண்ணாச் சொத்து மண்ணாப் போகும்
vi. ஊர் ஓட ஒத்தோடு. ஒருவனோடக் கேட்டோடு
vii. எண்ணம் போல வாழ்வு
viii. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது
ix. ஐயர் வரும்வரைக்கும் அமாவாசை காத்திருக்காது
x. கண்டது கற்கப் பண்டிதனாவான்

## பிற நாட்டு பழமொழிகள்

i. மனித வாழ்வு குழந்தையின் கையில் இருக்கும் முட்டை மாதிரி

–ரூமேனியா–

ii. உன் பக்கத்து வீட்டானை நேசி ஆனால் வேலியை எடுத்து விடாதே

–டென்மார்க்–

iii. அதிஸ்டசாலிக்கு சேவல் கூட முட்டையிடும்

–கிறிஸ்–

iv. பணமிருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணமில்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது

– ஸ்பெயின்–

v. உள்ளே நுளையும் முன் வெளியே வருவதை பற்றி யோசி

–அரேபியா–

vi. அதிஸ்டம் என்ற சொல் எப்போதும் துணிச்சல் மிக்கவர்கள் பக்கமே நிற்கும்

– சீனா–

vii. நீ அழுதால் தனியே உட்கார்ந்து கொண்டுதான் அழ வேண்டும். ஆனால் சிரி ஊரெல்லாம் சேர்ந்து சிரிக்கும்.

– இங்கிலாந்து –

viii. மனிதனுக்கு மகிழ்ச்சி இருமுறை வரும். ஒன்று மனைவியை அடையும் போது, மற்றது மனைவியைப் புதைக்கும் போது

– செர்பியா–

ix. அரசன், வாகனம், பெண் இம்மூன்றையும் எப்போதும் நம்பிக்கொண்டிருக்க வேண்டாம்

– எகிப்து –

x. பெண் இல்லாத வீடும், வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவையே

– பலஸ்தீனம் –

## முஸ்லிம் பழமொழிகள்

i. குஞ்சிக் கோழி என்றாலும் குனிந்துதான் அறுக்க வேண்டும்.
ii. ஊரா கோழி அறுத்து உம்மா பெயரில் கத்தமா? (இறந்தவர்கட்கு செய்யும் சடங்குகளில் ஒன்று கத்தம்)
iii. அரபிக் குதிரையென்றாலும் பிறவிக்குணம் போகாது.
iv. ஊரில் உள்ளது உதுமா லெப்பைக்கும்
v. வகிலன் சொத்து வைத்தியன் கையில் (வகிலன் – கஞ்சன்)
vi. வாயை பொத்தினால் சலாமத் (சலாமத் – அமைதி)
vii. கையில் கத்தியில்லாதவன் மிஸ்கீனுக்குச் சமம் (மிஸ்கீன் – ஏழை)
viii. தொழுவது அல்லாஹ்வுக்காக. வைக்கோல் களவெடுப்பது மாட்டிற்கா?
ix. எவண்ட பெண்சாதி எவனோடப் போனால் என்ன? லெப்பைக்குத் தேவை நாலு காசு.
x. பள்ளிச் சொத்தை தின்றகுடி பற்றி எரிந்துபோகும்.

### இழை 3

## மணி மொழிகள்

மணிமொழிகள் நட்சத்திரங்களைப் போன்றவை. நாம் அவற்றைச் கையால் தொடுவதில் வெற்றி காணமுடியாது. ஆனால் கடல் பயணிகள் நட்சத்திரங்களை பார்த்து வழி கண்டுசெல்வது போல அது எமக்கு வெற்றியளிக்கும். இஃதே போலத்தான் மணிமொழிகளை வழித்துணையாகக் கொண்டு உங்களின் குறிக்கோளை எய்த முடியும். இதுவும் ஒரு மணிமொழிதான்.

i. நீ கலியாணம் செய்யப் போகிறாயா? அல்லது செய்யாமல் இருக்கப் போகிறாயா எதை வேண்டுமானாலும் செய். நீ பின்னால் கஷ்டப் படப் போவது நிச்சயம்.

–சோக்கிரட்டீஸ்–

ii. நீ மக்களிடம் என்ன சொல்கிறாயோ அதை செயல்படுத்திக் காட்டு. இல்லையெனில் நீ என்ன செய்கிறாயோ அதை மக்களக்குச் சொல்.

–மகாத்மாகாந்தி–

iii. நல்ல மனைவியும் நல்ல உடல் நலமும் மனிதனின் மிகச் சிறந்த செல்வங்கள்

–எச்.ஜி. போறன்–

iv. தன்னைத் தானே காத்துக் கொள்ளாத பெண்ணை வேறு யாரும் காத்துக் கொள்ள முடியாது.

–அறிஞர் பெர்னாட்ஷா–

v. மணத்தைப் பார்த்து பூவெடு, நிலத்தினைப் பார்த்து பயிரிடு, தரத்தைப் பார்த்து பொன்னெடு, தாயைப் பார்த்து பெண்ணெடு.

–கவிஞர் கண்ணதாசன்–

vi. அறிவு ஒரு சதவிகிதமும், உழைப்பு தொண்ணூற்றி ஒன்பது சதவிகிதமும் இருப்பவர்கள் எத்துறையிலும் சிறப்பாகப் பிரகாசிக்க முடியும். இது என் அனுபவம்.

–தோமஸ் அல்வா எடிசன்–

vii. எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்ப தல்ல முக்கியம். வுாழ்க்கையை எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம்.

–ஆபிரகாம் லிங்கன்–

viii. நிச்சயமாக நன்மைவிளையும் என்று உணர்ந்தாலன்றி உனது மனத்தில் உள்ளதை வெளியிட வேண்டாம்.

–சுவாமி விவேகானந்தர்–

ix. தவறு திருத்தப்பட்டால் அது மேலும் தவறாக இருக்கப் போவதில்லை. திருத்தப்படாத தவறு அழுகிக் கொண்டிருக்கும் புண்.

–லெனின்–

x. நாஸ்திகம் என்பது கடவுள் இல்லை என்று கூறுவதும், நம்புவதும்தான். ஒன்றே குலம் ஒருவனே தேவன் இதுதான் உண்மை. ஆனால் கடவுளின் பெயரை முன்வைத்து உலகிலே நடைபெறும் அட்டூழியங்களும் அக்கிரமங்களும் அகற்றப்படவேண்டும். சாமி, தெய்வம், சாத்தான், காத்தான் என்ற பெயரில் நடைபெறும் சடங்குகள், விழாக்கள் தடை செய்யப்பட வேண்டும். தேவாலயம் தீதெண்ணங் கொண்டவர்களின். உறைவிடமாகக் கூடாது. மசூதி மக்களை மாக்களாக்கும் மடுவங்களாகக் கூடாது. இப்படிக் கூறுவதும் செய்வதும் நாஸ்திக மல்ல. மதத்தையும் மத நப்பிக்கைகளையும் தூய்மைப் படுத்தும் செயல்கள்.

–அறிஞர் அண்ணா–

இழை 4

## உள்ளத்தைத் தொட்ட மொழிகள்

i. பிலேக்கு அந்தகப் பையன் எழுதிய கடிதம்

ii. அன்னை திரேசா

iii. அமெரிக்க ஜனாதிபதி கெனடி

iv. றிசானா நபீக்

v. சதாம் உசைன்

vi. நஸ்ட்ரடாமஸ்

vii. கவிஞர் செல்லி

viii. கிலியோபாட்ரா

ix. லியோ டோல்ஸ்டோய்

x. கலிபா அல்– மாமூஉன்

### i. "பிலே"க்கு அந்தப் பையன் எழுதிய கடிதம்

பீலே என்ற உதைபந்தாட்ட வீரருக்கு ஒரு வாரத்திற்கு 300க்கு மேற்பட்ட கடிதங்கள் வரும்! அதில் ஒரு கடிதத்தை செல்வத்துள் எல்லாம் செல்வமாக பிலே மதித்து காப்பாற்றி வருகிறார். இந்தக் கடிதம் கண் இரண்டும் தெரியாத ஒரு பையனால் எழுதப்பட்டது. இக்கடிதத்தில் அந்தக் குருட்டுப் பையன் பின்வருமாறு எழுதி இருந்தான்.

நீங்கள் போட்ட ஆயிரம் கோல்களில் ஒன்றைக் கூட நான் பார்க்க வில்லை. ஆனால் 999 கோலுக்குப் பிறகு அடுத்த ஆயிரமாவது கோலும் நீங்கள் நல்லபடியாகப் போட வேண்டும் என்று தொடர்ந்து இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தேன்'' என எழுதப்பட்டிருந்த இக்கடிதத்தைப் படித்ததும் ''பிலே'' விக்கி விக்கி அழுதார்.

### ii. அன்னை திரேசா

அன்னை திரேசா இந்தியாவின் தென்னாடு வந்தபோது அவருக்கு இரவு விருந்தளிக்கப்பட்டது. அப்பொழுது அவர் சாப்பிட அமர்ந்ததும் அவரது கண்களில் இருந்து கண்ணீர் ஒழுகியது. இதனை கண்ட கன்னியாஸ்திரிகள் ''அன்னையே! ஏன் அழுகிறீர்கள்'' எனக் கேட்டபோது'' எனது குழந்தைகள் அங்கு (கல்கத்தாவில்)

சாப்பிட்டார்களோ என்னவோ தெரியாது பாவம் அவர்கள் அனாதைகள் அவர்களைக் கவனிக்காது நான் இங்கு வந்துவிட்டேன்'' என்றார்.

## iii. ஜோன் F. கெனடி

இவரை நாம் இவர் கூறிய "நாடு எமக்கு என்ன செய்தது என்று கேட்டுக் கொண்டிராமல் நாட்டிற்காக நாம் என்ன செய்தோம்'' என்று கேட்டுப்பார் என்று கூறிய கருத்திற்காக மட்டுமாயினும் மறக்காதிருக்க வேண்டும். இவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர். இவர் வாழ்ந்த காலம் 1917 – 1963 வரையான காலப்பகுதியாகும். இவர் காலத்தில்தான் மனிதன் சந்திரனில் காலடி வைத்தான்.

## iv. றிஸானா நபீக்

றிசானா நபீக் 2005ஆம் ஆண்டு அவர் பணியாற்றிய சவூதி அரேபிய வீட்டில் நான்கு மாத ஆண் குழந்தையைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு 2007 ஜூன் மாதம் 16ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்ததுடன் 08.01.2013 சவூதி அரேபிய நேரப்படி 11.40 மணியளவில் நிறைவேற்றப்பட்டது.

14 வயதுடைய சிறுமியை 23 வயதுடையவளாக பாஸ்போட் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருந்தார். இவர் வறுமை காரணமாகவே அங்கு சென்றார். இவரது குடும்பத்தில் தாய், தந்தை, சகோதரி, சகோதரன் என நான்கு பேர். பிறந்த இடம் மூதூர்.

இவர் சிரச்சேதம் செய்யப் படுவதற்கு முன் "அவரிடம் இருந்த சேமிப்பான ஒரு சிறு தொகை பணத்தை ஏழைகளுக்கு தானம் கொடுத்து விடும்படி கூறினார். "உம்மா நான் ஒரு குற்றமும் செய்யாது தண்டிக்கப்ப படுகிறேனே என்பதை நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது'' என்று கூறினார்.

## V. சதாம் ஹுசைன்

சதாம் ஹுசைன் "என் நெஞ்சில் சுட்டு அதனை நிறைவேற்றுங்கள்'' என்று கூறியும் அமெரிக்கர்கள் அதனை கருத்தில் கொள்ளாது தூக்கில் இட்டனர்.

## vi. நஸ்ட்ரடாமஸ்

நஸ்ட்ராடாமஸ் என்பவர் தீர்க்கதரிசி போன்று கணிக்கப்பட்டவர். இவர் எழுதி வைத்த எதிர்பார்ப்புக்கள் அதிகமாக நடந்துள்ளன. அமெரிக்காவின் வர்த்தக இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்படும் என எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் சொல்லியிருந்தார். அது போல் நடந்தது.

இது போல் எத்தனையோ. ஆனால், அவர் கூறிய வார்த்தைகள் சிலேடையான கருத்துள்ளவை. அதனால் எப்படியும் பொருள் கொள்ளலாம். இவர் தனது உடலை அடக்கம் செய்யும் போது செங்குத்தாக (நிற்பது போன்று) அடக்கம் செய்யுங்கள். அப்படி செய்துவிட்டு எனது கல்லறையில் "இழிவானவர்கள் எவரும் என்மேல் நடந்து செல்லக் கூடாது" என்று எழுதுங்கள் என்றார். அப்படியே எழுதப்பட்டது. செங்குத்தாக நிற்கும் போது யாரும் நடக்கமுடியாது அல்லவா?

## vii. செல்லி தனது தாயின் கல்லறையில் எழுதி வைத்தது

சத்தமிட்டு நடக்காதீர்கள் இங்கே என் அம்மா இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்.

## viii. உலகப் புகழ் பெற்ற பேரழகி கிளியோபாட்ரா கல்லறையில் எழுதப்பட்டுள்ள மொழி

உலகிலேயே அழகான பிணம் இங்கே உறங்கிக் கொண்டிருக்கிறது. நல்ல வேளை பிணமாக இல்லாவிட்டால் இந்தக் கல்லறைக்குள் ரோமாபுரி இராச்சியமே தூங்க வேண்டியதாக இருந்திருக்கும்.

## ix. லியோ டோல்ஸ் டோய்

இவர் மிகப் பெரும் பணக்காரர். இவர் தனது செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கியவர். ஐம்பது ஆண்டுகள் மனைவியின் தொந்தரவு தாங்காமல் தவித்தவர். தனது 83வது வயதில் வீட்டை விட்டு வெளியேறி ரெயில்வே பிளட்பாரம் ஒன்றில் படுத்திருக்கும் போது குளிர் தாங்காமல் இறந்து போனார். "நான் இறந்த பிறகு என்னுடலை என் மனைவிக்கு மட்டும் காட்டக் கூடாது என எழுதி வைத்திருந்தார்.

## X. கலிபா அல் மாமூன்

"இறப்பில்லாதவனே இறந்து கொண்டிருக்கும் ஒருவன் மீது அருள் பாலிப்பாயாக" என்று கூறினார்.

**இழை 5**

## பெரிய மனிதர்கள் பேசிய கடைசி மொழி

i. புத்தர்
ii. இந்திரா காந்தி
iii. ஹோமியோபதி மருத்துவ தந்தை ஹனிமன்
iv. ரூசோ
v. அப்துல் காதர் ஜெய்லானி (ரஹ்)
vi. மகாகவி பாரதி
vii. ஜோஜ் வாசிங்டன்
viii. ரூஸ் வெல்ட்
ix. சேர் வேல்டர் ரலி
x. கார்லா டக்கர் ப்ரவுண்

## i. புத்தபிரான்

"காரணத்தில் தோன்றிய எல்லாம் அழியும். உங்கள் நோக்கத்தை நிறைவேற்ற விழிப்புடன் இருங்கள்"

இதுதான் புத்தபிரான் கடைசியாகப் பேசிய வார்த்தைகள். இது அவரது சிஸ்யன் ஆனந்தன் புத்தபிரானைப் பார்த்து "புத்தரைப் பற்றியோ, சங்கத்தினரைப் பற்றியோ ஞானம் பெறும் வழி பற்றியோ எவ்வித சந்தேகமும் எவருக்கும் இல்லை" எனக் கூறியதும் ஆனந்தனைப் பார்த்து புத்தர் கூறிய வசனங்களே புத்த பிரான் கடைசியாக கூறியுள்ள வார்த்தைகளாகும்.

## ii. இந்திராகாந்தி

இந்திரா காந்தியின் கடைசிப் பேச்சு . உணரச்சிமிக்க தழுதழுத்த குரலில் ''இன்று நான் இருக்கிறேன். நாளை இருப்பனோ என்பது தெரியாது. என்னைச் சுட்டுக் கொல்ல எத்தனையோ முயற்சிகள் நடைபெற்றன என்பதை யாரும் அறிய மாட்டார்கள்.

வாழ்வு சாவு பற்றி நான் கவலை படவில்லை. எனக்கு இரண்டும் ஒன்றுதான். நான் கணிசமான காலம் வாழ்ந்து விட்டேன். அந்தக் காலத்தை நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் செலவிட்டதைப் பற்றி பெருமைப் படுகிறேன். இது ஒன்றுதான் எனக்குப் பெருமையே தவிர வேறு எதற்காகவும் நான் பெருமைப் படவில்லை. என் கடைசி மூச்சி உள்ளவரை நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் சேவை செய்கிறேன். நான் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் இந்த நாட்டை வளப்படுத்தும், பலப்படுத்தும். இதன் பின் அடுத்த நாள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## iii. ஹோமியோபதி மருத்துவத் தந்தை ஹனிமன்

ஒரு வியாதியில் தென்படும் குறிகளைப் போன்ற குறிகளை உண்டாக்கும் வலிமையுள்ள மருந்தை உபயோகிக்க வேண்டும். அதனால் வியாதி நீங்கும். விஷம் விசத்தைப் போக்குவது போல. என்பதுவே ஹனிமனின் வைத்தியக் கொள்கையாகும்.

இக்கொள்கை அக்கால வைத்தியக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணானதாகவும் புரட்சிகரமானதாகவும் இருந்ததால் அதிக எதிர்ப்பு இருந்தது.

''ஆர்கனான்'' ஆய்வு நூலின் ஆசிரியர். இவர் பரிசில் எட்டுவருடம் இருந்தார். 1843ஆம் ஆண்டு தனது 88வது வயதில் காலமானார்.

''எனக்கு ஒரு குறையுமில்லை. கஷ்டப் படும் மக்களுக்கு நன்மை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு எனக்கு நல்லது என்று பட்டதை செய்து விட்டேன். என்ற மன நிம்மதியுடன் கண்களை மூடுகிறேன்'' என்று சொல்லி உயிர் நீத்தார்.

## iV. தத்துவ மேதை றூசோ

இவர் கல்வியியலாளரும் கூட. இவர் தன்னிடம் கல்வி கற்பிப்பதற்காக ஒரு பிள்ளை ஒப்படைக்கப்பட்டால் அவனது பதினைந்து வயதுவரை அவனுக்கு நான் ஒன்றும் கற்பிக்க மாட்டேன்.

பதினைந்தாவது வயதில் அவனுக்கு நான் எழுத வாசிக்க கற்றுக் கொடுப்பேன். எழுத வாசிக்கக்கற்றுக் கொண்ட பின் அவனுக்கு ''றொபின்சன் குரூசோ'' போன்ற நூல்களை வாசிக்க கொடுப்பேன்.

"உலகத்தில் ஒருவன் கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ உள்ளது" என்று கூறியவர். இவர் இறக்கும் போது எழுதிக் காட்டியவை.

''இறைவனை வணங்கிய வண்ணமும் என் நண்பர்களை நேசித்தவாறும் என் எதிரிகள் எவரிடமும் விரோதம் கொள்ளாமலும் மூட நம்பிக்கைகளை அடியோடு வெறுத்த வண்ணமும் நான் இறக்கிறேன்'' என்பதாகும்.

## V. முகைதீன் அப்துல் காதர் ஜெய்லானி (ரஹ்)

உலகில் முதன் முதல் முகைதீன் என அழைக்கப்பட்டது இவரைதான். இவருக்கு தாய் தகப்பன் இட்ட பெயர் அப்துல்காதர் என்பதாகும். ஜீலான் என்பது இவருடைய ஊர்ப்பெயராகும். இவர் பக்தாதில் கல்வி பயின்று அங்கேயே மாணவர்கட்கு குருவாகவும் இருந்தார். பக்தாதில் இவரது நூதனசாலை, வாசிகசாலை என்பன உண்டு. இங்கு இவர் எந்த ஒரு வெளிநாட்டிற்கும் சென்றதாக வரலாறுகள் கிடையாது. இலங்கைக்கும் இவர் வரவில்லை. ஆனால் இவரது சீடர்கள் உலகமெங்கும் இஸ்லாமிய பிரச்சாரத்திற்குச் சென்றார்கள்.

''பக்கீர் ஜமாஅத்'' இவரால் ஆரம்பிக்கப்பட்டதே. இசை மூலம் மார்க்கப் பிரச்சாரம் செய்வது இப்பக்கீர் ஜமாஅத்தின் நோக்கமாகும். இவர் பக்தாதில் 73 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். 5 அப்பாசியக் கலீபாக்களின் ஆட்சிக் காலத்துள்ளும் வாழ்ந்துள்ளார்.

இவரை மரணம் நெருங்கியபோது இவர் பேசிய வார்த்தைகள் அல்லாஹ் மிகப் புனிதமானவன். மிக உயர்ந்தவன். அவன் நித்தியமானவன். மரணமடையாதவன். தன்னிடம் இருந்து எதுவும் தவறிவிடுமோ, யாரும் தப்பிவிடுவார்களோ என்று அஞ்சும் அளவிற்குப் பெலயீனமானவன் அல்லன்.

தன்னுடைய சகல ஆற்றலாலும் அடியார்களை அடக்கியாளும் வல்லமையினாலும் அவன் கண்ணியம் பெற்றவன். வணக்கத்திற்குரியவன். இவனைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவன் இல்லை. முகம்மது நபி (ஸல்) இறைவனின் திருத்தூதர் என்பதாகும்.

## vi. மகாகவி சுப்ரமணிய பாரதியார்

இவர் எட்யாபுரத்தில் பிறந்தவர். இவர் ஓர் ஆரியர். இவர் திராவிடர்களோடு சாதி வித்தியாசம் பாராது பழகியவர் "இவரது பாடல்களில் "குயில் பாட்டு மிகவும் பிரசித்தமானது. இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட கவிஞர்.

1921ஆம் ஆண்டு மதம் பிடித்த யானையின் பக்கத்திலே சென்று அதனோடு கொஞ்சி விளையாடிய போது தாக்கியதால் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

இவர் 1921ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி இறந்தார்.

இவர் கடைசியாக சுதேச மித்திரன் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அப்பொழுது ஆப்கான் மன்னராக அமானுள்ளா பிரிட்டிசாரின் ஏகாதிபத்தியத்தை தீவிரமாக எதிர்த்துப் போராடிச் கொண்டிருந்த காலம் அது.

"அமானுல்லாவைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி நாளை ஆபிசுக்கு எடுத்து செல்ல வேண்டும்" இதுதான் அவர் பேசிய கடைசி வார்த்தை. அவர் எழுதிய கடைசிக் கவிதை

"காலா உன்னை நான் புல்லென மிதிக்கிறேன் என்றன் காலருகே வாடா

அல்லது
காலா உன்னை நான் புல்லென நினைக்கிறேன்
கிட்டே வாடா
உன்னை நான் காலால் மிதிக்கிறேன். என்பதாகும்.

## vii. ஜோர்ஜ் வாசிங்டன்

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வாசிங்டன். மரணமடைந்த போது அவருக்கு வயது 68.

பிலடெல்பியாவில் 1779ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை இரவு 10க்கும் 11க்கும் இடைபட்ட நேரத்தில் (நேரம் சரியாக தெரியவில்லை) காலமானார். இவர் அருகே இவர் மனைவி சோகமாக அமர்ந்திருந்தார்.

வைத்தியர்கள் வாசிங்டன் உயிர் பிரிந்து விட்டது என்று சொன்னபோது, அவரது மனைவி "இனி எல்லாமே முடிந்து விட்டது. விரைவிலே நானும் அவருடன் இணைந்து கொள்வேன்" என்று சோகமாக கூறினாராம்.

வெள்ளிக்கிழமை பகல் முழுவதும் திடகாத்திரமாக இருந்த வாசிங்டன் சனிக்கிழமை அதிகாலையில் தனது மனைவியை எழுப்பி "பேசுவதற்குக் கஸ்டமாக இருக்கிறது. நான் மிகவும் சுகயீனமாக இருக்கிறேன்" எனச் சொல்லி இனி நான் பிழைக்க போவதில்லை. இறப்பிற்கு எனக்கு பயமில்லை. என்னைக் கவனித்துக் கொண்டதற்கு உனக்கு நன்றி. அமைதியாக என்னை இறந்து போக விடுங்கள் என்று மருத்துவர்களிடம் கூறிவிட்டு மார்பில் இரண்டு கையை வைத்து விரல்களைக் கோர்த்தபடி நீட்டி நிமிர்ந்து படுத்துவிட்டார்.

## viii. ரூஸ் வெல்ட்

முன்னாள் அமெரிக்க குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் இறப்பதற்கு முன் கடைசியாக "அந்த விளக்கை அணை" என்று கூறினார்.

## ix. சேர் வோல்டர்ரலி

1618இல் சிரச்சேதம் செய்யப்பட்ட போது பின்வருமாறு கூறினார்.

"இதயம் சரியாக இருக்கிறது. தலை எந்தப் பக்கம் விழுந்தாலும் எனக்குக் கவலையில்லை.

## X. கர்லா டக்கர் ப்ரவுண்

"நான் இப்போது யேசுநாதரை நேருக்கு நேர் சந்திக்கப் போகிறேன். நான் உங்கள் அனைவரையும் மிகவும் விரும்புகிறேன். நீங்கள் அனைவரும் அங்கு வரும்போது சந்திப்பேன். நான் உங்களுக்காக காத்திருப்பேன்"

இவர் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு இறக்கும் போது கூறிய கடைசி மொழி இதுதான்.

### இழை 6

### கடுகு மொழிகள்

i. தமிழ் அகராதியில் உள்ள சொற்களில் பல ஆயிரம் சொற்கள் உபயோகம் இல்லாத சொற்களாக இன்று இனங்காணப்பட்டுள்ளன.

ii. உலகில் பேசப்படும் மொழிகளுள் "பிரஹா" என்ற மொழியும் ஒன்று. இந்த மொழியை பேசுபவர்கள் அமேசன் காடுகளில் முன்னூறு பேர் மட்டுமே வாழ்கிறார்கள். இவர்களின் மொழியில் ஒன்று, இரண்டு, நிறைய, நன்று ஆகிய நான்கு சொற்கள் மட்டுமே உண்டு.

ஒன்று என்பது தனித்துவமானது என்ற அர்த்தத்திலும், இரண்டு என்பது பல என்ற அர்த்தத்திலும், நிறைய என்ற சொல்லானது கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாகவும் உள்ளது. 3,4,5,6,7,8,9,0 போன்றவற்றை அவர்கள் அறிந்திருக்கவே இல்லை. இவர்களுடைய மொழிக்கு எழுத்துக் கிடையாது. இவர்கள் பேசுவது கூட விசில் அடிப்பது போன்று இருக்கும்.

இம் மொழியில் இறந்த காலத்தைக் குறிக்கச் சொற்களே கிடையாது.

iii. சிங்கள அகராதியை முதன் முதல் தொகுத்தவர் சோரத தேரர்.

iv. இங்கிலிஸ் அகராதியை முதன் முதல் தொகுத்தவர் சாமுவேல் ஜோன்சன்

v. சுருக்கெழுத்து முறையை அறிமுகப் படுத்தியவர் சேர் ஆசாக் பிற்மன்

vi. 1969ஆம் ஆண்டுதான் தமிழ்மொழி தமிழ் நாட்டின் அரச மொழியாக்கப் பட்டது.

vii. கட்புலன் இல்லாதவர்கள் உபயோகப்படுத்தும் மொழி "பிறெயல்" என்பதாகும். தடவிப் பார்த்து வாசித்தல். எழுத்துக்கள் பொங்கி இருக்கும்.

viii. ஸ்பானிஸ் மொழியில் Wife என்ற வார்த்தைக்கு கைவிலங்கு என்ற பொருளும் உண்டு.

ix. எல்லா மொழிகளையும் ஏற்றுக் கொண்டுள்ள நாடு வத்திக்கான்.

x. சொல்லும் பொருளும்.

| | | |
|---|---|---|
| அ. நூறு ஆண்டு | – | நூற்றாண்டு விழா |
| ஆ. 75வது ஆண்டு | – | பவள விழா |
| இ. 60 ஆண்டு | – | வைரவிழா |
| ஈ. 50 ஆண்டு | – | பொன்விழா |
| உ. 40 ஆண்டு | – | மாணிக்கவிழா |
| ஊ. 30 ஆண்டு | – | முத்து விழா |
| எ. 25 ஆண்டு | – | வெள்ளி விழா |
| ஏ. 20 ஆண்டு | – | பீங்கான் விழா |
| ஐ. 15 ஆண்டு | – | படிக விழா |
| ஒ. 10 ஆண்டு | – | தகர அலுமினிய விழா |

**இழை 7**

**வழிகாட்டி மொழிகள்**

i. ஒரு பெண்ணை தற்செயலாக பார்க்க நேரிட்டால் ஒருமுறை மட்டும்பார். மறு முறை பார்த்தால் வீண் துன்பமே உன்னை தொடரும்.

ii. உன் வீட்டில் கறி சமைக்கும் போது அடுத்த வீட்டானையும் நினைத்துக் கொள்.

–மகான் முகம்மது நபி (ஸல்)–

iii. சூரியனைப் பார்ப்பதற்காக நாம் விளக்கை எடுத்துச் செல்வதில்லை. சூரிய ஒளியிலேயே அதனைக் காண்கிறோம். அதுபோல நாம் கடவுளைக் காண கடவுளின் அருள் வேண்டும்.

iv. ''தச'' என்பது பத்து
''ரத'' என்பது தேர் இராமனின் தந்தையாகிய ''தசரதன்'' என்பது கண், காது, மூக்கு, வாய் ஆகிய பொறிகள் பத்து அடங்கிய மனிதனை குறிக்கும்.

தசரதனின் மூன்று மனைவியரும் முக்குணங்களைக் குறிக்கும். நான்கு பிள்ளைகள் நான்குவித புருசாத்தங்களைக் குறிக்கும். இலட்சுமணன் இராமருடைய புத்தியைக் குறிக்கும். அனுமன் என்பது சைத்திரியத்திற்கு

உறைவிடமான மனோ நிலையைக் குறிக்கும். சுக்ரீவன் என்பது பகுத்தறியும் தன்மையைக் குறிக்கும். இவைகளை உதவியாகக் கொண்டு காணாமல் போன சீதையெனும் சத்தியத்தை தேடிக் காண்பதில் இராமர் வெற்றி பெறுகிறார். எல்லோருக்கும் இராமாயணம் புகட்டும் பாடம் இதுவே.

–சத்தியசாயி பாவா–

v. அம்பை நேராக நிமிர்த்துபவர் வில்லாளர். மரத்தில் சித்திரங்களை பொறிப்பவர் தச்சர். தம்மை தாமே அடக்கி ஆள்பவர் அறிஞர்.

vi. ஆசைதான் துன்பத்திற்குக் காரணம். ஆசையை அடக்குவதன் மூலம் துன்பத்தை தவிர்க்கலாம்.

–புத்த பிரான்–

vii. அன்பற்ற நெஞ்சந்தான் விரோதத்தை நீடித்து வைத்துக் கொள்ளும். பிரிந்து போனதை எப்போதும் பிரிக்கவே பார்க்கும் அன்புள்ள மனத்திற்கு அக்கணம் மட்டுமே சச்சரவு. அதன் பின்மறந்து மறுபடியும் கூடிக்கொள்ளும்.

viii. என்னிடம் இந்த நாடு ஒப்படைக்கப்பட்டால் நான் முதலில் மொழிச் சீர்திருத்தத்தையே அமுலாக்குவேன். எத்தயோ சீர்த்திருத்தங்கள் நாட்டிலே இருக்க ஏன் நீங்கள் மொழிச் சீர்திருத்ததை செய்யவிரும்பினீர்கள் எனக் கேட்டதும் மொழிதான் சகல பிரச்சினைக்கும் காரணம் என்றார்.

–கொன்பூசியஸ்–

ix. ஆசைக்கும் சொர்க்கத்தை அடைய மாட்டார் பணக்காரர்.

x. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு

–இயேசு நாதர்–

இழை 8

## உயிர் மொழிகள்

i. இமாம் ஹசனுல்பாரி

ii. பரமஹம்சர்

iii. சுலைமான் நபி

iv. உமர் (ரலி)

v. ரொபின் சர்மா

vi. ஒஸ்கா வைல்ட்

vii. கவிஞர் லோட் பைரன்

viii. எமர்சன்

ix. இங்கர்சால்

x. திரௌபதை

### i. இமாம் ஹசனுல்பாரி

ஒரு சமயம் இமாம் ஹசனுல்பாரி (ரலி) அவர்கள் மக்காவில் ஹஜ்ஜுடைய நாளில் பாவமன்னிப்புத் தேடிக் கொண்டிருந்த போது ஒரு மனிதர் ஒரு கூடையை தனது தோழில் சுமந்தவாறு (பாவமன்னிப்பு) தேடுவதற்காக சபா, மர்வா எனும் இரு மலைகளுக்கிடையே ஓடுவதைக் கண்டார்கள்.

இதனைக் கண்ட இமாம் அவர்கள் புனித கடமைகளின் போது இவ்வாறு ஒழுக்கக் கேடாக கூடையில் பொருட்களை வைத்துச் சுமந்தவாறு செய்கிறீர்களே இது முறையாகுமா என்று வினாவியதும், கூடை சுமப்பவர் “பெரியவரே நான் ஒன்றும் ஒழுக்கக்கேடாக நடக்கவில்லை. இக்கூடையில் இருப்பது எனது வயது முதிர்ந்த தாய் அவருக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளையே செய்கிறேன் என்றதும், இமாம் அவர்கள் இதே போல உமது தாயை உதயகிரிமுதல் அஸ்த்த கிரிவரை சுமந்து வந்த போதிலும் அது அந்தத் தாயுடைய கர்ப்பத்தில் இருந்து நீ வெளிவரும் போது, நீர் புரண்டிருப்பீரே அச்சமயம் உன் தாய் அடைந்த வேதனைக்குச் சமமாக மாட்டா” என்றார்கள்.

## ii. இளைஞனுக்கு பரமஹம்சர் சொன்னது

ஓர் இளைஞன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சென்று "சுலபமாக ஞானம் பெற வழி என்ன?" என்று கேட்டான். "தினமும் கீதையை படி. நிவேதனம் செய்தபிறகு திராட்சைப்பழம் சாப்பிடு என்று உபதேசம் செய்தார்.

"தினமும் எவ்வளவு திராட்சைப்பழம் நிவேதனம் செய்து சாப்பிட வேண்டும் என்றான் அந்த இளைஞன். "தினமும் எத்தனை சுலோகங்கள் கீதையில் படிக்க வேண்டும் என்று கேட்டிருந்தாயானால் உனக்கு ஞானத்தில் நாட்டம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியும். எவ்வளவு திராட்சைப்பழம் நிவேதனம் செய்து சாப்பிடவேண்டும் என்று கேட்ட உனக்கு வயிற்று வலி பெறுவதற்குத்தான் தகுதியிருக்கிறது இப்பொழுது ஞானத்தைப் பற்றிப் பேசாதே. போய் வா என்றார் பரமஹம்சர்.

## iii. பொய்சொல்லிக் கல்யாணம் (சுலைமான் நபி)

ஓர் ஆண் குருவி, பெண் குருவியை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவ்வழியாகவந்த சுலைமான்(அலை) அவர்களிடம் ஒருவர் "யாநபியே, இது பேசும் காதல் மொழியின் கருத்து என்ன?" என்று கேட்டார்.

"நீ என்னை மணந்து கொள் உன்னை நான் திமிஸ்க் தேசத்தில் நீ விரும்பும் ஒரு மாளிகையில் குடியமர்த்தி வைக்கிறேன்" என்று அந்த ஆண்குருவி கூறுகிறது என்றார் சுலைமான் (அலை)

ஆனால் திமிஷ்க் தேச மாளிகைகள் கருங்கல் மாளிகைகள், அதில் குடியமர்த்த இயலாது என்பது அந்த ஆண் குருவிக்குத் தெரியும். அப்படி இருந்தும் அது பொய் பேசிக் கல்யாணம் செய்து கொள்ளப் பார்க்கிறது. இப்படித்தான் ஒவ்வொரு ஆணும் பெண்களிடம் பொய் பேசுகிறான்.

–நூல் – ஹயாத்துல்ஹய்வான்–

## iv. உமர் (ரலி)

ஜனாதிபதி உமர் அவர்கட்கு அப்பிள் என்றால் மிகப் பிரியம். ஆனால் அடிக்கடி வாங்கிச் சாப்பிடுவதற்கு அவரது பொருளாதார நிலை இடமளிக்கவில்லை. இதையறிந்த ஜனாதிபதியின் உறவினர் ஒருவர் சிறந்த அப்பிள் பழங்கள் சிலதை பரிசாக அனுப்பி வைத்தார். இதனைக் கண்ட ஜனாதிபதி அவற்றை எடுத்து முகர்ந்து பார்த்துவிட்டு கொண்டுவந்தவரிடம் பின்வருமாறு கூறினார்.

“நண்பரே இதனை எடுத்துச் சென்று அனுப்பிய நண்பரிடம் பத்திரமாகச் சேர்த்து விடுங்கள். அத்தோடு எனது அன்பையும் நன்றியையும் அவருக்குத் தெரிவித்து விடுங்கள் என்றதும், அப்பிள் பழங்களை கொண்டு வந்தவர் ஜனாதிபதி அவர்களே இதை ஏன் திருப்பி அனுப்புகிறீர்கள் பெருமானார் கூட இப்படி அனுப்பப்பட்ட அன்பளிப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளார்களே” என்றதும் ஜனாதிபதி அவர்கள் பெருமானரின் விடயம் வேறு அவருக்கு அனுப்பப்பட்டது உண்மையான அன்பளிப்புத்தான். ஆனால் என் போன்றோருக்கு அனுப்பப்படும் அன்பளிப்புகள் இந்தக் காலத்தில் லஞ்சமாகி விட்டனவே” என்றார்.

## V. ரொபின் சர்மா

“நீ உயிர் துறந்தால் அழுபவர் யாரோ?

சிரியுங்கள்

வாழும் போதே ஈமச் சடங்கு செய்ய ஆயத்தம் செய்யவும்

தகுதியான எதிரிகளை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்

குறைவாகத் தூங்குங்கள்

கூட்டாக குடும்பத்துடன் உணவருந்துங்கள்

நடை பயிலக் கற்றுக் கொள்ளுங்கள்

கவிஞர் லோட் பைரன்

ஒரு மரம் நடுங்கள் இவ்வாறு ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு மரம், மனைவிக்கு ஒருமரம், தாய் தந்தைக்கு இருமரம் என நடுங்கள்.

நிம்மதியுடன் இருக்க ஒரு இடம் வீட்டின் உள்ளும் இருக்கலாம், அது வெளியிலும் இருக்கலாம்

இது போன்ற உயிர் மொழிகளே இவரது “நீ உயிர் துறந்தால் அழுபவர் யாரோ” என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.

## VI. ஒஸ்கா வைல்ட்

தன் எழுத்தால் பேச்சால் மக்களைக் கவர்ந்தவர் இவர். இவருடைய எழுத்துக்கள் அன்றைய கணவான்களை எரிச்சலுற வைத்தன. இஃதே போல இரட்டை வேடம் கொண்ட பெண்களையும் இவர் இரக்கமின்றி சத்திர சிகிச்சை செய்தவர்.

இவர் மேல் மட்ட கனவான்கள் சேற்றுள் வீழ்ந்து மாய்கிறார்கள் என்று கூறிவிட்டு இவரும் சேற்றுள் விழுந்த சரித்திரங்கள் ஏராளம் உண்டு.

ஜோர்ஜ் பேர்னாட்ஷாவுக்கும் இவருக்குமிடையே பல ஒற்றுமைகள் உண்டு. ஆனால் ஜோஜ் பெர்னாட்ஷா அவர்கள் பின்பற்றிய கடினமான ஒழுக்கங்கள் இவரால் பின்பற்ற முடியவில்லை.

இவர் ஓரினச் சேர்க்கையாளராகவும் இனங் காணப்பட்டார் .

இவர் 19ஆம் நூற்றாண்டின் சிறந்த நாவலாசிரியன், கவிஞன், நாடக ஆசிரியன், விமர்சகன், பேச்சாளன், அமெரிக்கா பிரித்தானியா போன்ற நாடுகளின் சுற்றுப்பிரயாணம் செய்து தனது பல்துறை ஆற்றலையும் வெளிப்படுத்தியவர்.

டப்ளின் நகரில் 16.10.1854இல் இவர் பிறந்தார்.

தகப்பன் ஒரு சத்திர சிகிச்சை நிபுணர் தனது உயர் கல்வியை ஒக்ஸ்போட்டில் பெற்றவர்.

கொன்ஸ்டான்டின் டுவாயிட் எனும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். 30.11.1900ஆம் ஆண்டில் இறக்கின்றார். இறக்கும் போது இவர் வறுமைப்பட்டவராகவே இறந்தார்.

புகழின் உச்சியைத் தொட்ட அதே வேளை அவமானத்தின் ஆணி வேரையும் கண்டவர். இவரது வாழ்வின் சோதனை காலம் "Te Picture of Doriyan Kira" எனும் நாவலோடு தொடங்குகிறது. இதுவே இவர் எழுதிய ஒரே ஒரு நாவல்.

ஓரினச் சேர்க்கையாளர் என்ற பெயரைத் தந்ததும் இந்த நாவல்தான். ஓரினச் சேர்க்கையாளன் எனக்குற்றம் சுமத்தி இரண்டரை வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனை பெற்று நீதி மன்றத்திற்கு வெளியே அழைத்து வரப்பட்ட போது மக்கள்கூட்டம் அவரைப் பார்த்து கேலி செய்தது.

விலை மாதர் ஆடைகளை உயர்த்திக் காட்டி அவரை அவமானப் படுத்தினர். தலை நிமிர்ந்து இலக்கியச் செழிப்பைக் காட்டியவர். தலை குனிந்து மௌனியாகச் சென்றார்.

பலகாலம் அவமானத்துள் கிடந்தவர் இன்று அங்கீகாரம் பெற்றுள்ளார்.

நான் கலை வடிவத்தை தத்துவமாக மாற்றினேன். தத்துவத்தை கலைவடிவமாக மாற்றினேன். நான் மனித மனங்களை மாற்றியுள்ளேன், மக்கள் அதிசயிக்காத எதையும் நான் செய்யவும் இல்லை.. சொல்லவும் இல்லை. நான் எவைகளைத் தொட்டேனோ அவைகளை பொலிவு பெறச் செய்தேன்.

## vii. கவிஞர் லோட் பைரன்

இங்கிலிஸ் மொழிக் கவிஞரான லோட் பைரன் பிறக்கும் போதே ஊனமாகப் பிறந்தவர். ஆனால் அவருடைய கவிதைகளும் கட்டுரைகளும் ஊனமாகவில்லை. "சரியோ பிழையோ உனக்குப் பட்டதைச் செய். முட்டாள்களைப் பற்றிக் கவலைப்படாதே. முட்டாள்கள் வாய்க்கு வந்ததையெல்லாம் கதைப்பார்கள்.

## viii. எமர்சன்

ஒரு வைக்கோல் துண்டைக் கூட வைக்க வேண்டி திசையில் வைத்தால்தான் அதன் வழியே ஒரு மாபெரும் நதியைப் பாய்ச்ச முடியும்.

## ix. இங்கர்சால்

உண்மைதான் மகிழ்ச்சியின் அன்னை, மனித இதயத்தின் மகத்தான ஒளி. உண்மைதான் நன்மைபுரிவதற்கான ஒப்பற்ற சக்தி. உண்மைகளைக் கண்டறிய வேண்டுமென்பதுதான் இதயத்தில் இடம்பெற வேண்டிய ஆசை.

## x. திரௌபதை

திரௌபதையை "அயோனிஜா" என்றும் அழைப்பார்கள். "அயோனிஜா" என்ற சொல்லின் பொருள் யோனியில் உதித்தவளல்ல" என்பதாகும். "இதேபோல "சீதை" என்ற சொல்லுக்கு பூமியில் இருந்து கிடைத்தவள் என்பது பொருளாகும்.

இழை 9

## அழிந்து வரும் மொழிகள்

i. 21ஆம் நூற்றாண்டு முடிவிற்குள் 200மொழிகள் அழிந்துவிடும்.

ii. இன்னும் சில ஆண்டிற்குள் இருபது மொழிகள் உலக அரங்கில் இருந்து விடைபெற்றுவிடும்.

iii. அப்படியான இருபது மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று

iv. பெண்கள் மட்டுமே பேசிக் கொள்ளும் இரகசிய மொழியான Sushu அழிந்து போனது பற்றிய தகவல்கள் யோசிக்க வைக்கின்றன.

v. 2004ஆம் ஆண்டு கடைசியில் ஒரு பெண் இறந்து போனதோடு இம்மொழியும் அழிந்து விட்டது.

vi. ஆழிந்து போன மொழிகளாக Ahom Aka, Beaaka, Boaka, Cariaka, Jeruaka, Kedeaka, Kolaka Kora Akar Balae Ucikwar Ino Khamayang Oko, Juwoi, Alai, Turung போன்ற மொழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

vii. 1961ஆம் ஆண்டின் இந்திய குடிசன மதிப்பீட்டு அறிக்கையின்படி அந்நாட்டு தாய்மொழிகளின் தொகை 1652.

viii. யுனஸ்கோ அறிக்கையின்படி அழிந்துவரும் மொழியாக தமிழும் உள்ளடக்கப்பட்டள்ளது.

ix. கலிபோர்னியாவில் பேசப்படும் ஒரு மொழி போமோ (Pomo) என அழைக்கப்டுகிறது.

இம்மொழியை ஐப்பது பேர் மட்டுமே பேசுகிறார்கள். அதனால் இந்த நூற்றாண்டிற்குள் இம்மொழி அழிந்து விடும்.

x. அமேசன் நதிக்கு அருகாமையில் வசிப்பவர்களில் ஹிக்ஸ் கரையானா எனும் மொழியும் அழிவடையும் நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இழை 10

## சாவித்துவாரத்தின் ஊடே

i. முதன் முதலில் கேள்விக்குறியை (?) பயன்படுத்தய மொழி இலத்தீன் மொழிதான்.

ii. பேசும் மொழியும் எழுதும் மொழியும் வெவ்வேறாக இருக்கும் நாடு சீனா.

iii. உலகில் அதிகமான மக்களால் பேசப்படும் மொழி ''மண்டாரின்) எனும் சீன மொழியாகும்

iv. ''கனடா'' என்ற பிரஞ்சு மொழிச் சொல்லுக்கு ''பெரிய கிராமம்'' என்று பெயர்.

v. சுருக்கெழுத்து முறையை உலகிற்கு அறிமுகம் செய்தவர் சேர் ஆசாக் பிற்மன்

vi. 1969ஆம் ஆண்டு தமிழ் சென்னை மாநிலத்தின் உத்தியோக மொழியானது

vii. சீன மொழியில் மொத்தம் 1300 எழுத்துக்கள் உள்ளன.

viii. இலக்கணப்பிழை, அல்லது எழுத்துப் பிழையுடன் நாம் எழுதினால் இது குறித்து அதிர்வுகள் மூலம் எமக்கு தெரிவிக்கும் ''ஸ்மார்ட்'' என்னும் பேனாவை ஜெர்மன் நிறுவனமான லொன்ஸ் டிப்ட் கண்டுபிடித்துள்ளது. இப்பேனை பரீட்சை எழுதும் மாணவர் உட்பட எல்லோருக்கும் உதவி செய்யும் எனலாம்.

ix. இலக்கியத்திற்கான நோபல் பரிசை பல முறை வென்ற மொழி பிரஞ்சு.

x. அறைதல்" எனும் சொல்லுக்கு பின்வரும் சொற்களையும் பகரமாக கூற முடியும். இசைதல், இயம்புதல், உரைத்தல், உளுறுதல், ஒதுதல், கத்துதல், கரைதல், கூறுதல், சாற்றுதல், அடித்தல்

# நூல் 09

# அழகியல்

**சாவிக்குறிப்பு**

கிழக்காசியாவிலேயே தத்துவ ஞானியாகக் கருதப்படும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அழகுபற்றி அழகானதொரு கருத்தைச் சொல்லி இருக்கிறார். அதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமென நினைக்கின்றேன்.

"அழகைப்பற்றி ஏதாயினும் சொல்ல நினைப்பவர் முதலில் அவரது எண்ணக் கருவில் அழகுபற்றி ஏலவே ஒரு கருத்து உட்புகுந்து ஆட்சி பண்ணிக்கொண்டிருக்கிறது. முதலில் அதனை வெளியே எடுத்து உள்ளத்தினை வெறுமையாக வைத்துக்கொண்டுதான் கருத்துச் சொல்ல வேண்டும்.

உதாரணமாக அவரது உள்ளத்தில் குடிகொண்டிருந்த பழைய எண்ணக்கருவான "கறுப்பென்றால் அழகில்லை" என்ற எண்ணக் கரு ஆட்சி செய்து பிழையான கருத்தையே சொல்ல வைக்கும்.

இதேவேளை மொடன் ஆட்டின் தந்தை என அழைக்கப்படுகின்ற பிக்காசோ அவர்கள் "ஒழுங்கீனத்திற்குள் ஓர் ஒழுங்கை காணுதல் அழகு" என்று கூறிய கருத்தோடு என்னுள் நான் உண்டாக்கி வைத்துள்ள அழகு பற்றிய ஒரு கருத்தினையும் இங்கு கூற விரும்புகின்றேன்.

"எது ஒழுங்காக இருக்கிறதோ அது ஒழுக்கமாகும். எது ஒழுக்கமோ அதுவே அழகு". என்ற எண்ணக்கருவோடு பின்வருவனவற்றையும் சேர்த்து நோக்குவோம்.

இழைகள்

1. படங்கள்
2. உலக அதிசயங்கள்
3. உயிரினங்களின் விசித்திரம்
4. அழகாய் இருக்க
5. அழகான செயல்கள்
6. குப்பையிலே கிடந்தாலும்
7. அழகான செய்திகள்
8. பஞ்சத்தில் பலவிதம்
9. அழகும் மருத்துவக்குணமும் தரும் இரத்தினக்கற்கள்
10. சாவித்துவாரத்தின் ஊடே

இழை 1

i. அற்புதச்சித்திரம்



உலகில் பிரபலமான மோனலிசா படத்தில் மோனலிசாவுக்கு புறுவங்கள் கிடையாது.

வித்தியாசமான – அபூர்வமான ஒரு புன்னகை. இப்புன்னகை பல நூற்றாண்டுகளாக புரியாத புதிராகவே இருந்து வருகின்றது.

பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற ஓவியர் லியர்னோ டாடாவின்சி 1500களில் வரைந்த அற்புதமான ஓவியம் இது.

மோனலிசாவின் ஓவியத்தை நேரடியாக பார்க்கும் போது புன்னகை தெரியாது. ஆனால் ஓவியத்தில் இருந்து சற்று பார்வையை விலக்கினால் அந்த புன்னகை புலப்படும்.

## ii. மனிதர்கள் பலவிதம்



ஆசியாவின் மிக உயரமான மனிதர் பாகிஸ்தானைச் சேர்ந்த முகம்மட் மலிக்.



உலகில் மிக குள்ளமான மனிதராக பிலிபைன்சின் தென்பகுதி தீவான மின்டானோவைச் சேர்ந்த 18 வயது இளைஞன் “ஜன்ரே பாலா விஸ்” அடையாளம் காணப்பட்டுள்ளார். இவருடைய

உயரம் 23 1/2 அங்குலம்.

நிறை 12 இறாத்தல்

## iii. அங்கங்களும் இல்லாமையும்





iv. 100 வயதைத் தாண்டும் போது





v. ஊறுவாய் மனிதர்கள்



vi. உலகத்தை வென்ற காதல் ஜோடி



## vii. ஒன்றில் பதின்னொன்று (Eleven in one )




பெண்கள் ஒரு சூலில் ஒரு குழந்தை பெற்றுக் கொள்வதுதான் வழமை.

சிலவேளை அபூர்வமாக இரட்டைக் குழந்தைகள் பெற்றுக்கொள்வதுண்டு.

அதிலும் அபூர்வமாக மூன்று, நான்கு பெற்றுக்கொள்வதுண்டு.

ஒரு கனேடிய பெண்ணிற்கு 12.08.2007இல் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன.

ஒரு அமெரிக்க பெண்ணிற்கு 31.07.2007இல் மூன்று பெண்குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் மொத்தம் ஐந்து பிள்ளைகள் பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் 06.10.2008இல் ஒரு பெண்மணி ஆறு குழந்தைகளை பெற்றுள்ளார்.

எகிப்து நாட்டில் ஒரு பெண்மணி 16.08.2008இல் நான்கு ஆண் குழந்தைகளையும், மூன்று பெண்குழந்தைகளையும் மொத்தம் ஏழு குழந்தைகளை பெற்றுள்ளார். அமெரிக்காவை சேர்ந்த கலிபோர்னியாவில் 26.01.2009இல் எட்டு குழந்தைகளை பெற்றுள்ளார்.

அமெரிக்க நாட்டில் 20.05.2012இல் ஒரு பெண்மணி ஆறு பெண்குழந்தைகளையும், மூன்று ஆண்குழந்தைகளையும் மொத்தம் ஒன்பது குழந்தைகளை பெற்றுள்ளார்.

குஜராத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி 11.11.2011இல் பதினொரு ஆண்குழந்தைகளை பெற்று சாதனை படைத்துள்ளார். (இது செயற்கை முறையில் கருவூட்டி பெறப்பட்ட குழந்தைகளாகும்)

## viii. இப்படியும் கட்டடங்கள்




அமெரிக்காவின் மத்தியமேற்கு பகுதியில் அமைந்துள்ள மிச்சூரி மாகாணத்தில் உள்ள பிராசான் என்ற நகரில் அமைந்துள்ள கட்டடமே இது.


இது வெடித்த கட்டடம் போல் இருந்தாலும் உண்மையிலேயே இது அவ்வாறுதான் கட்டப்பட்டுள்ளது.



ஒரு காலத்தில் உலகில் மிகப்பெரிய கட்டடமாக இருந்த நியூயோர்க் இரட்டைக் கோபுரம் சேதமாக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் அதன் புகழ் இன்னும் மறையவில்லை.

சேதமாக்கப்பட்ட போது தெரிந்த தோற்றத்தினையே இக்கட்டடம் பிரதிபலிக்கக் கட்டப்பட்டது.

ix. இலங்கையை தாக்கிய சூறாவளி



x. சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஜப்பானிய விமான நிலையம்



இழை 2

## உலக அதிசயங்கள்

உலக அதிசயங்கள் எவ்வாறு இனங்காணப்பட்டன. அவைகள் எவ்வாறு பட்டியலிடப்பட்டன என்பதற்கு ஒரு வரலாறு உண்டு. அரேபியர்களின் நாகரிகங்கள், அவர்களின் பெருமைகள் பற்றி உலகம் ஏலவே அறிந்திருந்தாலும் கூட, மகா அலெக்ஸாண்டரின் இடப்பெயர்ச்சி படையெடுப்பிற்குப் பிறகுதான் அரேபியர்களின் நாகரிகங்களும் பெருமைகளும் வெளிஉலகத்திற்கு தெரியவந்தது. கி.மு. 323 ஆம் ஆண்டு மகா அலெக்ஸாண்டரின் மறைவுக்குப் பின் கிரேக்கத்தில் தோன்றிய புகழ்பெற்ற நாகரிகம் ''ஹெல்லினிஸ்டிக்'' (Hellenistic Civilization) ( கி.மு. 323–146) நாகரிகமாகும்.

இந்த நாகரிகத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு சிலருக்கு அலெக்ஸாண்டர் இடப்பெயர்ச்சி படையெடுப்பிற்கு பிறகுதான் மேற்காசிய மக்களின் வியத்தகு கட்டடங்களைப் பற்றித் தெரியவந்தது. இதனால் அவர்கள் அவைகளை நேரில் சென்று பார்வையிட ஆர்வம் கொண்டு மத்திய தரைக் கடலைச்சுற்றி அரேபிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டனர்.

பயணத்தின் போது அவர்கள் கண்ட வியத்தகு இடங்கள் மற்றும் கட்டடங்கள் பற்றி தங்களிடம் இருந்த கைக்குறிப்பேடுகளில் குறித்து வைத்தக்கொண்டனர். அவற்றில் சில முக்கியமான இடங்களையும் கட்டடங்களையும் இலகுவாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டி அவற்றைப் பார்க்க வேண்டிய இடங்கள் (Things to be seen ) அல்லது பார்வை (singhts) என்ற தலைப்பில் பட்டியலிட்டனர்.

எண்ணிக்கையானாலும் சரி இடங்களானாலும் சரி ஒவ்வொரு பயணங்களின் பட்டியலிலும் இவை வேறு பட்டுக்காணப்பட்டன. இருந்தாலும் இந்தச் செயலே உலக அதிசயங்கள் என்ற பட்டியல் உருவாகக் காரணம் எனலாம். இப்பொழுதும் எமது நினைவில் இருக்கின்ற ஏழு உலக அதிசயங்கள் பட்டியல் கிரேக்க எழுத்தாளரான ''ஆண்டிபேட்டர்'' என்ற தனி நபர் ஒருவராலேயே தொகுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

அவர் தனது கவிதை ஒன்றில் இதனை வரிசைப்படுத்தி எழுதியிருந்தார்.

அவையாவன :–

i. எகிப்து பிரமிட் கி.மு.4000

ii. பாபிலோனிய தொங்கு தோட்டம் (ஈராக்) கி.மு. 600

iii. ஒலிம்பியாவின் ஸேயுஸ் சிலை (கிறீஸ்) கி.மு. 433

iv. ஆர்ட்டமிஸ் கோயில் (துருக்கி) கி.மு. 350

v. மௌசோல் லோசின் மௌசோலியம் (துருக்கி) கி.மு. 350

vi. ரோடோஜின் கொலோஸஸ் (கிறீஸ்) கி.மு. 280

vii. அலெக்ஸாந்திரியாவின் கலங்கரை விளக்கம் (எகிப்து) கி.மு. 300 ஆகிய ஏழு இடங்களில் கட்டுமானம் பற்றி வியந்து அக் கவிதையில் குறிப்பிட்டார்.

இந்த ஏழோடு உலகம் என்ற ஒன்றும் ஒட்டிக்கொண்டது. 16ம் நூற்றாண்டு வரை கவிஞர் ஆண்டிபேட்டரின் ஏழு அதிசயங்களுமே உலக அதிசயமாக இருந்தது. இவற்றுள் ஐந்து அழிந்து விடவே மீதமான எகிப்திய பிரமிட்டோடும் பபிலோனிய தொங்கு தோட்டத்தோடும் பின்வரும் ஐந்து அதிசயங்களும் சேர்ந்து ஏழு அதிசயங்களாயின.

அ) எகிப்திய பிரமிட்டுகள் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது இன்றும் அழியாதுள்ளது.

ஆ) 105ft High bronze statue of the seen god heliees Destroyed by an earth quake in 224 B.C

இ) தொங்குதோட்டம் (பாபிலோனியா 6th Centure B.C.)

ஈ) 4th centure B.C. Tomb of Mouso leum at Built by his widow. Distroyed by an earth quaek before the 15th centure

உ) Pharoes of alexandre 270 B.C The world fest Kmown light House at the enterance of Alexandiria inarbour in Egypt 400ft High in ruins by 15 century.

ஊ) Starue of Zella Oliympia 5th century B.C 30ft High Woodem Starue coverd with gold and zus ivory (ivory) மரத்தாலும் யானைத் தந்தத்தாலும் செய்யப்பட்டு தங்க முலாம் பூசப்பட்டது. நெருப்பினால் அழிந்தது AD.475

எ) Temple of Artemis at Epheses asia minor 6th century B.C மாபிள் கோயில் Marble Temple in Honour of God dess of humting and the moon Reblit in 4th Centure B.C

ஆதாரம்

The Cambridge Fact Finder 4th edition David Cristal

இதன் பின் ஏழு அதிசயங்களோடு வேறு பத்து அதிசயங்களும் சேர்த்து 17 உலக அதிசயங்களாகக் கருதப்பட்டன அவையாவன,

தாஜ்மஹால், பிரமிட்டுக்கள், தொங்குதோட்டம், சீனப் பெருஞ்சுவர், சாய்ந்த கோபுரம், பிரமாண்டமான சிலை, மச்சு பிச்சு – பெருநகர் மாயன் கட்டிடம், ரோம் நகரின் கோலேசியம், அமெரிக்க சுதந்திரச்சிலை, நயாகரா நீர்வீழ்ச்சி, ஜோர்தானின் பெட்சா, எஃபிஸ்ஸில் இருந்த ஆர்ட்டிமிஸ் ஆலயம், ஹேலிகார்னஸிஸ்ஸில் இருந்த கல்லறை, அலெக்ஸாந்திரியாவில் இருந்த ஃபாரோஸ் கலங்கரை விளக்கம், ஒலிம்பஸ்ஸில் இருந்த நியூஸ் சிலை, றோட்டில் இருந்த பேருவச் சிலை.

இந்தப் (17) பதினேழு உலக அதிசயங்களில் பத்து அதிசயங்களை மட்டும் தெரிவு செய்ய நினைத்த புத்திஜீவிகள் உலகளாவிய ரீதியில் தெரிவு ஒன்றை நடத்தினர். அதாவது பத்துக் கோடிப் பேர் சேர்ந்து இணையத்தளத்தில் போட்டி போட்டு தேர்தெடுத்தனர்.

இதில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டது தாஜ்மஹாலே. தேர்வு செய்யப்பட்ட 10 அதிசயங்களும் வருமாறு:

தாஜ்மஹால், பிரமிட்டுக்கள், தொங்குதோட்டம், சீனப்பெருஞ்சுவர், சாய்ந்த கோபுரம், அமெரிக்க சுதந்திரச்சிலை, அலெக்ஸாந்திரியாவில் இருந்த ஃபாரோஸ் கலங்கரை விளக்கம், எஃபிஸ்ஸில் இருந்த ஆர்ட்டிமிஸ் ஆலயம், ரோம நகரின் கோலேசியம், ஜோர்தானின் பெட்சா

பின் தெரிவு செய்யப்படாத ஏழு அதிசயங்களும் தெரிவு செய்யப்படாமைக்கு பின்வருவன காரணங்களாக இருக்கலாம்.

- நயாகரா நீர்வீழ்ச்சி இயற்கையானது என்பதால் கழிக்கப்பட்டிருக்கலாம்.
- மேற்குறிப்பிட்ட பதினேழு அதிசயங்களுக்குள் நான்கு சிலைகள் இடம் பெறுவதால் இவற்றுள் ஒன்றை எடுத்துக் கொண்டு மூன்று சிலைகளை தவிர்த்து இருக்கலாம்.

- மச்சு, பிச்சு ஒரு நகரம் என்பதால் விட்டிருக்கலாம்.
- மாயன் கட்டிடம் எகிப்தின் பிரமிட்டுகளை போன்றதே என்பதால் மாயன் கட்டிடம் கழிக்கப்பட்டிருக்கலாம்.

**இழை 3**

## உயிரினங்களின் விசித்திரம்

i. நண்டு பக்கவாட்டிலேயே நடக்கும்

ii. வியர்வையை கண்களால் வெளியேற்றிக் கொண்டிருக்கும் பிராணி முதலை இதனால் தான் "முதலைக் கண்ணீர் வடித்தல்" எனும் பழமொழி ஏற்பட்டது போலும்.

iii. இறாலுக்கு இதயம் அதன் தலையில் உண்டு.

iv. ஆமை நூறு வருடங்களுக்கு மேல் வாழக்கூடியது

v. நட்சத்திர மீனுக்கு மூளையே கிடையாது.

vi. நண்டுகளுக்கு பற்கள் வயிற்றில் உண்டு.

vii. ஆண் கடற்குதிரை பிரசவிக்கும் தன்மையுள்ளது.

viii. இது கண்களை எந்தப் பக்கமும் திருப்பக் கூடியது.

ix. நீர் நாய் 1 ½ நிமிடங்கள் மட்டுமே தூங்கும்

x. முதலைக்கு நாக்கு இல்லை. ஆனால் இன்றைய ஆய்வுகள் முதலைக்கு நாக்கு உண்டு வெளியே நீட்ட முடியாது என்று கூறுகிறது.

இன்னும் சில :

## ஊர்வன

ஓணான் இரண்டு கண்களாலும் இரண்டு பொருட்களைப் பார்க்கும்

ஏழு நாட்களுக்கு மேல் தலையின்றியே உயிர் வாழக் கூடியது கரப்பத்தான்பூச்சி.

வாழ்நாளில் தூங்காத உயிரினம் எறும்பு

உலகிலேயே அதிக மூளையுள்ள உயிரினம் எறும்பு

பாம்புகளின் கண்களுக்கு இமைகள் கிடையாது. இதனால்தான் பாம்பு தூங்கும் போது கண்கள் விழித்திருப்பது போன்று தெரியும்.

அயர்லாந்து நியூசிலாந்து ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் பாம்புகளே கிடையாது.

புழுக்கள் தூங்குவது கிடையாது.

ஓநாய்கள் ஒரு கண்ணை மூடிக்கொண்டும் ஒரு கண்ணைத் திறந்து கொண்டும் தூங்கக் கூடியது. (பாதுகாப்பிற்காக இவ்வாறு செய்கிறது)

ஓநாய் நாற்பது வகையான மோப்ப சக்திகளை ஒரே நேரத்தில் உணரக் கூடியது.

இனிப்பின் சுவையை பூனையால் உணர முடியாது.

உப்பை உணவாகக் கொள்ளும் பிராணி முள்ளம் பன்றி

மிருகங்களில் நரியும் பறவைகளில் காகமும் மனிதனைப் போன்று தந்திரமுள்ளது என்பார்கள்.

கரடி தனக்கு விருப்பமான தேன்கூடு இருக்கும் இடத்தை சுமார் 1 ½ கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தே மோப்பத்தின் மூலம் கண்டறியக் கூடியது.

இறக்கையை மடக்க முடியாத பூச்சி பட்டாம் பூச்சி.

நீருக்கடியில் பறக்கும் ஆற்றல் கொண்டது கூவி எனும் பறவை இதற்கு வயிற்றில் தான் பற்கள் உண்டு. பூனையைப் போல் கத்தும்! பூமியைக் குடைந்து முட்டையிடும் பகலில் இப் பறவைக்குக் கண் தெரிவதில்லை.

வெட்டுக்கிளிக்கு காதுகள் காலில் உள்ளன.

ஆல்பட்ராஸ் எனும் பறவை பறக்கும் போதே தூங்கக் கூடியது.

துங்காத பறவை புறா! கடற்புறா தன் துணை பிரிந்தால் உயிர் வாழாது.

காகத்திற்கு கண்மணி ஒன்றுதான். காகத்திற்கு சராசரி வயது 100. காகம் எல்லாவற்றையும் சாப்பிடும்.

காகத்தை எதுவும் சாப்பிடாது. காகத்தில் ஆண் பெண் இனங்காண்பது கடினம். புணர்வதையும் காண முடியாது. காகம் கொஞ்சம் புத்தியுள்ளது. அதனால் அது மனிதனிடத்தில் தந்திரமாக நடந்து கொள்ளும்.

ஆபிரிக்காவில் உள்ள காண்டார் என்ற பறவை 4 ½ அடி நீளம் உள்ளது. இதன் சிறகு 9 அடி நீளமாகும். இது இருபது ஆயிரம் அடிவரை உயரப் பறக்கக் கூடியது.

கோழிக்கு தூக்கம் மிகக் குறைவு. பறவை என்றாலும் பறக்காது. விடிந்தெழும்பி இருட்டாகும் வரை சேவலுக்கு புணருவதிலேயே விருப்பம் அதிகம். தான் சாப்பிடாது பெட்டையை சாப்பிடக் கொடுத்து புணரும்.

மிக மிக தூரத்தில் பறந்து கொண்டே பூமியில் ஊரும் சிறு பூச்சியையும் காணக் கூடிய கூர்மையான பார்வையுடையது பருந்து, கழுகு.

ஆந்தை : பெரிய கண்கள் இருந்தும் பக்கத்தில் இருப்பதை கூட அறியாது இருக்கும். அதற்கு பகலில் கண்கள் தெரியாது.

சிட்டுக்குருவியின் இதயம் ஒரு நிமிடத்திற்கு 400 தடவை துடிக்கும்.

## இழை 4

## அழகாய் இருக்க

i. நல்ல உணவு, அமைதியான தியானம் மலர்ந்த முகம் மூன்றும் நன்றாக இருந்தால் தோற்றத்தில் அழகு துள்ளும்.

ii. கன்னம் ஒட்டிப் போய் இருந்தால் தினமும் வாயில் தண்ணீர் விட்டு கன்னம் உப்பி விரியும் அளவு தண்ணீரைக் கொப்பளித்து துப்புங்கள்.

iii. கச்சிதமாக உடை உடுத்துங்கள்

iv. தலைமுடியை முகத்திற்கேற்ப அழகாக வைத்துக் கொள்ளுங்கள்

v. பேராசை, கோபம், பொறாமை, காமம் போன்ற குணங்கள் எங்கு அதிகம் மண்டிக்கிடக்கிறதோ அங்கு அவலட்சணம் இருக்கும்.

vi. ஒழுங்கு ஒழுக்கம் அழகு என வாழ்க்கை அமையும் போது அழகு வரும் அதாவது எது ஒழுங்காக இருக்கிறதோ அது ஒழுக்கமாக இருக்கும். எது ஒழுக்கமாக இருக்கிறதோ அது அழகாக இருக்கும். எது அழகாக இருக்கிறதோ அதுதான் வாழ்க்கை. அதாவது அழகான வாழ்க்கை எனலாம்.

vii. சிரிக்கும் போது அழகைக் கொடுப்பது பற்கள் தான். அதனால் பற்களை அழகாக வைத்துக்கொள்ள வேண்டும்.

viii. கண்களையும் கண்புருவங்களையும் அழகாக வைத்துக்கொள்ள வேண்டும். ஆண்களுக்கும் இது பொருந்தும்.

ix. அழகாய் இருக்க இளமையைப் பேணிக்கொள்ள வேண்டும்.

x. நடையில் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காக செயற்கையாக நடக்க கூடாது. இது அழகைக் கெடுத்து விடும்.

### இழை 5

## அழகான செயல்கள்

i. தாய், மனைவி போன்றோர் கதவை திறந்த பின் அவர்கள் பின்னால் ஆண்கள் போக வேண்டும்.

ii. பெண்கள் உட்கார்ந்த பின் ஆண்கள் உட்கார வேண்டும்.

iii. பெண்களுக்காக காரின் கதவை திறந்து விட வேண்டும்.

iv. சாலையில் செல்லும் போது பாதுகாப்புக் கருதி பெண்களைத் தனது இடது பக்கம் அழைத்துச் செல்ல வேண்டும்.

v. படிக்கட்டில் ஏறும் போது பெண்களின் பின்னால் போக வேண்டும். மலை ஏறும் போதும் இது பொருந்தும். இறங்கும் போதும் முன்னால் இறங்க வேண்டும்.

vi. பஸ்ஸில் ஏறும் போதும் ஆண்கள் முன்னால் ஏற வேண்டும். இறங்கும் போதும் ஆண்கள் பின்னாலும் பெண்கள் முன்னாலும் இறங்க வேண்டும்.

vii. திடீர் கோபத்தை தவிர்க்க வேண்டும். சந்தேகப்படவே கூடாது. சிறிய சிறிய விடயங்களுக்கு கவலைப்படவே கூடாது. பதட்டம் அடையாதிருக்க வேண்டும். சோம்பல் இருக்கவே கூடாது. மறைந்திருக்க முயற்சிக்கக் கூடாது. அசட்டையாக இருக்கவே கூடாது. நேரம் தவறாமை மிக மிக முக்கியம் தாழ்வுச் சிக்கலை ஒழிக்க வேண்டும். சூரியன் உதிக்கும் முன்பு படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும்.

viii. உறங்கும் போது மல்லாந்து தூங்குவது நபிமார்களின் வழக்கம். வலது புறமாக சாய்ந்து உறங்குவது அறிவாளிகளின், வணக்கவாளிகளின் வழக்கம்! இடது புறமாக சாய்ந்து உறங்குவது அரசர்களின் தலைவர்களின் வழக்கம். முகம்குப்புறப்படுப்பது, உறங்குவது சைத்தானின் வழக்கம். பிறர் பேசும் போது நாம் தூங்கக் கூடாது. பிறர் தூங்கும் போது நாம் பேசக் கூடாது. உறங்குவதற்கு முன் கண்ணில் சுருமா இட்டுக் கொள்வது நபிமார்களின் வழக்கம். இது கண் நோயைத் தடுக்கும் கண் பார்வையைக் கூர்மையாக்கும்.

ix. கொட்டாவி, தும்மல், விக்கல் இவைகள் வருவதைத் தடுக்க முடியாது. ஆனால் இவைகளை நாகரிகமாகச் செய்யலாம். உதாரணம்: கொட்டாவி வரும் போது வாயில் கைவைத்தும், விக்கல் வரும் போது சற்று தூரத்திற்குச் சென்று செய்யலாம். இஃதே போல் ஏவறை சத்தமிட்டுச் செய்யக் கூடாது. ஏவறை வரக் காரணம் சாப்பிடும் போது அவசர அவசரமாகச் சாப்பிடுவது. இப்படிச் சாப்பிடும் போது காற்றும் உள்ளே சென்று விடும். அது வெளிவர எத்தனிப்பதுவே ஏவறை.

x. கால்மேல் கால் போட்டுக் கொண்டு இருக்கவே கூடாது. இது ஆணவத்தைக் காட்டும். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஒருபோதும் இப்படி இருந்ததே இல்லையாம். நான் யார் தெரியுமா? என்று கேட்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். தாய் அடித்ததை ஏசியதை மறந்து விட வேண்டும். பிறர் வீட்டிற்குச் சென்றால் அங்கும் இங்கும் பார்ப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். பிறர் வீட்டில் இருக்கும் போது உள்ளறையை பார்க்கும் படி இருக்க கூடாது. உள்ளறைக்கு முதுகு காட்டி இருக்க வேண்டும். நண்பர்களிடம் உனது கடந்த காலத்தைப்பற்றி பேசாதீர்கள். உறவினர்களிடம் வீட்டு வருமானத்தை பற்றிப் பேசாதீர்கள். உங்களை விட வசதியானவர்களிடம் உங்களின் எதிர்காலம் பற்றிப் பேசாதீர்கள். தர்மத்திற்கும் செல்வத்திற்கும் குறைவு ஏற்படாவண்ணம் விருப்பங்களை அனுபவிக்க வேண்டும். இப்படிச் செய்பவன் சுகமாக வாழ்வான். அதாவது தர்மம், அர்த்தம், காமம் மூன்றையும் சமமாகச் செயல்படுத்தி அனுபவிக்க வேண்டும். என அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. இந்த மூன்றில் எந்த ஒன்றுக்காகினும் முக்கியத்துவம் கொடுத்தால் மற்ற இரண்டும் குறைவுபடும். அர்த்தம் என்பது செல்வம் என்று பொருள்

அர்த்தம் தான் மிக மிக முக்கியமானது. ஏனெனில் தர்மமும் காமமும் செலவத்தை ஆதாரமாகக் கொண்டதுவே.

**இழை 6**

## குப்பையிலே கிடந்தாலும்

கஸ்தூரி, கோரோசினை, புனுகு, அம்பர், அகில், முத்து பவளம், பட்டு, தாமரை, சந்தனம், சாம்பிராணி

## கஸ்தூரி

கஸ்தூரிமானின் ஆண் உறுப்பில் இருந்து பெறப்படுகிறது, கஸ்தூரி. இந்த மான் ஒரு மயிர் இழந்தாலும் உயிர் வாழாது எனக் கூறப்படுவதும் கவனிக்கத்தக்கது. ஒரு மயிர் இழந்தால் உயிர் இழக்கும் மான் எப்படி இன விருத்தியடைந்திருக்க முடியும். கஸ்தூரி மிக்கவாசனையுடையது இது மருந்தாகவும் பயன்படுகிறது.

## கோரேசினைப்

பசுமாட்டின் பித்தப்பையில் இருந்து பெறப்படுகிறது. இது சூட்டைத் தணிக்கும். கோரோசனை விளைந்த மாடு மெலிந்து எலும்பும் தோலுமாகக் காணப்படும். கோரோசனை யூனானி, ஆயுள் வேத வைத்தியத்தில் மிக முக்கிய இடம் பெறுகிறது. இதே வேளை கோரோசனை மாட்டின் கொழுப்பில் இருந்து பெறப்படுகிறது என்று ஒரு சில இடங்களில் எழுதப்பட்டுள்ளது. இது பிழையான கருத்து.

அதாவது, மாட்டின் கொழுப்புகளுக்கு நடுவில் உச்சந்தலையில் கட்டி போன்ற இடத்திலிருந்து கிடைக்கிறது என்று எழுதப்பட்டுள்ளது. இது பிழையான தகவல் என என்னால் நிச்சயமாகக் கூறமுடியும். எனது பாட்டனார் கோரோசினை வியாபாரம் செய்தவர். நான் சிறுவனாக இருக்கும் போது எனது பாட்டனார் கோரோசினையை பித்தப்பையோடு கொண்டு வந்து மிக மிகக் கவனமாக வெள்ளைச் சீலையில் வைத்து இள வெய்யிலில் பல நாள் காயவைத்து எடுத்து சிறு போத்தலில் அடைத்து வைத்திருப்பார். வைத்தியர்கள் வந்து பாட்டனாரிடம் வாங்குவார்கள்.

அவர் சிறிய தராசு ஒன்று வைத்திருப்பார். குண்டு மணிகள் தான் படிக்கற்கள். ஒரு களஞ்சி ½ களஞ்சி என வாங்குவார்கள். ஒரு களஞ்சி என்பது ஒரு அவுண்சின் 1/6 பங்கு.

“கோரோசினை மாதரி நிறுக்கிறான்” என்று பகடியாகச் சொல்லுவர்களே. உண்மையில் அவ்வளவு அரும் பொட்டாகக் கவனமாக கோரோசினை நிறுப்பார்கள். கோரோசினை டாக்மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

## புனுகு

காட்டுப் பூனையின் விதைப்பையில் இருந்து பெறப்படுகிறது. காய வைத்து எடுத்தால் சுகந்தமான வாசம் வீசும். வாசனைத்திரவியங்களில் புனுகும் ஒன்று

## அம்பர்

இது மீனின் மலமாகும். இது காயக்காயக் சுகந்த வாசனை வீசும். மணப்பொருட்கள் தயாரிப்பதற்கு இதில் கொஞ்சம் சேர்த்துக்கொள்வார்கள். சிறிதளவு பெரிய பயனைக் கொடுக்கும். இது ஆழ்கடலில் இருந்து அலைகளால் உந்தித் தள்ளப்பட்டுப் பலநாட்களின் பின் கரை ஒதுங்கி கிடக்கும். இதனை எடுத்து முகர்ந்து பார்த்தால் வாந்தி வரக்கூடிய நாற்றம் இதனைக் காயவைத்து எடுத்தால் அற்புதவாசனை.

## அகில்

கள்ளிமரத்தில் இருந்து பெறப்படுவது அகில். வாசனைப்பொருள்! இதை எரிக்கும் போது கிடைக்கும் புகை மணமுள்ளது கிருமிநாசினியும் கூட. சில பணக்கார் அகில் கட்டையை சவம் எரிக்கப்பயன்படுத்துவர். அகிலின் குணங்கள் பளுவாக இருத்தல் மென்மையாக இருத்தல் இனிய நறுமணம். வெகு தூரத்திற்கு மணம் பரம்பல் தீயில் போட்டால் எரிந்து போகும். தூபம் போட்டால் சிதறாதிருத்தல் ஒரே மாதிரியான வாசனை ஆடைகளில் தேய்ந்தால் வாசனை மாறாதிருத்தல். கள்ளி மரத்தின் பாலைக் காயவைத்து எடுப்பதுதான் சாம்பிராணி.

## முத்து

சிப்பியில் இருந்து பெறப்படுகிறது. சில முத்துக்கள் யானைத் தந்தத்திலும் இருப்பதாக அர்த்தசாஸ்திரத்தில் சாணக்கியர் கூறியுள்ளார். (176ஆம் பக்கம் அர்த்தசாஸ்திரம்)

இந்த முத்து கடல் நீரில் வாழ்கின்ற முசெல் (Mussel) என்ற இனத்து சிப்பிகளில் இருந்து பெறப்படுகிறது. இது வாவெல் (Bivalve) மெல்லுடலி (Moliuse) உயிரினங்கள் சிலவற்றின் உடலினுள் உருவாகின்றன.

வெளியில் இருந்து இவ்வுயிர்களின் உடலுக்குள் செல்லும் நுண்துகளினால் ஏற்படும் உறுத்தலைக்குறைப்பதற்காகப் இவற்றில் இருந்து சுரக்கும் ஒருவகைப் பொருள் அத்துணிக்கைகளின் மீது பூசப்படுகிறது. இச் செயற்பாடே முத்து எனும் பெறுமதிமிக்க பொருளை உற்பத்தியாக்குகின்றது. இப்படிப்பட்ட முத்துக்கள் அரேபியக் குடா, இந்தியா, இலங்கை, சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா, பசுபிக் தீவுகள் வெனிசுலா மத்திய அமெரிக்கா போன்ற இடங்களின் கடல்களில் உருவாகின்றது.

முத்துக்கள் வெள்ளை, பளுப்பு, நீலம், பச்சை, இளஞ்சிவப்பு, நிறங்களில் உண்டு. கறுப்பு நிறத்திலும் முத்து உண்டு.

## பவளம்

பவளம் வெதுவெதுப்பான கடல் நீர்ப்பகுதியில் கிடைக்கும். பவளப்பூச்சி எனும் கடல் வாழ் உயிரினம் கட்டும் கூடுதான்பவளப் பாறை. இரத்தம் போல் ஜொலிக்கும் பவளம் தான் மிகச் சிறந்தது.

## பட்டு

இது பட்டு பூச்சியில் இருந்து எடுக்கப்பட்டு நூலாக்கி எடுக்கின்றார்கள். நாகமரம், எலுமிச்சை மரம், மகிழ மரம் ஆலமரம் ஆகியன பட்டுப்பூச்சி உற்பத்தியாகும் மரங்களாகும். நாக மரத்தின் கிளைகளைத் தின்று வளரும். பட்டுப்புழுக்களில் இருந்து எடுக்கப்படும் பட்டு மஞ்சள் நிறம் உடைப்பது.

எலுமிச்சை : கோதுமை நிறம்
மகிழ மரம் : வெண்மை நிறம்
ஆலமரம் : வெண்ணை நிறம்
சீனத்துப்பட்டே சிறந்தது.

தண்டுவடப்பாதிப்பு, காக்காய் வலிப்பு, சருமநோய்கள் போன்ற நோய் உள்ளவர்களுக்கு பட்டு சிறந்த ஔடதமாகும்.

எமது உடலின் கட்டுப்பாட்டுப் பகுதியாக் இருப்பது மூளையாகும். சிலவேளை மூளை சரியாகச் செயல்படாது இருக்கலாம். இதுபோன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு பட்டு இழை மிகவும் பிரயோசனமளிக்கின்றது. பட்டு இழைகள் மின்சாரத்தைக் கடத்தும் தன்மை கொண்டது. அதனால் பட்டு இழை மூளையுடன் சேர்ந்து மின் கடத்தியாகத் தொழில்படுகிறது.

அமெரிக்காவில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகம், டட்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் பென்சில் வேணியா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆய்வாளர்கள் இதனை ஆய்வு செய்து நிரூபித்துள்ளனர்.

## தாமரை

எமக்கு கிடைத்துள்ள சான்றுகளின் படி மிகப் பழைமையான மலர் தாமரையே. பல ஆண்டுகளுக்கு இதன் விதைகள் முளைப்புத்திறனுடன் இருக்கும். தாமரையின் அனைத்துப் பாகங்களும் உண்ணக் கூடியது. இதன் இலை உணவினை பொட்டலம் கட்ட உதவுவது மட்டுமல்ல. அழகானதொரு வாசனையையும் கொடுகக் கூடியது. தாமரைப் பூவில் தங்கம் உண்டு. பூவை உண்டால் நார்ச்சத்து உடலில் சேரும். வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மா மலரலாள் நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக் கொண்டு என வரும் பூ – செந்தாமரை வெண்டாமரை ஆகிய இரண்டு பூக்களையே குறிக்கின்றது.

## சந்தனம்

இலேசாக இருத்தல், மென்மையாக இருத்தல், வெகுநேரத்திற்கு காய்ந்து போகாதிருத்தல், பிசுபிசுக்காதிருந்து உடலில் பற்றிக் கொள்ளல் இனிய நறுமணத்தோடிருத்தல். நன்கு தோலோடு ஒட்டிக் கொள்ளல், தோலுக்கு தெரியாமலித்தல், வியர்வையிலும் மாற்றமடையாதிருத்தல், உடற்சூட்டைத் தணித்தல் தாகத்தைத் தணித்தல், தொடுவதற்குச் சுகமாக இருத்தல் என்பன சந்தனத்தின் குணங்களாகும். சந்தனத்தில் செஞ்சந்தனம், வெண்சந்தனம் என இருவகைகயுண்டு

## இழை 7

## அழகான செய்திகள்

i. ஆண்களை விட பெண்களுக்கே சுவை உணர்வு அதிகம்

ii. உலகில் இன்னும் 54 இலட்சம் உயிரினங்களுக்கு பெயரிடப்படவில்லை.

iii. பிரான்ஸ் நாட்டில் இறந்து போன வரைக் கூட சட்டப்படி திருமணம் செய்து கொள்ள முடியும்.

iv. ரோமானியப் பேரரசர் ஜூலிய சீசர் மக்களுக்காக பொது நூலங்களை முதலில் ஆரம்பித்தவர்.

v. மூளையின் ஒரு பகுதி மகிழ்ச்சியைத் தூண்டும் தன்மையுள்ளது. இந்தப் பகுதியை சங்கீதம் தூண்டிவிடும் சக்தியுள்ளது. மேற்படி மூளையின் பகுதியானது பாலியல் மற்றும் உணவு என்பவற்றிற்கான தேவைகள் நிறைவேற்றப்படும் போது தூண்டப்படுகிறது. அதிகாலையில் உங்களுக்குப்

ள சான்றுகளின் படி மிகப் பழைமையான மலர் தாமரையே. பல
இதன் விதைகள் முளைப்புத்திறனுடன் இருக்கும். தாமரையின்
களும் உண்ணக் கூடியது. இதன் இலை உணவினை பொட்டலம்
ட்டுமல்ல. அழகானதொரு வாசனையையும் கொடுகக் கூடியது.
ங்கம் உண்டு. பூவை உண்டால் நார்ச்சத்து உடலில் சேரும்.
மனமுண்டாம் மா மலரலாள் நோக்குண்டாம் மேனி நுடங்காது
ா வரும் பூ – செந்தாமரை வெண்டாமரை ஆகிய இரண்டு
கின்றது.

ல், மென்மையாக இருத்தல், வெகுநேரத்திற்கு காய்ந்து
பிசுபிசுக்காதிருந்து உடலில் பற்றிக் கொள்ளல் இனிய
தல். நன்கு தோலோடு ஒட்டிக் கொள்ளல், தோலுக்கு
யர்வையிலும் மாற்றமடையாதிருத்தல், உடற்சூட்டைத் தணித்தல்
தல், தொடுவதற்குச் சுகமாக இருத்தல் என்பன சந்தனத்தின்
சந்தனத்தில் செஞ்சந்தனம், வெண்சந்தனம் என

**கள்**

ட பெண்களுக்கே சுவை உணர்வு அதிகம்

ம் 54 இலட்சம் உயிரினங்களுக்கு பெயரிடப்படவில்லை.

ல் இறந்து போன வரைக் கூட சட்டப்படி திருமணம் செய்து
ம்.

பரரசர் ஜூலிய சீசர் மக்களுக்காக பொது நூலங்களை முதலில்

ரு பகுதி மகிழ்ச்சியைத் தூண்டும் தன்மையுள்ளது. இந்தப்
கீதம் தூண்டிவிடும் சக்தியுள்ளது. மேற்படி மூளையின்
பாலியல் மற்றும் உணவு என்பவற்றிற்கான தேவைகள்
டும் போது தூண்டப்படுகிறது. அதிகாலையில் உங்களுக்குப்

பிடித்த பாடலைக் கேட்பதும் அப் பாடலுடன் இணைந்து பாடுவ
மனதில் மகிழ்ச்சி புரண்டோட துணையாக அமையும்.

vi. அமைதி நிறைந்த வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், வா
அருங்காட்சியகம் என்பவற்றிற்கு விஜயம் செய்வதை வ
கொள்ளுங்கள். உங்களின் வீட்டிற்கு அருகில் உள்ள அமை
ஒன்றைக் கண்டு பிடித்து அதில் நாளாந்தம் ஒரு சில
செலவிடுங்கள். இத்தகைய ஏகாந்தமான சூழ்நிலையானது உங்
மனோநிலையில் இருந்து விடுபட்டு மன அமைதி பெறக் கை கொ

vii. பொருளாதாரக் கவலையானது மன ஆரோக்கியத்தைப்
கண்டறியப்பட்டுள்ளது. பணம் அவசியம் என்பதற்காக அத
வாழ்க்கைக்கு எமனாக மாற அனுமதிக்காதீர்கள். பண ரீதியான
இருந்து மீள முயற்சியுங்கள். அது உங்களால் முடியும் என்ற ந
இருங்கள்.

viii. குளியலின் போது நறுமணம் உள்ள தைலங்களை பயன
நறுமணம் உள்ள சூழலில் வாழ்வதும் புத்துணர்ச்சியைத் தரும்.
(ஸல்) அவர்கள் மூன்று விடயங்களை விரும்பினார்கள்.
நறுமணம் இது மெல்லிய வாசமே தவிர மற்றவர்கட்கு
கொடுக்கக் கூடிய மணமல்ல.

ix. உங்களுக்கு மிக நெருக்கமானவர்களிடம் நான் உங்களை நே
என்று கூறுங்கள். அன்பானது கொடுக்கக் கொடுக்க பெருகக்

x. வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் மூழ்கிவிடாமல் அதில
வழி தேடுங்கள். பழைய வழிமுறைகள் பயன்படாது எனத் தெ
உத்திகளைக் கையாளுங்கள்.

**இழை 8**

**பஞ்சத்தில் பத்து**

i. பஞ்சகந்தம் : ஏலம், இலவங்கம், கற்பூரம் சாதிக்காய், தக்
மிளகு)

ii. பஞ்ச கௌவியம் : இது பசுமாட்டில் இருந்து பெறப்படுவ
கோசலம், தயிர், நெய், பால்

iii. பஞ்ச பட்சி : வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்

iv. பஞ்சரத்தினம் : சுகர்த்தீ, பொன், மரகதம், மாணிக்கம், முத்து

v. பஞ்சலோகம் : ஈயம், செம்பு, பொன் வெள்ளி, இரும்பு

vi. பஞ்சவர்ணம் : கருமை, செம்மை, பச்சை, மஞ்சள், வெண்மை சில இடங்களில் பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு, ஊதா எனவும் வந்துள்ளது.

vii. பஞ்சபுலன் : சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம்

viii. பஞ்சாங்கம் : திதி, வாரம், யோகம், காரணம், நட்சத்திரம்

ix. பஞ்சமா பாதகம் : கொலை, கொள்ளை, கள், காமம், பொய்

x. பஞ்சபூதம் : நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மண்

இழை 9

## அழகும் மருத்துவக்குணமும் தரும் இரத்தினக்கற்கள்

பூமிக்கடியில் அல்லது மலைகளுக்கிடையே இருந்து, பெறப்படுவனவே இரத்தினக்கற்கள்

இவை இரண்டு வகைப்படும் :
வைரம், வைடூரியம், (Diamond and EGU) மாணிக்கம் என்பனவே அவை.

முதலாவது இனமான வைரமும் வைடூரியமும் பூமிக்கடியில் அதிக ஆழத்தில் இருக்கும் "லாவரா" என்ற எரிமலையின் குளம்பு வெளியேறுவதால் அவை வைடூரியமாகிறது அல்லது வைரமாகிறது.

மாணிக்கக் கற்கள் ஆறு வகைப்படும்

மரகதம் (Emerald)
மாணிக்கம் (Ruby)
பவளம் (Coral)
புட்பராகம் (Topaz)
கோமேதகம் (Hessqnite)
நீலம் (Sapphire)
வைடூரியம் (Casey)

வைரம்

சபையர் (மஞ்சல்)

என ஒன்பது வகைப்படும்.

இவைகள் அழகைக் தருவது மட்டுமல்ல வைத்தியக் குணமுடையது. உதாரணமாக கலர் வைத்தியம் என ஒரு வைத்திய முறையுண்டு. மனிதனின் உடலை ஏதோ ஒரு நிறம் (Colour) சமனாக வைத்துக் கொண்டிருக்கிறது. நிறம் கூடும் போது அல்லது குறையும் போது மனிதன் நோய்வாய்ப் படுகிறான். மனிதனின் உடலின் நிறத்தை சமன்பாட்டில் வைத்துக் கொள்ளக் கூடிய சக்தி இரத்தினக்கற்களுக்கு உண்டு. இரத்தினக் கற்களை மனிதனின் உடலில் படுமாறு அணிந்து கொண்டால் உடலின் நிறம் கூடாது குறையாது இருக்கும். உடலின் நிறத்தை ராசு பார்த்து அறிந்து கொள்ளலாம் என்று கூறுகிறார்கள் வைத்தியர்கள்.

**இழை 10**

## சாவித்துவாரத்தின் ஊடே

i. இராணித்தேனீ ஒரு நாளைக்கு 1500 முட்டைகள் இடும்.

ii. உலகில் அதிகளவு அருங்காட்சிசாலைகள் உள்ள நாடு ரஸ்யா இங்கு 2002 அருங்காட்சிசாலைகள் உண்டு.

iii. பாம்பாட்டிகள் இசைக்கும் இராகம் ''புன்னாகவராளி''

iv. அமெரிக்கவிமானப் படையில் பெண்கள் அதிகமாக வேலை செய்கின்றார்கள். ஏறக்குறை 67 ஆயிரம் பெண்கள் வேலை செய்கிறார்கள்.

v. மனிதர்களின் மூதாதையர் ஆபிரிக்காக் கண்டத்தில் அல்லது ஆசியாக் கண்டத்திலேயே முதலில் தோன்றினார்கள் என்று இன்றைய ஆய்வுகள் கூறுகின்றன. மியன்மாரில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளபடிமங்கள் இதனை உறுதிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதன் போது மனிதனின் நான்கு பற்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப் பற்கள் ஆபிரிக்க ஆசிய இணைப்பில் விடுபட்ட அப்ரேசிய டிஜிரியோ மனிதர்களின் பற்களாகும். இப்பற்கள் 37 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தியவை என்பது குறிப்பிடத்தக்கது.

vi. இன்று உலகில் எழுநூற்றி ஒருகோடி (701) மக்கள் வாழ்கின்றனர்.

vii. மனிதன் ஒரு நாளைக்கு 2300 தடவை மூச்சு விடுகிறான்.

viii. மனிதம் ஒரு நிமிடத்திற்கு 72 தடவை முச்சு விடுகிறான்

ix. பிரதமர் பதவி இல்லாத நாடு அமெரிக்கா

x. நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு முஸ்லிம் நாடு துருக்கி

# நூல் 10

# பொதுவியல்

**சாவிக்குறிப்பு**

இறையியல் மனையியல் அறிவியல், விஞ்ஞானவியல், உடல்நலவியல், அரசியல், மானிடஇயல், மொழியியல், அழகியல் ஆகிய ஒன்பது நூல்களிலும் இடம்பெறாத, ஆனால் இந்நூலில் இடம்பெற வேண்டிய முக்கியமான விடயமாகக் கருதக் கூடியவிடயங்கள் சிலதை ''பல்லியல்'' எனும் தலைப்பிட்டு பத்தாவது இயலாக இங்கு

**இழைகள்**

1. கூடுகளில் அற்புதமான கூடு
2. உணவு, உடை, வீடு
3. உலகில் முதன்மைப் பெண்மணிகள்
4. ஆச்சரியம் ஆனால் உண்மை
5. உயிரினங்களின் கற்ப காலம்
6. உயிர்களின் இறப்புக்காலம்
7. விசித்திரமான புணர்ச்சியும், கரத்தரித்தலும்
8. உணர்வூட்டும் உபதேசம்
9. சிக்கனமாய் இருந்து பணம் சேர்க்க
10. சாவித்துவாரத்தின் ஊடே

**இழை 1**

## பறவைகளின் கூடுகளில் அற்புதமான கூடு தூக்கணாங்குருவிக் கூடு

தூக்கனாங் குருவி ஒலையின் நுனியிலும் மரக்கிளைகளின் நுனியிலும் தூங்கக் கூடியவாறுதான் கூடு கட்டும். குரங்கு போன்ற பகையாளிகள் கூட்டை நாசம் செய்யாமலும் கூட்டின் உள்ளே உள்ள முட்டைகளையோ குஞ்சுகளையோ நாசம் செய்யாது இருப்பதற்காகவுமே இவ்வாறு கூட்டை அமைக்கிறது.

தூக்கணாங் குருவிக் கூட்டை நம்மில் ஒருசிலர் கண்டிருக்கலாம். அல்லது காணாமலும் இருக்கலாம். உண்மையில் மனிதனை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வண்ணம் இக்கூடு அமைந்துள்ளதை இக்கூட்டினை கூர்ந்து அவதானிப்போர் கண்டுகொள்ள முடியும். நான் சிறுவனாக இருந்த காலத்தில் மாவடிப்பள்ளியில் மரம் ஒன்றில் இருந்து இக்கூட்டினைக் கண்டெடுத்து எனது வீட்டிற்குக் கொண்டுவந்து மரம் ஒன்றில் கட்டி தொங்கவிட்டிருந்தேன்.

அன்றிலிருந்து எனக்கு இந்தக் கூட்டின் மீது ஒரு பற்று, ஆசை. இக்கூடு பற்றிய கட்டுரைகளை வாசிக்கக் கிடைத்தபோது அக்கூட்டின் மீது இன்னும் பற்று ஏற்பட்டது.

அதனால் தற்போது நான் கொழும்பில் வசிக்கும் எனது வீட்டிற்கு "WEAVER NEST" "தூக்கணாங்குரவிக் கூடு" எனப் பெயர் வைத்துக் கொண்டேன்.

இறைவனின் படைப்புக்களின் ஆற்றல்களை அவதானிப்போருக்கு தூக்கணாங்குருவியின் கூடு நல்லதொரு பாடமாகும்.

வைக்கோலினாலும் புல்லினாலும் மிக நேர்த்தியாக இக்கூடு பின்னப்பட்டுள்ளது. மழைநீர் கூட உட்புக முடியது. அத்தோடு ஆண் குருவிக்கு வேறாகவும், பெண்குருவிக்கு வேறாகவுமே இக்கூடு அமைக்கப்பட்டுள்ளன.

கூடுகளின் அடிப்பகுதியில் உட்புறமாக பெண்குருவி தங்கக் கூடியவாறு கூடு கட்டப்பட்டுள்ளது. இதே வேளை பகைப்பிராணிகளிடம் இருந்து தப்புவதற்காகவும், முட்டை இட்டு குஞ்சி பொரிப்பதற்காகவும் கூட்டின் உட்பகுதியில் அறைகள் உண்டு.

இதனுள் புகுவதற்கு சிறு துவாரம் இருக்கும். பகைப்பிராணிகளுக்கு இந்த உள்ளறைத் துவாரம் தெரிய மாட்டாது.

இந்த அறையுள் பஞ்சு போன்ற மென் பொருட்கள் இருக்கும். குஞ்சுகளக்கு நோவேற்படாதவாறு மெத்தைபோன்றதொரு ஏற்பாடே இது.

ஆண்கருவியின் கூட்டில் ஒருவழிப்பாதையுண்டு இதனூடாக பகையாளி வந்தால் மாற்றுவழிப்பாதையொன்றும் உண்டு. குஞ்சு பொரிக்கும் காலத்தில் பெண்குருவி களிமண் கொண்டுவந்து குஞ்சுகள் இருக்கும் உள்ளறையில் ஒட்டிவிட்டு மின்மினிப்பூச்சியை பிடித்து வந்து அந்தக் களிமண்ணில் ஒட்டிவைத்துவிடும். குஞ்சுகள் மின்மினிப்பூச்சியின் வெளிச்சத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக. (இதன் உண்மை பொய் எனக்கு தெரியாது. இப்படி ஒருசில இடங்களில் எழுதப்பட்டுள்ளது) ''நாட்டார் பாடல் ஒன்றும் இதற்கு ஆதாரமாக உள்ளது.

''கன்னி கிரான் குருவி கடும் மழைக்கு ஆத்தாமல்
மின்மினிப் பூச்செடுத்து விளக்கெரிக்கும் கார்காலம்''

**இழை 2**

## உணவு

i. "மருந்தென வேண்டா யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்ற வள்ளுவன் கூற்றில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு. உழைப்பவனுக்குத்தான் உணவு கிடைக்கும்.

ii. அந்த உணவு அவனுக்கு உரித்துடையது.

iii. உழைப்பவனால்தான் உண்ணவும் முடியும். உழையாதவனுக்குப் பசி இருக்காது. உண்ணவும் முடியாது. இதனால்தான் உணவு உடலுக்கு மருந்தாகிறது எனக் கூறியுள்ளனர்.

iv. உழையாது உண்பவனுக்கு உணவு நோயாகிறது. "தவறான உணவு நோய்க்குத் தந்தை" என்ற சீனப் பழமொழியும் இதனையே குறித்து நிற்கின்றது எனலாம்.

v. சில உணவுகளை மதங்கள் விலக்கி இருக்கும் (ஹறாம்) சில உணவுகளை உண்ண அனுமதி வழங்கியிருக்கும் (ஹலால்) இவையெல்லாம் எமது நன்மைக்காகவே எனக் கொள்ள வேண்டும்.

vi. முனிவர்கள் கூட சிலவற்றைச் சாப்பிடவும், சிலவற்றைத் தவிர்க்கவும் சொல்லி இருக்கிறார்கள்.

உதாரணம் :

சிலபூக்களை சாப்பிடலாம். அவை

தாமரைப்பூ, முருங்கைப்பூ, செவ்விரத்தம்பூ, வேப்பம்பூ

சிலபூவைத் தவிர்க்க வேண்டும்

உப்பு, புளிப்பு, உறைப்பு, இனிப்பு

நீரிழிவு, இருதயநோய், பாலியல் நோய் போன்றவற்றிற்கு இவைகள் காரணமாக இருப்பதனையும் அவதானிக்க முடியும்.

vii. அதிக கோபம், அதிக யோசனை உள்ள வேளைகளில் உண்ணக்கூடாது என்று கூறப்பட்டுள்ளதன் காரணம் என்னவெனில் உணவை அரைக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். இதை எடுத்துக் கூறவே "நொறுக்கித் தின்றால் நூறு வயது" என்ற மொழி வந்துள்ளது எனலாம்.

viii. "தண்ணீரைச் சாப்பிடு, உணவைக்குடி" என்று ஏன் கூறியுள்ளார்கள் என்றால், தண்ணீரை மடமடவென்று குடிக்கக்கூடாது. சாப்பிடுவது போன்று மெல்ல மெல்ல குடிக்க வேண்டும். இதே போலத்தான் உணவை நன்கு பற்களால் அரைத்து நீர் போன்றாக்கி குடிக்க வேண்டும்.

ix. காலையில் தனித்துச் சாப்பிடு
பகலில் சேர்ந்து சாப்பிடு
இரவில் கொடுத்து சாப்பிடு என்பது முதியோர் வாக்கு

x. காய்ந்த உணவுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

## உடை

i. வெள்ளைநிற ஆடைகளே சிறந்தது.

ii. கரண்டைக்குக் கீழ் உடுத்தக்கூடாது.

iii. ஈரமான உடைகளை அணியக்கூடாது.

iv. அழுக்கான உடைகளை அணியக்கூடாது

v. பலர் மத்தியில் இருக்கும்போது (கூட்டங்களில்) கவர்ச்சியான ஆடைகளை அணிய வேண்டும்.

vi. மனிதனின் அந்தஸ்த்தை ஆடைகள் கூட்டவும் செய்யும். குறைக்கவும் செய்யும்.

vii. ஆடம்பர ஆடைகளை அணிவதை தவிர்க்க வேண்டியதே.

viii. உடை ஒருவனின் அந்தஸ்த்தை உயர்த்திக் காட்டும். அந்தஸ்த்தின் உச்சிக்கு போய் விட்டால் உடை அவரால் மதிக்கப்படும் உதாரணம். காந்தியின் கதர் கச்சை என்பவற்றை கூறலாம்.

ix. ஆடைகளை இறுக்கமாக உடுத்தக் கூடாது

x. சீதோஸ்ண நிலைக்கேற்ப உடையணிய வேண்டும்.

## வீடு

நீங்கள் அதிக நேரத்தை உங்களின் வீட்டிலேயே கழிக்கிறீர்கள். அதனால் வீடு உரிய முறைப்படி அமைந்திருப்பது அவசியமாகும்.

வீடு தொழில் செய்யும் இடம், இரண்டும் ஒருவனது வாழ்வில் மிக மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

இவை இரண்டும் ஒருவண்டியின் இரண்டு சக்கரங்களைப்போன்றது. இரண்டில் ஒன்றிற்கு ஏதாயினும் பிரச்சனை இருந்தால் கூட வாழ்வு பிரச்சனையாகிவிடும். நீங்கள் எவ்வளவு சம்பாதித்தாலும் வாழ்வில் நிம்மதி இருககாது.

i. வீட்டின் பிரதான வாயில் துப்பரவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்

ii. சமையல் அறை சௌபாக்கியத்தின் பிரதான இடம். இது எப்பொழுதும் துப்பரவாக இருக்க வேண்டும்.

iii. வீட்டின் உள் நுளையும் போது உங்கள் கண்ணில் படும் பொருட்கள் மனதிற்கு இதம் அளிக்கும் பொருட்களாக இருக்கவேண்டும். காலணிகள், தும்புத்தடிகள், குப்பைவாளிகள், உடைந்த பொருட்கள் போன்றவை கண்ணில் படாதவாறு வைக்கவேண்டும்.

iv. படுக்கையறை காற்றோட்டமுள்ளதாக அழகான வாசனை வீசக்கூடியவாறு இருக்கவேண்டும். படுக்கையறையில் உள்ள கட்டில் இரண்டாக இருந்தால் இரண்டையும் ஒன்றாக இணைத்துப் போடக் கூடாது. உஷ்ணப்பிரதேசங்களில் கட்டிலில் படுப்பதைவிட தரையில் படுப்பதே நல்லது. குளிர் பிரதேசங்களில் கட்டிலில் படுக்கலாம். கதவருகே கட்டிலைப் போடக் கூடாது. படுக்கையறை தெரியக் கூடியவாறு வெளி அறையில் கண்ணாடி மாட்டக்கூடாது.

v. வீட்டின் தலைவாசல் கதவைத் திறக்கும் போது அழகான சத்தம் வரக்கூடியவாறு இதமான ஓசையுடைய மணியைக் கட்டி வைத்தால் திறக்கும் போது இனிமையான சத்தம் ஏற்பட்டு மனதிற்கு இதமளிக்கும். தலைவாசலுக்கு எதிரே கண்ணாடி மாட்டக்கூடாது.

vi. வீட்டினுள் உடைந்த பல்புகள், உடைந்த டீ.வீ, ரேடியோ, நாற்காலிகள் என்பன இருக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். யுத்தக்காட்சி படங்கள் வீட்டில் தொங்கக் கூடாது.

vii. இருட்டாக இருந்தால் பணம் சேராது. சுகக் குறைவு ஏற்படும்.

viii. iவீட்டின் முற்றத்தில் பால் மரங்களை நட்டக் கூடாது. வீட்டின் எல்லைக்குள் புளியமரம் இருக்கக் கூடாது. வேப்பமரம் இருக்கலாம். வீட்டின் முற்றத்தில் பூந்தோட்டம் இருக்கலாம். வீட்டின் பின்பக்கம் மரக்கறித் தோட்டம் இருக்கலாம்.

ix. வீடு ஆடம்பரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அழகாகவும் இடவசதி உள்ளதாகவும் இருக்க வேண்டும். ஆனால், தேவையில்லாது இடம் சும்மா கிடக்கக்கூடாது. "இடம்பட விடேல்" எனும் பழமொழி இதனையே குறிக்கின்றது. அறைகளும் சும்மா பூட்டி இருக்கக் கூடாது.

x. வீட்டில் சூரிய வெளிச்சம் படக்கூடியவாறு ஜன்னல்கள் அமைந்திருக்க வேண்டும்.

**இழை 3**

## உலகில் முதல் பெண்மணிகள்

i. வரலாற்றில் பதிவான உலகில் முதல் புகழ்பெற்ற பெண்
ஹாட்சொப்கட் (கி.பி. 1479)

ii. தனியாக உலகைச் சுற்றிப் பறந்த பெண்
ஜெர்ரி பிட்ரிட்ஸ்

iii. செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட முதல் பெண்
மேரிலுண்ட் (1986)

iv. உலகின் முதல் மரதன் ஓட்ட சம்பியன் பெண்
ஜோன் பெனோயிட் (லொஸ் ஏஞ்சல் – 1984)

v. சொந்தமாக தொலைக்காட்சித் தயாரிப்பு நிறவனத்தை நிறுவிய முதல் கறுப்பினப் பெண்
ஒப்ரா வின்ஃபரே (1986)

vi. ஒரு செய்தித்தாளின் முதல்பெண் ஆசிரியை
ஆன்ஃராங்ளின் (1972)

vii. உலகின் முதல் பெண்பிரதமர்
சிறிமா பண்டார நாயக – (இலங்கை – 1960)

viii. உலகில் முதல் பெண் ஜனாதிபதி
மரியாஸ்டெலா பெரோன் (ஆர்ஜன்டைனா – 1974)

ix. விண்வெளி சென்ற முதல் பெண்
வாலென்டினா தெரஷகோவா (ரஸ்யா – 1963)

x. உலகின் முதல் பெண்நீதிபதி
சாண்ட் ராடே ஒகான்னர்

**இழை 4**

## ஆச்சரியம் ஆனால் உண்மை

i. சத்தம் மூன்றுவகை

ii. அதிசயப்பிறவி கரப்பான்

iii. அமெரிக்காவில் நடந்தது

iv. குழந்தை பெற்றதில் ஆணின் சாதனை

v. குழந்தை பெற்றதில் பெண்ணின் சாதனை

vi. தூக்குத் தண்டனையும் திருமணமும்

vii. மாதா கோயில் சிலுவையில்

viii. கன்னித் தன்மை வியாபாரம்

ix. குளவியின் வாழ்க்கை ஆய்வு

x. குப்பைத் தொட்டி ஆய்வு

## i. சத்தம் மூன்று வகைப்படும்

a. அதிகூடிய சத்தம்

b. அதி மெல்லிய சத்தம்

c. நடுத்தரச் சத்தம்

a. அதிகூடிய சத்தத்தை எமது காதுகளால் கேட்கமுடியாது. உதாரணமாக ஒரு பூ மொட்டு வெடிக்கின்ற சத்தம் அதிகூடிய சத்தம். அதாவது மூன்று ஹைதரசன் குண்டுகளை ஒர் இடத்தில் போட்டு வெடிக்க வைககின்ற சத்தம் போன்றது. இந்தச் சத்தத்தை எம் காதுகள் தாங்கிக் கொள்ளாது. ஆதனால் அந்தச் சத்தம் கேட்பதில்லை.

b. அதி மெல்லிய சத்தம் : இச்சத்தம் எப்படிப்பட்டது எனின் இரண்டு எறும்புகள் சந்திக்கும் போது கதைக்கும் சத்தம். இது மிகவும் மெல்லிய சத்தம் இச்சத்தத்தையும் எமது காதுகளால் கேட்க முடியாது.

c. சாதாரண சத்தம் : இச்சத்தத்தை மட்டும்தான் எமது காதுகளால் கேட்க முடியும்.

## ii. அதிசயப் பிறவி கரப்பான்

அணுக்குண்டு ஒன்று வெடித்து பெரும் உயிரழிவு ஏற்பட்டபின் சுடுகாடாக மாறியிருக்கும் அந்தப் பிராந்தியத்தில் பார்க்கக்கூடிய ஒரே ஒரு உயிரினம் கரப்பான் பூச்சிதான்.

கரப்பான் பூச்சி மனிதனை விட பலஆயிரம் மடங்கு கதிர்வீச்சை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது. மனிதனின் அழிவின் பின்னும் வாழப்போகும் இவை மனித இனம் தோன்றுவதற்கு 350 மில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியது. அன்று தொடக்கம் இன்றுவரை எதுவித பரிணாம மாற்றமும் இல்லாமல் அப்படியே

இருக்கிறது. உலகில் 3490 வகைக்கரப்பத்தான் பூச்சிகள் உண்டு. இவை ஆறு குடும்பங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

இப்பூச்சியின் இரத்தம் வெள்ளை நிறமுடையது. தலை துண்டிக்கப்பட்டாலும் சுவாசிக்க முடியும். தலை துண்டிக்கப்பட்ட பின்பும் உயிர்வாழும். சில கரப்பான் பூச்சிகள் 45 நிமிடங்கள் காற்றில்லாமலே வாழக்கூடியது. இது நீர்நிலைகளிலும் வாழும். அடுப்பங்கரையிலும் வாழும். வீட்டில் எங்கும் வாழக்கூடியது. பறக்கவும் முடியும். நடக்கவும் முடியும். எங்கும் எப்படியும் வாழக்கூடிய தன்மை இருப்பதால்தான் இன்றும் உயிர் வாழ்கிறது.

## iii. அமெரிக்காவில் நடந்தது

அமெரிக்காவில் அடிமைமுறையை ஒழித்த ஜனாதிபதி ஆப்ரஹாம்லிங்கன். "போர்த்தியேட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவரது மகன் றொபெட் போட்பக்கத்தில் இருந்தார் 1865இல்.

1881இல் அமெரிக்காவின் இருபதாவது ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் "றொபட் போர்ட்" பக்கத்தில் இருந்தார். 1901ஆம் ஆண்டு அமெரிக்காவின் இருபத்தொன்பதாவது ஜனாதிபதியான விச்சியம் மெக்கன்சி நடந்து கொண்டிருந்தபோது கொல்லப்பட்ட நேரத்திலும் அவருடன் "றொபட் மட்டும்" இருந்தார் இது எப்படி?

## iV. குழந்தைகள் பெற்றதில் ஆண் சாதனை

பல பெண்களை மனைவிகளாக்கி கொள்ளும் மொறோக்கோ நாட்டின் சக்கரவர்த்தியான மவுலே இஸ்மாயிலுக்கு கி.பி. 1703இல் 867 குழந்தைகள் இருந்தன. இதில் 525 ஆண்கள் 342 பெண்கள்.

## V. உலகசாதனை - 69 குழந்தைகளுக்கு தாய்

ரஸ்ய நாட்டுப் பெண்ஒருவர் பெற்றெடுத்த குழந்தைகள் மொத்தம் 69. அத்தனை குழந்தைகளும் கி.பி. 1725இல் இருந்து 1765க்குள் பிறந்துள்ளது. மொத்தம் 27 பிரசவங்கள் மூலம் 69 குழந்தைகள் பிறந்துள்ளனனர்.

பொதுவாக ஒரு பெண்ணிற்கு ஒரு பிரசவத்தில் ஒரு குழந்தை பிறப்பதுதான் சாதாரண நிகழ்வு ஆனால் இந்தப் பெண்ணிற்கோ 27 பிரசவங்களில் ஒன்றில் கூட

ஒரு குழந்தை பிறக்கவில்லை. அனைத்துப் பிரசவங்களுமே இரண்டு, மூன்று, நான்கு என்றே பிறந்துள்ளது. இவருக்கு 16 பிரசவங்களில் இரட்டைக் குழந்தைகளாக 32 பிள்ளைகள், 7 பிரசவங்களில் 3 குழந்தைகள் என்ற விகிதத்தில் 21 குழந்தைகள், நான்கு பிரசவங்களில் ஒரு பிரசவத்திற்கு நான்கு என்ற விகிதத்தில் 16 குழந்தைகளும் பிறந்துள்ளன.

இந்தச் சாதனையை எந்தப் பெண்ணும் இதுவரை முறியடிக்கவில்லை. அதிக குழந்தைகளைப் பெற்றதால் மட்டும் இவர் உலக சாதனையை நிலைநாட்டவில்லை. உலகில் அதிக இரட்டைக் குழந்தைகளைப் பெற்றதிலும் நான்கு குநற்தைகளைப் பெற்றதிலும் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

ஒரே பிரசவத்தில் அதிக குழந்தைகளைப் பெற்றவர் அமெரிக்க கோபி மெக்காஷோ ஆவார். இவருக்கு 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி ஒரே பிரசவத்தில் 7 குழந்தைகள் பிறந்தன. நான்கு ஆண்களும் 3 பெண்களும் இவரைப் போலவே சவூதி அரேபியாவைச் சேர்ந்த ஹாய்னாமுகம்மது ஹூமைல் என்ற 40 வயதுப் பெண் 1998இல் ஜனவரி 14இல் ஒரே பிரசவத்தில் 7 குழந்தைகள்.

பலபெண்கள் மூலம் இத்தனைக்குழந்தைகளைப் பெற்றுச் சாதனை படைத்தது போல ஒரே மனைவிக்கு அதிகமான பிள்ளைகளைப் பெற உதவியவர் என்ற வகையில் அமெரிக்காவைச் சேர்ந்த சாமுவேல் எல்மாஸ்ட் என்பவர் இடம்பெறுகிறார். 1992 அக்டோபர் 15இல் தனது 96 வயதில் இவர் இறக்கும் போது இவருக்கு வாரிசுகள் 824. தனது 11 மகன்கள் மூலம் 97 பேரன்களும் அவர்கள் மூலம் 634 கொள்ளு பேரர்களும் வாரிசாக இருந்தார்கள். இவர் உலகின் அதிக வாரிசு சாதனையாளர்.

## vi. தூக்குத் தண்டனையும் திருமணமும்

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஹாட் வில்லியர் என்ற கொள்ளைக் காரனை எந்தவொரு பெண்ணாவது மணக்கவிரும்பினால் அவனுக்கு விடுதலை கொடுப்பதாக பிரஞ்சு அரசு அறிவித்தது. இதனை ஏற்றுக் கொண்டு ஒருத்தி அவனை மணக்க முன்வந்தாள். அவளைப் பார்த்த கொலைக்குற்றவாளி, கொலைக்கயிற்றையே மணக்க முடிவு செய்தான்.

## vii. ஜேர்மனி மாதா கோயில் சிலுவையில்

ஜேர்மனியில் அஹரின் பாக்கில் உள்ள மாதா கோயில் சிலுவையில் இரண்டு பக்கமும் கிளைகளை கொண்ட நிஜமரத்தின் தடிமீது யேசுநாதரின் சிலுவை உருவம் வைக்கப்பட்டுள்ளது. மரத்தின் இரண்டு பக்கமும் உள்ள இலைகள் பச்சையம் மாறாது அப்படியே உள்ளது.

## viii. ரோமானிய யுவதியின் கன்னித்தன்மை 13937 டொலருக்கு ஏலத்தில் விற்பனை

ரோமானியாவை பிறப்பிடமாகக் கொண்ட 18 வயது யுவதியான "அலினா பெரிசியா அவ்" ஜேர்மனியில் தனது மேற்படிப்பைத் தொடரப் பணமில்லாததால் தனது கன்னித்தன்மையை ஏலத்தில் விற்பனை செய்ய ஏற்பாடுகளைச் செய்து பரபரப்பை உண்டாக்கியது மட்டுமல்லாமல் ஏல விற்பனையில் வெற்றியும் அடைந்துள்ளார்.

இந்த ஏலவிற்பனையில் கலந்து கொண்ட பலருள் இத்தாலிய தொழில் அதிபர் வெற்றி பெற்றார். இவருக்கு வயது 45 ஆகும்.

இவரும் அலினா பெர்சியாஅவ் வும் ஒருவாரம் ஒன்றாக கழித்ததாக பத்திரிகைச் செய்தி வெளியிட்டது.

கன்னித் தன்மையை உறுதிசெய்ய ஒரு பரிசோதனைக்குட்படுத்தப் பட்ட பின்னரே ஏலம் ஆரம்பமாகியது.

இதில் இன்னுமொரு விடயம் என்னவெனில் ஜெர்மனிய வரி அறவிடும் அதிகாரிகள் ஏலத்தில் கிடைத்த 13937 டொலருக்கு வரி செலுத்துமாறு கேட்டுப் பெற்றுள்ளார்கள்.

இந்நிகழ்வினை பகிரங்கமான விபச்சாரம் என்பதா? அல்லது ஒருவகைத் திருமணம் என்பதா? அல்லது சரியா பிழையா? எது என்று கூறுவது.

## ix. குளவியின் வாழ்க்கை ஆய்வு

குளவியின் கூட்டை உடைத்துப் பார்த்தால் அதனுள்ளே பச்சைப் புழுவொன்று இருக்கும். இதனை எம்மில் அனேகமானோர் குளவி பச்சைப் புளுவைப் பிடித்துவந்து கூட்டினுள்ளே வைத்து தன்னைப் போல் ஆகுக, தன்னைப்போல் ஆகுக என ஊதி ஊதிக் குளவியாக்குகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

பரம்பரை பரம்பரையாக இப்படியே நம்பிவருகிறோம். ஆனால் ஆய்வு இதனை மறுத்துள்ளது.

ஆய்வாளர் ஒருவர் தனது PHD ஆய்வுக்கு குளவியின் வாழ்க்கை வட்டத்தை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்து அதில் வெற்றியும் கண்டு PHD பட்டமும் பெற்றுவிட்டார். அவருடைய ஆய்வு இப்படி சொல்கிறது. குளவி கூட்டினைக் கட்டி முட்டையிட்டு அம்முட்டையில் இருந்து குஞ்சு வெளியாகும்போது அக்குஞ்சுகளக்கு உணவுக்காக பச்சைப் புழுவைப் பிடித்து வந்து தன்னுடைய விச ஊசியால் குத்தி ஒரு பகுதியை இயங்காமல் செய்துவிடும். ஒருபகுதி இயங்கும். இதனைக் கூட்டினுள் வைத்து வழிகளையெல்லாம் அடைத்து விடும்.

முட்டையில் இருந்து குஞ்சுகள் வெளிவந்து பச்சைப் புழுவின் இயங்காத பகுதிகளைச் சாப்பிட்டு தங்களை உசார் படுத்திக் கொண்டு கூட்டை உடைத்துக் கொண்டு மீதமாய் இருக்கும் பச்சைப் புழுவை எடுத்துக் கொண்டு தனது தாய்க்குளவி எங்கிருந்து பச்சைப் புழுவைப்பிடித்து வந்ததோ அந்த இடத்தில் கொண்டுபோய் வைத்துவிடும்.

ஆச்சரியம் என்னவென்றால் முட்டையில் இருந்து வெளிவந்த குளவிக்குஞ்சுக்கு தாய்க் குளவி பச்சைப் புழுவைப் பிடித்த இடம் எப்படித் தெரியும். இறைவன்தான் இதற்கு விடை கூற வேண்டுமென்று ஆய்வை முடித்துள்ளார்.

## x. குப்பைத் தொட்டி ஆய்வு

PHD பட்டம் பெறுவதற்கு காத்திரமான ஆய்வு ஒன்றினைச் செய்து அந்த ஆய்வு பிரயோசனமானது என நடுவர் குழுவால் தீர்மானிக்கப் பட்டபின்புதான் பட்டம் அளிக்கப்படும்.

இப்படிப்பட்ட ஆய்வுக்கு ஒருவர் “குப்பைத் தொட்டியினை ஆய்வுக்குப் பொருளாக

எடுத்தார். காலையில் ஒருதரம், மாலையில் ஒருதரம் என ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் பல வீடகளின் குப்பைத் தொட்டிகளை ஆறுமாதம் ஆராய்ந்தார்.

ஆய்வின் முடிவினை வெளியிட்டபோது பல ஆச்சரியமான தகவல்கள் வெளிவந்தன. அதாவது ஒரு குப்பைத் தொட்டியினை ஆராய்ந்தால் அதற்குள் இருக்கும் கழிவுகளை கொண்டு அவ்வீட்டின் வாழ்க்கை, பணவருவாய், செலவு, சிக்கனமா இல்லையா, குடும்பத்தில் எத்தனை ஆண், எத்தனை பெண். இவர்களின் குழந்தைகள், நடுத்தர வயதுடையவர்கள், வயதானவர்கள் போன்ற விபரங்களோடு, அத்தொட்டியில் கிடைத்த மருந்து பெட்டிகள், குளிகை இருந்த பிளாஸ்டிக் என்பவற்றை கொண்டு என்ன நோய் நிரந்தரமான நோய் இங்குள்ளவர்களுக்கு உண்டு என்றும்,என்ன என்ன தற்காலிக நோய்கள் உண்டு என்று அறியலாம் என்றும் இவர்களால் பாவிக்கப்பட்ட உணவுகளின் மிச்சங்களைக் கொண்டு இவர்களின் வருமானம், விருப்பம், ஆரோக்கியம் என்பவற்றைக் கூற முடியும். உதாரணமாக இங்குள்ள குப்பைத் தொட்டியில் ஒரு நாளைக்கு எத்தனை முட்டை பாவிக்கிறார்கள், பால் பாவிக்கிறார்கள் அல்லது பால்மா பாவிக்கிறார்கள், ஹாட், நீரிழிவு, உள்ளவர்கள் உண்டா, வயது போனவர்கள் என்ன உண்கிறார்கள் போன்ற பல விடயங்களை அறிய முடியும் என்று அந்த ஆய்வு நிரூபித்துள்ளது. அவருடைய ஆய்வு சரியானது எனக் கண்ட பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டம் அளித்துள்ளது.

**இழை 5**

**உயிரினங்களின் கர்ப்பகாலம்**

**கர்ப்பகாலம்**

| | | |
|---|---|---|
| i. வெள்ளாடு | – | 151 நாட்கள் |
| ii. செம்மறியாடு | – | 148 நாட்கள் |
| iii. எலி | – | 22 நாட்கள் |
| iv. ஒட்டகம் | – | 406 நாட்கள் |
| v. ஒட்டகச் சிவிங்கி | – | 395 – 423 நாட்கள் |
| vi. கரடி | – | 213 நாட்கள் |
| vii. கழுதை | – | 365 நாட்கள் |
| viii. கங்காரு | – | 38 – 40 நாட்கள் |

ix. கீரி – 60 நாட்கள்

x. குரங்கு

a. ரீசர் – 164 நாட்கள்

b. தொப்பி – 180 நாட்கள்

c. பூன் – 183 நாட்கள்

a. டுசு – 220 நாட்கள்

b. ஊரான் உட்டான் – 245 – 275 நாட்கள்

c. சிம்பன்சி – 237 நாட்கள் என அறியக் கிடக்கிறன்றது

**இழை 6**

## உயிர்களி இறப்பு காலம்

i. பருந்து, கழுகு, காகம் – 100 ஆண்டுகள்

ii. குதிரை, கழுதை – 25 – 35 ஆண்டுகள்

iii. நாய், பூனை – 10 – 15 ஆண்டுகள்

iv. தவளை, முயல் – 10 ஆண்டுகள்

v. நீர் வாத்து – 14 ஆண்டுகள்

vi. திமிங்கிலம், சிங்கம் – 35 ஆண்டுகள்

vii. புலி – 18 ஆண்டுகள்

viii. ஈசல் – 1 நாள்

ix. நத்தை – 2 ½ மாதம்

x. தேரை – 40 வருடம்

**இழை 7**

## விசித்திரமான புணர்ச்சியும் கருத்தரித்தலும்

i. மண்புழு

ii. மயில்

iii. கங்காரு

iv. கடற்குதிரை

v. கும்பிடுபூச்சி

vi. சிலந்தி

vii. தேள்

viii. தேனீ

ix. நண்டு

x. பட்டாம்பூச்சி

## i. மண்புழு

தன்னைத்தானே புணர்ந்து கொள்ளும். ஆணுறுப்பும் பெண்ணுறுப்பும் அதிலேயே அமைந்துள்ளது.

## ii. மயில்

மயில்கள் முட்டையிட்டுச் குஞ்சி பொரிக்கும், ஆனால் ஆண்மயில் பெண் மயிலை புணர்வதில்லை. ஆண்மயில் தோகை விரித்து ஆடும் போது விந்துத் துளிகள் கீழே விழும். அதனைப் உண்டு பெண்மயில் கருத்தரிக்கும்.

மயில் பெரிதாகக் கூடு கட்டுவதுமில்லை. ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் உள்ள சருகுகளை கோதிப்பள்ளமுண்டாக்கி முட்டை இட்டுக் குஞ்சி பொரிக்கும். 4முதல் 6 வரையான முட்டைகளை இடும். அரிதாக வேறு பறவைகளின் கூடுகளில் முட்டையிடும் வழக்கமும் உண்டு.

## iii. கங்காரு

பெண்கங்காருவின் உடலில் இரண்டு கற்பப்பைகள் உண்டு. இவை ஒரு மெல்லிய சவ்வினால் பிரிக்கப்பட்டு தனித்தனியாக உள்ளது. அதுபோல அதனிடம் இரண்டு பெண்குறிகளும் உண்டு. ஆண் கங்காருவின் ஆண் குறியும் இரண்டு பிளப்புக்களாகி இரண்டாகி உள்ளன.

ஆண் விந்துவை இரண்டு கருப்பையுள்ளும் ஒரே சமயத்தில் செலுத்தி இரண்டு பிரசவங்கள் நிகழும்.

## iV. கடற்குதிரை

கடற்குதிரையானது நின்று கொண்டே நீந்தக்கூடிய மீனினம். பெண் கடற்குதிரை முட்டைகளை ஆண் கடற்குதிரையின் வயிற்றில் உள்ள பையினுள் இட்டுச் சென்றுவிட ஆண்கடற் குதிரை அவற்றைச் சுமந்து திரிந்து பின் குஞ்சுகள் வளர்ந்ததும் ஒவ்வொன்றாக ஆண் குதிரையின் வயிற்றில் இருந்து வெளியேறும்.

## V. கும்பிடு பூச்சி (Praying Mamtised)

இது பார்ப்பதற்கு வித்தியாசமானது. பெண்கும்பிடு பூச்சி புணர்ந்த பின் ஆண் பூச்சியை சாப்பிட்டு மகிழ்ச்சியைக் கொண்டாடும். அல்லது புணரும்போது உச்சக்கட்டத்தில் சந்தோசத்தால் ஆணைக்கடித்துச் சாப்பிட்டு சந்தோசத்தைக் கொண்டாடும். இது தெரிந்த ஆண் கும்பிடு பூச்சிகள் கலவியில் இடையில் இறங்கி ஓடுவதும் உண்டு.

ஓடிவிடுவதா அல்லது தன்னை அர்ப்பணித்துக் கொள்வதா என்பதை ஆண்பூச்சிகள் எவ்வாறு முடிவெடுக்கின்றன என்பதை அறிய முடியாதுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சில தந்திரமான ஆண்பூச்சிகள் பெண் கும்பிடுபூச்சி நன்றாகச் சாப்பிட்டு வயிறு நிரம்பியபின் புணர வழிதேடும்.

## Vi. சிலந்தி

சிலந்தி இனத்தில் பெண் இனமே பெரிதாக இருக்கும். சிலந்திகள் வட துருவம், தென்துருவம் தவிர மலைப்பிரதேசங்கள், பள்ளத்தாக்குகள், சேற்றுநிலப் பகுதிகள் பாலைவனம், நீர் நிலைகள் கடற் கரைகள் என எல்லா இடங்களிலும் வாழக்கூடியது. ஆண் இனத்துடன் சேர்ந்து புணர்ந்து முடிந்ததும் ஆண் சிலந்தியை தின்று தீர்த்து விடும் பெண்சிலந்தி.

## iv. கடற்குதிரை

கடற்குதிரையானது நின்று கொண்டே நீந்தக்கூடிய மீனினம். பெண் கடற்குதிரை முட்டைகளை ஆண் கடற்குதிரையின் வயிற்றில் உள்ள பையினுள் இட்டுச் சென்றுவிட ஆண்கடற் குதிரை அவற்றைச் சுமந்து திரிந்து பின் குஞ்சுகள் வளர்ந்ததும் ஒவ்வொன்றாக ஆண் குதிரையின் வயிற்றில் இருந்து வெளியேறும்.

## v. கும்பிடு பூச்சி (Praying Mamtised)

இது பார்ப்பதற்கு வித்தியாசமானது. பெண்கும்பிடு பூச்சி புணர்ந்த பின் ஆண் பூச்சியை சாப்பிட்டு மகிழ்ச்சியைக் கொண்டாடும். அல்லது புணரும்போது உச்சக்கட்டத்தில் சந்தோசத்தால் ஆணைக்கடித்துச் சாப்பிட்டு சந்தோசத்தைக் கொண்டாடும். இது தெரிந்த ஆண் கும்பிடு பூச்சிகள் கலவியில் இடையில் இறங்கி ஓடுவதும் உண்டு.

ஓடிவிடுவதா அல்லது தன்னை அர்ப்பணித்துக் கொள்வதா என்பதை ஆண்பூச்சிகள் எவ்வாறு முடிவெடுக்கின்றன என்பதை அறிய முடியாதுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சில தந்திரமான ஆண்பூச்சிகள் பெண் கும்பிடுபூச்சி நன்றாகச் சாப்பிட்டு வயிறு நிரம்பியபின் புணர வழிதேடும்.

## vi. சிலந்தி

சிலந்தி இனத்தில் பெண் இனமே பெரிதாக இருக்கும். சிலந்திகள் வட துருவம், தென்துருவம் தவிர மலைப்பிரதேசங்கள், பள்ளத்தாக்குகள், சேற்றுநிலப் பகுதிகள் பாலைவனம், நீர் நிலைகள் கடற் கரைகள் என எல்லா இடங்களிலும் வாழக்கூடியது. ஆண் இனத்துடன் சேர்ந்து புணர்ந்து முடிந்ததும் ஆண் சிலந்தியை தின்று தீர்த்து விடும் பெண்சிலந்தி.

## vii. தேள்

ஆண்தேள் பெண்தேளின் கால்களைப் பிடித்துக் கொண்டு முன்னும் பின்னுமாக இழுக்கும் அப்படிச் செய்யும்போது ஆண் தேள் தனது விந்துத் துளிகளைத் தரையில் தெளித்து பெண் தேளை முன்னும் பின்னும் இழுத்து அத்துளிகளின் மேல் ஊர்ந்து போகச் செய்யும். அப்பொழுது பெண் தேளின் இன விருத்தி உறுப்பு அந்தத் துளிகளை உறிஞ்சிக் கொண்டு பின்னர் கருத்தரிக்கும்.

புணர்ச்சி மேற் கூறியவாறு நடந்து முடிந்ததும் ஆண் தேளைப் பெண் தேள் சாப்பிட்டுவிடும்.

தேள்களில் 300 வகைக்கு மேல் உள்ளன. தேள்களின் முக்கிய உணவு எறும்பு, ஈசல், சிறிய பூச்சிகள், கரப்பான்கள் என்பனவாகும்.

## viii. தேனி

புணர்ந்தபின் ஆண் தேனீ இறந்து விடும்

## ix. நண்டு

நண்டு புணர்ந்து கருத்தரித்து குஞ்சுகள் பெண் நண்டின் வயிற்றில் வளர்ந்து வெளிவரும்போது தாயின் வயிறு கிழிந்து குஞ்சுகள் வெளிவரும். இதன்பின் தாய்நண்டு இறந்து விடும்.

## ix. பட்டாம்பூச்சி

பட்டாம்பூச்சி முட்டையிட:டு முடிந்ததும் இறந்துவிடும்.

### இழை 8

## உணர்வூட்டும் உபதேசம்

“ஏ” மூசாவே நீ எனக்காக என்ன நற்காரியங்களைப் புரிந்துள்ளீர்கள் எனக் கேட்டான் இறைவன்.

இதுகேட்ட மூசா நபியவர்கள் “இறைவா! நான் உனக்காகவே தொழுதேன். உனக்காகவே நோன்பிருந்தேன். என்றதும்.

இறைவன் “மூசாவே இவைகளெல்லாம் உனக்காகவே நீர் செய்து கொண்டவைகள்” என்றதும். அப்படியாயின் உனக்காக என்ன செய்யவேண்டும் எனக் கேட்க பின்வரும் விடயங்களை அறிவித்தான்.

a. பசித்தோர்க்கு பசி தீர்த்தல்

b. தாகம் தீர்த்தல்

c. உடுமானம் இல்லாதோருக்கு உடுமானம் கொடுத்தல்

போன்றவற்றைச் செய்யவும் என்று கூறினான்.

### இழை 9

## சிக்கனமாய் இருந்து பணம் சேர்க்க

i. நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாவுக்கும் இரண்டு ரூபாவைச் சேமியுங்கள்.அதாவது நீங்கள் 40 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு T.V வாங்கப் பேசுகிறீர்கள் என்றால் மீதியாக உங்கள் இருப்பில் 80ஆயிரம் ரூபாய் இருக்க வேண்டும்.

ii. நீங்கள் மிகுந்த செலவாளியாக இருந்தால் 12 மணி நேர விதியைக் கடைபிடியுங்கள். அதாவது ஒரு நாளில் நண்பகல் 12 மணிக்கு முன்தான் நீங்கள் செலவு செய்ய வேண்டும்.

அதன் பிறகு தவிர்க்க முடியாத காரணம் எனின் அத்தியாவசியம் எனின் (திடீர் சுகயீனம் போன்றது) பணத்தை எடுப்பதைத் தவிர வேறு எதற்கும் எடுக்கக் கூடாது. இந்த விதியைப் பின்பற்றிப் பாருங்கள். நிறைய பணத்தை மிச்சப் படுத்துவீர்கள். ஒவ்வொரு சின்னச் சின்ன செலவையும் எழுத வேண்டும். வார இறுதியில் அவற்றை கூட்டிப் பார்க்க வேண்டும். செலவழித்த தொகை உங்களை வாயை பிளக்க வைக்கும். செலவழிக்கும் உட்சாகத்தை அது குறைக்கும்.

iii. பணம் சேர்க்க அசையாத ஆதனங்களையே வாங்க வேண்டும்.

iv. சேமிப்பு ஒருவகைச் செலவு என எழுத வேண்டும்.

v. தலைகுனிந்து வாழவேண்டும். நிமிரக்கூடாது.

vi. வீட்டில் ஒரு சிறு அறையை பூட்டித் திறப்பெடுத்து அதனை கிணற்றில் போட்டுவிட்டு அன்றன்று சேரும் பணத்தில் செலவு போக மீதியை கதவு இடுக்கால் அறையுள் எறிந்துவிட வேண்டும். ஐந்து வருடங்களின் பின்தான் அதனைத் திறந்து பார்க்க வேண்டும்.

vii. ஒரு ராசா இருந்தால்தான் இன்னுமொரு ராசா கதைத்திருக்க வருவான் அதாவது பத்து ரூபா இருந்தால்தான் இன்னுமொரு பத்து ரூபா வந்து சேரும்.

viii. மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டு வெட்கப் படக் கூடாது.

ix. பட்டம் பதவிக்காக பணத்தை செலவு செய்யாதே.

x. பணம் இருந்தால் பட்டம் பதவி தேடி வரும்.

**இழை 10**

**சாவித்துவாரத்தின் ஊடே**

i. இங்கிலாந்தில் விபசாரத்தில் ஈடுபடும் பெண்களில் பாதிப்பேர் சீனப்பெண்கள் என்று அந்நாட்டு பொலிசார் அறிவித்துள்ளனர். இங்கிலாந்தில் கிட்டத்தட்ட முப்பதினாயிரம் (30000) பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். லண்டனில்தான் மிகப்பெரிய விபச்சார விடுதியுண்டு. இங்கு 2103 பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ii. செய்தித்தாள் முதன் முதலில் 1556ஆம் ஆண்டு வெனிஸ்நகரில் வெளியாகியது.

iii. ஒரு ஆணின் மூளையை விடப் பெண்ணின் மூளை சிறியதே.

iv. உலகைச் சுற்றிவந்த முதல் கப்பல் விக்டோரியா

v. உலகில் அதிகமாக விற்பனையாகும் சஞ்சிகை “றீடஸ்டைஜஸ்ட்”

vi. செயற்கை மழையை கண்டு பிடித்தவர் இர்விங்வாங்மூர்

vii. உலகில் முதன் முதல் வைத்தியமனை தோன்றிய நாடு இத்தாலி

viii. உலகில் யுரேனியம் அதிகம் கிடைக்கும் நாடு அமெரிக்கா

ix. நாட்களை கணிக்கும் கலண்டர் முறையை உலகிற்கு அறிமுகப் படுத்தியவர் 13ஆம் கிரகரி பாப்பரசர்.

x. தேனீக்கள் ஒரு கிலோ தேனை உற்பத்தி செய்ய 50 இலட்சம் பூக்களின் தேனை உறிஞ்சுகின்றன.

தங்க இழைகள்

நூலாகி

நூலுக்குள்

நுண்மா நுழைபுலன்

சேர்வாகி

சேர்வார் மனம்

தங்கமாகி

நிற்க - நிலைக்க

எண்ணி மகிழ்வுறும்

மணிப்புலவர் மருதூர் - ஏ - மஜீத்

நன்றி

"“நாம் நினைத்தவர்களுக்கன்றி ஹிக்மத்தை (ஞானத்தை) யாருக்கும் கொடுத்தது கிடையாது

அல் குர்ஆன்



மணிப்புலவர்
மருதூர் ஏ.மஜீத்

1) பன்னீர் வாசம் பரவுகிறது
(சிறுகதைத் தொகுதி) - 1979
2) மறக்கமுடியாத என் இலக்கிய நினைவுகள்
(கட்டுரைகள்) - 1990
3) இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்
(தொகுப்பு) - 1992
4) பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்
(கவிதைகள்) - 1995
5) மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை
(ஆய்வு) - 1995
6) இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும்
(அறிவியல்) - 1996
7) நீரிழிவு வியாதியும் அதுபற்றிய சில அனுபவக் குறிப்புகளும்
(அறிவியல்) - 1997
8) தென்கிழக்கு முஸ்லிங்களின் பூர்வீக வரலாறு
(ஆய்வு) - 2001
9) வேர்
(தனிமனித வரலாறு) - 2002
10) சர்வ மதங்களிலும் நோன்பு
(அறிவியல்) - 2004
11) தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல்
(ஆய்வு) - 2007
12) மூடமறுக்கும் விழிகளும் துடிக்கும் இதயமும்
(கவிதைகள்) - 2009
13) கூடுகட்டத் தெரியாத குயில்கள்
(சிறுகதைத் தொகுப்பு) - 2009
14) போருக்கப்பால் மனித நேயம் தேடல்
(சிற்றுரைகள்) - 2009
15) தமிழ் மொழியின் பூர்வீக வரலாறு செம்மொழி அந்தஸ்து சீர்திருத்தங்கள் - 2012

ISBN 978-955-1058-09-8

U D H Compuprint # 077 3665234